


எஸ்.ராமகிருஷ்ணன்

# புத்தனாவது சுலபம்

சிறுகதைகள்

உயிர்மை பதிப்பகம்

# புத்தனாவது சுலபம்

சிறுகதைகள்

எஸ். ராமகிருஷ்ணன்

உயிர்மை
பதிப்பகம்

விலை ரூ. 150

உயிர்மை பதிப்பக வெளியீடு 365

புத்தனாவது சுலபம் / சிறுகதைகள் / ஆசிரியர் : எஸ். ராமகிருஷ்ணன் / © எஸ். ராமகிருஷ்ணன் / முதல் பதிப்பு : டிசம்பர் 2011 / வெளியீடு : உயிர்மை பதிப்பகம், 11/29 சுப்பிரமணியம் தெரு, அபிராமபுரம், சென்னை –600 018 தொலைபேசி : 91 – 44 – 24993448, மின்னஞ்சல் : uyirmmai@gmail.com, இணையதளம்: www.uyirmmai.com / அச்சாக்கம் : மணி ஆஃப்செட், சென்னை 600 005

Budhan aavathu sulabam / Short stories / Author : S. Ramakrishnan / © S. Ramakrishnan / Language: Tamil / First Edition : Dec.2011 / Demy 1x8 / Paper : 18.6 kg maplitho / Pages : 176 / Published by : Uyirmmai Pathippagam, 11/29 Subramaniam Street, Abiramapuram, Chennai - 600 018, India. Tele/Fax : 91-44 - 24993448, e-mail : uyirmmai@gmail.com, Website: www.uyirmmai.com / Printed at Mani Offset, Chennai 600 005 / Price Rs. 150

**ISBN : 978-93-81095-64-5**

# எஸ். ராமகிருஷ்ணன்

எஸ். ராமகிருஷ்ணன், விருதுநகர் மாவட்டம் மல்லாங் கிணறு கிராமத்தில் 1966இல் பிறந்தார். முழுநேர எழுத்தாளரான இவர் தற்போது சென்னையில் வசிக்கிறார்.

**சிறுகதைத் தொகுப்புகள்:** *எஸ். ராமகிருஷ்ணன் கதைகள், நடந்து செல்லும் நீரூற்று, பதினெட்டாம் நூற்றாண்டின் மழை, அப்போதும் கடல் பார்த்துக்கொண்டிருந்தது, நகுலன் வீட்டில் யாருமில்லை, புத்தனாவது சுலபம், வெளியில் ஒருவன், காட்டின் உருவம், தாவரங்களின் உரையாடல், வெயிலை கொண்டுவாருங்கள், பால்ய நதி*

**நாவல்:** *உபபாண்டவம், நெடுங்குருதி, உறுபசி, யாமம், துயில்*

**கட்டுரைத் தொகுப்புகள்:** *விழித்திருப்பவனின் இரவு, இலைகளை வியக்கும் மரம், என்றார் போர்ஹே, கதா விலாசம், தேசாந்திரி, கேள்விக்குறி, துணை யெழுத்து, ஆதலினால், வாக்கியங்களின் சாலை, சித்திரங்களின் விசித் திரங்கள், நம் காலத்து நாவல்கள், காற்றில் யாரோ நடக்கிறார்கள், கோடுகள் இல்லாத வரைபடம், மலைகள் சப்தமிடுவதில்லை, வாசகபர்வம், சிறிது வெளிச்சம், காண் என்றது இயற்கை, செகாவின் மீது பனி பெய்கிறது, குறத்தி முடுக்கின் கனவுகள், என்றும் சுஜாதா, கலிலியோ மண்டியிடவில்லை, சாப்ளினுடன் பேசுங்கள், கூழாங்கற் கள் பாடுகின்றன, எனதருமை டால்ஸ்டாய்*

**திரைப்பட நூல்கள்:** *பதேர் பாஞ்சாலி - நிதர்சனத்தின் பதிவுகள், அயல் சினிமா, உலக சினிமா, பேசத்தெரிந்த நிழல்கள், இருள் இனிது ஒளி இனிது.*

**குழந்தைகள் நூல்கள்:** *கால் முளைத்த கதைகள், ஏழு தலை நகரம், கிறுகிறு வானம், லாலிபாலே, நீளநாக்கு, தலையில்லாத பையன், எனக்கு ஏன் கனவு வருது, காசுகள்ளன், பம்பழாபம்*

**நாடகத் தொகுப்பு:** *அரவான்.*

**நேர்காணல் தொகுப்பு:** *எப்போதுமிருக்கும் கதை, பேசிக்கடந்த தூரம்*

**மொழிபெயர்ப்புகள்:** *நம்பிக்கையின் பரிமாணங்கள், ஆலீஸின் அற்புத உலகம், பயணப்படாத பாதைகள்.*

**தொகை நூல்:** *அதே இரவு, அதே வரிகள்* (அட்சரம் இதழ்களின் தொகுப்பு).

**இணையதளம்:** www.sramakrishnan.com

**மின்னஞ்சல்:** writerramki@gmail.com

# முன்னுரை

சிறுகதை என்பது நீந்திக்கொண்டிருக்கும் மீனை சித்திரம் வரைவது போன்றது. அது ஒரு சவால். மீனின் தோற்றத்தை வரைய முயன்றால் அதன் இயக்கம் பிடிபடாமல் போய்விடும். இயக்கத்தை வரைய முற்பட்டால் தண்ணீரின் இயல்பு வெளிப்படாமல் போய்விடும். என்னளவில் சிறுகதை எழுது வதே எப்போதும் அதிக உத்வேகமும் சவாலும் நிரம்பியதாக இருக்கிறது.

இது என்னுடைய பதினோறாவது சிறுகதை தொகுதி. இக் கதைகள் கடந்த இரண்டு ஆண்டுகளுக்குள் வெளியானவை.

இதில் அறிவியல் சிந்தனைகளைப் பேசியதற்காக உயிரோடு எரிக்கப்பட்ட புருனோவை மையப்படுத்திய 'ஆம் புருனோ, அவர்கள் குற்றவாளிகளே' போன்ற வரலாற்றின் மீள்உருவாக்க மான கதையும் இருக்கிறது. 'இரண்டு குமிழ்கள்' போன்ற இயல்பான அன்றாட வாழ்வின் கதையும் இருக்கிறது.

உண்மையில் இவை இரண்டும் எதிர் துருவங்களில்லை. மனித வேதனைகள்தான் எல்லா கதைகளின் மையப்பொரு ளும். எது மனிதர்களை நிம்மதியற்று ஆட்டிவைக்கிறது, எப்படி மனிதர்கள் துயரத்தின் கதாபாத்திரமாகிப் போகிறார் கள், வாழ்வின் சின்னஞ்சிறு சந்தோஷங்கள் கூட மனிதர் களுக்கு என்னவிதமான ஆறுதலைத் தருகின்றன என்பதையே இந்தக் கதைகள் பேசுகின்றன.

உறவுகள் கசந்துபோன ஒரு காலத்தில் நாம் வாழ்ந்து கொண்டி ருக்கிறோம். சிதறுண்ட குடும்பத்தின் கதையே நம் காலத்தின் அடையாளம். அதிகார ஒடுக்குமுறையைப் பற்றிப் பேசும் நாம் அதை நமது சொந்த உறவுகளின்மீது செலுத்துபவர்களாக இருக்கிறோம் என்பதை மறந்துவிட்டதையே இந்தக் கதைகள் சுட்டிக்காட்டுகின்றன.

பெரும்பான்மைக் கதைகளில் பெண்களே முக்கிய பாத்திரமாக இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வின் சவால்களைச் சந்திக்கும் முறையும், துணிச்சலும், சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் நேசமுமே கதைகளாகியிருக்கின்றன. அது தற்செயலானதில்லை. எனது படைப்பு மனம் பெண்களின் மீதான நெருக்கடிகளில் தான் அதிகம் கவனம் கொண்டிருக்கிறது.

இந்தத் தொகுப்பினை வெளியிடும் *உயிர்மை* பதிப்பகத்திற்கும், எனது கதைகளின் முதல்வாசகராகயிருந்து எப்போதும் என்னை ஊக்கப்படுத்தும் கவிஞர் தேவதச்சனுக்கும், அன்புத் தோழர் எஸ்.ஏ.பெருமாளுக்கும், வசந்தா அக்காவிற்கும், என்னையும் எழுத்தையும் அரவணைத்துச் செல்லும் மனைவி சந்திரபிரபா விற்கும், குழந்தைகள் ஹரி மற்றும் ஆகாஷிற்கும் மனம் நிறைந்த நன்றி.

*மிக்க அன்புடன்,*

**எஸ்.ராமகிருஷ்ணன்**

27.11.2011

உள்ளே...


| | | |
|---|---|---|
| 1. | இரண்டு குமிழ்கள் | 9 |
| 2. | புத்தனாவது சுலபம் | 21 |
| 3. | பெண் என்று எவருமில்லை | 35 |
| 4. | ஆம் புருனோ , அவர்கள் குற்றவாளிகளே | 48 |
| 5. | சீட்டாட்டம் | 64 |
| 6. | ஜன்னலைத் தட்டாதே அஷ்ரப் | 69 |
| 7 | பொய்த்தொண்டை | 88 |
| 8. | நடுவில் உள்ளவள் | 99 |
| 9. | ஜெயந்திக்கு ஞாயிற்றுகிழமை பிடிப்பதில்லை | 111 |
| 10. | யட்சன் தனித்திருக்கிறான் | 122 |
| 11. | சொர்ணத்து ஆச்சிக்கு மன்மோகன்சிங்கைப் பிடிக்காது | 129 |
| 12. | பேசும் கற்கள் | 141 |
| 13. | சிறுமீன் (குறுங்கதை) | 146 |
| 14. | சொந்தக்குரல் | 148 |
| 15. | சிற்றறிவு | 157 |
| 16. | கோகிலவாணியை யாருக்கும் நினைவிருக்காது | 162 |

# இரண்டு குமிழ்கள்

**கா**லையிலே மழை துவங்கியிருந்தது. கான்ஸ்டபிள் நிர்மலா தேவி கைதியைக் கூட்டிக்கொண்டு கோர்ட்டிற்குப் போவதற்காக ஆட்டோவில் போய்க்கொண்டிருந்தாள். கைதியைக் கோர்ட்டிற்கு அழைத்துச் செல்லும் நாட்களில் நிர்மலா பதற்றமாகிவிடுவாள். பெரும்பாலும் சாப்பிடுவதுகூட கிடையாது. கைதி தப்பியோடிவிட்டால் தனக்குத் தண்டனை கிடைப்பதோடு பெருத்த அவமானமாகவும் போய்விடும். பெரும்பாலும் பெண் கைதிகளைத்தான் அவளிடம் ஒப்படைப்பார்கள். அதில் ஒரு சிலர் மூர்க்கமாக நடந்து கொள்வதுண்டு. அரிதாக ஒன்றிரண்டு பேர் அழுவார்கள். ஆனால் இந்தப் பெண்ணைப் போல வீதியில் பெய்யும் மழையை உற்சாகமாக வேடிக்கை பார்த்துக்கொண்டு வருபவர்களை இதன் முன்னால் பார்த்ததேயில்லை.

அந்தப் பெண் கைதிக்கு இருபது வயதிற்குள்ளாகத்தானிருக்கக் கூடும். ஆள் மெலிந்து போய் ஆரஞ்சுநிற சுடிதார் அணிந்திருந்தாள். உதடுகள் கறுத்துப் போயிருந்தன. கை விரல்களில் நகங்கள் அழுக்கடைந்திருந்தன. நகம் கடிக்கும் பழக்கம் உள்ளவளாக இருக்கக்கூடும். வலது கையின் கட்டைவிரல் நகம் மட்டும் பாதி தேய்ந்து போயிருந்தது. கைது செய்யப்படும் போது அவள் செருப்புகூட அணிந்திருக்கவில்லை. பாத வெடிப்புகள் புரையோடியிருந்தன.

அவள் ஒரு பல் மருத்துவரின் வீட்டில் பணிப்பெண்ணாகயிருந்திருக்கிறாள். புதன் கிழமை மதியம் அந்த வீட்டிலிருந்து இருபதாயிரம் ரூபாயும் பதினொரு பவுன் நகையும் திருடிய போது கையோடு பிடித்திருக்கிறார்கள். டாக்டரின் தம்பியும் டிரைவருமாகச் சேர்ந்துகொண்டு அவளைச் சமையலறையில் வைத்து ஆத்திரம் தீர அடித்திருக்கிறார்கள். டாக்டரின் மனைவி மாவுக்கரண்டியால் அவள் தலையில், முதுகில்,

புட்டத்தில் அடித்ததில் ஒரு அடி பல்லில் பட்டு மேல்உதடு கிழிந்து போயிருக்கிறது. அவள் கைகளை இறுக்கக்கட்டி வளர்ப்பு நாயைக் கட்டும் சங்கிலியோடு பிணைத்து வைத்து விட்டு போலீஸில் புகார் செய்திருக்கிறார்கள்.

சபீனா என்ற அந்தப் பெண் கைதி திருடியதைத் தானே ஒப்புக்கொண்டதோடு, இதற்கு முன்பு மூன்று முறை திருட்டுக் குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப் பட்டிருக்கிறாள் என்றும் தெரிவித்தாள். அவளது வயது விபரங்களையும் கான்ஸ்டபிள் சிவந்தியும் நிர்மலாவும் சேர்ந்து விசாரித்து முதல்தகவல் அறிக்கையில் பூர்த்தி செய்தார்கள். எல்லா குற்றவாளிகளையும் போல அவளும் திருடியதற்காக ஒரு பொய்க்காரணத்தைச் சொன்னாள். எப்படியும் ஒரு வருடத்திற்குக் குறையாமல் சிறைத்தண்டனை கிடைக்கக்கூடும்.

சபீனா காவல்நிலையத்திற்கு அழைத்துவரப்பட்டதில் இருந்து வாய் ஓயாமல் எதையாவது பேசிக்கொண்டேதானிருந்தாள். சினிமா நடிகர்கள், பாடகர்கள், அங்கிருந்த காவலர்கள் என அத்தனை பேரையும் அவள் கேலி பேசினாள். அது எந்தக் காவலருக்கும் பிடிக்கவேயில்லை. அடிவாங்கி வீங்கிய கன்னத்தைப் பற்றிய கவலையின்றி லாக்கப்பினுள் உடைந்த தீக்குச்சியைப் போட்டு எதையோ விளையாடிக்கொண்டிருந் தாள். சிவந்தி அவளுக்காக வலிநிவாரணி மாத்திரையும் தேநீரும் வாங்கித் தந்தபோது தனக்கு அடிவயிறு வலிப்பதாகச் சொல்லியிருக்கிறாள்.

காலையில் மருத்துவரிடம் காட்டிவிட்டுப் பிறகு கோர்ட்டிற்குக் கொண்டு போகலாம் என்று இன்ஸ்பெக்டர் கூட சொன்னார். இன்று அதைப் பற்றி சபீனா எதுவும் சொல்லவில்லை. சபீனாவிடம் சிறை செல்லப்போவதைப்பற்றிய கலக்கமே யில்லை. அவள் இயல்பாக ஆறு மணி வரை சுருண்டு படுத்து நன்றாக உறங்கியிருந்தாள். பிறகு ஒரு டம்ளர் தண்ணீ ரில் முகம் கழுவிக்கொண்டு தலையை விரலால் கோதிவிட்ட படியே கோர்ட்டிற்குக் கிளம்பத் தயாராகிவிட்டாள்.

காவல்துறை ரெக்கார்ட் நோட்டில் கையெழுத்துப் போடச் சொன்னபோது சபீனா அழகாக ஆங்கிலத்தில் கையெழுத்துப் போட்டாள். அவள் எங்கே படித்தாள் என்று சிவந்தி கேட்டதற்கு ஹோலி ஏஞ்சல் என்று பதில் சொன்னாள் சபீனா. அந்த ஊரில் உள்ள பழமையான பள்ளிக்கூடம் அது. அதே பள்ளியில்தான் நிர்மலாவும் படித்தாள். சபீனா எந்த டீச்சரிடம் படித்தாள் என்று கேட்கலாமா என்று உடனே தோணியது. ஆனால் இவளைப் போன்ற ஒரு

திருடி எந்த வகுப்பில் படித்தால் நமக்கு என்ன என்று அவளாகவே அந்த எண்ணத்தை முறித்துக்கொண்டுவிட்டாள். பள்ளியில் படிக்கும் நாளில் இப்படி ஒரு கைதியாகத் தான் என்றாவது அழைத்துச் செல்லப்படுவோம் என்று சபீனா நினைத்திருப்பாளா என்ன?

ஆட்டோ மழையினுள் சென்றுகொண்டிருந்தது. சாலையெங்கும் காற்றோடு மழை பெய்துகொண்டிருந்தது. அதனால் நிர்மலாதேவியின் பேன்ட்டின் கால் பக்கம் மழை அடித்து ஈரமாக்கியது. அவள் நகர்ந்து உட்கார்ந்துகொண்டாள்

"உள்ளே தள்ளி உட்கார்ந்துக்கோங்க அக்கா" என்றாள் சபீனா.

அவள் அக்கா என்று கூப்பிடுவது நிர்மலாதேவிக்குப் பிடிக்கவில்லை. அதைக் காட்டிக்கொள்ள வேண்டும் என்றவளைப் போல "மேடம்னு கூப்பிடு" என்றாள். அதற்கு சபீனா, "மேடம்னு சொன்னா ஸ்கூல் டீச்சரைக் கூப்பிடுற மாதிரி இருக்கும். ஏட்டம்மானு கூப்பிடுறேன்" என்றாள்.

அப்படி அவள் சொன்னது நிர்மலாதேவியைக் கேலி செய்வது போலவே இருந்தது. ஆட்டோ நாராயணமுதலி தெரு வழியாகப் போய்க்கொண்டிருந்தது. சபீனா மழைக்குப் பயந்து ஒதுங்கி நிற்பவர்களைப் பார்த்தபடியே வந்தாள். ஒரு பேருந்து நிறுத்தத்தினுள் கறுப்புஅங்கி அணிந்த கன்யாஸ்த்ரீ நின்றுகொண்டிருந்தாள். அவளது தலையில் போட்டிருந்த முக்காடினைக் காற்று படபடத்து இழுத்தது. குடை பிடித்தபடியே நடந்துசெல்லும் பள்ளிச் சிறுமியிடமிருந்து குடையைப் பிடுங்க காற்று முயற்சித்துக்கொண்டிருந்தது. கொய்யாப்பழ வண்டிக்காரன் ஒருவன் மழைக்குப் பயந்து வண்டியை அப்படியே விட்டுவிட்டு ஒதுங்கியிருந்தான். கொய்யாப்பழங்கள் மழையில் நனைந்துகொண்டிருந்தன. ஒரு கிழட்டுப் பிச்சைக்காரன் மட்டும் மழையில் நனைந்தபடியே குப்பைத்தொட்டி அருகில் உட்கார்ந்திருந்தான்.

ஆட்டோ ஆனையடி பேருந்து நிறுத்தத்தைத் தாண்டியது. அங்கே மழையில்லை. கடந்துபோன ஒரு பேருந்தில் இருந்து ஒரு பையன் சபீனாவைப் பார்த்து ரசித்தபடியே போனான். சபீனா தன்னை அவன் கவனிப்பதை அறிந்தவளைப் போல உற்சாகத்துடன் கையைக் காட்டினாள்.

"யாரு, உனக்குத் தெரிஞ்ச பையனா?" என்று கேட்டாள் நிர்மலாதேவி.

“இல்லை ஏட்டம்மா. யாரோ ஒரு பையன், என்னை சைட் அடிக்கிறாப்லே. நாளைக்கு ஜெயிலுக்குள்ளே போயிட்டா அப்புறம் காலேஜ் பசங்களைப் பாக்க முடியாதுல்லே. அதான்” என்றாள். நிர்மலாதேவியை அப்படி எந்த இளைஞனும் ரசித்துக் கைகாட்டியதில்லை. சிலவேளைகளில் ஒன்றிரண்டு பையன்கள் ரகசியமாக அவளை ரசிப்பதுண்டு. மற்றபடி கையைக் காட்டி சிரிப்பவர்கள் எவரையும் கண்டதேயில்லை.

சபீனா ஆட்டோவின் முன்பக்க கண்ணாடியில் தன் உருவம் தெரிவதை எட்டிப் பார்த்துவிட்டு “அண்ணே, ஆட்டோவுல சீடி இல்லையா?” என்று கேட்டாள்.

“சீடி எல்லாம் ஜெயிலுக்குள்ளே போடுவாங்க. நல்லா படுத்துக் கால் ஆட்டிக்கிட்டு கேளு” என்றார் ஆட்டோ டிரைவர்.

“உங்க அனுபவமாண்ணே” என்று பதிலுக்குக் கேட்டாள் சபீனா.

அவர் கோபத்துடன் முறைப்பது தெரிந்தது. சாலையில் ஒரு ஆள் ஸ்கூட்டரில் போய்க்கொண்டிருந்தான்.

“ஏட்டம்மா... இந்த ஆளு தொப்பையைப் பாருங்க. கஞ்சிப்பானை மாதிரி எப்படியிருக்கு. பாவம் இவன் பொண்டாட்டி” என்று சொல்லிச் சிரித்தாள். வாயை மூடிக்கொண்டு வரமாட்டாளா என்று ஆத்திரமாக வந்தது நிர்மலாவிற்கு. இன்னும் யாராவது ஒரு ஆளை அவள் கேலி செய்தால் மூஞ்சியோடு சேர்த்து அடித்துவிடலாம் என்றுகூடத் தோன்றியது.

“ஏட்டம்மா, உங்களுக்குக் கல்யாணம் ஆகிருச்சா?” என்று கேட்டாள் சபீனா.

“மாப்பிள்ளை பாத்துக்கிட்டு இருக்காங்க” என்றாள் நிர்மலா தேவி. சபீனா அதைக் கேட்டதும் நமட்டுச் சிரிப்பு சிரித்துக் கொண்டாள். எதற்காக இப்போது சிரிக்கிறாள் என்று நிர்மலா விற்கு ஆத்திரமாக வந்தது.

சபீனா அதை அறிந்துகொண்டவளைப் போல “பொம்பளை போலீஸைக் கட்டிக்கிட நிறைய பேரு பயப்படுவாங்க. மாப்பிள்ளை லேசில கிடைக்காது” என்றாள்.

அது உண்மைதான். ஆனால் அதைத் திருடியான சபீனா சொலவது நிர்மலாவிற்குப் பிடிக்கவில்லை. இவளைப் போல கிரிமினல் பின்னால் அலைந்து திரிவதால்தான் தனக்குத் திருமணம் நடக்காமல் போகிறது என்று அவளுக்கு சபீனா மீது கோபமாக வந்தது.

நிர்மலாவை இத்தோடு மூன்று பேர் பெண் பார்த்துவிட்டுப் போய்விட்டார்கள். அவர்களுக்கு இருந்த ஒரே தயக்கம், பெண் போலீஸாக இருப்பதுதான். அதில் ஒரு வங்கி ஊழியர் அவளிடம் நேராகவே சொன்னார்

"எனக்குத் தோசை சுடுற பொண்டாட்டிதான் வேணும். துப்பாக்கிச் சுடுற பொம்பளை வேண்டாம். நீங்க தப்பா நினைச்சிக்கிடாதீங்க. இந்த வேலையை விட்டுட்டா நான் கல்யாணம் பண்ணிக்கிட தயாரா இருக்கேன்."

எந்தப் பெண்ணும் ஒரு போலீஸ்காரரைக் கட்டிக்கொள்ள இப்படி யோசித்தேயில்லையே. ஏன் இப்போது மட்டும் இத்தனை ஆயிரம் கேள்விகள்,கேலிகள் என்று நிர்மலாவிற்கு ஆத்திரமாக வந்தது.

அவள் விரும்பிதான் இந்த வேலைக்கு வந்தாள். பத்தாம் வகுப்பில் என்.சி.சி.யில் சேர்ந்து பயிற்சி எடுத்துக் கொண்ட போதே அவளுக்குக் காக்கி உடை, மிடுக்கு, எதற்கும் பயப்படாமல் முன்னே நிற்பது போன்றவற்றில் ஈர்ப்பு உருவாக ஆரம்பித்தது. அவளது வீட்டில் யாருக்குமே அவள் போலீஸ் வேலைக்குப் போவது பிடிக்கவேயில்லை. அப்பா ஒருவர் மட்டுமே அவள் விருப்பத்திற்குத் துணையாக இருந்தார்.

"ஆம்பளை மாதிரி பேண்ட் சட்டை போடுறதே எனக்குப் பிடிக்கலை. இதுலே போலீஸ்ல வேலைக்குச் சேர்த்து விட்டுட்டா ஒரு நகை நட்டு போட முடியாது. தலையில பூ வைக்க முடியாது. சாமி கும்பிடுற பழக்கம் போயிரும். அதை விட எல்லாத்துக்கும் எதிர்வாதம் பேசுறதும், அடிக்க கையை ஓங்குறதுமா கெட்டபழக்கம் வந்துரும். வேணாம்டி இந்த வேலை. நீ மேல படிச்சி வேற ஏதாவது வேலைக்குப் போ" என்று அம்மா அவள் காவலர் பயிற்சிக்குச் செல்லும் நாள்வரை திட்டிக்கொண்டேயிருந்தாள். அண்ணன், அண்ணி இரண்டு பேரும் அவள் போலீஸில் சேர்வதால் தங்களுக்குத் தான் அவமானம் என்று கத்தினார்கள். ஆனால் நிர்மலா தனக்குப் பிடித்த வேலை என்று பிடிவாதமாக இருந்தாள்.

அவள் போலீஸ் உடுப்பை மாட்டிக்கொண்டு முதன்முதலில் வேலைக்குப் போய் வந்தபோது தெருவே வேடிக்கை பார்த்தது. இன்றைக்கு வரை அவளது அம்மாவோ, அண்ணனோ அவளைத் தேடி போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்ததேயில்லை. எப்போதாவது அப்பா அவளைக் காண போலீஸ் ஸ்டேஷனுக்கு வருவார். அப்போதுகூட அவர் தலையைக் கவிழ்ந்தபடியே ஓரமாகத்தான் நிற்பார் எல்லா வேலைகளையும்

போல இதுவும் ஒரு வேலைதானே. எதற்காக அப்பாகூட இப்படி நடந்துகொள்கிறார் என்று தோன்றும். போலீஸைப் பற்றிய பயம் எல்லோர் மனதிலும் ஆழமாகப் பதிந்து போயிருக்கிறது. அதை அவள் ஒருத்தியால் மட்டும் போக்கிவிட முடியாது என்று சுயசமாதானம் சொல்லிக்கொள்வாள்.

சில நேரங்களில் அலுவல் நெருக்கடியும், உயர்அதிகாரிகளின் ஏச்சுப்பேச்சும் கேட்கையில் இதற்காகவா வீடு, உறவு என இத்தனை பேரை எதிர்த்துக்கொண்டோம் என்று வருத்தமாக இருக்கும். அரிதாகச் சில வேளைகளில் அழகான உடையணிந்தப் பெண்ணை பார்த்தாலோ, மதிய சினிமா பார்த்து விட்டுத் தோழிகளுடன் அரட்டை அடித்துவரும் பெண்களைக் கடக்கும்போதோ நாம் இப்படி இல்லாமல் போய்விட்டோமே என்று மனதிற்குள் மின்னல் போல ஒரு எண்ணம் தோன்றி மறையும். ஒருமுறை ஜவுளிக் கடையில் தன்னோடு படித்த தோழி ஒருத்தியைச் சந்தித்தபோதுகூட அவள் "என்னடி நீ சேலை பாத்துக்கிட்டு இருக்கே. நீயெல்லாம் காக்கி பேன்ட் போடுற ஆள் இல்லே" என்று கேலி செய்தது நினைவில் இருக்கிறது. ஏன் தன்னை மற்றவர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் கேலி செய்கிறார்கள். என்ன மனோபாவம் இது.

பணிக்குச் சேர்ந்த புதுசில் ஒரு நாள் அவளையும் மணிமொழியையும் பேருந்துநிலையப் பாதுகாப்பிற்கு அனுப்பிவைத்தார்கள். ஒரு பேருந்தில் ஒருவன் அதிகம் குடித்துவிட்டுப் பயணிகளிடம் தொல்லை தருகிறான் என்று ஒரே சப்தமாக இருந்தது. பேருந்திற்குள் மணிமொழி ஏறி அந்தக் குடிகாரனை மிரட்டிக் கொண்டிருந்தபோது அவன் தன் காலடியில் வைத்திருந்த பீர்பாட்டிலால் மணிமொழியின் மணிக்கட்டோடு சேர்த்து அடித்துவிட்டான். மணிமொழி வலி தாங்கமுடியாமல் அலறிவிட்டாள்.

அன்றைக்குத்தான் முதன்முதலாக ஒரு ஆளை நிர்மலாதேவி அடித்தாள். தலைமயிரைப் பிடித்து இழுத்து செவுளோடு மாறிமாறி அடித்து, அந்தக் குடிகாரனைப் பேருந்தை விட்டு இறக்கினாள். அவன் வேஷ்டியைச் சொருகியபடியே ஆபாசமாக அவர்களைத் திட்டிக்கொண்டிருந்தான். மணிமொழியும் அவளும் அந்தக் குடிகாரனை லத்தியால் மாறிமாறி அடித்தார்கள். அந்தக் குடிகாரனுக்கு ஐம்பது வயதுக்கும் மேலிருக்கக் கூடும். பருத்த தொப்பை கொண்டிருந்தான். அடிதாங்க முடியாமல் அவன் ஒரு சிறுவனைப் போல அழுதான்.

பேருந்து நிலையமே அவர்கள் அடிப்பதை வேடிக்கை பார்த்தது. அடித்து முடித்து அவனை வேனில் ஏற்றி அழைத்துக்கொண்டு

போகும்போதுதான் நிர்மலா தேவி தான் வாழ்க்கையில் முதன்முதலாக ஒரு ஆளை அடித்திருக்கிறோம் என்பது நினைவிற்கு வந்தது. அவள் தனது இருபத்திநாலு வயது வரை ஒரு ஆளைக்கூட அடித்ததுமில்லை. அடிவாங்கியது மில்லை. காவல் பயிற்சியின்போது விளையாட்டாக மோதிக் கொண்டது உண்டு. ஆனால் இப்படி ஒரு ஆளைப் பலர் அறிய பொது இடத்தில் அடித்தது அதுவே முதல்முறையாக இருந்தது.

அவள் தன் கைகளைத் தானே தடவிப் பார்த்துக்கொண்டாள். அம்மா சொன்னது போல தன்னிடமிருந்த மென்மை போய் விட்டதோ. வீட்டில் அந்த விசயத்தை அவள் சொல்லவே யில்லை. ஆனால் பேருந்து நிலையத்தில் உள்ள பேப்பர்கடைக் காரன் அப்பாவிடம் சொல்லி அதன்வழியே அம்மாவிற்குத் தெரிந்து போனது. ஒரு நாள் முழுவதும் அம்மா அதற்காக வருத்தப்பட்டாள். தான் அவளைச் சரியாக வளர்க்கவில்லை என்று புலம்பினாள். நிர்மலா அம்மாவைச் சமாதானம் செய்யவேயில்லை.

ஆனால் இந்த ஆறு வருடத்தில் அவளுக்கு அடிப்பது, குற்றவாளிகளைத் துரத்தி ஓடுவது, நள்ளிரவில் தனியே காவல் இருப்பது, சாலையோரம் மணிக்கணக்கில் நின்று கூட்டத்தை ஒழுங்குபடுத்துவது. பொதுக்கூட்டங்களுக்குப் பாதுகாப்பு போவது, ஏன் வெட்டிக் கொல்லப்பட்ட உடலுக்குக் காவலாக இருப்பது வரை அத்தனையும் பார்த்துவிட்டாள்.

இரண்டு முறை அவளது புகைப்படம் தினசரி பேப்பரில் வெளியாகியிருக்கிறது. ஒரு முறை கள்ளச்சாராயம் காய்ச்சு பவர்களை மடக்கிப் பிடித்ததாக இன்ஸ்பெக்டருடன் அவளது போட்டோவும் மிகச்சிறியதாக வெளியாகி இருந்தது. அதைப் பார்த்துவிட்டு திண்டுக்கல்லில் இருந்து சாரதி சித்தப்பா அப்பாவிடம் போனில் “அண்ணே, கள்ளச்சாராயம் காய்ச்சுகிற வங்களோட உன் மக போட்டோவைப் பாத்தேன். இனிமே அவளை யாரு கட்டிக்கிடுவா” என்று கேலி பேசியிருக்கிறார். அம்மா ஆத்திரத்தில் அந்தப் பேப்பரைக் கிழித்து அடுப்பில் போட்டு எரித்துவிட்டாள்.

அதற்கு அப்புறம் நிர்மலாவின் காக்கி உடைகளைத் துவைப் பதைக்கூட அம்மா நிறுத்திவிட்டாள். இப்போதெல்லாம் பணிமுடிந்து திரும்பி நிர்மலாவே தான் தனது உடைகளைத் துவைத்துக்கொள்கிறாள். அவள் ஒரு முறை தனது தாய்மாமா ராஜாமணியைத் தாலுகா அலுவலகம் முன்பாக தற்செயலாகப் பார்த்தாள். அவர் அருகாமை சிற்றூரில் மளிகைக் கடை

வைத்திருக்கிறார். அவள் காக்கி உடையில் இருக்கிறாள் என்பதற்காகவே அவர் கண்டுகொள்ளாமல் விலகிப்போனார். அவளாகவே தேடிப் போய் "மாமா" என்று கூப்பிட்டாள்.

அப்போதுதான் கவனித்தவரைப் போல "தேவி... எப்படி இருக்கே!" என்று கேட்டார். மாமாவை அழைத்துக் கொண்டு போய் இளநீர் வாங்கித் தந்தாள். மாமா குடித்துவிட்டு "உங்களுக்கு எல்லாமே ஓசிதானே" என்று கேட்டார். "அதெல் லாம் இல்லை. காசு குடுத்துதான் இளநீர் வாங்கிக் குடிக் கிறோம்" என்றாள்.

மாமா அதை நம்பாதவரைப் போல "ஒரு நாளைக்கு ஆயிரம் ரெண்டாயிரம் மாமூல் கிடைக்குமா?" என்று குத்தலான குரலில் கேட்டார். நிர்மலாவிற்கு ஆத்திரமாக வந்தது. "நான் அதெல்லாம் வாங்க மாட்டேன்" என்றாள்.

"நாய் வேஷம் போட்டாச்சில்ல. பிறகு குரைக்கமாட்டேன்னா எப்படி!" என்று சொல்லிச் சிரித்தார். ஏன் இப்படி தன்னை அவமானப்படுத்துகிறார் என்று எரிச்சலாக வந்தது. அவளை மேலும் குற்றவுணர்ச்சி கொள்ளச் செய்வதுபோலவே மாமா சொன்னார்:

"உன்னை விட பரிமளா ரெண்டுவயசு சின்னவ. அவளுக்கே கல்யாணம் ஆகி பிள்ளை எல்கேஜி போயிருச்சி. பாவம் உங்கப்பன். உனக்கு இன்னும் மாப்பிள்ளை பாத்துக்கிட்டு இருக்கான். பேசாம யாராவது ஒரு போலீஸ்காரனைப் பாத்து லவ் பண்ணிரு. வேற மாப்பிள்ளை கிடைக்காது."

"நான் கல்யாணமே பண்ணிக்கிட போறதுல்லே மாமா" என்றாள்.

"நினைச்சேன். போலீஸ்புத்தி அப்பிடித்தானே போகும். அடக்க ஒடுக்கமான பொண்ணுகளுக்கே மாப்பிள்ளை கிடைக்க மாட்டேங்குது. உனக்கு எங்க போயி தேடுறது. எனக்கு மார்க்கெட்ல ஒரு வேலையிருக்கு. நான் வர்றேன்மா..." என்று கிளம்பிப் போனார்.

அதைக் கேட்டபோது நிர்மலாவிற்கு ஆத்திரமாகவும் கோப மாகவும் வந்தது. ஆனால் அவள் அதைக் காட்டிக்கொள்ள வில்லை. அன்றிரவு படுக்கையில் கிடந்தபடியே மாமா சொன் னதை நினைத்துக்கொண்டிருந்தாள். ஏன் என்னை ஒரு குற்றவாளி போலவே பார்க்கிறார்கள். வீடும் உறவும் இப்படித் தானாக எதை எதையோ கற்பனை பண்ணிக்கொண்டு ஏன் நம்மை வதைக்கிறார்கள் என்று உள்ளூற வேதனையாக இருந்தது.

“ஏட்டம்மா... தூங்கிட்டீங்களா?” என்ற சப்தம் கேட்டது. நினைவில் ஆழ்ந்து போயிருந்த நிர்மலா அது கலைந்தவளைப் போல “அதெல்லாமில்லை” என்றாள்.

“நான் இப்படியே குதிச்சி ஓடிப்போயிட்டா என்ன செய்வீங்க?” என்று கேட்டாள் சபீனா.

“அப்படி எல்லாம் ஓட முடியாது.”

“ஏன் ஓடுனா சுட்டுருவீங்களா... உங்ககிட்டேதான் துப்பாக்கி கூட கிடையாதே” என்றாள். ஏன் இந்தப் பெண் நம்மை இளக்காரமாகப் பேசுகிறாள் என்பதுபோல “வாயை மூடிட்டு வாடி” என்றாள். கேலியைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை என்று தெரிந்துகொண்டு விட்டவளைப் போல சபீனா, “நான் ஓடிப்போயிட்டா உங்க போட்டோ பேப்பர்ல வரும்லே” என்றாள். அதைக் கேட்டதும் நிர்மலாவிற்கு எரிச்சலாக வந்தது.

“சும்மா வரமாட்டியா. என்னடி நக்கலு?” என்று கோபப்பட்டாள்.

“ஜெயிலுக்குப் போகப் போறது நானு. ஆனா உங்க முகம்தான் இருள் அடைஞ்சி போயிருக்கு” என்றாள் சபீனா. நிர்மலா முகத்தைக் கையால் துடைத்தபடியே வேறுபக்கம் திரும்பிக் கொண்டாள். சபீனாவால் நிலைகொள்ள முடியவில்லை என்பது போல சாலையில் கடந்துசெல்லும் வாகனங்களை எண்ணிக்கொண்டு வரத்துவங்கினாள்.

காந்தி சிலை அருகே வந்தபோது ஒரே வாகன நெரிசலாக இருந்தது. பயிற்சிக் காலத்தில் இதே இடத்தில் நிர்மலா நின்று வாகனங்களை ஒழுங்குபடுத்தியிருக்கிறாள். சாலையின் நடுவில் நிற்பது முற்றிலும் வேறுவிதமான அனுபவம். பள்ளி வயதில் சாலையைக் கடந்துசெல்வதற்கே பயமாக இருக்கும். ஆனால் அதே சாலை தனது கையசைவிற்காகக் காத்திருப்பது வேடிக்கையாக இருந்தது. ஆனாலும் நாள் முழுவதும் சாலையின் நடுவில் நிற்கையில் கடந்துசெல்லும் பேருந்துகள், கார்கள், பைக்குகளுக்குள்ளாக சிக்கிக்கொண்டது போல தோன்றும். உறக்கத்தில் கூட வாகன ஒலி கேட்டுக்கொண்டே யிருக்கும்.

சபீனா ஆட்டோவிலிருந்து தலையை வெளியே எட்டி முன்னாடி நின்ற பைக்காரனை பார்த்து “சார், உங்க பொண்டாட்டிகூட அப்படி ஓரமா நின்னு போன்ல பேசுங்க. நாங்க போகணும்லே” என்றாள். அவன் திகைப்போடு

தலையாட்டிக்கொண்டான். ஆட்டோ குறுக்கே புகுந்து போகத் துவங்கியது.

மரியன்னை தேவாலயத்தை ஆட்டோ கடந்தபோது "இயேசப்பா... எல்லாரையும் காப்பாத்து" என்று சபீனா சிலுவையிட்டுக்கொண்டாள். ஆட்டோ ரவுண்டாணாவைச் சுற்றித் திரும்பி பாலத்தில் ஏறியது. பாலத்தில் செல்லும்போது சட்டென அவள் முகம் மாறியது. கால்களை இடுக்கிக்கொண்டு உட்கார்ந்தபடியே சில நிமிடங்கள் அமைதியாக வந்தாள். பிறகு சபீனா பேசவேயில்லை. ஏன் அமைதியாகிவிட்டாள் என்று புரியாதவளைப் போல நிர்மலா அவளைப் பார்த்த படியே வந்தாள். அவள் தலைகவிழ்ந்தபடியே எதையோ யோசித்துக்கொண்டு வந்தாள். ஆட்டோ அமைதியாகப் போய்க்கொண்டேயிருந்தது. தொலைவில் கோர்ட் வளாகம் தெரிந்தது. நீண்ட தயக்கத்திற்குப் பிறகு சபீனா சொன்னாள், "திடீர்னு பீரியடு வந்துருச்சி. ஒரு நாப்கின் வாங்கணும்."

ஆட்டோவை மெடிக்கல் ஸ்டோர் அருகில் போய் நிற்கச் சொன்னாள் நிர்மலா. அந்தப் பெண் கீழே இறங்கிக்கொண்டு தயக்கத்துடன் "என்கிட்டே காசு இல்லை" என்றாள். நிர்மலா தனது பர்ஸில் இருந்து ஐம்பது ரூபாயை எடுத்துத் தந்தாள். சபீனா மெடிக்கல் ஸ்டோரை நோக்கிச் சென்று நாப்கின் வாங்கிக்கொண்டு வரும்வரை அவள் ஆட்டோவில் சாய்ந்த படியே மழை வெறித்த சாலையைப் பார்த்தபடியே நின்று கொண்டிருந்தாள். அந்தப் பெண் மிச்ச சில்லறையைக் கொடுத்துவிட்டு தாழ்வான குரலில் "கோர்ட்ல இருக்கிற பாத்ரூம்ல போயி மாத்திக்கிடுறேன்" என்றாள்.

இதே வேதனையைப் பலமுறை நிர்மலா அனுபவித்திருக்கிறாள். பொதுக்கூட்டத்திற்குப் பாதுகாப்பிற்குப் போன நாளில், தேர்தல் பணிக்காக வரிசையில் நின்றபொழுதில், ஏன் ஒரு முறை முதல்வர் வருகைக்காக ஜீப்பில் பயணம் செய்த அதிகாலையில் என பலமுறை வெளியே பகிர்ந்துகொள்ள முடியாத இதே வலியும் குருதிப்போக்கும் அவளை ரணப் படுத்தியிருக்கிறது.

அதுவரையில்லாமல் அந்த நிமிடம் நிர்மலா தேவிக்கு அந்தப் பெண் மீது ஏனோ ஒரு ஒட்டுதல் வந்தது. "காலைல ஏதாவது சாப்பிட்டயா?" என்று கேட்டாள். "இட்லி வாங்கிக் குடுத் தாங்க" என்று சொன்னாள். அந்தக் குரல் இப்போது ஒடுங்கி யிருந்தது. இருவரும் ஆட்டோவில் ஏறிக்கொண்டார்கள். அந்தப் பெண் நாப்கினை மடியில் வைத்துக்கொண்டாள். அதன்பிறகு கோர்ட் வாசலில் போய் இறங்கும்வரை சபீனா

ஒரு வார்த்தைகூட பேசவேயில்லை.

கோர்ட் வளாகத்தில் நிறைய மரங்கள் அடர்ந்திருந்தன. மழைக்குப் பிந்தைய வெளிச்சத்தில் அந்த சிவப்புக் கட்டிடங்கள் ஏதோ ஓவியம் ஒன்றிலிருந்து விடுபட்டு வந்தவை போல தோன்றின. சபீனா அவசரத்துடன் கழிப்பறையை நோக்கிச் செல்வது தெரிந்தது. அவள் வரும்வரை ஒரு பன்னீர் மரத்தடியில் நின்றிருந்தாள் நிர்மலா. மழைக்காற்றால் நிறைய பூக்கள் உதிர்ந்து சிதறியிருந்தன. அந்த வாசம் நாசியில் ஏறியது.

சபீனா படியில் இருந்து இறங்கி வருவது தெரிந்தது. அவள் முகத்தில் சிரிப்பின் சுவடேயில்லை. உலகையே பரிகசிக்கத் தெரிந்த பெண் ஏன் இப்படித் தன் உடல் குருதியைக் கண்டதும் ஒடுங்கிக்கொண்டுவிட்டாள் என்று அவள் மீது பரிவாக வந்தது. “எப்படியிருக்கு?” என்று கேட்டாள் நிர்மலா

“பாத்ரூம்ல தண்ணி வரலை. ஒரே அழுக்குவேற... டிரஸைக் கழட்டும்போது கீழே விழுந்துட்டேன்” என்று கையைக் காட்டினாள். சிராய்ப்பாக இருந்தது. நிர்மலா கையைத் துடைத்துவிட்டபடியே “டீ குடிக்கிறயா?” என்று கேட்டாள்.

“வேண்டாம் ஏட்டம்மா- இப்பவே நேரமாகிருச்சி. என்னாலே நிக்க முடியலை. கால் எல்லாம் நடுங்குது. எப்படா படுக்கலாம்னு இருக்கு” என்றாள் சபீனா. அந்த முகத்தில் அதுவரையிருந்த வேடிக்கைத்தனம் முற்றிலும் ஒடுங்கியிருந்தது.

“இரு வர்றேன்” என்று சொல்லி அவளைப் பன்னீர் மரத்தடியில் உட்கார வைத்துவிட்டு தேநீர் வாங்கிக் கொண்டு வரப் போனாள் நிர்மலா. திரும்பி வரும்வரை தலைகவிழ்ந்து உட்கார்ந்தேயிருந்தாள் சபீனா. தேநீரை அவள் கையில் தந்தபோது வேகமாகக் குடித்தாள். அவள் தேநீர் குடிப்பதைப் பார்த்தபடியே வழியெல்லாம் அவள் பேசிய கேலியை நினைத்து லேசான நமட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டாள் நிர்மலா.

“எதுக்குச் சிரிக்குறீங்க?” என்று கேட்டாள் சபீனா. “நீ அடிச்ச கேலியைப் பத்தி நினைச்சிதான்” என்றாள் நிர்மலா.

“அதெல்லாம் பொய்.. என்னைப்பத்தி நினைச்சா எனக்கே கேவலமா இருக்கு. அதை மறைக்கத்தான் லூசு மாதிரி சிரிச்சிக்கிட்டே இருக்கேன். ஒழுக்கமா வேலை செய்யணும்னு நினைச்சி வேலைக்குப் போனா எல்லா வீட்டு ஆம்பளையும் ஒண்ணு போலதான் இருக்காங்க. இவனுக எல்லாம் சேந்துதான் என்னைத் திருடியாக்கிட்டாங்க. படிக்கிற பசங்க யாரும் இப்படி நடந்துக்கிடறது கிடையாது. கல்யாணம் பண்ணிக்

குடித்தனம் நடத்திக்கிட்டு இருக்கிற ஆம்பளைதான் எவடா கிடைப்பானு அலையுறாங்க. அது கிழவனா இருந்தாலும் அப்படித்தான் இருக்கான். இருபது வயசுக்குள்ளே நிறைய அனுபவிச்சிட்டேன். எனக்கு யாரையுமே பிடிக்கலை. வாங்க போவோம்" என்று எழுந்துகொண்டாள்.

படியேறும்போது நிர்மலா தற்செயலாகக் கவனித்தாள். சபீனா தலையில் ஒரு பன்னீர் பூ உதிர்ந்து கிடந்தது. அது அவளுக்குத் தனித்த அழகு தருவது போலிருந்தது. சொன்னால் அதைத் தட்டிவிடுவாளோ என்று சொல்லாமல் அதைப் பார்த்து ரசித்தபடியே நடந்து சென்றாள்.

கோர்ட் வராந்தாவில் சிறைச்சாலையில் இருந்து அழைத்து வரப்படும் குற்றவாளியைக் காண்பதற்காக ஒரு குடும்பமே காத்துக்கிடந்தது. அதில் இருந்த மூன்று வயது சிறுவனின் தலையைத் தடவிவிட்டபடியே சபீனா "இந்த வயசுலே எங்க வந்து நின்னுக்கிட்டு இருக்கு. பாவம்லே" என்று அதைக் கொஞ்சி முத்தமிட்டாள். என்ன பெண் இவள் என்பது போல நிர்மலா அவளையே பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

குற்ற விசாரணைக்காக கோர்ட் துவங்கியிருந்தது. வழக்கறிஞர் கள் அவசரத்தோடு போவதும் வருவதுமாக இருந்தார்கள். அவர்களை விலக்கிக்கொண்டு ஏதோ கல்யாண வீட்டிற்குள் போவதுபோல விடுவிடுவென முன்னால் போய்க்கொண்டிருந் தாள் சபீனா.

# புத்தனாவது சுலபம்

அருண் இரவிலும் வீட்டிற்கு வரவில்லை.

பின்னிரவில் பாத்ரூம் போவதற்காக எழுந்து வந்தபோதுகூட வெளியே பார்த்தேன். அவனது பைக்கைக் காணவில்லை. எங்கே போயிருப்பான்.

மனைவியிடம் கேட்கலாமா என்று யோசித்தேன். நிச்சயம் அவளிடமும் சொல்லிக்கொண்டு போயிருக்க மாட்டான். கேட்டால் அவளாகவே அருண் எங்கே போயிருக்கக்கூடும் என்று ஒரு காரணத்தைச் சொல்வாள். அது உண்மையில்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும். பிறகு எதற்குக் கேட்டுக் கொள்ள வேண்டும்.

பல நாட்கள் அருண் பின்னிரவில்தான் வீடு திரும்பி வருகிறான். இப்போது அவனுக்கு இருபத்திநாலு வயதாகிறது. இன்ஜினீயரிங் படிப்பைக் கடைசி வருசத்தில் படிக்காமல் விட்டுவிட்டான். இனிமேல் என்ன செய்யப்போகிறான் என்று கேட்டபோது "பாக்கலாம்" என்று பதில் சொன்னான்.

"பாக்கலாம் என்றால் என்ன அர்த்தம்?" என்று கோபமாகக் கேட்டேன்.

பதில் பேசாமல் வெறித்த கண்களுடன் உதட்டைக் கடித்துக் கொண்டே தன் அறைக்குள் போய்விட்டான்.

என்ன பதில் இது.

பாக்கலாம் என்றால் அதை எப்படி எடுத்துக்கொள்வது.

கடந்த ஐந்து வருடமாகவே அருண் வீட்டில் பேசுவதைக் குறைத்துக்கொண்டே வருவதை நான் அறிந்திருக்கிறேன். சில நாட்கள் ஒருவார்த்தைகூடப் பேசியிருக்க மாட்டான்.

அப்படி என்ன வீட்டின் மீது வெறுப்பு.

எனக்கு அருண் மீதான கோபத்தை விடவும் அவன் பைக் மீதுதான் அதிக கோபமிருக்கிறது. அதுதான் அவனது சகல காரியங்களுக்கும் முக்கிய துணை. பைக் ஓட்டிப்போக வேண்டும் என்பதற்காகத்தானோ என்னவோ, தாம்பரத்தை அடுத்துள்ள பொறியியல் கல்லூரியில் படிக்க சேர்ந்து கொண்டான்.

சில நாட்கள் என் அலுவலகம் செல்லும் நகரப்பேருந்தில் இருந்தபடியே அருண் பைக்கில் செல்வதைக் கண்டிருக்கிறேன். அப்போது அவன் என் பையனைப் போலவே இருப்பதில்லை. அவன் அலட்சியமாக பைக்கை ஓட்டும் விதமும் தாடி வளர்த்த அவனது முகமும் காண்கையில் எனக்கு ஆத்திர ஆத்திரமாக இருக்கும்.

அருண் சிகரெட் பிடிக்கிறான். அருண் பியர் குடிக்கிறான். அருண் கடன் வாங்குகிறான். அருண் யாருடனோ சண்டை யிட்டிருக்கிறான். அருண் அடுத்தவர் சட்டையைப் போட்டுக் கொண்டிருக்கிறான். உறவினர் வீட்டுத் திருமணத்திற்கு அருண் வருவதில்லை. அருண் ஒரு பெண் பின்னால் சுற்றுகிறான். அருண் காதில் கடுக்கன் போட்டிருக்கிறான். கையில் பச்சை குத்தியிருக்கிறான். தலை மயிரை நிறம் மாற்றிக்கொண்டு விட்டான். இப்படி அவனைப் பற்றி புகார் சொல்ல என்னிடம் நூறு விஷயங்கள் இருக்கின்றன. எல்லாவற்றிற்கும் அவனது ஒரே பதில் மௌனம் மட்டுமே.

என் வீட்டில் நான் பார்க்கவே வளர்ந்து, நான் பார்க்காத ஆளாக ஆகிக்கொண்டிருக்கிறான் அருண்.

அதுதான் உண்மை.

அவனது பதினாறு வயது வரை அருணிற்கு என்ன பிடிக்கும், என்ன சாப்பிடுவான், எதற்குப் பயப்படுவான் என்று நன்றாகத் தெரியும். ஆனால் பதினேழில் இருந்து இன்றுவரை அவனைப் பற்றிக் கேள்விப்படும் ஒவ்வொன்றும் எனக்கு வியப்பாகவே இருக்கிறது. சிலவேளைகளில் பயமாகவும் இருக்கிறது.

நான் அனுமதிக்கக்கூடாது என்று தடுத்துவைத்திருந்த அத்தனையும் என் மகனுக்குப் புசிக்கத் தந்து உலகம் என்னைப் பரிகாசப்படுத்துகிறதோ.

சில வேளைகளில் குளித்துவிட்டுக் கண்ணாடி முன் நின்ற படியே நீண்ட நேரம் அருண் எதற்காக வெறித்து தன்னைத் தானே பார்த்துக்கொண்டிருக்கிறான். அந்தத் தருணங்களில்

யாரோ அந்நியன் நம் வீட்டிற்குள் வந்துவிட்டது போல எனக்கு மட்டும்தான் தோன்றுகிறதா. சாப்பாட்டுத் தட்டின் முன்னால் உட்கார்ந்த வேகத்தில் பாதி இட்லியைப் பிய்த்து விழுங்கிவிட்டு எழுந்து போய்விடும் அவனது அவசரத்தின் பின்னால் என்னதானிருக்கிறது?

ஒருநாள் மாலையில் வீட்டின் முன்னால் உள்ள இரும்புக் கதவைப் பிடித்துக்கொண்டு இரண்டு மணிநேரம் யாருடனோ போனில் பேசிக்கொண்டேயிருப்பதைப் பார்த்தேன். எதற்காக இப்படி நின்றுகொண்டே போனில் பேசுகிறான். இவன் மட்டுமில்லை. இவன் வயதுப் பையன்கள் ஏன் நின்று கொண்டேயிருக்கிறார்கள். உட்கார்ந்து பேச வேண்டும் என்பது கூடவா தோன்றாது.

அருண் போனில் பேசும் சப்தம் மற்றவருக்குக் கேட்காது. வெறும் தலையசைப்பு. முணங்கல். ஒன்றிரண்டு ஆங்கிலச் சொற்கள் அவ்வளவுதான். எதற்காக போனில் ஆங்கிலத்திலே பேசிக்கொள்கிறார்கள். ரகசியம் பேசத் தமிழ் ஏற்ற மொழி யில்லையா?

சில நேரம் இவ்வளவு நேரமாக யாருடன் பேசுகிறான் என்று கேட்கத் தோன்றும். இன்னொரு பக்கம், யாரோ ஒருவரோடு போனில் இரண்டுமணி நேரம் பேசமுடிகின்ற உன்னால் எங்களோடு ஏன் பத்து வார்த்தைகள் பேசமுடிய வில்லை என்று ஆதங்கமாகவும் இருக்கும்.

உண்மையில் இந்த ஆதங்கங்கள், ஏமாற்றங்களை எங்களுக்கு உண்டாக்கிப் பார்த்து அருண் ரசிக்கிறான் என்றுகூட நினைக்கிறேன்.

பள்ளிவயதில் அருணைப்பற்றி எப்போதுமே அவனது அம்மா கவலைப்பட்டுக்கொண்டேயிருப்பாள். நான் அதிகம் கவலைப் பட்டதேயில்லை. ஆனால் அவன் படிப்பை முடித்த நாளில் இருந்து நான் கவலைப்பட்டுக்கொண்டேயிருக்கிறேன். அவனது அம்மா கவலைப்படுவதை நிறுத்திவிட்டாள்.

மிகுந்த ஸ்நேக பாவத்துடன், அவனது தரப்பு நியாயங்களுக்காக என்னோடு சண்டையிடுகின்றவளாக மாறிப்போய்விட்டாள். இது எல்லாம் எப்படி நடக்கிறது, இல்லை இது ஒரு நாடகமா?

ஒருவேளை நான்தான் தவறு செய்கிறேனா என்று எனக்குச் சந்தேகமாகவும் இருக்கிறது.

முந்தைய வருடங்களில் நான் அருணோடு மிகவும் ஸ்நேகமாக இருந்திருக்கிறேன். ஒன்றாக நாங்கள் ஃபுட்பால் ஆடியிருக்கிறோம்.

ஒன்றாக சினிமாவிற்குப் போயிருக்கிறோம். ஒன்றாக ஒரே படுக்கையில் கதைபேசி சிரித்து உறங்கியிருக்கிறோம்.

என் உதிரம்தானே அவனது உடல் பிறகு எப்படி இந்த இடைவெளி உருவானது.

வயதால் இரண்டு பேரின் உறவைத் துண்டித்துவிட முடியுமா என்ன?

என்ன காரணமாக இருக்கும் என்று ஏதேதோ யோசித்திருக்கிறேன்.

திடீரென ஒரு நாள் ஓர் உண்மை புரிந்தது.

உலகில் உள்ள எல்லா இருபது வயது பையன்களுக்கும் வரும் வியாதிதான் அருணையும் பிடித்திருக்கிறது. அதை நான் ஒருவன் சரிசெய்துவிட முடியாது.

அதை வியாதி என்று சொல்வது அவர்களுக்குக் கோபமூட்டும்.

அவர்கள் அதை ஓர் உண்மை, ஒரு விடுதலை, ஓர் ஆவேசம் என்று சொல்லிக்கொள்கிறார்கள்.

ஏதோவொரு எழவு அவர்களைப் பிடித்து ஆட்டுகிறது என்று வைத்துக்கொள்ளுங்கள்.

இந்தப் பிரச்சினையை பற்றி என்னைப்போலவே உடன் வேலை செய்யும் பிற ஊழியர்களும் கவலைப்படுகிறார்கள். சந்தானமூர்த்தி தனது கல்லூரியில் படிக்கும் மகன் கழிப்பறைக் குள் போனால் வெளியே வர இரண்டு மணி நேரமாகிறது. என்னதான் செய்வான் எனத் தெரியவில்லை என்று புலம்பு வதைக் கேட்கையில் எனக்கு உண்மையில் சற்று ஆறுதலாகவே இருக்கிறது. என்னைப் போலவே பல தகப்பன்களும் இதே மனக்குறையிலேதானிருக்கிறார்கள்.

நான் மற்றவர்களைப் போல எனது மனக்கவலையை அதிகம் வெளியே காட்டிக்கொள்கின்றவனில்லை. நானும் பி.காம். படித்திருக்கிறேன். கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் சிறப்பு பயிற்சி முடித்து பால்வளத்துறையில் வேலை செய்கிறேன். பதவி உயர்விற்காகத் தபாலில் தமிழ் எம்.ஏ. கூடப் படித்திருக் கிறேன். கடந்த பத்து வருசமாகவே வள்ளலாரின் திருச்சபையில் சேர்ந்து தானதரும காரியங்களுக்கு உதவி செய்கிறேன். இந்த நற்குணங்களில் ஒன்றைக்கூட ஏன் அருண் கைக் கொள்ளவேயில்லை. ஒருவேளை இவை எல்லாம் அர்த்த மற்றவைதானா. நான்தான் அதைப் புரிந்துகொள்ளாமல் சுமந்து திரிகின்றேனா.

நான் படிக்கின்ற காலத்தில் ஒன்றிரண்டு பேர் குடிப்பதும் ஊர்சுற்றுவதும் பெண்களைத் தேடிப்போவதுமாக இருந்தார்கள் என்பது உண்மைதான். அன்றைக்கு ஊருக்குப் பத்து பேர் அப்படியிருந்தார்கள். இன்று ஊரில் பத்து இளவட்டங்கள் ஒழுக்கமாக இருந்தால் அபூர்வம். இதெல்லாம் எனக்குத் தோன்றுகின்ற புகார்களா அல்லது இதுதான் உண்மையா?

இதுபோன்ற விஷயங்களைத் தொடர்ச்சியாக யோசிக்க ஆரம்பித்தால் எனக்கு ரத்தக்கொதிப்பு வந்துவிடுகிறது. உண்மையில் இது என்னுடைய பிரச்சினை மட்டுமில்லை. ஆனால் என் பிரச்சினையாகவும் இருக்கிறது.

நான் படித்து முடித்தவுடனே திருமணம் செய்துகொண்டு விட்டேன். உண்மையைச் சொல்வதாக இருந்தால் எனது இருபத்திநாலாவது வயதில் அருண் பிறந்து ஒன்றரை வயதாகி விட்டான். ஆனால் அருண் இன்னமும் வேலைக்கே போக வில்லை. ஏன் இவ்வளவு தாமதப்படுத்துகிறான். ஏன் இவ்வளவு மெதுவாக, வாழ்க்கையின் மீது பற்றே இல்லாமல் நடந்து கொள்கிறான். இதுதான் இன்றைய இயல்பா?

ஒருவேளை நான்தான் அவர்களைப் புரிந்துகொள்ள முடியா மல் வண்டிவண்டியாகப் புகார்களோடு அலைந்துகொண்டே யிருக்கிறேனா. அப்படியே இருந்தாலும் என் புகார்களில் உள்ள நியாயம் ஏன் மறுக்கப்படுகிறது.

இந்த இரவில்கூட படுக்கையில் படுத்தபடியே அருண் எங்கே போயிருக்கக்கூடும் என்று நானாக எதை எதையோ யூகித்துக் கொண்டிருக்கிறேன். அது என்னை உறங்க விடாமல் செய்கிறது. கற்பனையான பயத்தை உருவாக்குகிறது. அதை ஏன் அருண் புரிந்துகொள்ள மறுக்கிறான்.

இந்த நேரம் அருண் என்ன செய்துகொண்டிருப்பான். நிச்சயம் என்னைப்பற்றிய நினைவே இன்றி எங்காவது உறங்கிக்கொண்டி ருப்பான். யாரையும் பற்றி நினைக்காமல் எப்படி ஒரு ஆளால் வாழ முடிகிறது. அதுவும் ஒரே வீட்டிற்குள் இருந்துகொண்டு மற்றவர்களைப் பற்றி எப்படிக் கவலைப்படாமல் இருக்க முடிகிறது.

அருண் எங்களோடுதானிருக்கிறான். ஆனால் எங்கள் வீட்டிற் குள் அவனுக்காக தனித்தீவு ஒன்று இருப்பதைப் போலவே நான் உணர்கிறேன். அங்கே அவனது உடைகள் மட்டுமே காயப்போடப்பட்டிருக்கின்றன. அவனது பைக் நிற்கிறது. அவனது லேப்டாப் ஓடிக்கொண்டிருக்கிறது. அவன் வாங்கி வளர்க்கும் ஒரு மீன்குஞ்சு மட்டுமேயிருக்கிறது. வேறு ஒரு

மனிதருக்கு அந்தத் தீவில் இடம் கிடையாது. டேபிள் வெயிட்டாக உள்ள கண்ணாடிக் கோளத்தினுள் உள்ள மரத்தை, எப்படி நாம் கண்ணால் மட்டுமே பார்க்க முடியும், கையால் தொட முடியாதோ அப்படியான ஓர் இடைவெளியை, நெருக்கம் கொள்ளவே முடியாத சாத்தியமின்மையை அருண் உருவாக்கி வைத்திருக்கிறான்.

அப்படி இருப்பது எனக்கு ஏன் பிடிக்கவேயில்லை. நான் அவனைக் கண்காணிக்க விரும்புகிறேனா?

இது அருண் பற்றிய பிரச்சினை மட்டுமில்லை.

பைக் வைத்துள்ள எல்லா இளைஞர்களும் ஒன்று போலவே தானிருக்கிறார்கள்.

அருணிற்கு பைக் ஓட்ட யார் கற்றுக் கொடுத்தது?

அவனாகவே கற்றுக்கொண்டான்.

பதினோராம் வகுப்பு படிக்கும்போது ஒரு நாள் அவன் பைக்கில் போவதைக் கண்டேன். அவன் பின்னால் ஒரு பையன் உட்கார்ந்திருந்தான். ஒரு கையைக் காற்றில் அசைத்தபடியே அவன் மிக வேகமாக பைக் ஓட்டிப்போவதைப் பார்த்தேன். அன்று வீட்டில் பெரிய சண்டையே நடந்தது.

“உனக்கு ஏது பைக்? யாரு பைக் ஓட்டக் கற்றுக் கொடுத்தது? அது யாருடைய பைக்?” என்று கத்தினேன். அருண் அதற்குப் பதில் சொல்லவேயில்லை. அவன் ஒரேயொரு கேள்விமட்டுமே கேட்டான்.

“பைக் ஓட்டுனா தப்பா?”

பைக் ஓட்டுவது தப்பா என்ற கேள்விக்கு இன்றைக்கும் என்னிடம் சரியான பதில் இல்லை.

ஆனால் எனது உள்மனது தப்பு என்று சொல்கிறது. காரணம், பைக் என்பது ஒரு வாகனமில்லை. அது ஒரு சுதந்திரம். அது ஒரு சாகசம். அப்பாவிற்கும் மகனுக்குமான இடைவெளியை அதிகப்படுத்தும் ஒரு சாதனம். அப்பாவைச் சீண்டி விளையாட மகன் கண்டுபிடித்த ஒரு தந்திரம்.

அந்த வாகனத்தை எனக்குப் பிடிக்கவேயில்லை. ராணுவத்தில் உள்ளவர்கள் பயன்படுத்துவதற்காகக் கண்டுபிடிக்கபட்டதுதான் பைக் என்கிறார்கள். ஆனால் அது எப்படியோ பிரபலமாகி இன்று என் வீடு வரை பிரச்சினையாகியிருக்கிறது.

இந்த நகரில் பைக்கில் செல்லும் எல்லா இளைஞர்களும்

ஒன்றுபோலவே நடந்து கொள்கிறார்கள். சாலையில் செல்வதை மகத்தான ஒரு சாகசம் என்றே நினைக்கிறார்கள். பல நேரங்களில் எனக்குத் தோன்றுகிறது, பைக்கில் சாலையில் செல்லும் இளைஞனுக்கு அவனைத் தவிர வேறு மனிதர்கள், கண்ணில்படவே மாட்டார்கள். எந்த ஓசையும் கேட்காது. மொத்தச் சாலையும் வெறுமையாகி அவன் மட்டுமே செல்வது போன்று தோன்றும் போல.

அதிலும் பைக்கில் செல்லும்போதே செல்போனில் பேசிக் கொண்டு போகும் இளைஞர்களைக் காணும்போது என்னால் ஆத்திரத்தைக் கட்டுப்படுத்தவே முடியவேயில்லை. அப்படி என்ன பேச்சு வேண்டியிருக்கிறது என்று மனம் பதைபதைக் கிறது. ஆனால் அவர்கள் முகத்தில் பதற்றத்தின் ஒரு துளிகூட இருக்காது. திடீரென அவர்களுக்குக் கூடுதலாக இரண்டு கைகள் முளைத்துவிட்டது போலவே நடந்துகொள்கிறார்கள்.

அருண் பைக் ஓட்டவே கூடாது என்று கண்டிப்பாக இருந்தேன்.

அப்படி நான் சொல்வதற்குக் காரணம், விபத்து குறித்த பயம் என்று ஒரு பொய்யைச் சொல்லி என் மனைவியை நம்ப வைத்தேன்.

உண்மையில் நான் பயந்த காரணம் ஒரு பைக் என்பது என் வீட்டிற்கும் இந்தப் பரந்த உலகிற்குமான இடைவெளியைக் குறைத்துவிடும். வீட்டிலிருந்து பையனை முடிவில்லாத உலகின் வசீகரத்தைக் காட்டி இழுத்துக்கொண்டு போய்விடும் என்று பயந்தேன்.

ஆனால் அருண் பைக் ஓட்டுவதை என்னால் தடுக்கவே முடியவில்லை.

ஒருவேளை நான் திட்டுவதையும் கண்டிப்பதையும் செய்யாமல் போயிருந்தால் பைக் ஓட்டுவதில் அக்கறை காட்டாமல் போயிருப்பானோ என்னவோ.

இல்லை. இது சுயசமாதானம் செய்துகொள்கிறேன். அது உண்மையில்லை.

பைக் என்பது ஒரு விஷப்பாம்பு.

அது எல்லா இளைஞர்களையும் அவர்களது இருபது வயதைத் தாண்டும்போது கடித்துவிடுகிறது. அதன் விஷம் பத்து ஆண்டுகளுக்காகவாவது உடலில் இருந்து கொண்டேதானிருக் கும். அந்த விஷமேறிய காலத்தில் பைக் மட்டும்தான் அவர் களின் உலகம். அதைத் துடைப்பதும் கொஞ்சுவதும் பராமரிப்ப

தும் கோபித்துக்கொள்வதுமாகவே இருப்பார்கள்.

அருணிற்கும் அப்படித்தான் நடந்தது.

அவன் பனிரெண்டாம் வகுப்பு முடித்த கோடை விடுமுறையில் நாமக்கல்லில் உள்ள அவனது மாமா வீட்டிற்குப் போய்விட்டு புது பைக்கிலே சென்னைக்குத் திரும்பியிருந்தான். காலேஜ் போய்வருவதற்காக மாமா புது பைக் வாங்கித் தந்ததாகச் சொல்லியபடியே பைக்கை துடைத்துக்கொண்டிருந்தான்.

"உனக்கு லைசென்ஸ் கிடையாது. நாமக்கல்லில் இருந்து ஏன் பைக்கில் வந்தே. வழியில் லாரியில் அடிபட்டு இருந்தா என்ன செய்வது?" என்று நான் கத்திக்கொண்டிருந்தபோது அவன் மௌனமாக ஒரு குழந்தையின் காதை டர்க்கித் துண்டால் பதமாகத் துவட்டுவது போல மிருதுவாக பைக்கைத் துடைத்துக்கொண்டேயிருந்தான்.

அதன்பிறகு அவனாக லைசென்ஸ் வாங்கிக்கொண்டான். நாளடைவில் அந்த பைக்கைத் தனது உடலின் இன்னொரு உறுப்பைப் போல மாற்றிக்கொண்டுவிட்டான்.

சில நாட்கள் காலை ஆறுமணிக்கு அவசரமாக எழுந்து பைக்கில் வெளியே போய் விடுவான்.

எங்கே போகிறான். யார் இந்த நேரத்தில் அவனை வரவேற்கக் கூடியவர்கள்.

பைக்கில் சாய்ந்துகொண்டு நின்றபடியே பேசுவதும், பைக்கில் ஏறி உட்கார்ந்து தேநீர் குடிப்பது என்று பைக்கில்லாமல் அவன் இருப்பதேயில்லை. அதற்கு எவ்வளவு பெட்ரோல் போடுகிறான். அதற்குப் பணம் எப்படிக் கிடைக்கிறது. எதற்காக இப்படி பைக்கில் வெயிலேறச் சுற்றியலைய வேண்டும். எதற்கும் அவனிடமிருந்து பதில் கிடையாது.

அவனது அம்மாவிற்கு அருண் பைக் ஓட்டுவது பிடித்திருக்கிறது. அவள் பலநேரங்களில் அருண் பின்னால் ஏறி உட்கார்ந்துகொண்டு கோவிலுக்குப் போகிறாள். ஓயர்கூடை பின்னும் பொருள் வாங்கப் போகிறாள். அவர்கள் இருவரும் சிரித்துக்கொண்டே போகிறார்கள். ஆனால் என்னால் அப்படி பைக்கில் போக முடியாது. ஒருநாள் என்னை அலுவலகத்திற்கு பைக்கில் கொண்டுவந்து விட்டபோதுகூட அவன் இயல்பாக பைக் ஓட்டவில்லை என்றே பட்டது.

அருண் உடலுக்குள் ஒரு கழுகு இருக்கிறது என்பதை ஒரு நாள் நான் கண்டுபிடித்தேன். அந்தக் கழுகு அவனுக்குள்

மட்டுமில்லை. எல்லா இருபது வயதைக் கடந்த பையன்களுக் குள்ளும் இருக்கவே செய்கிறது. அது வீட்டை விட்டு வெளியேறி மிக உயரமான இடம் ஒன்றுக்குப் போய் உட்கார்ந்துகொண்டு, தனியாக உலகை வேடிக்கை பார்க்க விரும்புகிறது. தானும் மற்றவர்களும் ஒன்றில்லை என்று சொல்லத் துடிக்கிறது. தன்னால் மற்றவர்களால் செய்யமுடியாத ஒன்றை அடைய முடியும் என்று காட்ட முயற்சிக்கிறது.

வேட்டையை விடவும் கழுகுகள் உலகை வேடிக்கை பார்க்கத் தான் அதிகம் விரும்புகின்றன. அதிலும் தன் அகன்ற சிறகை அடித்துக்கொண்டு யாரும் தொடவே முடியாத உயரத்தில் ஏறி நின்று உலகைக் காண்பதில் ஆனந்தம் கொள்கின்றன. அதில் ஏதோ ஓர் இன்பமிருக்கிறது. ஏதோ ஓர் அலாதியிருக் கிறது போலும்.

அந்தக் கழுகின் றெக்கைகள் அருணிற்குள்ளும் படபடப்பதை நான் அறியத் துவங்கினேன். அதன் சிறகடிப்பு ஓசை என் முகத்தில் படுவதை நன்றாகவே உணர்ந்தேன். எனக்குப் பயமாக இருந்தது. இந்தக் கழுகு அவனைத் திசைதவறிக் கூட்டிக்கொண்டுபோய் அலைக்கழிக்கும் என்று பயந்தேன். ஆனாலும் தடுக்க வழியில்லாமல் பார்த்துக்கொண்டே தானிருந்தேன்.

உண்மையில் அந்தக் கழுகுதான் அவனது பைக்கின் வடிவம் கொண்டுவிட்டிருக்கிறது.

சில சமயங்களில் ஒருவார காலம் அருண் வீட்டிலிருந்து வெளியே கிளம்பிப் போய்விடுவான். எங்கே போயிருக்கிறான் என்று கேட்டால் என் மனைவி, “பிரண்ட்ஸைப் பார்க்கப் போயிருப்பான்” என்று சொல்வாள்.

பையன்களுக்காகப் பொய் சொல்வதை அம்மாக்கள் விரும்பு கிறார்கள். அது ஒரு சதி. பையன்கள் வளர வளர வீட்டில் உள்ள அப்பா அம்மாவைப் பிரிக்கத் துவங்குகிறார்கள் அல்லது பிள்ளைகளின் பொருட்டு பெற்றவர்கள் சண்டை யிட்டு மனக்கசப்பு கொண்டுவிடுகிறார்கள்.

பெரும்பான்மை நாட்கள் அருண் நள்ளிரவுக்குப் பிறகு வீடு வந்து சேர்ந்து வீட்டின் இரும்புக்கதவைத் தள்ளித் திறக்கும் ஓசையைக் கேட்டிருக்கிறேன். எங்கே போய்விட்டு வருகிறான்? கேட்டு சண்டை வந்ததுதான் மிச்சம்.

எவ்வளவு முறை கேட்டாலும் பதில் சொல்லவும் மாட்டான். நேராக அவன் அறைக்குள் போய் உட்கார்ந்துகொண்டு விடுவான். வீட்டில் இரவு சாப்பிடுவதும் இல்லை.

நள்ளிரவுக்குப் பின்பு வந்தாலும் அவன் பாட்டுக்கேட்க மறப்பதேயில்லை. அதுவும் சப்தமாகவே பாட்டு கேட்கிறான். வீட்டில் நானோ அவனது அம்மாவோ, தங்கையோ இருப்பதை முழுமையாக மறந்துவிட்டவனைப் போலவே நடந்து கொள்கிறான்.

'அருண், சப்தத்தைக் குறைச்சி வச்சிக்கோ' என்று படுக்கையில் இருந்தபடியே அவன் அம்மா சொல்லுவாள். நான் சொன்னால் அதையும் கேட்கமாட்டான்.

ஆனால் அம்மா சொல்வதற்காக சப்தத்தைக் குறைக்காமல் கதவை மூடிவைத்துக் கொள்ளுவான். அவனால் உரத்த சப்தமில்லாமல் பாடல்களைக் கேட்க முடியாது. அதுவும் அவனது பிரச்சினையில்லை. எல்லா பதின்மவயதுப் பையன் களும் இந்த விசயத்தில் ஒன்று போலத்தானிருக்கிறார்கள்.

அவர்கள் கேட்கும்பாடல்களில் ஒரு வரிகூட என்னை ஈர்ப்ப தில்லை. ஓரே காட்டுக்கத்தல்.

எனக்கு கர்நாடக சங்கீதம் மற்றும் திரையிசைப் பாடல்களில் விருப்பம் உண்டு. படிக்கின்ற காலத்தில் ரிக்கார்டு பிளேயரில் நிறையக் கேட்டிருக்கிறேன். இப்போதும் கூட தொலைக்காட்சி யில் ஒளிபரப்பாகும் கறுப்பு – வெள்ளைப் பாடல்களை விடாமல் கேட்கிறேன். ஆனால் அருண் உலகில் கறுப்பு– வெள்ளைக்கு இடமே கிடையாது.

அவன் எட்டாம் வகுப்பு படிக்கையில் ஒருநாள் டி.வி.யில் *பாசவலை* என்ற பழைய படம் ஒளிபரப்பாகிக்கொண்டிருந்தது. நான் மிக ஆர்வமாகப் பார்த்துக்கொண்டிருந்தேன். என் அருகில் வந்து “எப்படிப்பா இதை எல்லாம் பாக்குறீங்க?” என்று கேட்டான்.

“நல்லா இருக்கும் அருண், கொஞ்ச நேரம் பாரு” என்றேன்.

அவன் என்னை முறைத்தபடியே “உங்களுக்கு டேஸ்டேயில் லைப்பா” என்று சொல்லிவிட்டு சைக்கிளை எடுத்துக்கொண்டு போனவன் இரவு வரை வீடு திரும்பவேயில்லை.

இப்போது அவ்வளவு நேரடியாக என்னிடம் பதில் சொல்வ தில்லை. ஆனால் என்னைப்பற்றி அதே அபிப்ராயத்தில் தானிருக்கிறான்.

அவன் கேட்கும்பாடல்களை விடவும் அந்தத் தலைவிரிகோல மான பாடகர்களை எனக்குப் பிடிப்பதேயில்லை. கறுப்பன்– வெள்ளை என்ற பேதமில்லாமல் அசிங்கமாக இருக்கிறார்கள். ஒருவன்கூட ஒழுங்கான உடை அணிந்திருப்பதில்லை. அடர்ந்து

வளர்ந்த தலைமயிர். கோரையான தாடி. வெளிறிப்போன உதடுகள். கையில் ஒரு கிதார் அல்லது கீபோர்ட். உடலுக்குப் பொருத்தமில்லாத உடைகள். போதையில் கிறங்கிப்போன கண்கள்.

ஒருவேளை இப்படி இருப்பதால்தான் அவர்களின் பாடல்களை இந்தப் பதின்வயது பையன்களுக்குப் பிடிக்கிறதா. அதைப் பாடல் என்று சொல்வதுகூட தவறு. கூச்சல். கட்டுப்பாடற்ற கூச்சல்.

அந்தக் கூச்சலின் உச்சத்தில் யாரோ யாரையோ கொல்வது போலிருக்கிறது அல்லது காதலின் துயரத்தை தாங்கிக் கொள்ளவே முடியாததுபோல ஒரு பொய்யான பாவனையில் ஒருவனோ ஒருத்தியோ கதறிக் கதறிப் பாடுகிறாள். அதைக் கையில் ஒரு சிகரெட்டுடன் கேட்டு அருணும் சேர்ந்து கண்ணீர்வடிக்கிறான்.

ஏன் அருண் இப்படியிருக்கிறான் என்று எரிச்சலாக இருக்கிறது. ஆனால் அதைப்பற்றிப் பேசினால் எனக்கு ரசனையில்லை என்பான்.

சில வேளைகளில் அவன் சொல்வது உண்மை என்றும்கூட தோன்றியிருக்கிறது. ஒரு நாள் அவன் அறையைக் கடந்து போகையில் கசிந்துவந்த ஒரு பெண் குரல் பாடலே இல்லாமல் உன்மத்தம் பிடித்தவள் போல ஒரே வார்த்தையை 'ஹம் பண்ணிக்கொண்டேயிருந்ததைக் கேட்டேன்.

மொத்தமாக ஒரு நிமிசம்தான் கேட்டிருப்பேன். ஆனால் தேள்கொட்டியது போல ஒரு கடுகடுப்பு உருவானது. அடுத்த நிமிசத்தில் கடுமை உருமாறி எல்லையில்லாத ஆனந்தமாகி அந்த ஹம்மிங்கை மனதிற்குள்ளாகவே வைத்துக்கொண்டேயிருந்தேன்.

பின்பு நாலைந்து நாட்களுக்கு அந்த ஹம்மிங் என் மண்டைக்குள் ஓடிக்கொண்டேயிருந்தது. அந்தப் பெண் எதற்காக இவ்வளவு துயரத்தோடு பாடுகிறாள். அவளது அப்பா அம்மா யார்? அவர்கள் இவளை எப்படிப் பாட அனுமதிக்கிறார்கள்? தாடி வைத்த, கஞ்சா புகைக்கும் இந்த இசைக்கலைஞர்களின் அப்பாக்களும் அவர்களுடன் என்னைப் போலவே சண்டை போட்டுக்கொண்டுதானிருப்பார்களா?

இந்த உலகில் காதலைத் தவிர வேறு எதற்காகவாவது பையன்கள் இப்படி உருகி உருகிக் கதறுவார்களா என்ன. அப்படி என்ன இருக்கிறது காதலில்.

ஒரு பெண்ணின் தேவை என்பது உடற்பசியோடு சம்பந்தப் பட்ட ஒன்றுதானே.

அதற்கு எதற்கு இத்தனை பொய்ப்பூச்சுகள், பாவனைகள்.

இந்த உலகில் காதலைப்பற்றி மிதமிஞ்சிய பொய்கள் நிரம்பி யிருக்கின்றன. ஒவ்வொரு தலைமுறையும் அந்தப் பொய்களை வளர்த்தெடுப்பதில் தனது பெரும்பங்கை அளிக்கிறது. பெண்கள் எல்லாம் ஏதோ வேற்றுக்கிரகத்தில் இருந்து வந்தவர்கள் என்பதுபோல எதற்காக இவ்வளவு வியப்பு. பிரமிப்பு.

இந்தப் பயல்களை ஒரு நாள் பிரசவ விடுதிக்குள் கொண்டு போய் விட்டுவந்தால் இந்த மொத்த மயக்கமும் தெளிந்துபோய் விடும் என்று தோன்றுகிறது.

நான் இப்படி எல்லாம் யோசிப்பதற்கு வயதாகிவிட்டதுதான் காரணம் என்று என் மனைவியே சொல்கிறாள். எனக்கு மட்டும்தான் வயதாகிறதா என்ன. அவளுக்கும் வயதாகிறது.

நான் குடியிருக்கும் இந்த நகருக்கு வயதாகிறது.

நான் பேருந்தில் கடந்து போகிற கடலுக்கு வயதாகிறது.

ஏன், தலைக்கு மேலே இருக்கிற சூரியனுக்கும் நிலாவிற்கும் கூடத்தான் வயதாகிறது.

வயது அதிகமாக அதிகமாக நம்மைப் பற்றி முதுகுக்குப் பின்னால் பலரும் கேலி செய்வது அதிகமாகிக் கொண்டேதான் போகிறது.

உண்மையில் எனக்கு அப்படி ஒன்றும் வயதாகிவிடவில்லை. ஐம்பத்தியொன்றுதான் நடக்கிறது. ஒருநாள் பேப்பரில் படித்தேன். இத்தாலியில் ஓர் ஐம்பது வயது ஆள் திடீரென மலையேறுவதில் ஆர்வம் வந்து ஒவ்வொரு மலையாக ஏறி இறங்கி, முடிவில் தனது அறுபத்திரெண்டுவயதில் கிளி மஞ்சாரோ சிகரத்தில் ஏறிவிட்டான் என்று.

நான் அந்தவகை ஆள்இல்லை. எனக்குப் புதிதாக ஆசைகள் உருவாவதேயில்லை. இருக்கின்ற ஆசைகளில் இருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டுக்கொண்டிருக்கிறேன்.

வாழ்க்கை உண்மையில் சலிப்பாகவே இருக்கிறது. வாழ்ந்து நான் அடைந்த சலிப்பை அருண் ஏன் இருபத்திநாலு வயதில் அடைந்திருக்கிறான். எப்படி ஒருவனால் மௌனமாக லேப் டாப் முன்பாகவே பலமணி நேரங்கள் இருக்க முடிகிறது. ஏன் அலுக்கவே மறுக்கிறது.

எனக்கு அருணை நினைத்தால் பயமாக இருக்கிறது. ஆனால் அவனது அம்மா அந்த பயத்திலிருந்து எளிதாக விடுபட்டு விட்டாள். பெண்களால் நெருக்கடியை எளிதாகச் சந்தித்துக் கடந்து போய்விட முடிகிறது. எப்படி, என்ன சூட்சுமம் அது.

எனக்கு உறக்கம் வரவில்லை. விடிவதற்கு இன்னும் இரண்டு மணி நேரமிருக்கிறது. உலகின் இன்னொரு பகுதியில் இந்நேரம் விடிந்திருக்கும். யாரோ ஒரு பையன் வீட்டிலிருந்து பைக்கில் கிளம்பியிருப்பான். யாரோ ஒரு தகப்பன் அதைப்பற்றிய புகாரோடு வெறித்துப் பார்த்தபடியே நின்றுகொண்டிருப்பான். அந்தத் தகப்பனைப் பற்றி நினைத்தால் எனக்குத் தொண்டையில் வலி உண்டாகிறது.

என்னால் இனிமேல் உறங்க முடியாது.

விடியும்வரை என்ன செய்வது என்றும் தெரியவில்லை. எதற்காக நான் படுக்கையில் கிடக்க வேண்டும். இப்போதே எழுந்து சவரம் செய்துகொள்ளப் போகிறேன்.

எனக்கு வயதாகிறது என்கிறார்கள். ஆமாம், கண்ணாடி அப்படித்தான் காட்டுகிறது.

முகத்தில் முளைத்துள்ள நரைமயிர்கள் என்னைப் பரிகசிக்கின்றன.

நான் ஓர் உண்மையை உங்களிடமிருந்து மறைக்கிறேன். நானும் இளைஞனாக இருந்தபோது இதே குற்றச்சாட்டுகளைச் சந்தித்திருக்கிறேன். நானும் பதில் பேசாமல் வீட்டை விட்டுப் போயிருக்கிறேன். இன்றும் அதை நான் நன்றாகவே உணர்ந்திருக்கிறேன். எனக்குத் தோன்றுகிறது.

இருபது வயதில் பையன்கள் இலவம்பஞ்சைப்போல எடையற்றுப் போய்விடுகிறார்கள். காற்றில் மிதந்து திரிவதுதான் சுபாவம் என்பது போலிருக்கிறது அவர்களின் செயல்கள்.

யாருக்காவும் எதற்காகவும் இல்லாத பறத்தல் அது.

அப்படி இருப்பதுதான் இயல்பு என்பது போல அலைந்து திரிகிறார்கள்.

இலவம்பஞ்சு ஒருபோதும் பள்ளத்தாக்கைக் கண்டு பயப்படுவதில்லை. பாறைகளைக் கண்டு ஒதுங்கிக்கொள்வதுமில்லை. அது மரத்திலிருந்து விடுபட்டுப் பறக்கிறது. அந்த விடுபடலை யாராலும் தடுக்கவே முடியாது. அதுதான் உண்மை. எனக்குப் புரிகிறது. ஆனால் ஒரு தகப்பனாக அதை ஏற்றுக்கொள்ள

முடியாது. நீங்கள் தகப்பன் ஆகும் நாளில் இதை உணர்வீர்கள்.

நான் நிறைய குழம்பிப் போயிருக்கிறேன்.

எனது பயமும் குழப்பமும் முகமெங்கும் படிந்துபோயிருக்கிறது. தண்ணீரை வைத்துக் கழுவிக்கொள்வதால் பயமும் குழப்பமும் போய்விடாது என்று எனக்குத் தெரியும்.

ஆனால், என்னால் இதைத்தவிர வேறு ஒன்றும் செய்ய முடியாதே.

# பெண் என்று எவருமில்லை

அடுத்த அறையிலிருந்து யாரோ கத்தும் சப்தம் வந்தது. நிஜமாக யாராவது கத்துகிறார்களா அல்லது எனக்குத்தான் கனவில் அப்படிக் கேட்கிறதா என்று தெரியாமல் பாதி உறக்கத்துடன் புரண்டு படுத்துக்கொண்டேன். அந்தக் குரல் என் அறையின் சுவர்களை ஊடுருவி திரும்பவும் வெளிப்பட்டது. அது ஒரு பெண்ணின் குரல். அதுவும் வலி நிரம்பிய பெண்ணின் கதறல். யாரோ அவளை அடிக்கிறார்கள் போலும். அந்த ஓலம் தெளிவற்றதாகக் கேட்டது. அதைத் தொடர்ந்து ஒரு ஆண் "சும்மா நடிக்காதடி" என்று உரத்துக் கத்தினான். அந்தப் பெண் நடுங்கியபடியே "உங்ககூட வந்ததுதான் நான் செஞ்ச தப்பு" என்று சொல்வது தெளிவாகவே கேட்டது.

இப்போது மணி என்னவாகயிருக்கும். இரண்டரைக்கு மேலாக இருக்கக்கூடும். அறையிலும் கடிகாரமில்லை. எனக்கும் கடிகாரம் கட்டும் பழக்கமில்லை. காற்றின் குளிர்ச்சியை வைத்து இரண்டுமணிக்கு மேலாக இருக்கலாம் என்று தோன்றுகிறது.

என் அறை முழு இருளில் இருந்தது. எழுந்து இரவு விளக்கை மட்டுமாவது போடலாமா என்று தோன்றியது. ஆனால் எதற்காக விளக்கைப் போட வேண்டும். அடுத்த அறையில் ஏதோ சப்தம் கேட்கிறது. அதை நான் கவனிக்கிறேன் என்று தெரிவிப்பதற்காகவா?

படுக்கையிலிருந்து நான் எழுந்து கொள்ளவேயில்லை.

அந்தப் பெண்ணின் சப்தம் அடங்கிவிட்டது. என்னவாகியிருக்கும், உறங்கியிருப்பாளா அல்லது வாயைப் பொத்திக்கொண்டு அழுகிறாளா அல்லது வெளியேறிப் போய்விட்டாளா? எழுந்து போய் பார்க்க வேண்டும் போலவும் இருந்தது. எப்படிப் போவது எனத் தயக்கமாகவும் இருந்தது.

நான் படுக்கையில் கிடந்தேன்.

அறை இருள் என்னை உற்றுப் பார்த்துக்கொண்டிருப்பது போலிருந்தது.

லாட்ஜின் இருட்டு எப்போதுமே குமட்டக்கூடியது. அதில் காமத்தின் கவிச்சை அடங்கியிருக்கிறது. யார் யாரோ படுத்து எழுந்துபோன படுக்கை. கறை அழியாத தலையணைகள். உறைகளைக் கழட்டிவிட்டு தலையணைகளை உருவி எடுத்துப் பாருங்கள். அதன் பிறகு உங்களால் நிம்மதியாக உறங்கவே முடியாது. எல்லா ஊர்களிலும் லாட்ஜ்கள் ஒன்றுபோலவே இருக்கின்றன அல்லது நாள்பட ஒரேபோல தோற்றம் கொண்டு விடுகின்றன. லாட்ஜின் ஒவ்வொரு பொருளும் வீட்டிலிருந்து நீங்கள் விலகியிருக்கிறீர்கள் என்பதை நினைவுபடுத்திக் கொண்டேயிருக்கிறது. ஒரு மனிதன் தொடர்ச்சியாக சில ஆண்டுகள் லாட்ஜில் தங்கியிருந்தால் நிச்சயம் மனச்சிதைவு கொண்டுவிடுவான். அப்படியான ஒரு நெருக்கடியை அறைகள் உருவாக்கிவிடுகின்றன.

விக்ரமாதித்யன் கதைகளில் கட்டில் பேசுவதுபோல லாட்ஜின் கட்டில்கள் பேசத் துவங்கினால் மனதின் அத்தனை வக்கிரங் களும் இருண்மையும் கொப்பளித்து வெளிப்படும் என்றும் தோன்றுகிறது. நான் லாட்ஜின் அறைகளை வெறுக்கிறேன். ஆனால் இவ்வளவு பெரிய ஊரில் ஒருநபர்கூட எனக்குத் தெரிந்தவரில்லை. அறியாத நபர்களைப் பாசாங்குடன் லாட்ஜ்கள்தானே வரவேற்கின்றன.

லாட்ஜின் வரவேற்பறையில் எப்போதுமே பொய் பல்லை இளித்துக்கொண்டிருக்கிறது. அங்குள்ள பெரிய ரிஜிஸ்தரை சில நேரம் புரட்டிப் பார்ப்பதுண்டு. பொய் விலாசங்கள், பொய்ப்பெயர்கள், காமம், சின்னஞ்சிறு குற்றங்கள், தனிமை, விடுபடல் என்று அங்கே வருகின்றவர்களுக்கு அது ஒரு தற்காலிகப் புகலிடம். பூமிக்கு அடியில் நிலவறைகள் போல லாட்ஜ்களை அமைத்தால் இன்னமும் கூட்டம் அதிகமாக வரக்கூடும் என்று ஒருவன் போதையில் கத்தியது நிஜமே.

லாட்ஜ் அறையில் உள்ள கண்ணாடிகள்கூட சலிப்பூட்டு கின்றன. அவற்றில் முகம் பார்க்கும்போது நமக்கே நாம் விநோதமாகத் தெரியத் துவங்குகிறோம். ஒருவேளை இவை யாவும் ஒரு தந்திரங்கள்தானா, நம்மை நாமே வேறு மனிதராக நினைக்கும் வேலையைத்தான் இந்த லாட்ஜ்கள் உருவாக்கு கின்றதா, படுக்கையின் பின்புறம் உள்ள பெரிய கண்ணாடி நிறைய நிர்வாணம் கண்டு ரசம் மங்கிப்போயிருந்தது.

எந்தப் பெண்ணோ விட்டுப்போன ஸ்டிக்கர் பொட்டு, யாரோ குறித்து வைத்த தொலைபேசி எண்கள், கழிந்த சுருள்முடி சிக்கிய ஜன்னல்கம்பி, புரட்டப்படாத பைபிள் புத்தகம், அறை சலிப்பூட்டுகிறது.

நான் மூன்று நாட்களுக்கு முன்பாக நீண்ட கடற்கரை உள்ள இந்த நகருக்கு வந்திருந்தேன். எனக்குக் கடலைத்தேடிப் போவது பிடித்தமானது. அதன் பிரம்மாண்டம் மட்டுமே என்னை ஆசுவாசப்படுத்துகிறது. கடல் எல்லாவற்றையும் அனுமதிக்கிறது என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். கடற்கரைகள் உலகின் தொன்மையானவை. அவை ஒவ்வொரு நாளும் ஒருவிதமாக இருக்கின்றன.

அதிலும் குறிப்பாக ஆண் அலைகள், பெண் அலைகளைத் துரத்துவதும் அவை தப்பி கரைமோதி சரிவதுமான எல்லையில்லாத விளையாட்டினைக் காண்பது ஆனந்தமாகயிருக்கும். அலைகளை ஆண் பெண் என்று பெயரிட்டது யாராக இருக்கும். டாக்டர் ராபிதான் ஆண் அலைக்கும் பெண் அலைக்குமான வேறுபாட்டினைக் காட்டிக் கொடுத்தவர். அவர் கடல் அறிந்தவர்.

நான் கடந்த ஆறு வருடங்களாக இப்படி நாட்களைக் கடத்திக்கொண்டேயிருக்கிறேன். இதுவரை பத்தொன்பது விதமான வேலைகள் செய்து சலித்துப்போய்விட்டேன். அதில் ஒன்றுகூட எனக்குப் பொருந்தவில்லை. அதைவிடவும் எனக்கு வேலை, சம்பாத்தியம், எதிர்காலம் குறித்த கனவுகள் எதுவுமில்லை. எனது பிரச்சினைகளாக மற்றவர்கள் சொல்லும் குறைகளைக் கண்டு நான் ஆச்சரியப்படுகிறேன். ஒரு முறை ஒரு காந்தப்படுக்கை விற்பனை செய்யும் நிறுவனத்தில் வேலை செய்தேன். அதன் காரணமாகப் பலரது படுக்கை அறைகளையும் பார்த்திருக்கிறேன். அப்போது ஒரு பணக்காரன் தனது படுக்கை அறைக்குள் மின்சார விளக்குகளே இல்லாமல் செய்திருப்பதை கண்டேன். அவன் என்னிடம் “படுக்கை அறை என்பது ஒரு குகையை போல இருக்க வேண்டும். இருட்டின் கதகதப்பு எனக்குப் பிடிக்கும். எப்படி என் ரசனை” என்று வியந்தான். நான் வாய்தவறி “கல்லறை போல இருக்கிறது” என்று சொல்லிவிட்டேன். அந்த வேலையில் இருந்து என்னை வெளியேற்றும்போது “உன்னால் அடுத்த மனிதனின் சந்தோஷத்தைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அதைக் கலைப்பதில் ஒரு குரூர ஆசை கொண்டிருக்கிறாய்” என்றார்கள். இன்னொரு முறை நான் ஜலந்தர் விளையாட்டுப் பொருட்கள் விற்பனையகத்தில் வேலைக்கு இருந்தேன். அங்கே செக்கோஸ்

லேவிக்கியாவில் இருந்து விளையாட வந்திருந்த டென்னிஸ் வீராங்கனை எங்களது கடைக்கு வந்திருந்தாள். கடை ஆட்கள் அவளைச் சுற்றி வந்து வியந்து புகைப்படம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். அவள் கடையின் கழிப்பறைக்குள் நுழைந்துவிட்டு "காகிதம் இல்லையே" என்று கேட்டாள். கடையின் முதலாளி என்னிடம் அவசரமாக கழிப்பறை காகிதம் வாங்கிவரும்படியாகப் பணம் தந்து அனுப்பி வைத்தார்.

அந்த நிமிடம் என்னை மிகவும் அருவருப்பாக உணர்ந்தேன். கையில் பணத்தை வாங்கிக்கொண்டு கடையை விட்டு இறங்கி அருகில் உள்ள ஈகிள் பாரினுள் நுழைந்து குளிர்ச்சியான பியர் வாங்கிக்கொண்டு குடிக்க உட்கார்ந்தேன். கழிப்பறை காகிதம் வாங்கிவருவதற்கு மட்டுமே நான் தகுதியானவன் என்று நினைத்துக்கொண்டிருக்கிறானே என்று ஆத்திரமாக வந்தது. நிதானமாக மதியம் வரை குடித்துவிட்டு உணவு வேளையின்போது கடைக்குச் சென்றேன். சோகத் சிங் என்னைப் பார்த்து மோசமான வசையால் திட்டினார். நான் சிரித்தபடியே "உங்கள் கழிப்பறைக்குப் புண்ணியம் கிடைக்கவில்லையா?" என்று கேட்டேன். சோகத் சிங் என்னை வேலையை விட்டு வெளியே போகச் சொன்னபோது நான் கடையில் இருந்து ஒரு டென்னிஸ் பாலைத் திருடிக்கொண்டு வந்துவிட்டேன். என் மனது இப்படியான அற்பங்களால்தான் நிரம்பியிருக்கிறது.

இன்னொரு முறை கென்னடியும் நானும் சுகந்தி மேன்ஷனுக்கு சீட்டு விளையாடப் போயிருந்தோம். சீட்டு விளையாடுவதற்காகவே அருணாசலத்தைத் தேடி இருநூறு ரூபாய் கடன் வாங்கி வந்திருந்தேன். சீட்டு துவங்கி இரவு இரண்டு மணி வரை நீண்டது. நான் முழுமையாகத் தோற்றுவிட்டேன். ஆனாலும் இன்னொரு முறை விளையாட வேண்டும் போலிருந்தது. எதைப் பந்தயமாக வைத்து விளையாடுவது என்று கென்னடி கேட்டபோது, வாசிப்பதற்காகக் கையில் வைத்திருந்த "வால்ட் விட்மனை வைத்து சீட்டு ஆடுகிறேன்" என்றேன். உடன் ஆடுகின்றவர்கள் "இந்த மசிரு எல்லாம் உன்னோட வச்சிக்கோ. காசு போட்டு விளையாடு" என்றார்கள். கென்னடி "இந்த தாடி வச்ச மயிரான் யாருடா?" என்று வால்ட் விட்மன் முகத்தில் சிகெரட் சாம்பலைத் தட்ட முயற்சித்தான். அவர்கள் என்னை அவமதித்ததைவிடவும் வால்ட் விட்மனை அவமதித்தது என்னால் தாங்கிக்கொள்ள முடியாமல் இருந்தது.

நான் ஒரு நிமிடம் யோசிக்காமல் அங்கிருந்த அலுமினியத் தட்டை எடுத்து அவன் முகத்தில் ஓங்கி அடித்துவிட்டேன். கென்னடி அழுதான். அவ்வளவு பலமாக ஓர் ஆண் அழுவதை

அன்றுதான் பார்க்கிறேன். அதுவும் கென்னடியோடு இத்தனை வருடங்களாகப் பழகியபோதும் அவன் அழுது நான் பார்த்ததே கிடையாது. ஆனால் இன்று அவன் அழும்போது வியப்பாக இருந்தது. யாரோ அவனை அடித்துவிட்டார்கள் என்பதைப் போல நானே அவனைச் சமாதானம் செய்ய முயற்சித்தேன். அவன் என் கைகளை விலக்கியபடியே தேம்பித் தேம்பி அழுதுகொண்டிருந்தான். நான் கென்னடியின் சிகரெட் பாக்கெட்டில் இருந்து ஒரு சிகரெட்டை எடுத்துப் பற்றவைத்துக் கொண்டு அறையை விட்டு வெளியேறி ஜாம்பஜாரினுள் நடந்துகொண்டிருந்தேன். தெருவே காலியாக இருந்தது.

வால்ட் விட்மனுக்காக நான் ஏன் ஆத்திரப்படுகிறேன்? விட்மன் என்னை வந்து காப்பாற்றப் போகிறாரா, இல்லை குடியிருக்க ஓர் அறையில்லாமல் அவதிப்படும் எனக்கு விட்மன் உதவி செய்வாரா. அந்தக் கிழவனுக்காக நான் ஏன் கென்ன டியை அடித்தேன். யோசனை புகைய ஆரம்பித்தது. மனது கடுமையானது. சில நிமிடங்களுக்குப் பிறகு விட்மனுக்காக ஒருவனை அடித்தது தப்பில்லை என்று மனது ஆறுதல் சொன்னது. என்னைப் புத்தகங்கள் ஆள்கின்றன. நான் வாழ்க்கையை விட புத்தகங்களை அதிகம் நம்புகிறேன். இதுதான் என் பிரச்சினையா?

மசூதியின் முன்னால் ஒரு பிச்சைக்காரனும் அவனது மகளும் சோழியாடிக்கொண்டிருந்தார்கள்.

அந்தப் பிச்சைக்காரன் இதே இடத்தில் முப்பது வருடங்களாக இருக்கிறான் என்றார்கள். எப்படி அவனால் ஒரே இடத்தில் இருக்க முடிகிறது. அந்த நிமிடம் அவனைப் பார்க்கப் பொறாமையாக இருந்தது.

அரசமரத்தை ஒட்டிய டீக்கடையின் முன்னால் கிடந்த எச்சில்இலையைப் புரட்டி ஒரு பசு மாடு தின்றுகொண்டி ருந்தது. என் கோபம் முழுவதும் அந்தப் பசுமாட்டின் மீது திரும்பியது. அதை ஒரு வாழை மட்டையால் அடித்த படியே "ஏன் நாயே, இதைப் போய் திங்குறே" என்று கத்தி விரட்டினேன். மாடு அசையவேயில்லை. எனக்கும் அழுகை யாக வந்தது. அந்த சாலையில் உட்கார்ந்து நானும் கென்னடி யைப் போல அழுதேன்.

உண்மையில் எனக்கு வளைந்து நெளிந்து கொடுத்து வாழத் தெரியவில்லை. சகிப்புத் தன்மை குறைந்துபோய்விட்டிருக்கிறது. சாதுர்யமில்லை. வாய்ச்சவடால் தெரியாது. முப்பத்தியாறு வயதாகியும் நான் வெறும் ஆள். நான் ஒரு குருட்டு ஈ. எதன்மீது மோதுகிறோம் என்று தெரியாமல் நகரில் தட்டழிந்து

கொண்டிருக்கிறேன். ஒரு நாள் இந்த நகரம் என்னை விரட்டி யடித்துவிடும். யோசித்துப் பார்த்தால் நான் சிறுமைகளால் நிரம்பியவனாக இருக்கிறேன்.

அதனால்தானோ என்னவோ எனக்குக் கடலைப் பிடித்திருக் கிறது. அதை ஒரு தப்பித்தலைப் போலவே உணர்கிறேன். நிறைய நாட்கள் கடலைப் பார்த்தபடியே இரவெல்லாம் இருந்திருக்கிறேன். கடல் எதையோ சொல்கிறது. கடல் எதையோ உணர்த்துகிறது. என்னைப் போலவே கடலின் நுரைகளை முகர்ந்தபடியே அலையும் ஒன்றிரண்டு நாய்கள்கூட இதே கடற்கரையில் இருக்கின்றன. இவை தெருநாய்களைப் போல இல்லாமல் அலைகளை நெருங்கிப் போகின்றன. அலைபட ஈரமணலில் படுத்துக் கிடக்கின்றன. காய்ந்த மீன்களைத் தின்கின்றன. நானும் கடலோரம் அலையும் நாய் தானோ. நாய்களால் கடலை என்ன செய்துவிட முடியும்?

என்னை விடவும் கடலை அதிகம் விரும்புகின்றவர் டாக்டர் ராபி. அவர்தான் என்னை இந்தக் கடற்கரைக்குப் போகும் படியாக சிபாரிசு செய்தவர். அவர் சொன்னதன் பெயரிலே தான் இந்த லாட்ஜிற்கு வந்திருக்கிறேன்.

சவுக்கு மரங்கள் அடர்ந்த கடற்கரையில் சிவப்புநிறம் மங்கிய இந்த லாட்ஜ் மிகவும் தனித்திருந்தது. இந்தக் கடற்கரையில் மணல்மேடுகள் நிறைய இருந்தன. இவ்வளவு உயரமான மணல்மேடுகள் அரிதாகச் சில கடற்கரைகளில்தானிருக்கின்றன. கடற்கரை விடுதிகளுக்குப் பொதுவாக மழைக்காலங்களில் குறைவான ஆட்களே வருகை தருவார்கள். அதுவும் மிகுமழை நாட்களில் பயணிகளின் வருகையே இல்லாமல் போய்விடு வதும் உண்டு. நான் இதை முழுமையாக அறிந்திருக்கிறேன்.

இப்படியான காலங்களில் நான் தவறாமல் கடற்கரையைத் தேடிச் செல்வேன். மழையோடுக் கடலைக் காண்பதும் தனித்துவமான அனுபவம். மழை நாட்களில் கடல் பித்தேறி ஆவேசம் கொள்கிறது. கரையை மொத்தமாகச் சுருட்டி விழுங்க ஆசைப்படுவது போல தன் நாக்கைத் துடிக்கச் செய்கிறது. கடல் புரள்கிறது. திமிர்ந்து புரள்கிறது. கடலின் மறந்துபோன எண்ணிக்கையற்ற நினைவுகளை மழை தூண்டிவிடுகிறது.

கடல் தன் திணவு அடங்குமட்டும் துள்ளுகிறது. மாபெரும் கலவிநாடகம் ஒன்றின் உச்சநிலை போன்ற உன்மத்த வேகமது. கரைமணல்கள் இதைக் காணப்பயந்து நடுங்குகின்றன. கடலின் நூறு நூறு கைகள் மணலை அள்ளியள்ளித் தின்கின்றன. கடல் அடங்குவதேயில்லை. பின்னிரவில் விழித்துக்கொண்டு

விட்ட மனிதனைப் போல அது செய்வதறியாமல் தடுமாற்றம் கொள்கிறது.

மழை நாட்களில் கடலின் அருகாமை அச்சம் தருவதாகயிருக் கிறது. நான் சிலகாலம் மருந்து விற்பனைப் பிரதிநிதியாக இருந்திருக்கிறேன். அதனால் பெரும்பான்மை மருத்துவர்களை நான் அறிந்து வைத்திருக்கிறேன். அவர்களில் சிலர் எனது நெருக்கமான நண்பர்களாகவும் ஆகியிருக்கிறார்கள். அதில் ஒருவரான ராபிதான் இந்த விடுதியை எனக்கு அறிமுகம் செய்து வைத்தவர்.

அவர் குடிப்பதற்காக மட்டுமே கடற்கரைக்கு வருகிறார். கடலைப் பார்க்காமல் தன்னால் குடிக்கமுடியாது என்று சொல்லியிருக்கிறார். மனித மனம் கொள்ளும் விசித்திரங் களைப் பற்றி நானும் அவரும் ஒருநாள் இரவு நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தோம்.

ராபி சொன்னார், "கற்பனைதான் மனிதனின் எல்லா பயங் களுக்கும் காரணம். ஆனால் அதை விலக்கவே முடியாது. கற்பனையால்தான் மனித ஆசைகள் தோன்றுகின்றன. விருத்தி யடைகின்றன. மனிதர்கள் நிறைய ஆசைப்படுகிறார்கள். குறைவாகவே அடைய முயற்சிக்கிறார்கள். அதுதான் முக்கியப் பிரச்சினை" என சிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டார்.

நான் சிகரெட் எரிவதையே பார்த்துக்கொண்டிருந்தேன். உங்களுக்கு அது பிடிக்குமா என்று தெரியவில்லை. ஆனால் நான் சிகரெட் எரிவதை உன்னிப்பாகக் கவனிப்பவன். அது எனக்குப் பிடித்திருக்கிறது. எரிந்து புகையாவது என்பது எளிதானதுதான் என்று சொல்கிறது. பயத்திலிருந்து என்னை அது மீட்கிறது. ஆறுதல் தருகிறது.

நான் இப்படித்தானிருக்கிறேன். சிறுதருணங்கள், சிறிய ஆசை கள், சிறிய கவலைகள், சிறிய பயம், சிறிய முயற்சிகள் இவை மட்டுமே என் வாழ்வில் சாத்தியம். என்னை நான் அப்படி மாற்றிக்கொண்டிருக்கிறேனா அல்லது என்னால் முடிவதே அவ்வளவுதானா என்று தெரியவில்லை.

என்னோடு ஜோயி என்றொருவன் படித்தான். அவன் தன் வயதை விட அதிகமாகவே எப்போதுமே ஆசைப்படுகின்றவ னாக இருந்தான். அவன் காதலித்த பெண்கள் எல்லோரும் நடுத்தரவயது கொண்டவர்கள். அவன் தன்னோடு வரும் மாணவர்கள் அத்தனைப் பேரையும் விட அதிகம் சாப்பிடவும் குடிக்கவும் விரும்பினான். நான்கு பிள்ளைகளின் அப்பாவைப் போல சில நேரங்கள் பாவனைகள் செய்துகொள்வான்.

கவலைப்படுவான். அப்போது எனக்கும் அப்படியான பாவனைகள் செய்ய வேண்டும் என்று ஆசையாக இருக்கும். ஆனால் அதற்கான துணிச்சல் இருக்காது. மைதானத்தில் மற்ற சிறுவர்கள் பந்து விளையாடிக்கொண்டிருந்த பொழுதில் நான் ஓரமாக குழிவண்டுகளைக் கவனித்துக்கொண்டிருந்தவன்.

மற்றவர்கள் படிப்பின் வழியே வேலையை நோக்கி முன்னேறத் துவங்கியபோது நான் படிப்பைப் பாதியில் விட்டு ராஜயோகம் கற்றுக்கொண்டு துறவியாக வேண்டும் என்று விரும்பியவன். எது என்னை இப்படி அலைக்கழிக்கிறது என்று என்னால் கண்டுகொள்ள முடியவில்லை. எனது இந்த இருபத்தியாறு வயதிற்குள் நிறைய சாமியார்களைச் சந்தித்துவிட்டேன். யோகமுறைகளை அறிமுகம் செய்துகொண்டு பயின்று சலித்து விட்டேன். அது எனக்கானதில்லை என்று தெரிந்துபோய் விட்டது. என் மனதின் உள்ளே கொந்தளிப்பு இருந்துகொண்டே யிருக்கிறது. அதைக் கடலின் முன்பாகத்தான் உணர்ந்தேன். கடலின் முன்னால் நிற்கும்போது பழகிய மனிதனைப் போலவே உணர்கிறேன். கடல் இல்லாத நகரங்கள் வெறுமையானதாகத் தெரிகின்றன. உண்மையில் எனக்குள் கடலை நிரப்பிக்கொள்ள விரும்புகிறேன். கடல் கண்களால் பார்த்து நிரம்பாது. அதன் ஒரு துளியை மனதில் சேகரிப்பதற்கு நிறைய காத்திருக்க வேண்டும்.

உலகின் மிகப் பழமையான பொருள் கடல். கடலும் கிழவனும் என்று ஒரு புத்தகம் படித்திருக்கிறேன். உண்மையில் கடல்தான் கிழவன். கணிக்கமுடியாத வயது கொண்ட கிழவன். தந்திரக் கார கிழவன். துடுக்குத்தனம் நிரம்பிய கிழவன். இப்படி அந்தக் கிழவனைப் பற்றி எவ்வளவோ சொல்ல முடியும்.

“உண்மையில் இதுகூட ஒரு தப்பித்தல்தான்” என்று சொன் னார் மருத்துவர் ராபி. “மனிதர்கள் தனக்குச் சாதகமான விஷயங்களைப் பிடித்தமானதாகச் சொல்லிவிடுவார்கள். அவ்வளவுதான் இயலும்” என்று சொன்னார் ராபி.

ராபியின் மருத்துவமனைக்கு நீங்கள் போயிருக்க வேண்டும். அங்கே நோயாளிகள் காத்திருக்கும் இடத்தில் பெரிய மீன் தொட்டியிருக்கிறது. அதில் ஒரேயொரு சிறிய மீன் மட்டுமே நீந்திக்கொண்டிருக்கிறது. “இவ்வளவு பெரிய தொட்டியில் ஏன் ஒரேயொரு மீன் மட்டுமே வளர்க்கிறீர்கள்?” என்று பலரும் டாக்டரிடம் கேட்டிருக்கிறார்கள். “உங்களை இப்படி யான கேள்வி கேட்க வைப்பதற்குத்தான்” என்று பதில் சொல்வார்.

“சில வேளைகளில் சிறிய மனிதனுக்கு எதற்காக இவ்வளவு பெரிய உலகம்” என்று எதிர்கேள்வியும் கேட்பார். நான் அந்தச் சிறிய மீனைப் பல நாட்கள் பார்த்துக்கொண்டிருக் கிறேன். ராபியின் மருத்துவமனையில் நிறைய புத்தகங்கள் உள்ள சிறிய நூலகமிருக்கிறது. மருத்துவர் எதற்காக இப்படி இலக்கியங்களைப் படிக்கிறார் என்று புரியவேயில்லை. அவரது மேஜையில் ஒரு நாள் கேன்சர் வார்டு என்ற புத்தகத்தைப் பார்த்தேன். ராபி “அதற்கும் மருத்துவத்திற்கும் ஒரு சம்பந்தமு மில்லை. அது ஒரு ரஷ்ய நாவல்” என்று சொன்னார்

“ஏன் உங்களுக்கு இலக்கியம் பிடித்திருக்கிறது?” என்று கேட்டேன்.

ராபி புன்னகையோடு “எல்லா காரணமும் பொய் என்று உங்களுக்கே தெரியும். நான் அப்படி எதையாவது ஒன்றைச் சொல்ல வேண்டுமா என்ன? எனது அப்பாவிற்குப் படிக்கும் பழக்கம் உண்டு. அவர் ஒரு வளர்ப்புநாயை வைத்திருந்தார். அதை அழைத்துக்கொண்டு நடைப்பயிற்சி முடித்துவிட்டு வீடு திரும்பும்போது வாடகை நூலகத்திற்குச் சென்று புத்தகம் எடுத்து வருவார். ஒருபோதும் என்னை நூலகத்திற்குள் அழைத்துப் போனது கிடையாது. நான் நாயைப் பிடித்தபடியே வெளியே நின்றுகொண்டிருப்பேன். அப்பா தான் எடுத்துவந்த புத்தகத்தை என்னிடம் காட்டியதும் கிடையாது. ஒருமுறை அவரது அறைக்கு ரகசியமாகச் சென்று அவர் வைத்திருந்த புத்தகத்தை எடுத்துப் பார்த்தேன். அவை கூடுவிட்டு கூடு பாயும் ரசவாதம் பற்றிய புத்தகங்கள். இவற்றை எதற்காகப் படிக்கிறார். அப்பா ஒரு கணிதப் பேராசிரியராக இருந்தவர். எதற்காக இதுபோன்ற மாயமந்திரங்களைப் பற்றி அக்கறை யோடு வாசிக்கிறார் என்று புரியவேயில்லை. அந்தப் புத்தகங் களில் இருந்து எதையும் அவர் பயிற்சி செய்யவோ நடைமுறைப் படுத்தவோ முயற்சிக்கவில்லை. ஆனால் அந்த மர்மம், மயக்கம் அவருக்குத் தேவையானதாக இருந்தது.

“நான் பல வருடம் நாயைப் பிடித்துக்கொண்டு நூலக வாசலிலே நிற்கின்ற சிறுவனாக இருந்த காரணத்தால் நூலகத் தில் நுழைந்து கிடைத்ததையெல்லாம் படிக்க வேண்டும் என்று தோன்றியது. சொன்னால் வேடிக்கையாக இருக்கும். வாடகை நூலகத்தில் இருந்து நான் முதன்முதலாக எடுத்துவந்த புத்தகம் எது தெரியுமா? ரோமன் கிப்பனின் ஃபால் ஆப் ரோம். அதை எடுத்ததற்கு முக்கிய காரணம், அதுதான் நூலகத்தில் இருந்ததில் மிகப்பெரிய புத்தகம். ஆகவே அதை வாடகைக்கு எடுத்து வந்தேன். அதில் ஒரு பக்கம்கூட புரிய

வில்லை. ஆனால் அதைக் கையில் எடுத்தவுடன் நான் அறிவாளி என்ற எண்ணம் உருவானது. அதுதான் என்னை இன்று இப்படியாக்கியிருக்கிறது" என்றார்.

ராபி திருமணம் செய்துகொள்ளவில்லை. மருத்துவர்களில் நிறைய பேர் திருமணமாகாமல் இருக்கிறார்கள் என்பதை அறிந்திருக்கிறேன். அதற்குக் காரணம் மருத்துவத்துறை என்று சொல்வதெல்லாம் பொய். அவர்களின் மனநிலையின் விசித்திர மாகிவிடுகிறது என்பதே நிஜம். ராபி தனது மேஜை டிராயரிலே மதுப்புட்டியை வைத்திருக்கிறார். அடிக்கடி அதில் இருந்து ஒரு மூடி குடித்துக்கொள்வதைக் கண்டிருக்கிறேன்.

ராபியோடு ஒரு முறை ஒரிசாவின் கடற்கரையொன்றிற்குச் சென்றிருக்கிறேன். கடலைப் பார்த்த அறையாக எடுத்துக் கொண்டோம். பெரிய பிரம்பு நாற்காலிகளை வெளியே போட்டு உட்கார்ந்தபடியே கடலைப் பார்த்துக்கொண்டிருந் தோம். ராபி உறங்காமல் சிகரெட் பிடித்தபடியே கடலை இரவெல்லாம் பார்த்துக்கொண்டிருந்தார். "அப்படி என்ன கடலில் இருக்கிறது?" என்று கேட்டேன்.

"நான் மணலில் விழுந்த சோற்றுப்பருக்கை. என்னையும் மணலையும் இனி பிரிக்கவே முடியாது. அதைக் கடலின் முன்பாக நன்றாக உணர்கிறேன்" என்றார் ராபி.

பின்பு நாங்கள் அதிகம் பேசிக் கொள்ளவேயில்லை.

நான் அலைகளின் அருகாமைக்குப் போகலாம் என்றபோதும் அவர் வர மறுத்துவிட்டார். ஆறு நாட்கள் அந்தக் கடற்கரை யில் இருந்தோம். அறியாத வேற்றுமனிதர்களைப் போலவே அவரவர் வழிகளில் அலைந்து திரிந்தோம். ஆளுக்கொரு கடல் இருப்பது போலவே நடந்துகொண்டோம். கடல்தான் அப்படி எங்களை உருமாற்றிவிட்டதோ என்றுகூடத் தோன்றியது.

○

மறுபடியும் அதே குரல் கேட்கிறது. அந்தப் பெண் அலறுகிறாள்.

"என் மூக்கு உடைஞ்சி ரத்தம் வருது. கண்ணைக் கட்டிக்கிட்டு வருது. நான் செத்துப் போகப் போறேன்' என்று அந்தப் பெண் சொல்வதும் தெளிவாகவே கேட்டது.

'அவ பாத்ரூம் போய்ட்டு வரட்டும். விடுடா ஸ்டீபன்' என்று இன்னொரு குரல் கேட்டது.

அதைத் தொடர்ந்து அந்தப் பெண் பாத்ரூம் கதவைத் தள்ளித் திறக்கும் ஓசைகூட எனக்குக் கேட்டது.

அந்தப் பெண்ணோடு அறையில் இரண்டு ஆண்கள் இருக் கிறார்களா? அந்தப் பெண் சுவரின் அருகாமைக்கு வந்து நிற்கிறாள் போலும். அவளது அழுகுரலின் வன்மை என் அறையைத் துளைக்கிறது. அப்படியே சுவரை ஊடுருவி அவள் என் அறைக்குள்ளாகக்கூட வந்துவிடுவாள் என்று தோன்றியது.

ஒருவனின் முரட்டுக் குரல் கேட்டது.

'இவ அடங்க மாட்டா. பேசாம கடலுக்குக் கூட்டிப்போயிர லாம். கதவைத் திற.'

'இல்லை சங்கர். அவளுக்கு போதை ஜாஸ்தியா போச்சு.'

'அதெல்லாம் பொய். கள்ளமுண்டே நடிக்கிறா. கடல்ல தள்ளி குளிக்கவச்சா சரியா போயிரும்.'

'பிரச்சினையாகி போயிரும் சங்கர்.'

'அதை எல்லாம் நான் பாத்துக்கிடுறேன். அவ கையைப் பின்னாடி கட்டி கூட்டிக்கிட்டுப் போயிரலாம்.'

'சரி, நான் கதவைத் திறந்து வெளியே பாக்கறேன்.

அந்தக் குரல்கள் ஓய்ந்தன. அறையின் கதவு திறக்கப்படும் ஓசை கேட்டது.

அந்தப் பெண் திமிறினாள். அவர்கள் அவளைத் தள்ளிக் கொண்டு அறையின் வெளியே நடக்கிறார்கள்.

அந்தப் பெண் எப்படியிருப்பாள். அறையின் கதவைத் திறந்து பார்க்கலாமா என்று தோன்றியது. அவர்கள் பார்த்துவிட்டால் என்ன செய்வது. கதவைத் திறக்கவேண்டும் என்ற உள்ளுணர்வு மேலிட்டபடியே இருந்தது.

ஆனால் திறக்கும் மனத்துணிச்சல் வரவில்லை. அந்தப் பெண்ணைப் பற்றிய நினைப்பு மாறி அந்த ஆண்களைப் பற்றியதான நினைப்பு உருவானது. நான் ஏன் அவர்களில் ஒருவனைப் போல இல்லை. ஏன் தனியாக இருக்கிறேன். வெறும் கற்பனைகளிலே என் வாழ்க்கை ஏன் முடங்கிப் போய்விடுகிறது.

என் மனதிற்குள் குற்றம் சார்ந்த கொந்தளிப்புகள் நிறைய இருக்கிறதே. அதை ஏன் செயல்படுத்த மறுக்கிறேன். அந்த ஆண்களுக்கு என்ன வயதிருக்கும். என்ன படித்திருப்பார்கள். அவர்கள் ஏன் ஒரு பெண்ணை இப்படி வதைக்கிறார்கள். எனக்கு ஏன் பெண் என்ற சொல்லே போதுமானதாகயிருக் கிறது. சொற்களின் வழியாகவே ஏன் உடலை அறிய விரும்பு கிறேன். அந்தப் பெண் எப்படி இதுபோன்ற ஆட்களோடு பழகுகிறாள். என்ன துணிச்சல் அது. அவள் சிறுமியாக இருந்தபோது இப்படியான நிகழ்வுகள் தன் வாழ்வில் நடை பெறப் போகின்றன என்று உணர்ந்திருப்பாளா. அவள் ஏன் தன் வாழ்க்கையை எவர் கையிலோ ஒப்படைத்திருக்கிறாள்.

யோசிக்க யோசிக்க மனம் குழப்பமாக இருந்தது. நீண்ட நேரத்தின் பிறகு தற்செயலாக கதவைத் திறப்பதைப்போல திறந்து கடற்கரையைக் கண்டேன். நிழல் உருவங்களாக ஒரு பெண்ணும் இரண்டு ஆண்களும் நீந்திக் குளித்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அவர்களின் உருவம் தெரிய வில்லை. ஆனால் அவர்கள் அலைகளைத் துரத்தி விளையாடு கிறார்கள் என்று தோன்றியது. இது அதே பெண்தானா இல்லை, வேறு ஆட்களா எனத் தெரியவில்லை. கடற்கரையை நோக்கி நடந்து போகலாமா என்று நினைத்தேன். தயக்கம் கால்களைக் கட்டிக்கொண்டது.

பிரம்பு நாற்காலியை வெளியே போட்டு உட்கார்ந்துகொண் டேன். தரையெல்லாம் மணலேறி இருந்தது. கடலின் நிறம் மாறிக்கொண்டேயிருந்தது. விடிகாலையை நெருங்கிக்கொண்டி ருப்பதை உணர்ந்தேன். கடலின் மீது சூரியன் உதயமாகி வெயில் ஏறும்வரை அதே பிரம்பு நாற்காலியில் உட்கார்ந்திருந் தேன். லாட்ஜ் பையன் அடுத்த அறையைக் காலி செய்துவிட்டு காலி பியர் பாட்டில்களுடன் நடந்து போவது தெரிந்தது.

நான் கேட்காமலே அந்தச் சிறுவன் அவர்கள் நடுராத்திரியே காலி பண்ணிப் போய்விட்டதாகச் சொல்லிச் சென்றான்.

அந்தப் பையன் போன பிறகு யாரும் என்னைக் கவனிக்க வில்லை என்றதும் அவசரமாக அந்தப் பெண் இருந்த அறைக்குள் நுழைந்து பார்த்தேன். அந்தப் பெண் இதே கண்ணாடியைத்தான் பார்த்திருப்பாள். இந்தப் படுக்கையில் கிடந்துதான் அழுதிருப்பாள். இந்தச் சுவரில் கை வைத்துதான் அழுதிருப்பாள். மனது பதற்றம் கொள்ள ஆரம்பித்தது.

குளியல் அறைக்குள் நுழைந்து பார்த்தேன்.

தரையில் ஒரு சொட்டு ரத்தம் சிந்திக் கறையாகியிருந்தது.

என்னால் அதைப் பார்க்க முடியவில்லை. ஆனால் மனது அதை விரலால் தொட்டுப் பார் என்றது.

தயக்கத்துடன் அந்த ரத்தத்தைத் தொட்டுப் பார்த்தேன். என் முதுகிற்குப் பின்னால் அந்தப் பெண்ணின் உக்கிரமான அழுகுரல் கேட்டது.

முகம் தெரியாத பெண்ணின் ரத்தமது. இன்பம் துய்ப்பதற்காக எவ்வளவு வன்முறைகளை மேற்கொள்கிறோம் என்று பதற்ற மாக இருந்தது.

அந்த ரத்தத்திற்கு நானும் ஒரு காரணம்தானா, குழப்பம் தலைக்கேறியது. மொத்த உலகமும் அந்த நிமிடத்தில் குரூர மானதாகத் தோன்றியது.

அறையை உடனே காலி செய்கிறேன் என்று சில மணி நேரங்களிலே கடற்கரையை விட்டு விலகி பேருந்தில் ஏறி வீட்டை நோக்கிப் பயணம் செய்யத் துவங்கினேன். தொலை வில் கடல் கண்ணில் இருந்து மறைந்துகொண்டிருந்தது. மனதில் ஒரு துளி ரத்தம் அலை அலையாகப் பொங்கி வீசிக்கொண்டேயிருந்தது. நான் ஒரு கோழை என்று வழியெல் லாம் பிதற்றிக்கொண்டேயிருந்தேன்.

மறுநாள் ராபியைச் சந்தித்தபோது சொன்னார்.

“கற்பனைதான் எல்லா செயல்களுக்கும் மூலவிதை. இனி நீ ஷேக்ஸ்பியரின் நாடகத்தில் வரும் லேடி மேக்பெத்தைப் போல குற்றவுணர்ச்சி தாங்காமல் உன் கையில் இருந்து மறையாத ஒரு துளி ரத்தத்தைக் கழுவிக்கொண்டேயிருக்க வேண்டியதுதான்.

நண்பா, நீ ஒரு மரக்கட்டை, மரக்கட்டைகளால் கடலினுள் மூழ்கிவிட முடியாது. அது கரைக்கும் கடலுக்குமாக அலைக் கழிக்கப்பட்டுக்கொண்டேதானிருக்கும்.

இனி நீ கடற்கரைக்குப் போகவே முடியாது.

வாழ்க்கை எவ்வளவு விசித்திரமானது பார்த்தாயா? நிமிட நேரத்தில் நமது விருப்பங்களைக் கலைத்துப் போட்டுவிடுகிறது” என்றபடியே ஒரு குப்பி மதுவை அருந்தியபடியே அவர் பால்சாக்கின் ஓல்ட் காரியாத்தைப் படிக்கத் துவங்கியிருந்தார்.

நான் பதில் சொல்லவேயில்லை. என் மனதில் அந்த ஒரு துளி ரத்தம் கொதிக்கும் சூரியனைப் போல ஒளிர்ந்து கொண்டேயிருக்கிறது. முகம் தெரியாத அழுகைக் குரல் கேட்டுக்கொண்டேயிருக்கிறது.

# ஆம் புருனோ, அவர்கள் குற்றவாளிகளே

"உனது எல்லாக் குற்றங்களுக்கும் எது காரணம் என்று உனக்குத் தெரியுமா? அதை ஒரு முறையாவது நீ ஒப்புக் கொண்டிருக்கிறாயா?" என்று நீதிவிசாரணை செய்யும் கார்டினல் பெல்லார்மின் ஜியார்டினோ புருனோவைப் பார்த்துக் கேட்டபோது, புருனோ அமைதியாக நீதிவிசாரணை சபையைப் பார்த்துக்கொண்டிருந்தார். களைத்துப் போயிருந்த முகத்துடன் அழுக்கடைந்துபோன மேலங்கியோடு நின்றிருந்தார்.

ரோமின் சிறைக்கூடத்தை ஒட்டியிருந்த நோனா கோபுரமண்டபத்தில் அன்றோடு அவரது நீதி விசாரணை துவங்கி ஏழு ஆண்டுகள் முடிந்திருந்தன. முடிவில்லாத கேள்விகள், எண்ணிக்கையற்ற பதில்கள், தாங்கிக்கொள்ள முடியாத சித்ரவதைகள் அவருக்குப் பழகியிருந்தன. அவரது செம்பட்டை தலைமயிர்கள் ஒழுங்கில்லாமல் கத்தரிக்கப்பட்டிருந்தன. முன்பற்கள் உடைக்கப்பட்டு கிழிந்த உதடுகளுடன் இருந்தார் உடல் அடி தாங்கிப் பழகிப்போயிருந்தது. ரோமின் வேறுவேறு சிறைகளில் வேறு வேறு நியாயவாதிகள் அவரைக் கேட்டுத் துளைத்துவிட்டார்கள். ஆனால் இன்னமும் முடிவுக்கு வர அவர்களால் இயலவில்லை.

புருனோ சலிப்பூட்டும் இதே கேள்வியை எவ்வளவு முறை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது என்று முணுமுணுத்தபடியே தலைகவிழ்ந்துகொண்டார்.

இந்தக் கேள்விகள் எல்லாமே தங்களுக்கு சாதகமான நீதியைக் கொண்டுவருவதற்கான எளிய தந்திரங்கள் என்று புருனோ உணர்ந்திருந்தார்.

தன் முன்னே உயர்ந்த பீடங்களில் துறவியின் உடைகளை

அணிந்து பருத்த கண்களும் சரிந்து விழும் சதை தொங்கும் கழுத்து மடிப்புமாக உட்கார்ந்திருக்கும் நீதிபரிபாலகர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்.

அவர்கள் பயப்படுகிறார்கள். தன்னைத் தண்டிப்பதற்கான வலுவான ஒரு காரணம் கிடைத்துவிட்டால் கூட இந்தப் பயம் போய்விடும். ஆனால் அப்படியான காரணம் எதுவும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதுதான் வேடிக்கையாக இருந்தது.

ரோமின் நியாயசபை அப்படி ஒன்றும் இளகிய மனது கொண்டதில்லை. அதுதான் தண்டிக்க விரும்பிய மனிதன் மீது குற்றம் சுமத்த எல்லா வழிகளையும் கைக்கொள்ளும் என்று புருனோவிற்கும் தெரியும்.

பின் ஏன் அவர் விசயத்தில் இவ்வளவு தயக்கம். அவர்கள் பயப்படுவது புருனோவைக் கண்டு அல்ல. புருனோ எடுத்துச் சொன்ன வானவியலின் மீது மக்களுக்கு இயல்பான ஆசையும் விருப்பமும் உண்டாகிக்கொண்டு வருகிறது. அதைத் தாங்களே பற்றி எரிய வைத்துவிட வேண்டாம் என்று முடிவு செய்திருக்கலாம் அல்லது அவர்களே கூட புருனோவின் பிரபஞ்சம் பற்றிய எண்ணங்கள் சரியானது என்று உள்ளூற நினைத்துக் கொண்டிருக்கலாம். அன்றியும் அவர்கள் ஒருவேளை இங்கிலாந்து அரசின் நண்பனாக இருந்தவன் என்பதால் புருனோவைத் தண்டிப்பதன் காரணமாக அரசியல் நெருக்கடிகள் உருவாகக்கூடுமோ என்று காத்திருக்கவும் கூடும்.

தண்டிப்பதற்கான காரணத்தை தேடுவது நியாயவாதிகளுக்கு எளிதானது. தண்டனையை முடிவு செய்தபிறகு அதை நிறைவேற்ற காரணம் தேடுவதுதானே அதிகாரம். தான் தண்டிக்கப்படப் போகிறோம் என்று புருனோவிற்கு நன்றாகவே தெரியும். அவர் புதிய வானவியலைப் பற்றிப் பேச ஆரம்பித்த அன்றே அது தன்னைப் பலிவாங்கிவிடும் என்பதை அறிந்து கொண்டிருந்தார்.

துறவியர் மடத்தில் பயின்றதால்தானோ என்னவோ தன்னை ஒப்புக் கொடுத்து பலியாகிக் கொள்வதில் அவருக்கு ஒரு ஆனந்தம் இருந்தது. அவர் எந்த அதிகார அமைப்பிடமிருந்தும் தப்பியோடவோ, மறுதலிப்பு செய்யவோ முயற்சிக்கவேயில்லை.

உண்மையில் இந்த நீதிபரிபாலகர்களுக்கும் அறிவியலுக்கும் என்ன சம்பந்தம்? இவர்களில் ஒருவருக்குக்கூட வெளிச்சம் எப்படி உருவாகிறது, ஏன் பகலும் இரவும் உருவாகின்றன

என்ற சூட்சுமம் புரியாது. கடலில் ஏன் அலைகள் ஓய்வதே யில்லை என்ற எளிய உண்மைகள்கூட புரியாது. இவ்வளவு ஏன், அவர்கள் அமர்ந்துள்ள இந்த விசாரணை மண்டபமே ஒரு கணிதவடிவத்தின் வெளிப்பாடு என்று யோசித்துக்கூட பார்க்க மாட்டார்கள். அவர்களுக்கு உண்மையை அறிந்து கொள்வதில் பயம் அதிகம்.

எவனொருவன் உண்மையின் பக்கமாக நிற்கிறானோ அவனைக் குற்றவாளியாக்கிவிட வேண்டும் என்ற நெடுநாளைய நியாயத்தை அவர்கள் தங்களது முன் மாதிரியாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த ஏழு ஆண்டுகளில் புருனோ சாவைப் பற்றி நிறைய கற்பனை செய்து பார்த்துவிட்டார். சிறைச்சாலையின் தனிமை சாவைப்பற்றிய நிறைய கற்பனைகளையும் ஒத்திகைகளையும் உருவாக்கிப் பார்த்துக்கொள்கிறது. அது அபத்தமான வேடிக்கை. தன் மரணத்தை தானே நிகழ்த்திப் பார்த்துக்கொள்ளும் ஒரு நாடகம்.

சில மாதங்களுக்கு முன்புகூட அவன் காதில் வெள்ளியைக் காய்ச்சி ஊற்றி அது உடலின் உள்ளே பரவி உடல் கொதித்து வெடித்து இறந்து போகும் தண்டனையைப் பற்றி கற்பனை செய்துகொண்டிருந்தார். அதுதான் ரோமின் கொடிய தண்டனைகளில் ஒன்று. அது கூட தனக்கு விதிக்கப்படலாம் என்று நினைத்தார்.

அப்போது கூட மனது வலியைப் பற்றி அதிகம் கவலை கொள்ளாமல் உடலின் திறப்புகளையும் உடலின் உள்இயக்கம் சார்ந்த சூட்சும ரகசியங்களையுமே எண்ணிக் கொண்டிருந்தது. அந்த நிமிசத்தில் உடல் என்பது எலும்புகளால் ஆன குடுவை, அதைத் தோல் போர்த்தி வைத்திருக்கிறோம் என்று புருனோ விற்குத் தோன்றியது.

இப்படியாக புருனோ நிறைய கற்பனை செய்து சலித்துப் போயிருந்தார். சாவைச் சந்திப்பதை விட கொடுமையானது அதைப்பற்றி கற்பனை செய்வது. அவர் சில வேளைகளில் அதை ஒரு விளையாட்டைப் போல நிகழ்த்திப் பார்த்து சந்தோஷம்கூட அடைந்திருக்கிறார்.

குரூர மரணம் என்பது தண்டனையின் உச்சம். அது அதிகாரத் தில் இருப்பவனுக்கு மேலான சந்தோஷம் தரக்கூடியது என்று புருனோ உணர்ந்திருந்தார். அதுதான் தனக்கான இறுதிப்பரிசாக இருக்கக்கூடும்.

இப்போது சாவைப்பற்றிய படபடப்பு அவருக்குள் அடங்கி விட்டது. அவர் தன் அறைக்குள் வரும் வெளிச்சமும் இருளும் போல சாவு தன்னியல்பாக கடந்து போய்விடக்கூடியது என்பதை உணர்ந்திருந்தார். அதனால் அவருக்கு கார்டினலின் கேள்வி வேடிக்கையானதாகயிருந்தது.

கார்டினல் பெல்லார்மின் கோபத்துடன் முறைத்தபடியே, "புருனோ, உன் மீது சுமத்தப்பட்ட குற்றங்கள் நிரூபணமாகி விட்டால் உயிரோடு பொது இடத்தில் வைத்து எரிக்கப்படு வாய் என்பதை மறந்துவிடாதே" என்றார்.

"நீங்கள் என்னை எரிப்பதைக் கடவுள் பார்த்துக் கொண்டுதானி ருப்பார். அவரது கண்களில் இருந்து நீங்கள் தப்பவே முடியாது" என்றார் புருனோ.

அதைக்கேட்ட கார்டினல் ஆத்திரத்துடன்,

"ஆண்டவரைப்பற்றி உனது புளுத்த நாக்கால் பேசக்கூடாது. நீ ஒரு மதவிரோதி. உனக்குள் சாத்தான் ஒளிந்திருக்கிறான். உனது நாவை இயக்குபவன் சாத்தானே. உனது குற்றங்களைப் பகிரங்கமாக ஒத்துக்கொள். மண்டியிட்டு மன்னிப்புக்கேள். ஒருவேளை அதன்காரணமாக உனது தண்டனைகள் குறைக்கப் படலாம். ரோமின் நியாயசபை எப்போதும் குற்றவாளிக்கு உரிய கருணையைத் தர மறுப்பதேயில்லை.

உன் எல்லாக் குற்றங்களுக்கும் ஆணிவேராக இருப்பது எது தெரியுமா? உன்னிடமிருந்து அதற்கான பதில் வராவிட்டால் அதை நானே இந்த சபைக்கு விளக்க நேரிடும்."

புருனோ மெல்லிய சிரிப்போடு சொன்னார்:

"என்னைப் பற்றி என்னை விடவும் அதிகமாக நீங்கள் அறிந்து வைத்திருப்பதற்காக நன்றி சொல்லிக் கொள்கிறேன். உங்களது கண்டுபிடிப்பின் வழியாக எனது அறியாமை விலகக்கூடும் என்றால் அதன் முன்னே தலைவணங்குகிறேன். நீங்களே எனது குற்றத்திற்கான முதற்காரணத்தை விளக்கிவிடுங்கள்."

பெல்லார்மின் தன்னோடு உடன் அமர்ந்திருந்த நீதிபரிபாலகர் களைப் பார்த்துச் சொன்னார்:

"இந்தப் பைத்தியக்காரனின் எல்லா உளறல்களுக்கும் முக்கிய காரணம் புத்தகங்கள். இவனது எல்லாக் குற்றங்களும் அதிலி ருந்து உருவானவையே. இவன் படித்த புத்தகங்கள் மோசமா னவை. அவை தடை செய்யப்பட்டவை. ரகசியமாக அவற்றைத் தேடி வாசித்திருக்கிறான். அச்சடிக்கப்பட்ட சொற்கள் கடவுளுக்கு எதிரானவை. கடவுள் ஒருபோதும் எதையும்

படிக்கச் சொல்வதில்லை. அவர் பேசுகிறார். நேரடியாக நம்மோடு பேசுகிறார். பேச்சுதான் கடவுளின் விருப்பம். எழுத்து அல்ல. அவரது சார்பில் அவர் பேசியதைப் புனிதர்கள் எழுதி வைத்ததுகூட நமது நினைவாற்றல் குறைபாடு உடையது என்பதால்தான்.

நீதிபோதகர்களே, யோசியுங்கள். மனிதர்களுக்கு எதற்காகப் புத்தகங்கள் தேவைப்படுகின்றன. கடவுளை நம்பாதவன்தான் புத்தகத்தைத் தேடுகிறான். அவன் கடவுள் இல்லாத உலகம் ஒன்றை இந்தப் பூமியில் உருவாக்க முயற்சிக்கிறான். இந்த புருனோ கூட அப்படியான ஒன்றைத் தானே பிரச்சாரம் செய்துகொண்டிருந்தான், இல்லையா புருனோ? நான் சொல்வது உண்மையா இல்லையா என்று விளக்கிச் சொல்."

புருனோ தலைகவிழ்ந்தபடியே சொன்னார்:

"உங்களது முடிவு ஒரு மகத்தான கண்டுபிடிப்பு. கடவுள் சொற்களின் வழியே தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார். சொற்களின் துணையில்லாமல் மனிதர்களால் கடவுளை அறிந்துகொள்ளவே முடியாது. அச்சடிக்கப்பட்ட புத்தகங்களின் வழியே சொற்கள் பார்க்கப்படுகின்றதாக மாறிவிட்டன. மனிதர்கள் கேட்பதை விடவும் பார்க்கப்படுவதை அதிகம் நம்பக்கூடியவர்கள்."

அதைக் கேட்ட நீதிபரிபாலனை செய்யும் பாப்பிரோசியோ சொன்னார்:

"அவன் சரியாகச் சொல்கிறான். சொற்கள் கடவுளின் வீட்டிற்குச் செல்லும் ஏணியைப் போன்றவை" என்றார்.

உடனே கார்டினல் குறுக்கிட்டு, "மரியாதைக்குரிய பாப்பி ரோசியோ, சாத்தானாலும் இன்னிசையை வாசிக்க முடியும். அதற்கு நாம் மயங்கிவிடக்கூடாது. நான் குற்றம்சாட்டுவது மனிதர்கள் தனது அனுபவத்தாலும் இறை அருளாலும்தான் மேம்படமுடியுமே அன்றி, புத்தக அறிவாலும் சுயசிந்தனையா லும் மேம்பட முடியாது என்பதைத்தான். அறிவாளிக்கு உலகம் குழப்பமானது. அவன் தானும் குழப்பமாக்கி தன்னைச் சுற்றிய உலகத்தையும் குழப்பமாகி விடுகிறான். சேற்றுநீரில் பாலைக் கலந்தால் பாலின் நிறம் என்னவாகும் என்று நான் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

இதோ நிற்கிறானே இவன் நம்மைப் போல துறவியர் மடத்திலி ருந்து உருவானவன் தான். இவனுக்குள்ளும் இறைமையும் நல்ல குணநலன்களும் இருந்தன. ஆனால் அவற்றை அவன் பலிகொடுத்துவிட்டான். சாத்தானோடு ஒப்புதல் செய்து

கொண்டுவிட்டு மாயமந்திரங்கள் பற்றிய சூன்யக்காரர்களின் புத்தகங்களை வாசித்து இருண்ட எண்ணங்களின் அடிமை யாகிவிட்டான். அவனது கருதுகோள்கள் என்ன தெரியுமா?

பூமி சூரியனைச் சுற்றுகிறதாம். இந்தப் பிரபஞ்சத்தில் எண்ணிக் கையற்ற பூமிகள் இருக்கிறதாம். உலகம் முடிவில்லாதது என்கிறான். இதில் எண்ணிக்கையற்ற ஆதாமும் ஏவாளும் இருக்கிறார்களாம். அதில் சில ஆதாம் ஏவாள் அறிவுக்கனியைச் சாப்பிட மறுத்துவிட்டு சந்தோஷமாகத் தன் இனத்தைப் பெருக்கிக் கொண்டு வாழ்கிறார்களாம். இந்தச் சொற்கள் பாவமானதில்லையா? கடவுளின் சிருஷ்டியை அவமதிப்பதாக யில்லையா?

புருனோவிற்குள் உள்ள எல்லா கசடுகளுக்கும் காரணம் அவன் படித்த புத்தகங்களே. புத்தகங்களை நம்பும் மனிதன் மிக ஆபத்தானவன். அவனைத் தண்டிப்பதன் வழியே நாம் கடவுளின் மீது சுமத்தப்பட்ட அவமானத்தை துடைத்து எறிய முடியும்."

அதைக்கேட்ட பாப்பிரோசியோ சொன்னார்:

"அருமை பெல்லார்மின், நீங்கள் சொல்வது உண்மை. படிப்பதன் வழியே மனிதர்கள் தங்களுக்கு நடக்காத அனுபவங் களைக் கூட அனுபவிக்கத் துவங்கிவிடுகிறார்கள். அது மோசமான போதை.

இந்த உலகில் மிக வலிமையான ஆயுதம் எது தெரியுமா? அது கற்பனை. கற்பனையின் பெயரால் உலகின் சகல உண்மைகளையும் அவர்கள் நாசம் செய்கிறார்கள். அதை நாம் சகித்துக்கொண்டிருக்கக் கூடாது.

நான் கேட்கிறேன். மதத்துறவிக்கு எதற்காகப் பிரபஞ்ச ஆராய்ச்சிகள்? அவனது வாழ்க்கை கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது. அவன் கடவுளின் பல்லாயிரம் வேலைக் காரர்களில் ஒருவன். அவன் எதற்காகக் கடவுளின் சிருஷ்டி யைப் பற்றி ஆராய்ச்சி செய்கிறான், கேள்வி கேட்கிறான். இந்தக் கேள்விக்கு புருனோ பதில் சொல்லியே ஆக வேண்டும். தனது குற்றத்தை இப்போதாவது ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்று கோபத்துடன் சொன்னார்

புருனோ கண்களை உயர்த்தி பாப்பிரோசியோவைப் பார்த்து தைரியத்துடன் சொன்னார்:

"நீதிமான்களே, நீங்கள் எதைக் குற்றம் என்று சொல்கிறீர்களோ அதுதான் எனது தகுதி, உலகைப் பற்றிய உங்கள் அத்தனை

மர்மங்களையும் புத்தகங்கள் துடைத்து எறிகின்றன. புத்தகம் என்பது ஒரு வெளிச்சம். அதனால் உலகின் இருள் விலகி யோடுகிறது.

உலகில் எந்த மாமன்னராலும்கூட புத்தகங்களை அழித்து விடவே முடியாது. பாப்பிரோசியோ, நீங்கள் என்னை எரித்து விடலாம். நான் படித்த புத்தகங்களைக்கூட எரித்துவிடலாம். ஆனால் புத்தகங்களைத் தங்கள் நினைவில் வைத்துள்ள எவ்வளவு பேரை உங்களால் எரிக்க முடியும். அறிவின் வளர்ச்சியை உங்களது வெண்ணெய் வெட்டும் கத்தியால் வெட்டித் தீர்த்துவிட முடியாது. நான் இந்தப் பிரபஞ்சத்தில் கடவுளின் இருப்பைப் பற்றி கேள்விகளுக்கே செல்லவில்லை. உங்கள் கண்முன்னே தோன்றி மறையும் சூரியனை ஆராய்ச்சி செய்கிறேன். கோடானு கோடி நட்சத்திரங்கள் கொண்ட இரவின் மர்மத்தை அவிழ்த்துப் பார்க்க விரும்புகிறேன். தொழுவத்தில் உள்ள பன்றிகளைப் போல பகலிரவைப் பற்றிய பிரக்ஞையே இல்லாமல் வாழ என்னால் முடியாது. எனது அவதானிப்புகளைக் கண்டு ஏன் இப்படி பயப்படு கிறீர்கள் ?

கடவுளின் பிரதிநிதிகள் என்ற பெயரால் உங்களது அதிகாரம் கலைந்து போய்விடும் என்ற பயமா ? நான் புத்தகங்களின் வழியே உருவானவன்தான். எனது அறிவிற்கு ஒரு நெடிய வரலாறு இருக்கிறது. எனது தேர்வின் பின்னே தெளிந்த எண்ணங்கள் இருக்கின்றன. நான் உலகின் இயக்கத்தோடு சேர்ந்து ஓட விரும்பவில்லை. அதற்கு எதிராக நின்று அந்த இயக்கத்தின் உள்விதிகளை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

கணிதம் மீதான எனது விருப்பம் பால்யத்தில் துவங்கியது. கணிதம் வெறும் அறிவுத்துறையில்லை, அது மெய்ஞானம் என்பதை அறிந்துகொண்டவன் நான். மனித நினைவாற்றலின் உள்ளே இருக்கின்ற ஜியோமிதி வடிவங்களை நான் அறிந்து கொண்டிருக்கிறேன். அவற்றை என்னால் உருவாக்கவும் முடியும்.

மனிதவாழ்க்கையின் பெரும் புதிர்களை எனது கணித அறிவால் தெளிவாக்கிவிட முடியும். எனது அறிவு சிந்தனைவாதிகளால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. இங்கிலாந்தின் மாமன்னர் எனது அறிவுத்திறனுக்காக என்னைத் தனது சபையில் உடன் வைத்துக் கொள்ள விரும்பினார். அதை மறந்துவிடாதீர்கள்.

புத்தகங்களை ஏன் தடை செய்கிறீர்கள் என்று ஒரு நிமிசம் யோசித்துப் பாருங்கள். அவை வெறும் அச்சடித்த காகிதங்கள்

அல்ல. அவை வீரியமிக்க தானிய விதைகள். படிப்பவன் மனதில் அவை வேரூன்றி வளர்த்துவிடக்கூடியவை. மனித அறிவின் எல்லையின்மையைத்தான் ஒவ்வொரு புத்தகமும் நிரூபணம் செய்துகொண்டேயிருக்கிறது.

புத்தகங்கள் ஆபத்தானவை என்பதை நீங்கள் உணர்ந்திருக்கிறீர்கள். அதற்கு எதிராக எப்படிச் செயல்படுவது என்று உங்களுக்குத் தெரியவில்லை. அதை எழுதியவனை, வாசித்தவனைப் பிடித்துச் சித்ரவதை செய்வதன் வழியே புத்தகங்களின் செயல்பாட்டினை முடக்கிவிடலாம் என்று நினைக்கிறீர்கள்.

இது எனக்குப் பலமுறை நடந்திருக்கிறது. லண்டனில் நான் வெளியிட்ட சாம்பல் புதன்கிழமை விருந்து புத்தகத்திற்காக கைது செய்யப்பட்டிருக்கிறேன். அச்சகம் அடித்து நொறுக்கப்பட்டது. அச்சகரும் கைது செய்யப்பட்டார். இந்த செயல்களின் மூலம் அச்சிடப்பட்ட சொற்களைக் கண்டு நீங்கள் பயப்படுகிறீர்கள் என்பது உறுதியாகிவிட்டது. சொற்கள் சிறகுகள் முளைத்து, பறந்து தாக்கக்கூடியவை என்று உங்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கிறது.

பாப்பிரோசியோ, உங்கள் பயம் அதை உறுதி செய்கிறது. இதுதான் குற்றம் என்று நீங்கள் கருதினால் அது என்னைப் பெருமை கொள்ளவே செய்கிறது."

என்று சொல்லிவிட்டு உலர்ந்த தனது கண்களால் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தார் விஞ்ஞானி புருனோ.

ஆவேசத்துடன் கைகளை அசைத்தபடியே இறுகிய முகத்துடன் பெல்லார்மின் சொன்னார்:

"புருனோ, புத்தகம் படிப்பவர்கள் அதிகம் பேசுகிறார்கள் அல்லது பேச்சை ஒளித்துக்கொண்டு ஒடுங்கிப் போய்விடுகிறார்கள். நானும் புத்தகங்களைப் படித்திருக்கிறேன், ஆனால் அவற்றை நம்புவதில்லை. காரணம், உலகில் உள்ள எல்லாப் புத்தகங்களும் அழகாகப் பட்டுத்துணியில் சுற்றித்தரப்பட்ட பொய்கள். புத்தகம் ஒருபோதும் உண்மையாகிவிட முடியாது. புருனோ. நீ ஒரு மதத்துறவியாக சேவை செய்திருக்கிறாய் என்ற ஒரு அம்சமே உன் மீது எனக்குத் தீராத பரிவை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. இனி ஒரு முறை மறந்தும் அறிவியலின் பக்கம் பேசாதே.

அறிவியல் என்பது சாத்தானின் பட்டறை. அங்கே தீவினைகள் மட்டுமே உருவாக்கப்படுகின்றன. அதை நான் அறிவேன். கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்ட மனிதன் அவரது சிருஷ்டியைக் கேள்வி கேட்க அனுதிக்கப்படுவதில்லை, மண்

புழுக்களால் கடலை நீந்திக் கடக்க முடியாது. அவை மண்ணைத் தின்று மண்ணோடு வாழ்ந்து மடிய வேண்டியது தான் இயற்கை."

புருனோ சிரித்தார். உறுதியான குரலில் சொன்னார்:

"நீங்கள் என்னைப் பேசும்படியாகத் தூண்டுகிறீர்கள். எனக்கோ பேசிப்பேசி அலுத்துப் போய்விட்டது. இப்போது எனது வயது 51. எனது 24 வயதில் இருந்து இதுபோன்ற கேள்விகளை எதிர்கொண்டு வருகிறேன். உங்களைப் போன்ற முட்டாள்கள் எல்லா தேசத்திலும் ஒன்று போலவே இருக்கிறார்கள். உங்களுக்கு நான் சொன்ன பதில்களை நீங்கள் ஒருபோதும் புரிந்துகொள்ளவேயில்லை. உங்களது முட்டாள்தனத்தின் காரணமாக நான் துரத்தப்பட்டேன். வெனிஸ், பதுவா, பெர்காமோ, ஆல்ப்ஸ். லியோன், பாரீஸ், இங்கிலாந்து என்று நாடுவிட்டு நாடு அலைக்கழிக்கப்பட்டேன். எல்லா இடங்களி லும் என்னைத் துரத்தியடிப்பது மனித அறியாமையும் மூட நம்பிக்கைகளுமே.

மனிதன் தனது அறிவைப் பயன்படுத்தாத வரை உலகில் அவனுக்கு மேம்பாடு கிடையாது. ஒரேயொரு எண்ணம், ஒரேயொரு சிந்தனை மட்டுமே உலகில் ஜீவித்திருக்க வேண்டும் என்று நினைப்பது ஒரு வன்முறை. அறிவு விமர்சனத்திற்கு உட்பட்டது. விவாதிக்கப்பட வேண்டியது. ஆனால் அதை நாம் புரிந்துகொள்ளவேயில்லை. படிப்பு அறியாத எளிய மக்களோடு என்னால் எளிதாகப் பழகிவிட முடிகிறது. அரை குறை படிப்பாளிகள், மதவாதிகள், ஒழுக்கவாதிகள், கலாச்சாரக் கண்காணிப்பாளர்கள் இவர்கள்தான் எனது பிரச்சினையே.

அதிகாரத்தில் இருப்பவர்கள் விமர்சனங்களைக் கண்டு பயப்படுவதில்லை. கேலியைக் கண்டுதான் அதிகம் பயப்படு கிறார்கள். காரணம், கேலிக்குப் பின்னால் உண்மை ஒளிந்து கொண்டிருக்கிறது அல்லது கேலியின் வழியே உண்மை வெளியே எட்டிப் பார்க்கிறது. அதை ஏற்றுக்கொள்வது சிரம மானது. ஆகவே அதை அழித்து ஒழித்துவிட விரும்புகிறார்கள்.

நான் உலகைக் கேலி செய்கிறேன். அதிகாரத்தைக் கேலி செய்கிறேன். மூடமதவாதிகளைக் கேலி செய்கிறேன். அப்படிச் செய்வது எனது வேலை என்று அறிந்தே செய்கிறேன்.

ஆகவே, என் மீது அவர்கள் கோபம் கொள்ளும்போது நான் தந்த மருந்து வேலை செய்கிறது என்றுதான் சந்தோஷம் அடைகிறேன். ஆகவே எனக்கு அதிகாரத்தின் மீது கோப மில்லை. ஆனால் அறிவைத் தவறு என்று நீங்கள் அடையாளம்

காட்டுவதை என்னால் ஏற்றுக்கொள்ளவே முடியாது.

விளக்கின் சுடரை நீங்கள் பார்த்திருக்கிறீர்கள்தானே? அந்த ஒரு சுடரினுள் எத்தனை சுடர்கள் இருக்கின்றன. இன்னொரு விளக்கை அந்த சுடரில் காட்டினால் புதிய சுடர் தோன்றுகிறது என்றால் அந்தப் புதிய சுடர் முந்திய சுடரில் இருந்து பிரிந்து வந்த ஒன்றா? தன்னைப் பகிர்ந்து கொடுப்பதால் ஏன் நெருப்பு குறைவதேயில்லை, நெருப்பில் பழைய நெருப்பு புதிய நெருப்பு என்று ஏதாவது இருக்கிறதா, ஏன் நெருப்பின் சுடர் அசைந்து கொண்டேயிருக்கிறது, அதன் ஓசை எங்கிருந்து உருவாகிறது, மனிதர்களால் தங்களது வீட்டின் இருளைப் போக்கும் வெளிச்சத்தைக்கூட அறிந்துகொள்ள முடியவில்லை என்பது வெட்கமாகயில்லையா?

'காதலின் வடிவமாக ஏன் நெருப்பைக் குறிப்பிடுகிறார்கள்' என்று என்னிடம் ஒரு முறை பதுவாவில் ஒரு இளைஞன் கேட்டான்.

நாம் எதை விரும்புகிறோமோ அதை உருமாற்றிவிடுகிறது காதல். அதுதானே நெருப்பின் இயல்பு. நெருப்பு அழிவில்லாதது. அதை நாம் கைக்கொள்ளவும் முடியும், கட்டுப்படுத்த முடியாமலும் போய்விடும், அப்படியானது தானே காதல் என்று சொன்னேன். அந்த இளைஞன் அதை ஏற்றுக்கொண்டுவிட்டான்.

ஆனால் மறுநாள் தேவாலயப் பிரசங்கத்தில் நான் அன்பு என்பதை அழிக்கும் சக்தியாக குறிப்பிடுகிறேன் என்ற குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. என்மீது அதற்காக விசாரணைகூட நடத்தப்பட்டது. இந்த மடமையை எப்படிப் புரிந்துகொள்வது?

நான் பகுத்தறிவின் பக்கம் நிற்பவன். அதே நேரம் பகுத்தறிவிற்குள் அடங்காத மெய்மையைப் பற்றியும் அறிவேன். ஆகவே நான் எனது எண்ணங்களை எனது அனுமானங்கள் என்றே சொல்கிறேன். அதை நீங்கள்தான் தவறாகப் புரிந்து கொள்கிறீர்கள்."

அதைக்கேட்ட பெல்லார்மின் பரிகாச சிரிப்போடு சொன்னார்:

"புருனோ, விதி என்பது ஒரு குருட்டுப்புலி. அது மனிதர்களின் நிலைமை அறியாமல் பாய்ந்து தாக்கக்கூடியது என்றும் நீதானே சொல்லியிருக்கிறாய். இன்று உன் விஷயத்தில் அது நிஜமாகிவிட்டதைப் பார்த்தாயா? புருனோ, உன்னைத் தண்டிக்க எங்களிடம் ஏழு காரணங்கள் இருக்கின்றன.

நீ மீட்பரின் பிறப்பை பற்றி சந்தேகம் கொள்கிறாய். அறிவுக்குப்

பொருந்தாத சடங்குகள் என்று மதசடங்குகளை விமர்சனம் செய்கிறாய். மாயமந்திரங்களால் உருவான அறிவைக் கொண்டு மக்களை மூடநம்பிக்கை கொள்ளச் செய்கிறாய். உலகம் எல்லையில்லாதது என்கிறாய். தடை செய்யப்பட்ட புத்தகங் களை உயர்த்திப் பேசுகிறாய், மதத்துறவிக்கான உடைகளை, ஒழுங்கை கைவிட்டிருக்கிறாய். பிறப்பு கடவுளால் உருவாவ தில்லை என்கிறாய். இந்தக் காரணங்கள் போதும் உன்னை உயிரோடு எரிக்க. ஆனாலும் உனக்காக இந்த நியாயசபை இன்னும் ஒருமுறை அவகாசம் தருகிறது. மன்னிப்பு கேள். தவறை ஒப்புக்கொண்டு கடவுளின் முன் மண்டியிடு. அது நிறைவேறாவிட்டால் இந்த நியாயசபை மறுமுறை பௌர்ண மிக்கு முதல்நாள் மறுபடி கூடும், அன்று நாங்கள் உனது வழக்கின் இறுதித் தீர்ப்பை வழங்க இருக்கிறோம்."

ஜியோர்டினோ புருனோ அமைதியாகச் சொன்னார்:

"மத நம்பிக்கையை மீறுகிறேன் என நான் தண்டிக்கப்படுவதை விரும்பவில்லை. எனது அறிவின் பிரகாசம் காரணமாகவே குற்றவாளியாக கருதப்பட்டு தண்டிக்கப்படுவதை நான் விரும்புகிறேன்.

எனது அறிவு மந்திர தந்திரத்தால் உருவானதில்லை. இது ஒரு தாவரம் போல படிப்படியாக வளர்ந்து உருவானது. அதற்காக நான் பட்ட சிரமங்களும் தேடுதல்களும் மிக அதிகம். அதை வெறும் சூன்யக்காரியின் மாயக்கோல் உருவாக் கிய விந்தை என்று புறம் ஒதுக்கிவிட வேண்டாம்.

இந்த நியாய சபையின் முன்னே ஏழு ஆண்டுகாலம் எனது எண்ணங்களை இடைவிடாமல் சொல்லிக்கொண்டேயிருக் கிறேன். உங்களில் ஒருவரது இதயத்திலும் அதன் ஒரு துளி கூட சென்று சேரவில்லை என்பது வருத்தமளிக்கிறது. மனிதர் கள் ஏன் கற்களை விடவும் உறுதியாக இறுகிப்போயிருக்கிறார் கள் என்று கவலையாக இருக்கிறது.

அறியாமை விலங்குகளுக்கு வேண்டுமானால் சொர்க்கமாக இருக்கலாம். மனிதர்களுக்கு அது பெரும்தடை. அதை ஒரு நாள் நீங்களே உணர்வீர்கள்.

உங்களோடு எனக்கு எவ்விதமான விரோதமும் கிடையாது. நான் சோர்வடைந்து விட்டிருக்கிறேன். எனது களைப்பில் இருந்து மரணம் என்னை விடுவிக்கும் என்று நம்புகிறேன். ஆகவே உங்கள் தண்டனைக்காக காத்திருக்கிறேன்" என்றார்.

நீதிபரிபாலகர்கள் தங்களுக்குள் எதையோ முணுமுணுத்துக் கொண்டார்கள்.

அன்றைய நியாயசபை கலைந்து போனது, காவலர்களால் மறுபடியும் சிறைக்கொட்டடிக்கு கொண்டு செல்லப்பட்டார் புருனோ.

o

ஜியோர்டினோ புருனோ சிறையினுள் அடைக்கப்பட்டிருந் தார். கருங்கற்களால் ஆன அந்த சிறைச்சாலை பகலிலும் இருள் அடைந்தே போயிருந்தது. அவரது அருகாமை சிறை களில் இருந்த குற்றவாளிகள் இருளைத் தாங்க முடியாமல் கூச்சலிட்டுக்கொண்டிருந்தார்கள். எந்த மனிதனையும் நோயாளியாக்கி விடக்கூடியது அச்சிறைச்சாலை. அங்கே விதவிதமான வதைக்கருவிகள் இருந்தன. தண்டிப்பதை ஒரு பொழுதுபோக்கு விளையாட்டைப் போல நடத்திக்கொண்டி ருந்தார்கள் அதிகாரிகள்.

புருனோ ஜன்னல் அற்ற சிறையின் கடினமான சுவர்களைத் தடவிப் பார்த்தபடியே இருந்தார். பிறகு அவர் கண்களை மூடிக் கொண்டபடியே தனக்கு விருப்பமான சூரியனைப் பற்றியும் கோள்களைப் பற்றியும் பூமியின் பிரபஞ்ச இயக்கத் தினையும் பற்றி கற்பனை செய்ய ஆரம்பித்தார்.

வானில் இருந்து சூரியன் மெல்ல இறங்கி அவரது நெற்றிப் பொட்டில் வந்து அமர்ந்து கொண்டது போலாகியது. கோள்கள் அவரது தலையைச் சுற்றிலும் சுற்றிக் கொண்டிருந்தன.

ஏழு வயதில் கணிதம் மேல் கொண்ட ஆசைகளும் அதற்காகத் தான் மணலில் வரைந்து பார்த்த கோடுகளும் நினைவிற்கு வந்தன. பிரபஞ்சம் எல்லையில்லாதது. அதன் இயக்கம் ஏதோவொரு ஒழுங்கிற்குள் அடங்கியிருக்கின்றன. கணித சூத்திரங்கள் தன்னை வாழ்நாள் முழுவதும் வழி காட்டி கூட்டிக்கொண்டு செல்கின்றன என்பதை அவர் உணர்ந்தே யிருந்தார்.

டிசம்பர் மாதத்தின் குளிர்கால இரவு என்பதால் சிறைச்சாலை யின் கற்கள் குளிர்மை கொள்ளத் துவங்கியிருந்தன. அவரது மெலிந்த உடல் குளிர்ச்சி தாங்க முடியாமல் நடுங்கிக்கொண்டி ருந்தது. ஆனால் மனது அடங்கவேயில்லை. அது பிரபஞ்ச முடிவின்மையின் சாத்தியங்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருந்தது.

பின்பு அதிலிருந்து தன்மனதைத் திருப்பிக்கொண்டார். நோலா கிராமத்திலிருந்த தனது பழைய நண்பர்களையும் கவிதைகளை

யும் நாடகங்களையும் பார்த்து மகிழ்ந்த நாட்களையும், துறவி உடையைக் களைந்து வேறு பெயரில் ஆயுதம் தாங்கி காவல்வீரனைப் போல வாழ்ந்த காலத்தையும் கணித ஆசிரிய ராக மாணவர்களுடன் கலந்து பேசி விவாதித்த நினைவுகளை யும் மனதில் மறுஉருவாக்கம் செய்தபடியே விழித்துக்கிடந்தார். இரவு வெளியே பெருங்காற்றுடன் ஓலமிட்டுக்கொண்டிருந்தது.

நீண்ட நேரத்தின் பிறகு புருனோவிற்கு ஒரு கனவு வந்தது. அதில் குதிரைகள் பூனைகள் முயல்கள் நாய்கள் மரங்கள் செடிகொடிகள் ஆறுகள் மலைகள் என அத்தனையும் வானில் பறந்துகொண்டிருந்தன. அதில் ஒரு மனிதனைக்கூட காண வில்லை. நட்சத்திரங்கள் வீட்டின் கதவுகள் திறப்பது போல திறந்துகொண்டு அவற்றை வரவேற்றன. ஒவ்வொரு நட்சத்திரத் தினுள்ளும் ஒரு ஆறு ஓடி நிரம்பியது. உயிர்கள் யாவும் வேறு வேறு இடங்களில் தகைவு கொண்டு தன்னை விருத்தி செய்துகொண்டன. மனிதர்கள் மட்டும் தனித்துவிடப்பட்ட உலகில் ஒருவரோடு ஒருவர் சண்டையிட்டுத் தாக்கி அடித்துக் கொண்டிருந்தார்கள். எங்கிருந்தோ பறந்து வந்த ஒரு ஈயின் கால்களைப் பிடித்துக்கொண்டு அதில் இருந்து ஒரு மனிதன் வானில் மிதந்து செல்ல முயன்றுகொண்டிருந்தான். அந்த மனிதனை மற்றவர்கள் கீழே இழுப்பதற்கு முயன்றார்கள். அவன் அந்த ஈயின் கால்களை விடாமல் பற்றிக் கொண்டான். அது சூறைக்காற்றின் விசையோடு பறந்தது. ஏதோ ஒரு புள்ளியில் அந்த மனிதன் கைநழுவியது. அவன் பேரோசையு டன் பூமியை நோக்கி விழுந்துகொண்டிருந்தான்.

கனவு கலைந்து போனது. பனிப்புகை சூழ்ந்த சிறைச்சாலையில் மீளமுடியாத துயரத்துடன் உட்கார்ந்திருந்தார் புருனோ.

○

“அந்த மனிதரின் குற்றத்தைப் பற்றி சுருக்கமாகச் சொல்லுங் கள்” என்று கேட்டார் போப் ஆண்டவர் எட்டாம் கிளமண்ட்.

“அந்த மனிதன் தன்னைக் கிறிஸ்துவனில்லை என்று சொல்லிக் கொள்கிறான்” என்றார் உபதேசி.

“பிறகு என்ன சொல்லி தன்னை அடையாளப்படுத்துகிறான்” என்று கேட்டார் போப் ஆண்டவர்.

“அவன் தன்னை உண்மையைத் தேடும் ஒரு தத்துவவாதி என்கிறான்” உபதேசி.

"தத்துவவாதிகள் கிருமிகளைப் போல எளிதாகப் பரவிவிடக் கூடியவர்கள். கடவுளை விட பெரிய உண்மை உலகில் எதுவு மில்லை" என்றபடியே போப், "அவன் பிரசங்கம் செய்கிறானா?" என்று கேட்டார்.

"ஆமாம், அவன் பிரசங்கம் செய்கிறான். அது அறிவின் முக்கியத்துவம் பற்றியது. பாதிரிகளால் திருடப்பட்ட மக்களின் இதயத்தை மீட்பதே தனது நோக்கம் என்கிறான். மக்களின் அறியாமை மற்றும் மூடநம்பிக்கையைப் போக்கவே தான் பேசுகிறேன் என்கிறான்" உபதேசி.

"அவன் நாக்கு விஷமேறியது என்று நன்றாகவே புரிகிறது" என்றபடியே "நியாயசபை என்ன முடிவிற்கு வந்திருக்கிறது?" என்று கேட்டார்.

"புருனோவை உயிரோடு எரித்துக் கொல்லவே முடிவு செய்திருக் கிறது. ஆனால் அந்த மனிதன் உங்கள் கருணைக்காக மனு செய்திருக்கிறான்" என்றான் உபதேசி.

"பாம்புக்குட்டிகளை உதட்டில் அணைத்து முத்தம் தர முடியாது. அவனை நியாயசபையின் முடிவின்படியே எரித்து விட ஏற்பாடு செய்யுங்கள்" என்றபடியே போப் தனது இறைப்பணியின் அடுத்த செயலுக்காகத் தேவாலயம் நோக்கி புறப்பட்டுப் போனார்.

○

'புருனோ மதவிரோதி' என்று அடையாளமிடப்பட்டு சாந்தா மரியா தேவாலயத்திற்கு அழைத்துப் போகப்பட்டார். அங்கே புருனோ மன்னிப்புக் கேட்டால் பாதி தண்டனையில் இருந்து தப்பிவிடலாம் என்று மறுபடியும் சொல்லப்பட்டது.

புருனோ "மண்டியிடுதலை நான் விரும்பவில்லை. உள்ளங் கையை வைத்து நிலவை வானில் தோன்றவிடாமல் மறைப்பது போலிருக்கிறது உங்கள் செயல். ஒரு மனிதனைத் தண்டிப்பதால் அவனது நம்பிக்கைகளைத் தகர்த்துவிட முடியாது. அவனது அறிவை அகற்றிவிட முடியாது. இதற்கு இயேசுவை விடவும் வேறு சாட்சி எதுவும் தேவையில்லை" என்றார். அன்றே தண்டனை உறுதி செய்யப்பட்டது. பிப்ரவரி 17ம் நாள் புருனோ பொது இடத்தில் எரிக்கப்பட வேண்டும் என்று ஒருமனதாக நியாயம் வழங்கப்பட்டது. புருனோ அதை ஏற்றுக்கொண்டு "என்னைவிட நீங்கள் அதிகம் பயந்திருக்கிறீர்கள். அதுதான்

பாவமாகயிருக்கிறது" என்று சொன்னார்.

எல்லா நாட்களையும் போலவே புருனோ எரிக்கப்பட்ட தினமும் எளிமையாகவே துவங்கியது. ஒரு மனிதன் உயிரோடு எரிக்கப்படுவது என்பது அரிதான கேளிக்கையில்லையா? அதனால் அதைக் காண நிறைய மனிதர்கள் மிகுந்த உற்சாகத்துடன் கூடியிருந்தார்கள். பூக்கடைகள் நிரம்பிய அந்த சதுக்கத்தின் நடுவில் புருனோ ஒரு மரத்தோடு சேர்த்துக் கட்டப்பட்டிருந்தார். இருபுறமும் கழுத்தைச் சுற்றி சுருக்குக் கயிறு போடப்பட்டு அதை இழுக்க இருவர் நின்றிருந்தார்கள். புருனோவைச் சுற்றிலும் காய்ந்த மரத்துண்டுகளை அடுக்கிக் கொண்டிருந்தார் ஒரு காவலர். புருனோவின் தலைமட்டுமே வெளியே தெரிந்தது. அவர் வானை ஏறிட்டு நோக்கினார். சூரியனும் எல்லையில்லாத ஆகாசமும் அதன் விந்தையும் கண்ணில் பட்டது. அவர் தன்னை வேடிக்கை பார்க்கும் மக்களின் அறியாமைக்காக ஒரு நிமிடம் மனம் வருந்தினார். பின்பு தன்னைப் பலியிட்டுக்கொள்ள ஒரு ஆட்டுக்குட்டியைப் போல தயாராகி விட்டார்.

புருனோவின் மீது நெருப்பு எரியத் துவங்கியபோது அவர் மனதில் எப்போதோ தான் எழுதிய பாம்பின் கதையொன்று நினைவில் வந்தது.

உறைபனியில் சிக்கிக்கொண்ட பாம்பின் உரையாடல் அது. எப்படியோ ஒரு பாம்பு உறைபனியில் மாட்டிக் கொண்டுவிடுகிறது. பனியில் ஊர்ந்து செல்லமுடியவில்லை. எங்கிருந்தாவது துளி வெப்பம் உருவாகித் தன்னை காப்பாற்றிவிடாதா என்று சூரியனைத் தேடுகிறது. ஆனால் · சூரியனே கண்ணில் படவில்லை. அவ்வளவு மேகமூட்டம். என்ன செய்வது என்று தெரியாமல் பாம்பு மன்றாடுகிறது. உலகம் தன்மீது கருணையற்றுவிட்டதே என்று புலம்புகிறது. தன்னால் இந்த நெருக்கடியில் இருந்து தப்பிப் போக முடியாது என்பதை நன்றாக உணர்ந்துகொண்டது, மேலும் வேதனை தருவதாக அதற்கு மாறியது. இது குரூரவிதியின் விளையாட்டு என்று தெரிந்து கொண்டபோது தன்னை ஒப்புக் கொடுப்பதைத் தவிர வழியில்லை என்று மௌனமாகியது. அது தனது கதையே தான் என்று புருனோவிற்கு நன்றாகப் புரிந்தது.

புருனோ எரிந்துகொண்டிருந்தார். அவர் நினைவில் அவர் பார்த்த முழுநிலவுகள், கிரகணங்கள், வரைந்த கணித வரைபடங்கள், ஜியோமிதி வடிவங்கள் தோன்றி மறைந்துகொண்டிருந்தன. நெருப்பு அவரது உடலைத் தின்றுகொண்டிருந்தது. எலும்புகள் முறிந்து சடசடத்துப் பிளந்து நெருப்பு எரிந்தது.

முடிவில் அவர் வெறும் சாம்பலாகிக் கரைந்து போனார். பின்பு காலம் அவரை ஒரு சொல்லாக உருமாற்றியது.

அச்சிடப்பட்ட அந்தச் சொல்லில் இருந்து பின்னாளில் எண்ணிக்கையற்ற அறிவுவாதிகள் உருவாகிக் கொண்டேயிருக்கப் போகிறார்கள் என்று அன்றைய ரோமிற்குத் தெரியவில்லை என்பது தான் காலத்தின் புதிர்விளையாட்டு போலும்.

O

*(ஜியோர்டினோ புருனோ இத்தாலியைச் சேர்ந்த விஞ்ஞானி, கணிதவியலாளர். தத்துவவாதி, விஞ்ஞானக் கொள்கைகளைப் பேசுகிறார் என்று 1600ம் வருடம் மதவாதிகளால் உயிரோடு எரித்துக் கொல்லப்பட்டார்).*

# சீட்டாட்டம்

இருபத்திமூன்று வருசமாக முடிவில்லாமல் நடைபெற்றுவரும் ஒரு சீட்டாட்டம் பற்றிய இந்தக் கதையை விசித்திரமானது என்று எண்ணி நம்ப மறுத்துவிடாதீர்கள். சில சமயம் கற்பனையை விட உண்மை விசித்திரமாகவே இருக்கும்.

அவர்கள் சீட்டு விளையாடிக்கொண்டிருந்த அறை கடற் கரையோர வீடு ஒன்றில் உள்ளது. அந்த வீட்டின் உரிமையாளர் வினி. அவள் இப்போது நொய்டாவில் வசிக்கிறாள். அவள் சென்னையில் இருந்தபோது அந்த வீட்டில் தங்கியிருந்தாள். அவள் ஊரைவிட்டுப்போன பிறகும் சீட்டாட்டம் தடை செய்யப் படக்கூடாது என்பதற்காக சமையலுக்கும் உதவிக்கும் ஒரு ஆளை நியமித்துப் போயிருக்கிறாள். அந்த ஆள் தினமும் இரண்டு முறை உணவுத் தட்டுகளை அறையின் ஜன்னலில் வைத்துப் போகிறான். சில நேரம் பழங்கள். உணவு அப்படியே சாப்பிடப்படாமல் இருக்கின்றன. சில நேரம் சிகரெட் தேவை என்ற குறிப்பு ஜன்னலில் சொருகப்பட்டிருக்கிறது. அந்த சமையற்காரன் உள்ளே விளையாடும் மூவரையும் பார்த்ததே யில்லை. ஆனால் அவர்களைப் பற்றி அவனாக நிறைய கற்பனை செய்து வைத்திருக்கிறான்.

அவர்கள் மூவரும் சீட்டாடத் துவங்கியபோது மூன்று நிபந்தனை விதித்தார்கள். முழுமையாக ஒருவர் வெற்றி பெறும்வரை ஆட்டத்தைப் பாதியில் விட்டு எவரும் விலகிப் போகக் கூடாது. விளையாட்டின் போது ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளக்கூடாது. சீட்டாட்டம் முடிவுக்கு வரும்வரை அந்த அறையின் கதவு மூடப்பட்டிருக்க வேண்டும் என்பதே நிபந்தனை. அந்த மூவருக்கும் பெயர்கள் இருந்த போதும் அவர்கள் 3,6,9 என அவர்களின் விருப்பமான எண்களால் அழைக்கப்படவே விரும்பினர். மூன்றாம் எண் உள்ள அந்த ஆள் இரு பத்தியோரு வயது நிரம்பியிருந்தான். அதிகம்

குடித்து அலையும் அவன் நான்குமுறை காதல் தோல்வியடைந் திருந்தான். ஆறாம் எண் உள்ளவன் வணிகன். அவன் மனைவி அழகானவள். அவளைக் காதலித்து திருமணம் செய்துகொண் டான். அவளது அழகு நெருப்பைப் போல எதையும் பற்றிக் கொண்டுவிடும் என்று சந்தேகம் கொண்டவனாயிருந்தான். ஒன்பதாம் எண் உள்ளவன் நாற்பது வயதான ஒரு உயர் அதிகாரி. அவன் மற்றவர்களைத் தோற்கடிப்பதில் வரும் சந்தோஷத்திற்காகவே சீட்டில் ஆர்வம் கொண்டிருந்தான். இவர்கள் மூவரும் ஒன்பதாம் எண் உள்ளவனின் ரகசிய தோழியான வினி என்பவள் வீட்டினை சீட்டு விளையாடத் தேர்வு செய்தார்கள். சீட்டாட்டத்தில் அவர்கள் மாறிமாறி ஜெயிப்பதும் தோற்பதுமாக இருந்தார்கள். ஒரு ஆள் தொடர்ந்து இரண்டுமுறை வெற்றி பெற முடியாதபடி விளையாட்டு நீண்டுகொண்டேயிருந்தது. இந்த விளையாட்டு அவர்களுக்குள் ஏற்படுத்திய மாற்றம் பற்றிய சில யூகங்களே நிஜத்தை விட முக்கியமானது. அவர்கள் இப்படி எல்லாம் நினைத்திருக்கக் கூடும் என்பதே இதன் புதிர் தன்மை.

யூகம் 1: சீட்டில் ஆறாம் எண் கொண்டவன் தோற்றுப் போய் விட்டால் அதற்கு ஈடாக அவன் மனைவியைப் பறித்துக் கொண்டு அவளுடன் சல்லாபம் செய்யலாம் என்பதைப் பற்றிக் கற்பனை செய்துகொண்டான். அது சீட்டு விளையாட் டினை விட சுவாரஸ்யமாக இருப்பதாக நினைத்தான் 3ம் எண் உள்ளவன்.

யூகம் 2: 3ம் எண் உள்ளவன் இன்று தோற்றுப்போய் விட்டால் இங்கேயே தற்கொலை செய்து கொண்டுவிடுவான். அவனது சாவின் பிறகு அவனது பழைய காதலிகளைச் சந்தித்து அவனது கடைசி நிமிடம் பற்றிச் சொல்லி, அவர்களோடு நெருங்கிப் பழக அதிக சாத்தியமிருக்கிறது என்பதை நினைத்து மகிழ்ந்தான் 6ம் எண் மனிதன்.

யூகம் 3: ஒன்பதாம் எண் உள்ளவன் தன் எதிரில் ஆடும் நபர்கள் திடீரென பெண்களாக மாறிவிட்டால் அவர்களுடன் எப்படி உறவு கொள்ளலாம் என்று கற்பனை செய்தான்.

யூகம் 4: தனது தோல்விக்குக் காரணமான ஒன்பதாம் எண் உள்ளவனைக் கொல்வதற்கு என்ன ஆயுதங்களைத் தேர்வு செய்வது, எப்படிக் கொல்வது என்று நினைத்தபடியே மௌன மாக விளையாடினான் ஆறாம் எண்.

யூகம் 5: இந்த சீட்டு விளையாட்டு ஒரு சதித்திட்டம். இதைத் தீட்டியவள் 9ம் எண்ணின் கள்ளக் காதலி. மூவரையும் ஒழிப்பதற்காக அவள் இதை ஏற்பாடு செய்திருக்கிறாள். இந்த சதி அவள் நினைத்ததுபோல நடக்கக் கூடாது. ஆகவே

ஆட்ட முடிவில் அவளைக் கொன்றுவிட வேண்டும் என்று நினைத்தான் 3 எண் உள்ளவன்.

யூகம் 6: கையில் உள்ள சீட்டுகள் யாவும் உயிருள்ள பறவைகள் போல பறந்துவிட துடிக்கின்றன. அதைக் கட்டுப் படுத்தி வைப்பது சிரமமானது என்று திகைத்தபடியே சீட்டை இறுக்கமாகப் பற்றிக்கொண்டான் 6ம் எண் உள்ளவன்.

யூகம் 7: இரவும் பகலும் மாறிக் கொண்டேயிருக்கிறது/ கடிகாரம் இல்லாமல் சீட்டின் உதவியாலே காலத்தை அளக்க முடிகிறது. இதுவரை எவ்வளவு சீட்டுகள் இறங்கியிருக்கின்றன, எவ்வளவு ஆட்டம் முடிந்திருக்கிறது என்பதை வைத்து நாட்களைக் கணக்கிடுவது ஒரு விசித்திரம் என்றான் 3ம் எண் உள்ளவன்.

யூகம் 8: ஒரு சீட்டினை ஒருவன்கையில் இருந்து கீழே போடுவதற்கும் மற்றவன் அதை எடுப்பதற்கும் இடையில் எண்ணிக்கையற்ற உலக நிகழ்வுகள் நடக்கின்றன. பலர் பிறக்கிறார்கள். பலர் சாகிறார்கள். பலர் புணர்கிறார்கள். பலர் முத்தமிட்டுக்கொள்கிறார்கள். பல கொலைகள் நடக் கின்றன. பலர் காதலிக்கத் துவங்குகிறார்கள். பலர் துரோகம் செய்கிறார்கள். பலர் செய்வதற்கு எதுவும் இல்லாமல் சக மனிதனைத் துன்புறுத்துகிறார்கள். இதற்கு இடையில்தான் சீட்டாட்டம் நடக்கிறது என்றான் 9ம் எண் உள்ளவன்.

யூகம் 9: ஒரு மலர் உதிர்வதை அல்லது பூப்பதைப் போல ஒரு விந்தையே ஒரு சீட்டை எடுப்பது. சீட்டு விளையாட்டு ஒரு விசித்திர தியானம். அங்கே நமது எண்ணங்கள் ஒடுங்கிவிடு கின்றன. நாம் கரைந்து போய்விடுகிறோம். கண்களும் கைகளும் மட்டுமே செயல்படுகின்றன என்றான் 6ம் எண் உள்ளவன்.

யூகம் 10: சீட்டு விளையாட்டு என்பது நமது வெறுப்பு, ஆசை மற்றும் கோபத்தை அளவிட உதவும் ஒரு கருவி. சீட்டு ஆடுகின்றவர்கள் தன்னைப் பரிசோதனை செய்து கொள்கிறார் கள். சீட்டு விளையாட்டில் தோல்வியை இயல்பாக ஒரு வராலும் எடுத்துக்கொள்ள முடியாது. புத்தன் சீட்டு ஆடினா லும் தோற்பதைக் கண்டு கோபமடைந்தே தீருவான் என்றான் 3ம் எண் ஆள்

யூகம் 11: சீட்டு விளையாட்டில் மனம் எப்போதுமே இல்லாத விசயங்களைக் கற்பனை செய்கிறது. நடக்காத சாத்தியங்களை நிறைவேற்றிப் பார்க்கிறது. சீட்டு ஆடுபவர் களுக்கு உலகம் ஒரு இலந்தைப்பழம் அளவு சுருங்கிப் போய்விடுகிறது என்றான் 9ம் எண் ஆள்.

யூகம் 12: ஒருவர் கையில் உள்ள சீட்டும் மற்றவர் கையில்

உள்ள சீட்டும் விநோதமான உறவுகொண்டிருக்கின்றன. அவை மனிதர்களின் வழியே தன் ஒன்று சேருதலையும் பிரிவையும் ஏற்படுத்திக்கொள்கின்றன என்றான் 6ம் எண் மனிதன்.

யூகம் 13: எல்லா சீட்டுகளும் ஒன்று போல காணப்பட்டாலும் அதன் மதிப்பும் சேர்க்கையும் ஒன்று போல இருப்பதில்லை ஆகவே உலகைக்கையில் எடுத்து விளையாடுவதன் சிறிய வடிவமே சீட்டாட்டம். ஆகவே சீட்டாடி வெல்லத் தெரிந்தவன் உலகை எளிதாகப் புரிந்துகொண்டுவிடுவான் என்றான் 9ம் எண் மனிதன்.

யூகம் 14: ஒவ்வொரு முறை சீட்டில் தோற்கும்போது காமம் பொங்குகிறது. வென்றவனும் காமத்தைப் பற்றியே நினைக்கிறான். ஆகவே சீட்டு விளையாட்டின் வெற்றியும் தோல்வியும காமத்தூண்டல்களே. எல்லா விளையாட்டின் வெற்றியும் புணர்ச்சியால் மட்டுமே சாந்தியடைகிறது. மனிதன் தனது ஒரே புகலிடமாகப் பாலின்பத்தையே கொண்டிருக்கிறான் என்றான் 3ம் எண் உள்ளவன்.

யூகம் 14: சீட்டு விளையாட்டின்போது உருவாகும் மௌனம் தூக்கின் முன்னால் நிற்கும் மௌனம் போல அடர்த்தியானது. அது தொடர்ந்து மனதை வன்முறையை நோக்கியே செலுத்திக் கொண்டிருக்கிறது. சீட்டு மனிதன் கண்டுபிடித்த ரகசியமான ஆயுதம் என்று நினைத்தான் 6ம் எண் கொண்டவன்.

யூகம் 15: ஏதாவது ஒரு நிமிடம் மூவரும் ஒரே சீட்டைத் தேர்வு செய்வதும் மூவரும் ஒரே சீட்டைக் கீழே போடுவதும் நடக்கிறது. அப்போது ஒரே ஆள்தான் 3 தோற்றத்தில் விளையாடுவது போல உள்ளது என்றான் 9ம் ஆள்.

யூகம் 16: சீட்டாட்டம் உச்சமடையும்போது நிர்வாணமாக இருப்பதுபோலவே தோன்றுகிறது. அறைக்கு வெளியே உள்ள உலகின் சிறு சப்தம்கூட பேரோசையாகி விடுகிறது. ஆகவே சீட்டு விளையாட்டு, உலகின் நுண்மையை மனம் அறியும் தருணம் என்றான் 6ம் எண் மனிதன்.

யூகம் 17: சீட்டில் வைக்கப் பணம் இல்லாதபோது வீட்டின் அருகாமையில் உள்ள மரங்கள், தெருநாய்கள், காட்டில் உள்ள மிருகங்கள், அருவி, ஆறு, மலை, ஆகாசம், நட்சத்திரம், சூரியன், சந்திரன் என எதையும் பந்தயப்பொருளாக வைத்து சூதாடலாம். அது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றே. அதை எவரும் ஆட்சேபணை செய்யமுடியாது. சீட்டு விளையாட்டு கணிதத்தின் உன்னத நிலை. அதை விளையாடி அனுபவிக்கிறோம் என்றான் 9ம் எண் உள்ளவன்.

யூகம் 18: கள்ளத்தனத்தைக் கற்றுக்கொள்வதற்கு எளிமையான

பயிற்சியே சூதாட்டம். சீட்டு ஆடும் மேஜையில் வைக்கப்படும் உணவு, பானகம் இரண்டும் ருசியிழந்து விடுகின்றன. சூது தேனையும் கசக்க செய்யக்கூடியது என்றான் 3ம் எண்காரன்.

யூகம் 19: விதியை நேர்கொள்ள விரும்பினால் சூதாடிப் பார்க்கலாம். எல்லா சீட்டு விளையாட்டிலும் கண்ணுக்குத் தெரியாமல் விதியும் சேர்ந்து உட்கார்ந்தே ஆடுகிறது. அதன் பரிகாசக்குரலைப் பல நேரங்களில் நாம் கேட்கமுடியும் என்றான் 6ம் எண்.

யூகம் 20: தோற்றுத் திரும்புகின்றவன் அடையும் வலி சொல்லற்றது. அதைப் புரிந்துகொள்ள, சூதாடினால் மட்டுமே முடியும். ஆகவே சூதாட்டம் என்பது வலியை விரும்பி ஏற்றுக் கொள்வது என்றான் 9ம் எண்.

இப்படி அவர்கள் நினைத்த யூகங்களைத் தாண்டி அவர்கள் விளையாடிக் கொண்டேயிருந்தார்கள். 8365 நாட்கள் தொடர்ச்சியாக அவர்கள் விளையாடியபோதும் சீட்டாட்டம் முடிவடையவேயில்லை. ஒரு நாள் சமையல்காரன் அந்த அறைக்கதவைத் திறந்து பார்த்தபோது உள்ளே 3 காலி நாற்காலிகள் மட்டுமே இருந்தன, அதன் முன்னே உள்ள மேஜையில் சீட்டுகள் சிதறியிருந்தன. அவர்களைக் காணவில்லை. எங்கே போனார்கள், யார் ஜெயித்தார்கள், எப்போது வெளியேறிப் போனார்கள் என்பது இன்றுவரை மர்மமாக இருக்கிறது. சீட்டுவிளையாட்டினைப் போலவே அவர்கள் என்ன ஆனார்கள் என்பதற்கும் முடிவில்லாத சாத்தியங்கள் இருக்கின்றன. அதனால் அவர்களை யாரும் தேடவேயில்லை.

# ஜன்னலைத் தட்டாதே அஷ்ரப்

மழை பெய்யும் இரவுகளில் மின்சாரம் போய்விடுவது இயல்பாகியிருந்தது. படுக்கையில் இருந்து எழுந்து மெழுகு வர்த்தியைக் கொளுத்தி வைக்க வேண்டுமா என்று யோசித்துக் கொண்டிருந்தேன். இனி எதற்காக மெழுகுவர்த்தி. மணி பனிரெண்டைக் கடந்திருக்கும். உறங்கப் போகிறவனுக்கு எதற்கு வெளிச்சம். மின்விசிறி நின்றுபோன புழுக்கம் அறையை மூச்சுமுட்டச் செய்துகொண்டிருந்தது. கதவுகளையோ ஜன்ன லையோ திறந்து வைத்தால் சாரல் அடிக்கக்கூடும். படுக்கையில் புரண்டுகொண்டேயிருந்தேன். சலிப்பாக வந்தது.

ஒருநாளைக் கடந்துசெல்வது என்பது இந்த மாநகரில் மிகவும் பிரயத்தனப்பட்டு மேற்கொள்ளும் செயலாகிவிட்டது. எதுவும் இயல்பாகயில்லை. யாரும் சந்தோஷமாகயில்லை. நேற்று ஒரு நடுத்தர வயதுப் பெண் நகரப்பேருந்தைப் பிடிக்க மூச்சுமுட்ட ஓடிவந்து பேருந்தின் படியில் கால்வைக்கும்போது தவறிக் கீழே விழுந்துவிட்டாள். பேருந்து அதன்போக்கில் போய்க்கொண்டேயிருந்தது. அந்தப் பெண்ணை யாரோ தூக்கிவிட்டார்கள். அவளது கையில் காலில் அடிவிழுந்து சிராய்ப்பாகியிருந்தது. அவள் தன்னை அத்தனை பேர் வேடிக்கை பார்க்கிறார்கள் என்பதை மறந்து கேவிக் கேவி அழுதாள். புழுதிபடிந்துபோன மரத்திலிருந்த காகம் வெறித்துப் பார்த்தபடியே இருந்தது. மக்கள் அடுத்த பேருந்தின் வருகையை நோக்கி ஓடினார்கள்.

அந்தப் பெண் அழுவதைக் காணும்போது எனக்கு நடுக்கமாக யிருந்தது. எதற்காக இந்த நகரில் குடியிருக்கிறேன். ஏன் மக்கள் இப்படி எவரது துயரத்தையும் கண்டுகொள்ளாமல் ஓடுகிறார்கள். இவ்வளவு ஏன், சில நிமிடங்களுக்குப் பிறகு அந்தப் பெண்கூட சேலையால் முகத்தைத் துடைத்தபடியே

அடுத்த நகரப்பேருந்தை நோக்கி ஓடுகிறாளே அது எப்படி சாத்தியமாகிறது.

ஒரு நாளில் இப்படி நூறு நூறு வேதனையான காட்சிகள். அவலங்கள், அவமானங்கள் நடந்தேறிக்கொண்டிருக்கின்றன. ஆனால் நகரம் அதைக் கவனம் கொள்வதேயில்லை. அதன் கவனம் எல்லாம் வணிகச்சந்தையிலே இருக்கிறது. மின்சார ரயிலில் ஆட்கள் நிரம்பிவழிகிறார்கள். ஒரு ஷேர் ஆட்டோவி னுள் முப்பது பேர் பிதுங்கப் பிதுங்க ஏறிப்போகிறார்கள். அடுத்தவர் மீது சாய்ந்துகொள்வதும் ஒருவரையொருவர் இடித்து தள்ளுவதும் இயல்பாகிவிட்டிருக்கிறது. நகரின் நிலை தாங்கமுடியாத மூச்சுத்திணறல்தான். ஆனால் அது உணரப் படவேயில்லை.

சில நாட்களுக்கு முன்பு இட்லி சாப்பிடுவதற்காக ஒரு இரவு உணவகத்திற்குச் சென்றிருந்தேன். அதன் உள்ளே நுழைய இடமில்லை. அரைமணிநேரம் காத்திருக்க வேண்டும் என்று ஒரு ஆள் டோக்கன் கொண்டுவந்து கொடுத்தான். ஓர் இட்லியின் விலை இருபது ரூபாய். உலகிலே மனிதர்கள் இட்லி சாப்பிடுவதற்காக மணிக்கணக்கில் காத்துக்கிடக் கிறார்கள் என்றால் அது இந்த ஒரேயொரு நகரத்தில் மட்டும் தானிருக்கக்கூடும். எனது ஒரு நாள் சம்பளம் எட்டு இட்லிகள் தான். பயத்தோடு வெளியேறிப் போனேன். நகரம் ஒரு புதைகுழிபோல யாவரையும் உள்ளே இழுத்துக்கொண்டே யிருக்கிறது. ஆனால் இதிலிருந்து மீண்டுவர முடியாது. நகரம் ஒரு பெரும் சூதாட்டப்பலகை. அதன் முன்னே உட்கார்ந்து ஆட ஆரம்பித்தவன் வெளியே எழுந்து போகவே முடியாது.

கண்ணை மூடிக்கொண்டு படுத்தால் பேருந்துகள் தலைக்குள் ளாக ஓடிக்கொண்டேயிருக்கின்றன. ஆட்டோக்களின் இரைச்சல். மனிதர்களின் கோபக்குரல்கள் மண்டைக்குள் கொப்பளிக்கின்றன. ஏன் இந்த நகரில் குடியிருக்கிறேன்.

சே, என்ன யோசனைகள் இது. மனது எப்போதுமே பயத்திலும் அவஸ்தையிலும் நிம்மதியின்மையைப் பற்றியே யோசித்துக் கொண்டிருக்கிறது. அதைப்பற்றி நிறைய யோசித்தாகிவிட்டது. மறுபடியும் அதிலேயே ஆழ்ந்து போனால் மனச்சோர்வு வந்துவிடும். மனச்சோர்வு பீடித்துவிட்டால் பிறகு ஓர் அடி வெளியே எடுத்து வைக்க முடியாது. மனதை எப்படியாது திருப்ப வேண்டும். நினைவுகளை அறுத்துவிட்டு எப்படியாவது உறங்கிவிட வேண்டும். காலையில் எனக்கு அலுவலகமிருக்கிறது. எழுந்து ஓடியாக வேண்டும். எனக்கு நானே 'உறங்கிவிடு. உறங்கிவிடு' என்று சொல்லிக்கொண்டேயிருந்தேன்.

மழை சற்று தணிந்திருக்கிறது போலும். ஆனாலும் முகப்பு தகரத்தில் விழும் சாரலின் சப்தம் கேட்டுக்கொண்டுதானிருக்கிறது. நான் ஒற்றை அறை ஒன்றில் குடியிருக்கிறேன். கிணற்றடியை ஒட்டிய தாழ்வான வீடு அது. ஒரே வீடு மூன்றாகப் பிரிக்கப்பட்டு சவப்பெட்டியைப் போன்று ஒடுக்கமான அறையாக மாற்றப்பட்டுள்ளது. கிணற்றடியின் அருகில் ஒரு தென்னைமரமும் துணி துவைப்பதற்கான சிறிய சிமெண்ட் மேடையொன்றும் இருக்கின்றது. இதுபோன்ற பழமை வீடுகளை இப்போது விலைக்கு வாங்க அலைந்துகொண்டிருக்கிறார்கள். அதைக் காரணம் காட்டியே வீட்டுக்காரன் எங்களிடம் அதிக வாடகை வசூலித்துவிடுகிறான்.

குனிந்துதான் வீட்டிற்குள்ளே வரவேண்டும் என்பதுபோன்ற தாழ்வான வாசல்கதவு. இரண்டு மின்விளக்குகளும் ஒரு மின்விசிறியும் மட்டுமே அனுமதி. அதற்குத் தனியாகக் கட்டணம் வாங்கிக்கொள்கிறார் உரிமையாளர் நவநீதம். மாநகருக்குள் இப்படியான பல எலிப்பொந்துகள் இருக்கின்றன.

இதுபோன்ற பொந்துகளில் குடியிருப்பதன் ஒரே வசதி, யாரும் நம்மைத் தேடி வரமாட்டார்கள் என்பதே. அப்படியும் என் நண்பர்கள் சிலருக்கு என் வீட்டைத் தெரியும். குடிப்பதற்கான இடமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். இந்த நகருக்கு வந்து பதினாலு வருடங்கள் ஓடிவிட்டன. இன்னமும் நான் திருமணம் செய்துகொள்ளவில்லை. போதுமான வருமானமில்லை. சாலைகளில் தென்படும் அழகான பெண்களைக் காண்கையில் குற்றவுணர்ச்சியே மேலோங்குகிறது. நகரப்பேருந்தைப் பயன்படுத்தியே அலுவலகம் போய்வருகிறேன். என்னால் ஒரு வாகனம் வாங்கக்கூட பணம் சேமிக்க முடியவில்லை. மாநகரில் காலூன்ற முடியாமல் தடுமாறிக் கொண்டுதானிருக்கிறேன்.

எனது இயலாமையின் அடையாளம் போலவே இந்த அறையிருக்கிறது. இதன் சுவர்கள் அழுக்கேறியவை. அலமாரியின் மரக்கதவுகளை எலி கரண்டு துளைவிழுந்திருக்கிறது. ஒரு மடக்கு கட்டில். ஸ்டவ். நாலைந்து பாத்திரங்கள். ஒரு மர ஸ்டூல். பழைய ரேடியோ. இவைதான் என் அறையில் இருப்பவை. யாரோ ஒரு நண்பன் கொடுத்த ஹேமாமாலினி புகைப்படமுள்ள ஒரு பழைய காலண்டர் தொங்கிக் கொண்டிருக்கிறது.

எனக்குள்ள ஒரே துணை ஹேமாமாலினி மட்டுமே. அவளோடு நிறைய நேரம் நான் பேசிக்கொண்டிருப்பதும் உண்டு. அவள் பதில் பேசுவதில்லை. அதனால் என்ன, ஒரு வார்த்தைகூட

பேசாத ஒரு பெண்ணைக் காதலிப்பது எல்லோருக்கும் கிடைக்கக்கூடியதாயென்ன. அந்தக் காலண்டர் இருப்பது வீட்டில் ஒரு பெண் இருப்பது போன்ற பாவனையை உருவாக்கி விடுகிறது. அது போதும்தானே.

மற்றபடி பருத்த கண்கள் உள்ள மாநிறமான ஒரு மரப்பல்லி. இரண்டு சிலந்திகள். ஒரு எலி. இரண்டு காகங்கள் மற்றும் எப்போதாவது வந்து போகும் ஓர் அணில். ஒரு டஜன் மூட்டைப்பூச்சிகள் கொண்ட குடும்பம். இவற்றோடு நானும் இந்த அறையில் வசிக்கிறேன். நாள்பட எனக்கு இந்த அறையின் அசௌகரியங்கள் மனதில் இருந்து மறைந்து போய்விட்டன. மின்சாரம் இல்லாத நாட்களில்கூட உறங்கப் பழகிவிட்டிருக் கிறேன்.

பழக்கம் என்பது ஒரு மோசமான விசயம். எனது மிகப்பெரிய பலவீனம் என்னிடமிருக்கும் சில பழக்கங்கள்தான். அதுதான் என்னை வளரவிடாமல் தடுத்து வைத்திருக்கிறது. சில வேளை களில் யோசிப்பதுண்டு. பழக்கம் என்பது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளும் ஒரு தந்திரம். நமது பலவீனங்களை நியாயப்படுத்தும் ஒரு மோசடிவேலை. அதுதான் நிஜம். அது மட்டுமே நிஜம். இவை எல்லாம் அறிவிற்கு நன்றாகவே தெரிகிறது. ஆனால் என்னை மாற்றிக்கொள்வது கடினம் என்று நானாக முடிவு செய்திருக்கிறேன். அதுதான் இந்த அறையில் நான் இருப்பதற்கான காரணம்.

கண்ணை மூடி உறங்க முயற்சித்தாலும் யோசனைகள் அடங்கு வதேயில்லை. மனது எரிந்துகொண்டேயிருக்கிறது. சிம்னி விளக்கில் இருந்து வரும் புகையைப் போல மனதின் கருமைகள் புகையாகி அலைகிறதா.

பாதி மின்சாரம் வருவதும் போவதுமாக இருந்தது. விளக்கு திடீரென ஒளிர்வதும் படபடத்து இருள்வதுமாக இருப்பதை வேடிக்கை பார்த்தபடியே இருந்தேன். யாரோ ஜன்னலைத் தட்டும் ஓசை கேட்டது.

வீட்டின் கதவுகளைத் தட்டாமல் ஜன்னலைத் தட்டுகின்ற ஒரே ஆள் அஷ்ரப்தான். அவன் ஏன் இந்த இரவிலே எப் போதும் வருகிறான். அதுவும் ஜன்னல்களையே தட்டுகிறான். கதவைத் திறப்பதா வேண்டாமா என்று யோசித்தபடியே படுத்துக் கிடந்தேன். மறுபடியும் ஜன்னல் கதவுகள் தட்டப் பட்டது.

அத்துடன் “மணி அண்ணே, நான் அஷ்ரப்” என்ற மெதுவான குரல் கேட்டது.

எனக்கு அஷ்ரப்பின் மீது கடுமையான கோபமிருக்கிறது. இந்தத் திருட்டுப்பயல் எதற்காகத் தேடி வந்திருக்கிறான் என்ற நினைப்போடு அறையைத் திறக்காமலே உறங்குவது போலிருந்தேன்.

வெளியில் இருந்து அஷ்ரப்பின் குரல் மறுபடியும் கேட்டது.

"உங்களைப் பாத்து பத்து நிமிடம் பேசிட்டுப் போயிருவேன். நிச்சயம் ராத்தங்க மாட்டேன்."

"எதுவா இருந்தாலும் காலையில் வா அஷ்ரப். இப்போ உன்னைப் பாக்க நான் விரும்பலே" என்றேன்.

"அண்ணே, நான் ஒரு தெரு நாய். அதுக்குக் காலைத் தூக்கி யார்மேல மூத்திரம் போறோம்னு தெரியாது. மாப்பு கொடுங்க அண்ணே. எனக்கு உங்ககூடப் பேசணும்னு ஆசையா இருக்கு. நானும் உங்க தம்பிகளில் ஒருத்தன் இல்லையா."

அஷ்ரப் இப்படித்தான் பேசுவான். அவனை வெறுப்பது எளிதானதில்லை. ஆனால் எவ்வளவு அமைதியான மனிதரை யும் கோபம் கொண்டு விரட்டியடிக்க வைத்துவிடும் பேச்சு சாதுர்யம் அஷ்ரப்பிடம் இருந்தது.

கதவைத் திறக்காவிட்டால் வாசலில் நின்றபடியே பேசிக்கொண் டிருப்பான் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அந்த அனு பவத்தை முன்னதாகவே சிலமுறை அடைந்திருக்கிறேன்.

மின்சாரம் போய்விட்ட இரவில் இந்தத் தொல்லையை வேறு நான் எப்படி சகித்துக்கொள்வது. நட்பைப் போல நெருங்கி வந்து இம்சிக்கும் உறவு வேறில்லை என்பது இதுதானா. யோசனையாகவே இருந்தது.

நானும் இந்த மாநகருக்கு வந்த புதிதில் அஷ்ரப்பை போல யார் யாரோ அறையின் முன்பாகக் கதவைத் தட்டி நின்றிருக் கிறேன். திறக்கப்படாத கதவின் முன்நிற்கும் அவமானத்தை என்னால் நன்றாகவே உணர்ந்துகொள்ள முடியும். உண்மையில் நமக்கு ஏற்பட்ட அவமதிப்புகள்தான் பிறரை நாம் நேசிக்க காரணமாக இருக்கின்றதா?

நான் கதவைத் திறந்தேன்.

இருளுக்குள் தீக்குச்சி உரசப்படும் ஓசை கேட்டது. எரியும் தீக்குச்சியை ஒரு கையால் உயர்த்திப் பிடித்தபடியே கள்ளச் சிரிப்போடு அஷ்ரப் நின்றிருந்தான்.

மழையோடு நடந்து வந்திருக்கக்கூடும். இந்த நேரம் இரவுப் பேருந்துகள்கூட இருந்திருக்காது. நனைந்த கோழிக்குஞ்சைப்

போல ஈரம் சொட்ட நின்றிருந்தான். வெளிறிப்போன முகம். கோரையான தாடி. உடலுக்குப் பொருத்தமில்லாத ஜீன்ஸ் பேண்ட். காலர் வெளிறிப்போன கோடு போட்ட டீஷர்ட். காலில் ஊதாநிற பாத்ரூம் ஸ்லிப்பர். உடலின் எடை மொத்தமே முப்பது கிலோ இருக்கக்கூடும். அவன் கையிலிருந்த தீக்குச்சி எரிந்து அணைந்தது. அவன் முதுகில் சாரல் தெறித்துக்கொண் டிருந்தது போலும். தானாக சிலுப்பிக்கொண்டான்.

“அண்ணே உறங்கியிருக்க மாட்டீங்கன்னு எனக்கு நல்லாத் தெரியும். உங்களுக்குப் பிடிச்ச கடலைமிட்டாய் கொண்டுவந்தி ருக்கேன். என்னாலே முடிஞ்சது இவ்வளவுதான்” என்று காகிதம் ஒன்றில் சுற்றப்பட்டிருந்த ஒரு மிட்டாயை எடுத்து நீட்டினான்.

இது எல்லாம் நடிப்பு. தனது நாடகத்தின் முதல் வசனங்களைப் பேசி ஒத்திகை பார்க்கத் துவங்குகிறான். நான் ஏமாறக் கூடாது என்று உணர்ந்தபடியே “இப்போ உனக்கு என்ன வேணும் அஷ்ரப்?” என்று கேட்டேன்.

அஷ்ரப் சுவரை ஒட்டி உட்கார்ந்தபடியே சொன்னான்:

“ஒரு மெழுகுவர்த்தி... இருட்டிற்குள் உட்கார்ந்துகொண்டு நாம் பேசினால் கூடவே சைத்தானும் சேர்ந்துகொண்டுவிடும். கேடுகெட்ட சைத்தானின் சகவாசம் என்னோடு போகட்டும். அது உங்கள் வீட்டில் காலெடுத்து வைக்க நான் அனுமதிக்க மாட்டேன்.”

நான் பாதி எரிந்து போயிருந்த மெழுகுவர்த்தியைத் தேடி எடுத்துக் கொளுத்தி வைத்தேன். அந்த வெளிச்சத்தில் அஷ்ரப் பின் தோற்றம் விசித்திரமானதாகத் தெரிந்தது. அவன் ஒரு சிறுவனைப்போல மெழுகுவர்த்தியின் முன்பு தனது கைகளைக் காட்டி சுவரில் நிழல் உருவங்களை வரச் செய்துகொண்டி ருந்தான்.

நான் அஷ்ரப்போடு இயல்பாகப் பேசக்கூடாது என்பதில் கவனமாக இருந்தேன்.

அஷ்ரப் நிழல் விளையாட்டில் இருந்த ஆர்வம் கலைந்துபோய் தன் இரண்டு கைகளையும் தலைக்கு மேலாகத் தூக்கி “அண்ணே, என்னை மன்னிச்சிரணும். நான் செய்தது ஒரு மகாபாதகம். அதுக்கு ஒரு நாள் நிச்சயம் பிராயச்சித்தம் செய்வேன். செய்த தவறுக்காக என்னை செருப்பாலே அடிச்சா லும் வாங்கிக்கிடுவேன்” என்று தலைகுனிந்தான்.

அஷ்ரப் இரண்டு மாதங்களுக்கு முன்பு ஒரு முறை என்

அறைக்கு வந்து தங்கிவிட்டு விடிகாலையில் எனது கைக்கடி காரத்தை திருடிக்கொண்டு சென்றுவிட்டான். அதைத்தான் இவ்வளவு நாகரீகமாக வெளிப்படுத்துகிறான்.

நான் அந்தக் கோபத்தை அவன் மீது காட்டியே ஆக வேண்டும் என்பதுபோல நேரடியாகக் கேட்டேன்.

"அஷ்ரப், இப்போது எதைத் திருடிப்போக வந்திருக்கிறாய்?"

அஷ்ரப் சிரித்தான்.

"அண்ணே, நான் திருடின எதையும் யார்கிட்டேயும் மறைச்சது கிடையாது. உங்க மணிபர்ஸில் இருந்து ஒரு முறை நூறு ரூபாய் திருடியிருக்கிறேன். அப்புறம் உங்களோட ஒரு ஜோடி செருப்பு. பின்னே ஒருமுறை உங்களோட டார்ச்லைட். போனமுறை உங்க கடிகாரம். இதை எல்லாம் நான் மறக்கவே யில்லை. அடுத்த நாளை எப்படி வாழுறதுனு தெரியாத மனுசன். வேற என்னதான் செய்றது அண்ணே!"

"வேலை செய்யாமல் வாழ்வதற்கு உனக்கு என்ன கேடு. கைகால் நன்றாகத்தானே இருக்கிறது. உழைத்துப் பிழைக்க வேண்டியதுதானே" என்றேன்.

"கைகால் நன்றாகத்தான் இருக்கிறது. ஆனால் மனசு சரியாக இல்லை. அது தொந்தரவு செய்கிறது. நிறைய ஆசைப்படுகிறது. கண்டபடி சுற்றச்சொல்கிறது. நல்லதை விடவும் கெட்டதன் பக்கமே என்னை இழுத்துப் போகிறது. நான் என்ன செய்யட் டும். இதற்காக நான் யாரையும் குறை சொல்ல மாட்டேன். நான் தப்பானவன். அதற்கு மேல் ஒன்றுமேயில்லை" என்றான் அஷ்ரப்.

இதுபோன்ற தருணங்களில் அஷ்ரப் மனதில் உள்ளதை அப்படியே பேசிவிடுகிறான் என்பதே நிஜம். அதனால் மட்டும் அவன் செய்த தவறுகளை எப்படி மன்னிக்க முடியும்.

அஷ்ரப் என் முகத்தைப் பார்த்தபடியே சொன்னான்:

"உங்கள் வீட்டின் கதவுகளைத் தட்டக்கூட யோக்கியதை இல்லாதவன் நான். அதனால்தான் எப்போதுமே ஜன்னலைத் தட்டுகிறேன். அண்ணா, எல்லா மனிதன் இதயத்திலும் சின்ன ஜன்னல் ஒன்று இருக்கிறது. எனக்காக அந்த சிறிய கதவு திறந்தால் அதுவே போதும்."

நான் அஷ்ரப்பை பார்த்துக்கொண்டேயிருந்தேன். அவனுக்கு வயது முப்பதைக் கடந்திருக்கும். கடந்த ஏழு வருடங்களாக இந்த மாநகரில் சுற்றியலைகிறான். குடிப்பதும், அதற்கான

பணத்தை நைச்சியம் பேசி ஏமாற்றி வாங்குவதும், பணம் கிடைக்காதபோது நண்பர்கள், உறவினர்கள், அறிந்தவர் என்று எவர் வீட்டிலும் திருடுவதையும், அஷ்ரப் அறிந்தே செய்கிறான். அடுத்தவரை துன்புறுத்துவதில் அவன் மகிழ் கிறான் என்பதுதான் நிஜம்.

அஷ்ரப் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு இழுத்தான். அவன் ஏன் கண்களை மூடிக்கொண்டு சிகரெட் பிடிக்கிறான். இரண்டு முறை புகையை உள்ளே இழுத்துவிட்டு என்னிடம் இறுக்கமான குரலில் கேட்டான்.

"அண்ணே நீ என்ன பெரிய புடுங்கியா. உன்னைப் பத்தி என்ன மசிரு நினைச்சிக்கிட்டு இருக்கே."

"தகராறு பண்ணுவதற்காகத்தான் வந்திருக்கிறாயா?" என்று கேட்டேன்.

"ஆமாம். இந்த ஊரில் எனக்குத் தெரிந்த அத்தனை பேரும் நிம்மதியாக இருக்கிறீர்கள். நான் ஒரு ஆள் நிம்மதியில்லாமல் அலைந்துகொண்டிருக்கிறேன். இதுக்கு நீங்கள் அத்தனை பேரும் காரணமில்லையா? எதுக்கு என்னை ஒதுக்கிவைக்கப் பாக்குறீர்கள்" என்று கேட்டான்.

நான் பதில் பேசாமல் இருந்தேன்.

"உங்களுக்காக நான் என்னை மாற்றிக்கொள்ள முடியாது. என்னைச் சகித்துக்கொள்ள முடியாத அளவிற்கு ஏன் நீங்கள் தரம் தாழ்ந்து போயிருக்கிறீர்கள்? அதை நான் தெரிந்துகொள்ள வேணும்" என்றான்.

என்ன உளறல் இது. எனக்கு உள்ளூர ஆத்திரமாக வந்தது.

"அண்ணே, என்னை எல்லோரும் சந்தேகப்படுகிறீர்கள். முதுகிற் குப் பின்னால் ஏளனம் பேசுகிறீர்கள். எனக்கு ஒரு திறமையும் கிடையாது. நான் அப்படி இருப்பதாகச் சொல்லிக்கொள்ளவும் இல்லை. ஒன்றும் செய்யாத ஒருவனை வைத்துக் காப்பாற்ற ஏன் ஆள்கூட முன்வருவதில்லை. இந்த உலகத்தில் உதவாத எத்தனையோ பொருள்கள் இருக்கத்தானே செய்கின்றன. அதை அனுமதிக்கும் உங்களுக்கு என்னோடு மட்டும் என்ன பிரச்சினை" என்றான் அஷ்ரப்.

"ஒன்றும் செய்யாதவன் எதற்கும் ஆசைப்படத் தகுதியில்லாத வன்தான். நீ அப்படியில்லையே" என்று கடுகடுத்த குரலில் சொன்னேன்.

"அது பொய். அப்படிச் சொல்லி என்னை ஏமாற்றிக்கொள்ள

முடியாது. ஒன்றும் செய்யாதவனுக்கும் பசிக்கிறது. தாகமெடுக்கிறது. உடல் திணவு கொள்கிறது. சாப்பாடு போடுங்கள், காசு கொடுங்கள் என்று மண்டிபோட்டு யாசகம் கேட்டு வாங்கினால் உங்களுக்குத் திருப்தி. அதை நானாக எடுத்துக் கொண்டால் அது திருட்டுத்தனமா?" என்று கேட்டான்.

"அஷ்ரப், நான் எதற்காக உன்னைப் பராமரிக்க வேண்டும்" என்று கேட்டேன்.

"ஒவ்வொரு மனிதனையும் அவன் குடும்பம் மட்டுமே பராமரிக்க வேண்டும் என்று யார் சொன்னது. யார் வேண்டுமானாலும் யாரையும் பராமரிக்கலாம். நீங்கள் எல்லாம் வீட்டுநாய்களுக்கு மட்டுமே சாப்பாடு போடுவீர்கள். காரணம், அது உங்களுக்கு வாலாட்டும். நான் தெருநாய். அதனால் என்னைத் துரத்துகிறீர்கள்" என்றான்.

"எதற்காக நீ இப்படி உன்னையும் வருத்திக்கொண்டு மற்றவர்களையும் வருத்துகிறாய்?" என்று கேட்டேன்.

அஷ்ரப் புகையை விட்டபடியே சொன்னான்.

"அண்ணா, குதிரையை பழக்குவது எளிது. ஈயை ஒருவரால் பழக்கமுடியாது. நான் ஒரு ஈ. அதுவும் கள் குடித்த ஈ. மலத்தில் உட்காரும் ஈ. அந்தக் கிறுகிறுப்பும் வெறியும் லேசில் விடாது. அவமானப்படுவதைப் பற்றி உங்களுக்குப் பயம். நான் அதை ஒரு விளையாட்டு போல நினைக்கிறேன். அண்ணா, பயமும் அவமானமும் போய்விட்டால் எதையும் அடைந்துவிடலாம். இவ்வளவுதான் வாழ்க்கை. நான் ஒண்ணும் அதிகம் ஆசைப்படவில்லை. இதுவரை ஒரு பைசா சேமித்து வைத்ததேயில்லை. அதனால்தான் தெருவில் கிடக்கிறேன். நான் சொல்வது சரிதானா?" என்று கேட்டான்.

பெரிய அறிவாளி போல பேசுகிறான். கேடுகெட்ட நாய் என்று உள்ளூர நினைத்தபடியே "இப்போது எதற்காக வந்திருக்கிறாய், அதை மட்டும் சொல்" என்று எரிச்சலோடு கேட்டேன்.

"அப்படி எல்லாம் ஒரு காரணமும் இல்லை. மழையில் நடந்துகொண்டு வந்தபோது உங்கள் நினைப்பு வந்தது. அதான் உங்கள் வீட்டிற்கு வந்துவிட்டேன். எனக்கு எதற்காகத் திடீரென உங்கள் நினைப்பு வரவேண்டும். ஏன் நீங்கள் என் நினைவில் இருக்கிறீர்கள்? அதை என்னால் புரிந்துகொள்ள முடியவேயில்லை அண்ணா" என்றான் அஷ்ரப்.

"நீ அதிகம் குடித்திருக்கிறாய். அதனால் என்ன பேசுகிறாய் என்றே தெரியவில்லை" என்றேன்.

"அதெல்லாம் பொய். குடிப்பதால் என் பேச்சு நிதானமாகிவிடுகிறது. குடிக்காத நேரங்களில் மிகவும் பதற்றமாக இருக்கிறேன், மணி அண்ணே. நமக்குப் பிடிக்காத விஷயங்களில் சிலவற்றை நாம் நினைத்தாலும் விலக்கவே முடியாது. நானும் அதில் ஒன்று. என்னை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றாலும் விலக்க முடியாது. என்னைச் சகித்துக்கொள்ள பழகிக்கொள்ளுங்கள். அதுதான் உங்களுக்கு நல்லது."

"இதைச்சொல்வதற்காகத்தானா இந்த இரவில் என்னைத் தேடி வந்திருக்கிறாய்" என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

"நான் உங்கள் கைகளை ஒரு முறை முத்தமிடலாமா" என்று கேட்டான்.

"ஒரு மயிரும் வேண்டாம்" என்று சப்தமிட்டேன்.

"ஆண்கள் கொடுக்கும் முத்தம் ஆண்களுக்குப் பிடிப்பதில்லை. உங்களுக்குத் தரவேண்டிய முத்தத்தை ஹேமாமாலினிக்குத் தந்துவிடுகிறேன். அவள் என்னிடம் கோபித்துக் கொள்ள மாட்டாள்" என்றான்.

எனக்கு அஷ்ரப்பை என்ன செய்வது என்றே தெரியவில்லை. அதை அஷ்ரப் உணர்ந்து கொண்டவனைப் போல "நீங்கள் உறங்குங்கள். நான் கிளம்புகிறேன்" என்று வெளியேறி கதவைச் சாத்திவிட்டு கிணற்றடி பக்கம் சென்றான்.

வெளியே வாளி வாளியாக தண்ணீர் இறைத்து தலையில் ஊற்றிக் கொண்டு அஷ்ரப் உற்சாகமாக குளிக்கும் சப்தம் கேட்டுக் கொண்டிருந்தது. அவன் போகமாட்டான், விடியும்வரை வெளியே தானிருப்பான்.

○

அஷ்ரப் ஏன் இப்படி வாழ்கிறான். என்னால் அவனை விலக்கவே முடியாது என்பது நிஜம்தானா.

ஆறு ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு ஞாயிற்றுக்கிழமை காலை முதன்முறையாக அஷ்ரப் என் அறைக்கு வந்து நின்றிருந்தான். இதே சிரிப்பு. இதே பளிச்சிடும் பேச்சு. வார்த்தைக்கு ஒருமுறை அண்ணே என்று உறவு சொல்லி அழைக்கும் நெருக்கம். அவன் குரலில் ஒரு மயக்கமிருந்தது.

நான் உங்க தம்பி ரவியோட பிரண்ட். பேரு அஷ்ரப். நானும் ரவியும் ஒண்ணா புட்பால் ஆடுவோம். நான் உங்க வீட்ல

நிறைய நாள் சாப்பிட்டு இருக்கேன். என் வீடு கல்பள்ளிவாசல் தெருவுல இருக்கு. வாப்பா சேமியா பேக்டரி வச்சிருக்கார்” என்றான்.

அஷ்ரப்பிடம் ஏதோவொரு கவர்ச்சியிருந்தது. அவன் பேச்சில் குளிர்ச்சியிருந்தது. அவன் வந்த சில மணி நேரங்களில் என் அறையைக் கூட்டித் துடைத்து என் பேண்ட் சட்டை எல்லாம் அவனாகவே துவைத்துப் போட்டான். பிறகு அருகாமைக் கடையில் இருந்து சாம்பிராணி வாங்கி வந்து அறை முழுவதும் சாம்பிராணி புகை போட்டான். ஏது புகைக் கரண்டி என்று கேட்டேன். அடுத்த வீட்டில் உள்ள பரிமளம் அக்காவிடம் வாங்கி வந்ததாகச் சொல்லிப் புகையைப் பரவ விட்டான்.

எனது பர்ஸில் இருந்து நூறு ரூபாய் பணத்தை எடுத்துக் கொண்டுபோய் புதிதாக ஒரு பிளாஸ்டிக் வாளி, கொடிக்கயிறு, துணி காயப்போடும் கிளிப், இரண்டு கண்ணாடி டம்ளர் எல்லாமும் வாங்கி வைத்தான். அன்றைய இரவு முழுவதும் ஊர்க்கதையைப் பேசிக்கொண்டேயிருந்தான். குறிப்பாக, என் தம்பியை பற்றி மிகவும் புகழ்ந்து பேசினான். ‘அறை யில்லை என்றால் என்னோடு கூடவே தங்கிக்கொள்’ என்று நானாகச் சொல்லும்படி ஒருநாளில் அவன் என்னை மாற்றி யிருந்தான்.

இது நடந்த மூன்றாம் நாள் மதிய நேரம், நான் அறைக்குத் திரும்பியபோது அறையில் ஒரே கூச்சலாக இருந்தது. அறையின் உள்ளே நெருக்கியடித்துக்கொண்டு ஆறு பேர் அமர்ந்து சீட்டாடிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கையில் பியர் புட்டிகளும் இருந்தன.

என்னைப் பார்த்தவுடன் அஷ்ரப் சிரித்தபடியே “ரம்மி போய்க்கிட்டு இருக்கு. ஜாயின் பண்றீங்களா?” என்று கேட்டான்.

“அஷ்ரப் வெளியே வா, உன்னோடு பேச வேண்டும்” என்றேன். அவன் சிரித்தபடியே, “இன்னும் ரெண்டு ஆட்டம் இருக்கு. முடிச்சிட்டு வர்றேன்” என்றபடியே நான் கிணற்றடியில் உட்காரும்படியாக ஒரு மர ஸ்டூலைக் கொண்டுவந்து போட்டு சாப்பிட ஒரு கை வேர்க்கடலையை நீட்டினான்.

எனக்கு ஆத்திரமாக வந்தது. கோபத்தில் சீட்டு விளையாடிக் கொண்டிருந்தவர்களை வெளியே போகும்படியாகக் கத்தி னேன். அஷ்ரப் அவர்களை அழைத்துக்கொண்டு வெளியே போய்விட்டான். அண்டை வீடுகளில் விசாரித்தபோது

இரண்டு நாட்களுக்குள் என் பெயரைச் சொல்லி பலரிடமும் கடன்வாங்கியிருக்கிறான். சாம்பிராணி கரண்டி கொடுத்த பரிமளம் அக்காவின் வீட்டிற்கு இரண்டு பூந்தொட்டிகள் வாங்கித் தந்துவிட்டு, அவளது மகனுக்கு செகண்ட் ஹேண்ட் பைக் வாங்கித் தருவதாக ஐந்தாயிரம் பணம் வாங்கியிருக் கிறான். அந்தத் தெருவில் அவனைத் தெரியாதவர்களே இல்லை எனும்படி பழகி கலந்து போயிருக்கிறான். அவனைப் பற்றி நினைக்கையில் எனக்குப் பயமாக இருந்தது.

ஊருக்குப் போன் செய்து என் தம்பி ரவியிடம் கேட்டபோது, “அஷ்ரப் ஊரில் நிறைய கடன்வாங்கி ஏமாற்றி ஓடிவிட்டான். அவனைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள்” என்றான். இன்னொரு நண்பர் அஷ்ரப் தன் வீட்டிற்கு வந்து சிலநாள் தங்கியிருந்த தோடு, தனது மகளின் சைக்கிளைத் திருடிப் போய்விற்றுவிட் டான் என்று புலம்பினார்,

அன்றிரவு அஷ்ரப் நிறையக் குடித்துவிட்டு வந்து ஜன்னலைத் தட்டினான். நான் கதவைத் திறக்கவேயில்லை. அவன் வாசலில் நின்றபடியே “டேய் மணி, கதவைத் திறடா” என்றான்.

“அஷ்ரப், உனக்கு இனிமேல் இடம் கிடையாது. வெளியே போ” என்று நானும் பதிலுக்குக் கத்தினேன்.

“நான் ஏன்டா போக வேண்டும். உன் ரூம்லயே நீ எவ்வளவு நாள்தான் இருப்பே. கொஞ்சநாள் நான் இருந்தால் தப்பா. முதலில் எனக்குத் தரவேண்டிய முந்நூறு ரூபாய் பணத்தைக் குடுடா நாயே” என்று கத்தினான்.

“எதற்காக?” என்று கேட்டேன்.

“உன் அறையைச் சுத்தம் செய்தது, துணியைத் துவைச்சிப் போட்டது, உனக்காகப் பணிவிடைகள் செய்தது இதுக்கு எல்லாம் உங்க அப்பனா கூலி தருவான். சும்மா வேலை செய்ய நான் என்ன உன் பொண்டாட்டியா!” என்று கேட்டான்.

எனக்கு ஆத்திரம் கொப்பளித்தது.

“பணம் தரமுடியாது. உன்னால் ஆனதைப் பார்” என்று கத்தினேன்.

“என்னை ஏமாற்றி நீ சந்தோஷமாக வாழ முடியாது” என்று சொல்லி மோசமான வசைகளால் திட்டினான். நான் கதவைத் திறக்கவேயில்லை.

அதன் இரண்டு வாரங்களுக்குப் பிறகு ஒருநாள் அதிகாலை அஷ்ரப் வந்திருந்தான். அறைவாசலில் கைகளைக் கட்டிக்

கொண்டு தலைகவிழ்ந்து நின்றபடியே "குடிவெறியிலே அண்ணனைக் கண்டபடி பேசிட்டேன். என்னை நீங்க மன்னிக்க மாட்டீங்கன்னு தெரியும். ஆனாலும் மனசு கேட்கலை. நான் பேசினது எல்லாம் தப்பு. சைத்தான் என் நாக்கில் ஊஞ்சலாடிக்கிட்டு இருக்கான். நான் வெறும் பொம்மை. அவன் ஆட்டுவிக்கிறான். என்ன செய்றது சொல்லுங்க" என்றான்.

"இப்போ எதுக்கு வந்திருக்கே?" என்று அமைதியாகக் கேட்டேன்.

"ஊருக்குப் போகலாம்னு இருக்கேன். லாரியில போறதுக்குக் கூட காசில்லை. ஐம்பது ரூபா பணம் கொடுத்தா இந்த நரகத்தை விட்டு வெளியேறிப் போயிடுவேன். வாங்கின காசை அண்ணன் ஊருக்கு வரும்போது மறக்காம திருப்பித் தந்துருவேன். அண்ணன் பணம் தராட்டி கள்ள ரயில் ஏறித்தான் போக வேண்டியிருக்கும்" என்றான்.

நான் அஷ்ரப்பிற்குப் பணம் தந்தேன். அவன் ஊருக்குப் போகமாட்டான் என்று நன்றாகவே தெரியும். ஆனால் அவனை என்னால் வெறுக்கமுடியவில்லை.

பின்னொரு நாள் அவனை சைல்ட் டிரஸ்ட் மருத்துவமனையின் முன்னால் உள்ள மருந்துக்கடையில் பார்த்தேன். தெரிந்த நண்பரின் ஆறுவயது மகள் அனுமதிக்கப்பட்டிருக்கிறாள் என்று சொல்லி "ராத்திரி ஆபரேஷன். அதனால் நானும் தூங்கவேயில்லை. பிள்ளை பிழைச்சது மறுபிழைப்பு" என்றான்.

"உனக்குத் தெரிந்தவர்களா?" என்று கேட்டேன். "இல்லைண்ணே. புளியந்தோப்பு கிட்டே இஸ்திரி போடுற குடும்பம். துணி தேய்ச்சி வாங்கப் போனப்போ பிள்ளைக்கு சிறுநீரகப் பிரச்சினை பத்தி சொல்லிக்கிட்டு இருந்தாங்க. நான்தான் ஒரு ஆளைப் பிடிச்சி ஹாஸ்பிடல்ல சேத்துவிட்டேன். வசூல் பண்ணித்தான் வைத்தியம் பண்ணினேன். அதுல எனக்கு ஒரு ஆயிரம் ரூபா தேத்திட்டேன். என்ன செய்றது, நானும் பிழைக்கணும்லே" என்றான்.

அவனை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அஷ்ரப் இயல்பாக மருத்துவமனையின் உள்ளே நடந்து போய்க்கொண்டிருந்தான்.

இதன் சில மாதங்களின் பின்பு அஷ்ரப்பை வடபழனி பேருந்து நிலையத்தின் அருகில் பார்த்தேன். அவனோடு ஓர் இளம்பெண் நின்றிருந்தாள். மஞ்சள்நிற சுடிதார் அணிந்திருந்தாள். குழந்தை போன்ற வசீகரமான முகம். அவள் கையில் ஒரு வயர்கூடையிருந்தது. அஷ்ரப்பும் அவளும்

மக்காச்சோளம் தின்றுகொண்டிருந்தார்கள்.

அஷ்ரப் அவள் தனது மனைவி என்றும், வீட்டுவேலைக்காரி யாக வேலை கிடைத்திருக்கிறது என்பதால் தாம்பரம் அழைத்துப் போக இருப்பதாகச் சொன்னான்.

அந்தப் பெண் கையில் அணிந்திருந்த ரப்பர் வளையல்களை விரலால் சுற்றிக்கொண்டேயிருந்தாள். கழுத்தில் வெளிறிய கவரிங் செயின் அணிந்திருந்தாள். அவள் கண்களுக்குள் பகிர்ந்துகொள்ளாத துக்கம் அப்பியிருந்தது. அவளிடம் "எந்த ஊர்?" என்று கேட்டேன்.

"ஆம்பூர்" என்றாள்.

"எப்போது கல்யாணம் ஆனது?" என்று அஷ்ரப்பிடம் கேட்டேன்.

"லவ் மேரேஜ், ஒரு வேலை விசயமா ஆம்பூர்ல பத்துநாள் தங்கியிருந்தேன். அப்போ லவ் பண்ணிட்டேன். பேரு ப்ரியா. லெதர் கம்பெனியில் வேலை பாத்துக்கிட்டு இருந்தா. வீட்டுக் குத் தெரியாமல் கல்யாணம் பண்ணிக்கிட்டேன். நாலு மாசம் ஆச்சு" என்றான்.

"இத்தனை நாளாக இவள் எங்கேயிருந்தாள்?" என்று கேட்டேன்.

"செங்கல்பட்டில ஒரு பிரைவேட் ஹாஸ்பிடல்ல ஆயாவா வேலைக்குச் சேத்துவிட்டிருந்தேன். அங்கே குடிச்சிட்டுப் போய் ஒரு சின்னப் பிரச்சினை பண்ணிட்டேன். வேலை போயிருச்சி. அதான் இங்கேயே வரச்சொல்லிட்டேன்" என்றான்.

அந்தப் பெண் இவனை எப்படிக் காதலித்தாள், ஏன் இந்தப் பெண்கள் இவ்வளவு அப்பாவியாக இருக்கிறார்கள் என்று யோசனையாக இருந்தது. அஷ்ரப்பையும் அவன் மனைவியை யும் அழைத்துப்போய் இளநீர் வாங்கிக்கொடுத்தேன். அவன் மனைவி தனக்கு இன்னொரு இளநீர் வேண்டும் என்று கேட்டுவாங்கிக் குடித்தாள். பணம் ஏதாவது தேவையா என்று அஷ்ரப்பிடம் கேட்டேன். அதெல்லாம் இருக்கிறது என்று சொல்லிய அஷ்ரப் அவளோடு நகரப்பேருந்தில் ஏறிச் சென்றான்.

என் போன்றவர்களுக்குத்தான் திருமணம் செய்துகொள்வது பலமான யோசனை. குடும்பம், பிள்ளைகள் பற்றி நினைத்தாலே பயமாக இருக்கிறது. அஷ்ரப்பிற்கு இந்த நகரம் எளிதானது. அவனால் எதையும் செய்து பார்க்க முடிகிறது. அது எப்படி சாத்தியம்.

அதன் பிறகு ஒருநாள் இரவு லயோலா கல்லூரி சாலையில் ஓர் ஆட்டோக்காரன் அஷ்ரப்பை அடித்துக்கொண்டிருப்பதைக் கண்டேன். அஷ்ரப் கீழே விழுந்துகிடந்தான். ஆட்டோக்காரன் அவன் இடுப்போடு சேர்த்து மிதித்துக்கொண்டிருந்தான். பைக்கை நிறுத்தி "என்ன பிரச்சினை" என்று விசாரித்தேன்.

"காலையில் இருந்து இவன் கூடவே சுத்திக்கிட்டு இருக்கேன். அங்கே போ, இங்கே போனு கையில் காசில்லாமல் இந்த நாய் ரெட்டை ஏரி வரை கூட்டிப்போய் அலைக்கழித்து விட்டான்" என்றான்.

பணம் கொடுத்து ஆட்டோ டிரைவரை அனுப்பிவிட்டு அஷ்ரப்பை எழுப்பி உட்கார வைத்தேன், அவன் சட்டையில் படிந்துள்ள தூசியைத் தட்டிவிட்டபடியே. "மணி அண்ணே, நீங்க அந்த ஏரியை ஒருமுறை அவசியம் பாக்கணும். வெளி நாட்டில இருந்து நிறைய பறவைகள் வருது. அதுல ஒரு பெரிய மூக்கு நாரையோட சப்தம் கேட்கவே வித்யாசமா இருக்கு. அது ஊரு சைபீரியாவாம். அதைப் பாக்கத்தான் போயிருந்தேன். றெக்கை இருந்தா நானும் பறந்துபோய் ஏதாவது ஒரு நாட்டு ஏரியில் சுத்திக்கிட்டு இருப்பேன்" என்றான்.

நான் அஷ்ரப்பின் கைகளில் வழியும் ரத்தத்தைத் துடைக்க கர்ச்சீப்பை நீட்டினேன். அவன் எச்சிலைத் துப்பி ரத்தத்தின் மேல் வைத்துவிட்டு "தானா சரியா போயிரும்" என்றபடியே உடலை முறுக்கிக்கொண்டான்.

அவனை எங்கே கொண்டுபோய்விட வேண்டும் என்று கேட்டேன்.

பலமாகச் சிரித்தபடியே "அது தெரியாமல்தாண்ணே ரொம்ப நாளா திண்டாடிக்கிட்டு இருக்கேன். சுல்தான்ல இந்நேரம் பிரியாணி நல்லா சூடா கமகமன்னு இருக்கும். வாங்கித் தருவீங்களா?" என்று கேட்டான்.

இருவரும் சுல்தான் உணவகத்திற்குப் போனோம். கைகழுவி விட்டு வருவதற்குள் ஹோட்டல் சர்வர் எந்த ஊர், அவன் எத்தனை வருடமாக வேலை செய்கிறான் என்பதை அஷ்ரப் தெரிந்துகொண்டு விட்டிருந்தான். அஷ்ரப்பிற்காக ஸ்பெஷலாக குருமா கொண்டுவந்து தந்தான் சர்வர்.

"அஷ்ரப், உனக்குத்தான் இந்த ஊரில் ஒரு வேலையுமில்லையே. பின் எதற்காக இங்கேயிருக்கிறாய்?" என்று கேட்டேன்.

"வேலையில்லாதவங்கதான் இந்த ஊர்ல ஜாஸ்தி. இந்த

ஊரு ஒரு சுழிகாத்து மாதிரி. இதுக்குள்ளே போனவங்க வெளியேறிப் போகமுடியாது" என்றான்.

"அப்போ ஏதாவது வேலை பாக்க வேண்டியதுதானே?" என்றேன்.

"வேலை செய்றதுன்னா ஊர்லயே இருந்திருப்பேன். எனக்குக் கொஞ்சம் மண்டைக்கிறுக்கு இருக்கு. எதிலயும் அடங்கமாட்டேன். மண்டைக்குள்ளே புழு கிடந்து துளைக்குது." என்றபடியே கைகழுவிட்டு சர்வரோடு இரவு சினிமா போவதாகச் சொல்லி என்னை விடை கொடுத்து அனுப்பிவைத்தான்.

அறைக்குத் திரும்பிவரும்வரை அஷ்ரப்பை பற்றியே நினைத்துக் கொண்டு வந்தேன். அவனை ஏன் என்னால் வெறுக்கமுடியவே யில்லை. இயல்பு திரிந்து போனதுதான் அவனது இயல்பா, திட்டமில்லாத இந்த வாழ்க்கையால் என்ன பயன், ஏன் அவன் எதற்குள்ளும் அடங்க மறுக்கிறான்?

பின்பு கோடையின் மதியமொன்றில் அஷ்ரப் தனது நண்பன் என்று பதினாறு வயதுப் பையன் ஒருவனை அழைத்துக் கொண்டு என் அலுவலகத்திற்கு வந்திருந்தான். இருவரும் நன்றாகக் குடித்திருந்தார்கள். அஷ்ரப் அன்று வேஷ்டி கட்டி யிருந்தான். அது யாருடைய வேஷ்டி என்று தெரியவில்லை.

பலமான சிரிப்போடு "அண்ணே, இது வினோத். என்னோட பிரண்ட். பெஸ்ட் போட்டோகிராபர். இவன் அப்பா யார் தெரியுமா? போலீஸ் டிஜிபி. அவன் கார்ல தான் வந்திருக்கோம். நாங்க ரெண்டு பேரும் யானையைப் படம் பிடிக்க முதுமலை போறோம். அண்ணனும் எங்களோட வரணும். எத்தனை நாள்தான் இப்படி வேலை வேலைனு ஆபீஸ்லயே அடைஞ்சி கிடப்பீங்க. சம்பாதிக்க ஆயிரம் வழி இருக்கு. மனுசன் அனுபவிக்க வேண்டியதை அந்தந்த வயசில அனுபவிச்சி பாத்திரணும். பயந்தா எதையும் அனுபவிக்க முடியாது. கிளம்புங்க" என்று பலமாகச் சிரித்தான்

"உன் மனைவி எப்படியிருக்கிறாள்?" என்று கேட்டேன்.

"அவளோட ஒத்துவரலை அண்ணே. உங்களுக்கு என்னை நல்லா தெரியும். என்னாலே வீடு எடுத்து வாடகை கொடுத்து வாழ முடியாது. வேலை செய்து பழக்கம் இல்லை. என் மனசு நிலையில்லாதது. அதை அவளுக்குச் சொல்லிப் பாத்துப் புரியலை. கூடப்படுக்கிறதுக்கு எனக்கொரு பொம்பளை வேணும். ஆனா கூடவே இருந்து வாழ்ந்தா நல்லா இருக்காது. அதான் அடிச்சி விரட்டிவிட்டுட்டேன். அழுது கூப்பாடு

போட்டா. அழுதா கரைஞ்சி போற ஆள் இல்லை நான். போடி முண்டைனு சொல்லி விரட்டிவிட்டுட்டேன். தப்புதான். ஆனா தப்பு செஞ்சி செஞ்சி பழகிப்போச்சு, அதுல ஒரு வேடிக்கை பாருங்க. அவ வேலை பாத்த வீட்ல போய் என் பொண்டாட்டியைக் கெடுத்துட்டேனு போலீஸ்ல பிராது குடுக்கப்போறேன்னு மிரட்டுன மிரட்டுல, பயத்தில அந்த என்ஜினியர் கழிஞ்சிக்கிட்டு ரெண்டாயிரம் தந்தான். ஒரு வாரத்துக்குத் தண்ணி அடிக்க ஆச்சு" என்று சொல்லியபடியே என் அலுவலகத்தின் கழிப்பறைக்குப் போய் மூத்திரம் பெய்து விட்டு "இதோ வருகிறேன்" என்று வெளியேறிப் போனான்.

நான் அந்த பதின்வயதுப் பையனைப் பாத்துக்கொண்டிருந் தேன். அவன் அஷ்ரப்பின் திறமைகளைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தான். அவன் சொன்ன சில விசயங்கள் எனக்கும் வியப்பாக இருந்தது.

அஷ்ரப் இரண்டு நாட்களுக்கு முன்பு தாம்பரம் ரயில்நிலையத் தில் வேர்க்கடலை விற்கும் ஒரு முதியவருக்கு நானூறு ரூபாய்க்கு புதுசெருப்பு வாங்கிக் கொடுத்துப் போட்டுக் கொள்ளச் சொல்லியிருக்கிறான். அந்த முதியவர் எதுக்குத் தம்பி இதெல்லாம் என்று மறுத்ததற்கு "என்கிட்டே ஐயாயிரம் ரூபா இருக்கு. அதை ரயில் ஏறுவதற்குள் செலவழித்துவிட வேண்டும். அதான்" என்று சொல்லிச் சிரித்திருக்கிறான். இதுபோலவே டாஸ்மாக் பாரில் வேலை செய்யும் சிறுவனுக்குப் புது செல்போன் வாங்கிப் பரிசாகத் தந்திருக்கிறான். கொய்யாப் பழம் விற்பவள் வெயிலில் உட்கார்ந்திருக்கிறாள் என்று ஒரு குடை வாங்கித் தந்திருக்கிறான். அதே நேரம் பள்ளிப் பிள்ளையொன்றின் டிபன் பாக்ஸைத் திருடி சாப்பிட்டிருக் கிறான். சலூனில் உள்ள தண்ணீர் பீச்சியடிக்கும் ஸ்ப்ரேயைத் திருடி வந்திருக்கிறான்.

"அஷ்ரப்பால் யாரையும் சில நிமிடங்களில் நண்பராக்கிவிட முடிகிறது. இவ்வளவு ஏன், அவன் போலீஸ் அதிகாரியான என் அப்பாவோடு சேர்ந்து தண்ணி அடிக்கும் அளவு சில நாட்களில் நண்பனாகிவிட்டான். அவனை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை" என்று வினோ சொன்னான்.

நான் அந்தப் பையனிடம் "உன்னை அஷ்ரப் ஏமாற்றிவிடுவான். ஜாக்கிரதை" என்று சொன்னேன். அவன் சிரித்தபடியே அதையும் அவனே சொல்லியிருப்பதாகச் சிரித்தான்.

நாங்கள் பேசிக்கொண்டிருந்த பொழுதிற்குள் அஷ்ரப் திரும்பி வந்திருந்தான். அலுவலக கழிப்பறை ஒரே நாற்றமாக இருக்கிறது

என அவனாகப் பினாயிலை ஊற்றிக் கழுவிவிட்டு ஒரு வாசனைக் கட்டி ஒன்றை மாட்டி வைத்தான். பிறகு என் அலுவலகத்தில் உள்ள எல்லோருக்கும் ஒரு சாக்லெட் கேக் வாங்கி, அன்று தனது பிறந்த நாள் என்று சொல்லி சாப்பிடத் தந்தான். அன்று அவன் பிறந்த நாள் இல்லை என்று எனக்குத் தெரியும். அஷ்ரப் சிரிப்போடு "பிறந்த நாள் என்று சொன்னால் தான் கேக் ருசியாக இருக்கும். கேக் சாப்பிடுவதற்கு நம் ஆட்களுக்கு ஒரு காரணம் வேண்டும் இல்லையா" என்று ரகசியமாகச் சொன்னான்

பிறகு அவன் வினோத்தை அழைத்துக்கொண்டு போய்விட்டான். அலுவலகமே அஷ்ரப்பைப் பற்றி உயர்வாகப் பேசிக் கொண்டிருந்தது. அஷ்ரப் அவர்களை ஏமாற்றுவதற்காகத் தயார் செய்கிறான் என்று எப்படிச் சொல்வது. எனக்கு உள்ளூர பயமாக இருந்தது.

என்ன மனநிலையது. எப்படி அவனால் வாழமுடிகிறது. எனக்குக் குழப்பமாக இருந்தது.

அஷ்ரப் என் அலுவலகம் வந்துபோன பத்துநாட்களுக்குப் பிறகு ஒரு மதியம் வினோத் வந்திருந்தான். ஒரு மணிநேரம் அஷ்ரப்பின் திருட்டுத்தனங்களைப் பற்றி ஆதங்கத்துடன் பேசினான். அவனது அப்பாவின் பெயரைச் சொல்லிப் பதவி உயர்வு பெற்றுத் தருவதாக இரண்டு பெண் போலீசாரிடம் பதினைந்தாயிரம் பணம் பெற்றிருக்கிறான். வீட்டுவேலைக்காரப் பெண்ணோடு பேசி மயக்கி அவளோடு பாலுறவு கொண்டிருக்கிறான். வினோத் தங்கையின் மோதிரத்தைத் திருடி விற்றுவிட்டான். வினோத்தை பெல்லாரிக்கு அழைத்துப் போய் ஒரு லாட்ஜில் தங்க வைத்துவிட்டு கேமிரா பேக்கை எடுத்துப்போய் விற்றுவிட்டதாகப் புகார்களை அடுக்கிக் கொண்டேயிருந்தான்.

"அவனை என்ன செய்யப்போகிறாய் வினோ?" என்று கேட்டேன்.

"ஒன்றும் செய்யப்போவதில்லை அங்கிள். இனிமேல் அவனைப் பார்க்கவோ பேசவோ கூடாது என்றிருக்கிறேன்" என்றான் வினோத்.

"இதை எல்லாம் என்னிடம் வந்து ஏன் சொல்கிறாய்?" என்று கேட்டேன்.

"என்னைப் போலவே நீங்களும் பாதிக்கப்பட்டு இருக்கிறீர்கள் என்று தெரியும்" என்றான்.

எனக்கு உள்ளூரச் சிரிப்பாக வந்தது. ஏமாந்து போனவர்கள் தன்னைப் போல மற்றவர்களும் இருப்பதில் சந்தோஷமடைகிறார்கள். நான் வினோவிற்குத் தேநீர் வரவழைத்துக் கொடுத்தேன். அவன் விடைபெறும்வரை புகார்களை நினைவுபடுத்திக் கொண்டேயிருந்தான்.

அடுத்த சில வாரங்களில் வினோவும் அஷ்ரப்பும் ஒன்றாக ஒரே பைக்கில் அண்ணா சாலையில் போய்க்கொண்டிருப்பதைக் கண்டேன். அது ஒன்றும் புதிய விஷயமில்லை. அப்படி நடக்கும் என்று எனக்கே நன்றாகத் தெரியும்.

o

மழை வெறித்திருந்தது. அஷ்ரப் வெளியே சிகரெட் பிடித்துக் கொண்டிருந்த மணம் வந்தபடியே இருந்தது. மழைக்குப் பிந்தைய புழுக்கத்திற்குள்ளாகக் கிடந்தபடியே அஷ்ரப்பைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்தேன்.

அஷ்ரப்பாக வாழ்வது கடினம்.

அஷ்ரப்பை யாராலும் விலக்கவே முடியாது.

காரணம், நாம் ஒவ்வொருவரும் அஷ்ரப்பாக நடந்துகொள்ள விரும்புகிறோம். அதற்கான தைரியம் நம்மிடமில்லை. அவன் நமது ஆசைகளின் செயல்வடிவம்.

யோசனை கரைந்து உறங்கியிருந்தேன். விடிந்து எழுந்து பார்த்தபோது கிணற்றடி சுத்தமாக இருந்தது. துணி துவைக்கும் கல்லில் படிந்த அழுக்குகள் மறைந்து போயிருந்தன. தென்னை மரத்திற்குத் தண்ணீர் ஊற்றியிருக்கிறான். தொங்கிக்கொண்டிருந்த துணி காயப்போடும் கொடியை இழுத்துக் கட்டியிருக்கிறான். சேறு படிந்து கிடந்த எனது செருப்புகூட கழுவி சுத்தமாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தண்ணீர் இறைக்கும் வாளியை மட்டும் திருடிக்கொண்டு போய்விட்டிருக்கிறான். அதுதான் அஷ்ரப்.

# பொய்த்தொண்டை

பாண்டியன் நகர் பேருந்தில் ஏறி நின்றுகொண்டிருந்தபோது தற்செயலாக அந்தக் குரல் கேட்டது. யார் என்று திரும்பிப் பார்த்தேன். "சித்தப்பா" என்று கூப்பிட்டபடியே கண்மணி நின்றுகொண்டிருந்தாள். அவளது இடதுபுறமிருந்த சீட்டில் உட்கார்ந்திருந்தாள் சாரங்கா. நாலைந்து வருடங்களாக அவளைப் பார்க்கவேயில்லை. எங்கோ நிலக்கோட்டை அருகில் உள்ள சொந்த ஊருக்குப் போய்விட்டதாகச் சொல்லிக்கொண்டார்கள். திரும்பி வந்துவிட்டாள் போலும்.

சாரங்கா வைத்தி அண்ணனின் மனைவி. அவளை ஒருபோதும் மதினி என்று அழைக்க எனக்கு மனது ஒப்பவேயில்லை. அவளால்தான் வைத்தி அண்ணன் இறந்து போனார் என்றே நானும் நம்புகிறேன். இந்த ஐந்து வருடங்களில் அவள் ஆள் மாறவேயில்லை. அதே நெளிநெளியான கூந்தல். நிறைய பவுடர் அப்பிய பருத்த முகம். எப்போதுமே பாதி உறக்கத்தில் இருப்பது போன்று சொருகிய கண்கள். அடர்ந்த ஆரஞ்சு வண்ணச் சேலை. ஜன்னல் கம்பியில் சாய்ந்துகொண்டிருந்தாள்.

பேருந்தில் நிறையக் கூட்டம். நான் டிரைவர் பின்னால் உள்ள சீட் அருகே நின்றுகொண்டிருந்தேன். என் முதுகுக்குப் பின்னால் நின்றுகொண்டிருந்த நபர் கையில் காய்கறிப் பையோடு என்மீது சாய்ந்துகொண்டிருந்தார் கூடையில் கொத்தமல்லி தழைகள் பூக்களோடு வாடிக்கிடந்தன.

இதுபோன்ற நேரங்களில் வைத்தி அண்ணன் உடனே முகம் தெரியாத அந்த நபரோடு பேசத்துவங்கி அவரது கொத்த மல்லியைக் கொஞ்சம் கிள்ளி வாயிலிட்டு மெல்லவும் துவங்கி விடுவார். அதுதான் வைத்தி அண்ணனின் சிறப்பு. அவரால் யாருடனும் பார்த்த நிமிடத்தில் ஒன்றிப்போய்விட முடியும். அந்த நபர் பிரிந்து போகையில் இத்தனை ஆண்டுகாலமாகப்

பழகிவிட்டு இப்படிப் பிரிந்து போகிறோமே என்று உணர வைத்துவிடுமளவு நெருக்கமாகிவிடுவார்.

சிலரால்தான் நேரடியாக நமது அந்தரங்கங்களுடன் பேச முடிகிறது. அவர்கள் கேட்கையில் நாமும் உடனே மனதைத் திறந்துவிடுகிறோம். அப்படியான ஒருவர்தான் வைத்தி அண்ணன். அவரை என் கல்லூரியின் முதலாண்டின்போது பழைய ரயில்வே காலனி அருகில் உள்ள பாலத்தில் முதன்முதலாகப் பார்த்தேன். அந்தப் பாலம் உபயோகமில்லாதது. ஆகவே மாலை நேரங்களில் அங்கே உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பதற்குச் சிலர் வருவதுண்டு.

அதில் ஒருவனாக என் நண்பன் முருகன் இருந்தான். அவனைப் பார்ப்பதற்காகவே அந்தப் பாலத்திற்குப் போயிருந்தேன். அன்றைக்கு என் கையில் *ஜென் அன்ட் தி ஆர்ட் ஆஃப் மோட்டார் சைக்கிள்* என்ற புத்தகமிருந்தது. ரயில்வே காலனியை ஒட்டிய பாலம் என்பதால் அங்கிருந்தபடியே ரயில் வருவதை யும் போவதையும் காணமுடியும். அன்றைக்கும் நான் போகை யில் ஒரு கூட்ஸ் ரயில் வந்துகொண்டிருந்தது.

முருகன் தனியே உட்கார்ந்திருந்தான். அந்த நாட்களில் முருகன் வாடியான் தெருவில் உள்ள விஜயநிர்மலா என்ற பெண்ணைக் காதலித்துக்கொண்டிருந்தான். அவளுக்காக கவிதைகள் எழுதுவது, பரிசுப் பொருள்கள் வாங்குவது, அவளுக்குப் பிடித்தமான சினிமா பாடல்களை ரிக்கார்டிங் சென்டர்களில் போய் கேசட்டில் பதிவு செய்து தருவது, அவள் பெண்கள் கல்லூரிக்குப் போகும்வழியில் நின்றுகொண்டிருப்பது என்று தனிவழியே அலைந்துகொண்டிருந்தான். காதலுக்கு ஆலோசனைகள் கேட்பதற்காகத்தான் அவன் வைத்தி அண்ணனைச் சந்தித்திருக்கிறான் என்பது பின்னாளில் தான் தெரிந்தது.

அன்றைக்கு முருகன் ஏதோ யோசனையில் சிகரெட் பிடித்தபடியே இருந்தான். நான் ஏகாந்தமான காற்றோடு உள்ள பாலத்தில் அமர்ந்தபடியே புத்தகம் படித்துக் கொண்டிருந்தேன். யாரோ ஒருவரின் சைக்கிளில் பின்னாடி உட்கார்ந்தபடியே வந்து குதித்து இறங்கிக்கொண்ட வைத்தி அண்ணன் சிரித்தபடியே பாலத்தை நோக்கி நடந்து வந்தார். என்னை வரும் வழியிலே பார்த்திருக்கக்கூடும்.

ரொம்ப இணக்கமானவரைப் போல வந்தவுடன் என் தோளில் கைபோட்டபடியே “முருகன் பிரண்டா?” என்று கேட்டார். நான் “ஆமாம்” என்றேன். “எங்க வீடு?” என்றார். “தந்திமரத் தெரு” என்றேன். “தந்திமரத் தெருவா அங்கே யாரு வீடு.

நீ சுப்பையா வாத்தியார் மகனாடே" என்று கேட்டார். "ஆமாம்" என்றேன். "உங்கப்பாகிட்டேதான் நான் அஞ்சாப்பு படிச்சேன். நிறைய அடி வாங்கியிருக்கேன். இப்போம் அவுகளுக்கு எங்க வேலை" என்று கேட்டார். "உப்பத்தூர் ஸ்கூல்ல" என்ற பதில் சொன்னேன்.

வைத்தி அண்ணன் முருகன் பிடித்துக்கொண்டிருந்த சிகரெட்டை வாங்கித் தானும் இரண்டு இழுப்புகள் இழுத்துக்கொண்டபடியே "என்ன படிக்கே" என்றார். "பிஎஸ்சி. பாட்டனி" என்றேன். முருகன் அதற்குள் விஜயநிர்மலா எழுதியிருந்த காதல்கடிதத்தை எடுத்து வைத்தி அண்ணனிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னான்.

அவர் அதை மிகக் கவனமாக ஒவ்வொரு எழுத்தாகப் படித்தார். பிறகு அவனிடம் "முருகா, இந்தப் பொம்பளை பிள்ளைக மனசு அப்படித்தான்டே அலைபாஞ்சிக்கிட்டு இருக்கும். நிர்மலா தேவையில்லாம மனசைப் போட்டுக் குழப்பிக்கிட்டு இருக்கா. நீ இதைக் கண்டுக்கிடாம விட்டுரு. நாளைக்கு வேற மாதிரி லெட்டர் குடுப்பா பாரேன். பொம் பளைப் பிள்ளைகளுக்குப் பையன்களை விட தைரியம் ஜாஸ்திடே. அவளுக ஒண்ணைப் பிடிச்சிட்டா லேசில விடவே மாட்டாக. சும்மாவா சொல்லியிருக்காங்க. பொம்பளை மனசுக்குள்ளே ஒரு தூசி போய் நுழைஞ்சிட்டாகூட லேசா வெளியே போகாது. அதை ஊதிப்பெருக்கி உசிர் கொடுத்துரு வாளுகன்னு. நம்ம தைரியம் எல்லாம் அவ ஒரு சொட்டுக் கண்ணீர் முன்னாடி நிக்காதுடே. பச்சைப் பிள்ளை மாதிரி மனசு உடைஞ்சிபோயிருவோம். லவ் பண்றவனும் காமாலை கண்டவனும் ஒண்ணு. எந்நேரமும் தன்னைப் பத்தியே நினைச்சி பயந்துக்கிட்டு இருப்பானுக. என்ன நான் சொல்றது சரிதானே ?" என்று என் முதுகில் தட்டினார்.

முருகன் அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டிருந்தான். எனக்கு வியப்பாக இருந்தது. அவர் சொல்லிய அத்தனையும் நிஜம். இதுபோன்ற வாசகங்களை நான் புத்தகங்களில் மட்டுமே படித்திருக்கிறேன். ஆனால் நேரில் அதை ஒருவர் சொல்வதை அப்போதுதான் கேட்டேன். வைத்தி அண்ணன் எங்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதே ஒரு ரயில்வே காலனி ஆள் தன் மனைவியோடு போவதைப் பார்த்து கையசைத்துக்கொண் டார். தூரத்து ரயில்நிலையத்தில் தெரியும் பயணிகளைப் பார்த்துக்கொண்டார்.

பிறகு என்னிடம், "என்ன பொஸ்தகம் அது?" என்று கேட்டார். நான் அட்டையை உயர்த்திக் காட்டினேன். "ராபர்ட் பிர்ஸிக்

தானே... படிச்சிருக்கேன். ஒரு பைக் ஓட்டுறதுக்குள்ளே இம்புட்டு விசயம் இருக்குன்னு காட்டிக் கொடுத்தவன் இவன்தான். இவனோ இன்னொரு பொஸ்தகம் எழுதியிருக் கான். லீலானு பேரு. அதுல ஹட்சன் ஆத்துல படகில போய்க்கிட்டே இருப்பான். அங்கே எல்லாம் எழுத்தாளன்னா ஊர் சுத்துற ஆளு. பஸ்ல கார்ல படகிலனு கண்ணுபோன போக்கில போய் அலைஞ்சி திரிஞ்சித்தான் அனுபவிச்சி கண்ட உண்மையை எழுதுறாங்க. நம்ம ஆட்கள் வீடு, பொண் டாட்டி பிரச்சினை, பிள்ளைப்பிரச்சினை, சொந்த ஊர் ஏக்கம்னு இதைத் தாண்டவேயில்லை. என்னடே நான் சொல்றது சரிதானே" என்றார். நானும் சிரித்துக்கொண்டேன்.

வைத்தி அண்ணன் எப்போது இதை எல்லாம் படித்தார். எங்கே கிடைத்தது அவருக்குப் புத்தகங்கள் என்று கேட்க விருப்பமாக இருந்தது. ஆனால் நான் கேட்கவில்லை. அன்றைக்கு இரவு பத்தரை வரை நாங்கள் அந்தப் பாலத்தில் உட்கார்ந்திருந்தோம். பேச்சு அரசியல், வாழ்க்கை, தத்துவம், பயணம், சினிமா, ரசவாதம், சித்தர்பாடல் என்று ஏதேதோ சுற்றிவந்தது. அண்ணாச்சி அத்தனையும் சுவாரஸ்யமாகச் சொல்லிக்கொண்டிருந்தார். அன்றைக்கு வீடு திரும்பும்போது என்னுடைய பைக்கில் தான் கூடவருவதாக ஏறிக்கொண்டார்.

அப்போதுதான் அவர் வீட்டினை முதன்முறையாகப் பார்த் தேன். பாண்டியன் நகரை விட்டு விலகி தனியாக இருந்தது. வீட்டின் முன்னால் பூந்தோட்டம் அமைத்திருந்தார். சுற்றிலும் நாலைந்து வேம்புகள் இருந்தன. வீட்டின் மாடிக்குச் செல்லும் வழி சுழல் படிக்கட்டுக் கொண்டதாக இருந்தது. "மேல வந்துட்டுப் போ" என்று சொல்லியபடியே அவர் காலிங் பெல்லை அடித்து வீட்டின் உள்ளே போனார்.

நான் பைக்கை வேப்பமரத்தடியில் நிறுத்திவிட்டு சுழல்படிக் கட்டில் ஏறத்துவங்கினேன். இதுபோன்ற படிக்கட்டுகள் தண்ணீர் டேங்கில் மட்டுமே உண்டு. அதை ஏன் தனது வீட்டிற்கு அமைத்திருக்கிறார் என்ற யோசனையோடு மேல ஏறினேன். மாடி அறை பெரியதாக இருந்தது. லைட்டைப் போட்டேன். மரக்கட்டில் ஒன்று. அருகில் சிறிய மண்பானை. சுவரில் பெரிய விவேகானந்தர் படம். அலமாரி எங்கும் நூற்றுக்கணக்கில் புத்தகங்கள். ஒரு மிருதங்கம், ஹார்மோனியப் பெட்டி, பழைய ரிக்கார்டு பிளேயர், நிறைய ரிக்கார்டுகள். அறை மிக சுத்தமாக இருந்தது.

வைத்தி அண்ணன் படியேறி மேல வந்தார். அவர் கையில் ஒரு சில்வர் தூக்குவாளியும் இரண்டு தட்டுகளும் இருந்தன.

அவர் சிரித்தபடியே "நீ என்கூட சாப்பிடுறே" என்று சொல்லி தூக்குவாளியில் இருந்த இட்லி சட்னியை வெளியே எடுத்து வைத்தார். இவ்வளவு சுத்தமான அறையை நான் எங்கும் கண்டதேயில்லை என்று அவரிடம் சொன்னேன்.

அவர் சிரித்தபடியே "எனக்கு ரூம்ல அழுக்கு தூசியிருந்தா பிடிக்காது. துவைச்ச துண்டைப் பாரு. அதுல ஒரு நூல்லகூட அழுக்கு இருக்காது. அப்படி வச்சிக்கிடுவேன். இடம் சுத்தமா அழகா இருந்தா மனசும் அப்படி இருக்கும். நீ சாப்பிடு" என்று ஒரு தட்டில் இட்லி வைத்து நீட்டினார். இட்லியும் சட்னியும் சுவையாக இருந்தது. அவர் இட்லி சாப்பிடுவதுகூட நேர்த்தியாகவே இருந்தது. ஒரே அளவு இட்லியைப் பிய்த்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார்.

"வீட்ல நானும் எங்கப்பாவும் மட்டும்தான் இருக்கோம். அம்மா செத்துப் போய் பத்து வருசமிருக்கும். அப்பா ரங்கூன்ல இருந்தவக. அங்கே பெரிய வியாபாரம். அது நொடிச்சிப் போய் இங்கே வந்து தெப்பம் இறக்கத்தில கடை வச்சிருந்தாக. நீ பார்த்திருப்பே. தவமணி டிம்பர் டிப்போனு இருக்குமே. அது எங்க கடைதான். அப்பாவுக்கு இடையில் உடம்பு கொஞ் சம் முடியாம போயிருச்சி. கடையைக் கொடுத்துட்டோம்.

வீட்ல சமையல் எப்பவும் அப்பாதான். மத்தபடி துவைக்கிறது, வீட்டைத் தூத்துப் பெருக்கி கோலம் போடுறது எல்லாம் நான்தான். நம்ம காலேஜ்லதான் எம்.ஏ. படிச்சேன். வேலைக்குப் போக இஷ்டமில்லை. வயசு நாற்பத்திரெண்டு ஆகிருச்சி. இப்படியே காலத்தை ஓட்ட ஆரம்பிச்சிட்டேன்" என்றார் வைத்தி அண்ணன். அன்றிரவு வீடு வந்து சேர்ந்தபோது எப்படி ஒரே நாளில் அவரால் என்னோடு இவ்வளவு ஒட்டிக் கொள்ள முடிந்தது என்று வியப்பாக இருந்தது.

அதன்பிறகு நானே வைத்தி அண்ணனைத் தேடிப் போய்வரத் துவங்கினேன். அவர் நாள் முழுவதும் சுற்றிக்கொண்டேயிருந் தார். காலையில் யோகா வகுப்பிற்குப் போய் இலவசமாக யோகப் பயிற்சிகள் பழகிக் கொடுத்துக்கொண்டிருந்தார். அது முடிந்தவுடன் வாசகசாலை. அங்கே உள்ள நூலகருக்கு உதவி செய்வது, படிப்பது, பிறகு பதினொரு மணி அளவில் சைக்கிளில் பொதுமருத்துவமனைக்குப் போய் அங்கேயுள்ள நோயாளிகளுக்குத் தேவையான உதவிகள் செய்வது, மதியம் இரண்டு மணிக்கு சக்தி அச்சகத்தில் போய் உட்கார்ந்து கொண்டு பிழைதிருத்தம் செய்வது, நாலு மணிக்கு ஊரின் வெளியில் உள்ள நந்தவனம் வரை ஒரு நடை, அங்கே சிறுவர்களுடன் சேர்ந்து விளையாடிக்கொண்டிருப்பது; பிறகு

மாலை நந்தவனக் கிணற்றில் குளியல்.

ஐந்து மணிக்கு தையல்மாலின் உள்ளே உள்ள டெய்லர்களுடன் ஒரு மணி நேரம் பேசிக்கொண்டிருப்பது. ஆறு மணிக்கு சின்னதெருவில் உள்ள ராயர் காபிக்கடையில் போய் காபி குடித்துவிட்டு அரட்டை. அங்கிருந்து வரும்வழியில் ரங்கமணியம்மாள் என்ற பார்வையற்ற பெண் வீட்டிற்குப் போய் அவரோடு கொஞ்ச நேரம் பேச்சு. பிறகு அங்கிருந்து வரும்வழியில் ஆஞ்சயேர் கோவிலில் ஒரு கும்பிடு. அங்கிருந்து நேராக எவர் சைக்கிளிலாவது டபிள்ஸ் ஏறி பழைய ரயில்வே பாலம் வந்து நண்பர்களுடன் அரட்டை.

வைத்தி அண்ணனுக்குப் பாடுவதில் அதிக ஆர்வமிருந்தது. ஆனால் பாடும்போது மட்டும் மிகக் கூச்சப்படுவார். அவருக்கு மிகவும் பிடித்தமான பாடல் 'நேற்றுவரை நீ யாரோ நான் யாரோ. இன்று முதல் நீ வேறோ, நான் வேறோ.' இந்தப் பாடலைப் பாடும்போது அவர் கண்கள் தானே மூடிக் கொண்டுவிடும். அந்தப் பாடலை பாடி முடித்தவுடன் தானே சிரித்துக்கொள்வார். தன்னால் பி.பி.எஸ். அளவிற்குப் பாட முடியாது. தனக்குப் பொய்த்தொண்டையாக உள்ளது. அதை வைத்துக்கொண்டு பாடினால் நன்றாக வருவதேயில்லை என்று சொல்லும்போது அவர் முகத்தில் துயரம் ஒன்று மின்னல் வெட்டி மறையும்.

அந்தப் பாடலில் வரும் 'வந்ததே கனவே, என்று வாடினேன் தனியாய் நின்று' என்ற வரிகளை அவர் அடிக்கடி முணுமுணுத் துக்கொண்டிருப்பதைக் கேட்டிருக்கிறேன். அவர் சில காலம் பாட்டு கற்றுக்கொண்டிருக்கிறார் என்று ஒரு முறை சொன்னார்.

அந்த ஊரில் வைத்தி அண்ணனைத் தெரியாதவர்கள் யாராவது இருக்கிறார்களா என்று யோசித்துக்கொண்டே யிருந்தேன். நினைக்கையில் அப்படி அவர் ஒருவரால் மட்டுமே இருக்க முடியும் என்று தோன்றியது. வைத்தி அண்ணன் அப்போது திருமணம் செய்துகொள்ளவில்லை. தினசரி அவரை நான்தான் இரவு வீட்டிற்குக் கொண்டு போய்விடுவேன்.

கொஞ்ச நாள் என் பெயரைச் சொல்லி அழைத்துக்கொண்டிருந் தவர் திடீரென ஒருநாள் என்னைத் தம்பி என்று அழைக்க ஆரம்பித்தார். அப்படி அவர் வேறு யாரையும் அழைப்ப தில்லை. வைத்தி அண்ணன் வீட்டில் அவரது அப்பா கூட என்னோடு நெருக்கமாகிவிட்டார். சிலவேளைகளில் வைத்தி அண்ணனின் அப்பாவை அழைத்துக்கொண்டு

வங்கிக்குப் போய்வருவேன். வைத்தி அண்ணன் பற்றி அவரது அப்பா ஒரு முறைகூட குறைபட்டுக்கொண்டதேயில்லை.

வைத்தி அண்ணனை எங்கள் வீட்டிலும் யாவருக்கும் பிடித்துப் போய்விட்டது. அவர் என் அம்மாவை வழியில் எங்கே பார்த்தாலும் உடனே சர்பத் அல்லது காபி வாங்கித் தராமல் அனுப்பியதேயில்லை. எதற்காக வைத்தி அண்ணன் திடீரென திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று முடிவு செய்தார் என்று யாருக்குமே தெரியவில்லை.

ஒரு ஞாயிற்றுக்கிழமை, அவர் காலையில் கிளம்பிப் போகையில் பார்த்தேன். டாக்சியில் அவரும் அப்பாவும் கூட மணி ஜோசியரும் இருந்தார்கள். டாக்சியில் இருந்தபடியே என்னிடம் "செகண்ட் ஷோ படத்துக்குப் போகலாம். டிக்கெட் எடுக்கச் சொல்லிருக்கேன்" என்றார் வைத்தி அண்ணன். நான் தலை யாட்டிக்கொண்டேன். அன்று இரவு ஏழு மணி அளவில் ரயில்வே பாலத்திற்கு வந்து சேர்ந்த அவர் தனக்குக் கல்யாணம் நிச்சயமாகிவிட்டதைச் சொன்னார். எங்களால் நம்பமுடியவே யில்லை. "நிஜமா" என்று முருகன் வியப்படங்காமல் கேட்டான். "பேரு சாரங்கா. தையல் படிச்சிருக்கு. வீட்ல கடைசிப் பொண்ணு" என்றார்.

"அந்தப் பெண்ணைப் பிடித்துப் போனதற்கு சாரங்கா என்ற பெயர் ஒரு ராகம் என்பதுதான் காரணமா?" என்று முருகன் நேரடியாகக் கேட்டான். அண்ணாச்சி சிரித்துக்கொண்டே "ராகத்தோட சேர்ந்து வாழ்க்கைன்னா சுகம்தானடே" என்றார். அண்ணாச்சி கல்யாணம் மிக எளிமையாகவே நடந்தது. அன்று அந்தப் பெண் லிப்ஸ்டிக் பூசி மிக அலங்காரமாக உடையணிந்திருந்தாள். அண்ணாச்சி பவுடர்கூட பூசிக்கொள்ள வில்லை.

மறுவீடு விருந்திற்குப் போய்விட்டு திரும்பி வந்த மறுநாள் அண்ணாச்சி ஏதோ யோசனையோடு இருந்தார். முருகன் "ஏதாவது பிரச்சினையா?" என்று கேட்டான். "அதெல்லா மில்லை. ஐஸ் கம்பெனிக்கு வேலைக்குப் போகலாமானு இருக்கேன்" என்றார். "நீங்க எதுக்கு அண்ணாச்சி வேலைக்கு" என்றான் முருகன். "கல்யாணம் ஆகிருச்சில்லே முருகா. நானும் நாலு காசு பாக்கணும்லே" என்றார்.

அண்ணாச்சியால் ஐஸ் கம்பெனியில் பத்து நாட்கள் இருக்க முடியவில்லை. தானே ஒரு பெட்டிக்கடை துவங்கினார். அவர் பிறகு முன்பு போல பாலத்திற்கு வருவதையும் குறைத்துக் கொண்டார். ஒரு நாள் அவரைத் தேடி வீட்டிற்குப் போயிருந் தேன். வீட்டின் முன்பு ஒரே குப்பை. சாப்பிட்டுத் தூக்கியெறிந்து

வாடிய இலைகள். மாடிக்குப் போகலாம் என்று நினைத்தேன். அதை அவர் வாடகைக்கு விட்டுவிட்டார் என்றாள் சாரங்கா. அண்ணாச்சி வீட்டின் உள்ளே இருந்தார்.

நான் தயங்கித் தயங்கி உள்ளே சென்றேன். நாற்காலியில் அவளது அழுக்கான புடவை, பாவாடை சுருண்டு கிடந்தது. ஒரு பக்கம் காபி குடித்த டம்ளர். அலுமினியத் தட்டு கிடந்தது. பாயைப் பாதி சுருட்டிப் போட்டிருந்தார்கள். வீடு அலங்கோலமாக இருந்தது. தரையில் கிடந்த சீப்பில் அவளது கழிந்த தலைமயிர் சிக்கிக் கிடந்தது. சுவரில் தொங்கிய காலண்டர் தேதியைக்கூட கிழிக்கவேயில்லை. காய்கறி வெட்டிய குப்பைகள் அப்படியே கிடந்தன.

அண்ணாச்சி சமையல் அறையின் உள்ளே எதையோ கொதிக்க விட்டுக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் சிரித்தபடியே "தக்காளி சூப் வைக்கேன். குடிக்கியா?" என்று கேட்டார். "வேண்டாம். நான் கிளம்புறேன்" என்றேன். இரண்டு மாதங் களில் வீடு இவ்வளவு அழுக்கடைய முடியுமா என்று வியப்பாக இருந்தது. அதன் மறுநாள் அண்ணாச்சி முன்புபோல பாலத்திற்கு வந்திருந்தார். அவராகவே பேச ஆரம்பித்தார்.

சாரங்காவிற்கு வீட்டைச் சுத்தமாக வைத்துக்கொள்ளத் தெரியவில்லை. எந்த நேரமும் உறங்கிக்கொண்டேயிருக்கிறாள். கேட்டால் தலைவலி என்கிறாள். பேச்சுக்குப் பேச்சு சண்டை. அத்தோடு அவர் வெறும் ஆள் என்று சொல்லிக் காட்டுகிறாள் என்று வருத்தப்பட்டுக்கொண்டார். ஆனால் "அப்படித்தான் இருப்பாள். நாமதான் விட்டுக் கொடுத்து போகணும்" என்ற படியே, தன் மனைவி தையல்வேலை செய்வதில் கில்லாடி. தனக்கு ஒரு பூவேலைப்பாடுள்ள சட்டை தைத்து தந்திருக் கிறாள் என்று பெருமையோடு சொன்னார்.

அவளது உடைகளைத் துவைப்பதில் துவங்கி சமையல், கோலம்போடுவது. தண்ணீர் பிடித்து தருவது. மாவு அரைப்பது, விறகு வாங்கிவருவது, அவளைக் கோவிலுக்கு அழைத்துப் போய் வருவது வரை அவராகச் செய்துகொண்டிருந்தார். வீட்டை முன்பு போலவே சுத்தமாக மாற்றி வைத்துக்கொண் டார். ஆனால் அவரால் முன்பு போல யாரையும் பார்க்கப் பிடிக்கவில்லை. அவர் எங்களைப் பார்ப்பதையும்கூட குறைத்துக்கொண்டார்.

ஒரு நாள் சூர்யகாந்தி ஆஸ்பத்திரியின் முன்பாக அவர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். அவர் முகத்தில் தாடி வளர்ந்து போயிருந்தது. "என்ன ஆச்சு, உடம்புக்கு முடிய லையா?" என்று கேட்டேன். "சாரங்காவிற்கு டெலிவரி

என்று மருத்துவமனையில் சேர்த்திருக்கிறேன். இரவில் பிள்ளை பிறந்துவிடும்" என்றார். அன்றிரவு முழுவதும் அவரோடு மருத்துவமனையில் இருந்தேன். பின்னிரவில் பெண் குழந்தை பிறந்தது. அவர் உற்சாகம் தாங்கமுடியாமல் கைநிறைய சீனியை அள்ளி என் வாயில் திணித்தார். விடியும்வரை நாங்கள் பேசிக்கொண்டேயிருந்தோம். அண்ணாச்சி அந்த விடிகாலையில் மருத்துவமனையின் படிக்கட்டில் உட்கார்ந்து கொண்டு 'நேற்று வரை நீ யாரோ நான் யாரோ' பாடலை மிகக் கச்சிதமாகப் பாடினார்.

அது பொய்த்தொண்டையில் பாடப்படவேயில்லை என்று சொன்னேன். அண்ணாச்சி அதை ஏற்றுக்கொள்ளவேயில்லை. குழந்தை பிறந்த சில மாதங்களில் அவர் மனைவியின் ஊருக்குப் போய்விடப்போவதாகச் சொன்னார். அதன்பிறகு ஒரு வருடத்திற்கு வைத்தி அண்ணனைப் பார்க்கவேயில்லை. ஒரேயொரு முறை மதுரை நேதாஜி ரோட்டில் பார்த்தேன். ஒரு தலைச்சுமையோடு நடந்து போய்க்கொண்டிருந்தார். என்ன அது என்று கேட்டேன். தற்போது அவர் பெண்களுக் கான நைட்டி, காட்டன் சேலை வாங்கி விற்பதாகச் சொல்லிய படியே "உங்க அக்காவுக்கு நாலு வாங்கிட்டுப் போடா. விலை குறைச்சித் தர்றேன்" என்றார்.

அப்படி அண்ணாச்சி பேசியது அன்றுதான் முதன்முறையாகக் கேட்டேன். அண்ணாச்சியை அழைத்துப்போய் ரோஸ்மில்க் வாங்கிக் கொடுத்தேன். அவரது அப்பா இறந்துபோன விஷ யத்தை துக்கத்தோடு பகிர்ந்துகொண்டார். மறுபடியும் ஊருக் குத் திரும்பி வந்துவிடலாமா என்று நினைத்துக்கொண்டிருப்ப தாகச் சொன்னார். அவரது குரல், உடல்வாகு, உற்சாகம் யாவும் உருமாறியிருந்தது. பேச்சில் கள்ளத்தனமும் பொய்யும் கலந்துபோயிருப்பதை உணர்ந்தேன்.

அண்ணாச்சி மீது ஆத்திரமாக வந்தது. அவர் சொன்னது போலவே பங்குனி பொங்கலை ஒட்டி சொந்த ஊர் திரும்பி விட்டார். நான் சென்னைக்கு வேலை கிடைத்துப் போய்விட்ட தால் அவரைப் பார்ப்பது குறைந்துபோகத் துவங்கியது. பின்பு ஒரு முறை ரயில்வே நிலையத்தின் உள்ளே டிக்கெட் எடுக்க நின்றபோது அண்ணாச்சி வரிசையில் நின்றுகொண்டி ருந்தார். அவருடன் ஆறு வயது மகள் இருந்தாள். "பாசஞ்சர் ல்யா போறே?" என்று கேட்டார். "ஆமாம்" என்றேன். எனக்கும் சேர்த்து டிக்கெட் எடுத்தார். நானும் அண்ணாச்சியும் தூத்துக்குடிவரை ஒன்றாக ரயிலில் பயணம் செய்தோம்.

அவர் தனக்கு உடம்பு முடியாமல் போய்விட்டது என்றும்

ஒரு ஆயுர்வேத வைத்தியரைக் காண அடிக்கடி தூத்துக்குடி போய்வருவதாகச் சொன்னார். அத்தோடு பேச்சு சுருங்கிக் கொண்டது. பாப்பா என்ன படிக்கிறாள் என்று கேட்டேன். "ஒண்ணாம் வகுப்பு" என்றபடியே அவளிடம் "கண்மணி, உன் சித்தப்பாடா" என்று உரிமையுடன் என்னைக் காட்டிச் சொன்னார்.

எனக்கு அண்ணாச்சியை அப்படி காண மனவருத்தமாக இருந்தது. அந்தச் சிறுமி என் மடியில் வந்து உட்கார்ந்துகொண்டாள். நாங்கள் ரயிலில் பேசிக்கொண்டே வந்தோம். அவள் பேச்சு அப்படியே அண்ணாச்சி பேசுவதைப் போலவே இருந்தது. அதன்பிறகு வைத்தி அண்ணன் இறந்துபோன தகவல் கிடைத்தபோது நான் அமெரிக்காவில் இருந்தேன். ஐம்பது வயதுகூட நிறைவு கொள்ளவில்லை. அதற்குள் அவரது வாழ்வு முடிந்துபோய்விட்டது.

ஊர் திரும்பி வந்தபோது நண்பர்கள் அத்தனை பேரும் அவர் சாவிற்கு சாரங்கா தான் காரணம் என்றார்கள். அண்ணாச்சி அவள் பெயருக்கே தன் வீட்டை எழுதித் தந்துவிட்டார். அவள் அண்ணாச்சி இறந்து நாலு மாதம் ஆவதற்குள் வேறு ஒரு ஆளைத் திருமணம் செய்துகொண்டு விட்டாள் என்று சொன்னார்கள். எனக்கு சாரங்காவின் மீது ஆத்திரமாக வந்தது. அதன்பிறகு நான் அவளைப் பார்க்கவேயில்லை.

தற்செயலாக இன்றுதான் அவளைப் பார்க்கிறேன். அவள் அப்படியே இருக்கிறாள். பேருந்து கிளம்பி செல்லத் துவங்கியது. பின்னாடியிருந்து "சித்தப்பா" என்று ஒரு குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். கண்மணி நின்றுகொண்டிருந்தாள். அவள் ஆள் உயரமாக வளர்ந்திருக்கிறாள். அவள் சிரிப்பில் அப்படியே அண்ணாச்சியின் ஜாடை. மனது குபுக்கென உடைந்து கொட்டியது போலாகியது. அவள் கையைக் காட்டி அருகில் வரும்படியாக அழைத்தாள். கூட்டத்தை விலக்கிக் கொண்டு முன்னால் போனேன்.

அவள் தன் அம்மாவிடம் மிக உரிமையாக "சித்தப்பாம்மா" என்று சொன்னாள். சாரங்கா என்னை நிமிர்ந்து பார்த்துவிட்டு "உங்கப்பன் கூடவே பொறாந்தானாக்கும். பேசாம வாடி" என்று எரிந்து விழுந்தாள். கண்மணியின் முகம் சுருங்கிப் போய்விட்டது. நான் கண்மணியைப் பார்த்தபடியே நின்றேன்.

பேருந்தின் பின்வாசல் படிக்கட்டை ஒட்டி நின்றிருந்த ஓர் ஆள் என்னைப் பார்த்துப் புன்னகை செய்தான். கண்மணி

அவரைக் காட்டி "அவர்தான் எங்க புது அப்பா" என்று ரகசியமான குரலில் சொன்னாள். இவரைத்தான் சாரங்கா கட்டியிருக்கிறாளா என்று முறைத்தபடியே இருந்தேன். அவர் கூட்டத்தை விலக்கிக்கொண்டு என் அருகில் வந்து நின்றார்.

அவர் கையில் காய்கறி, பலசரக்கு சாமான்கள் வாங்கிய இரண்டு பைகள் இருந்தன. அவர் தணிவான குரலில் "நீங்க அவுகளுக்குப் பழக்கமா" என்று கேட்டார். கண்மணி மிக உரிமையாக "எங்க சித்தப்பா" என்றாள்.

அந்த மனிதர் ஆதங்கத்துடன் "எனக்குத்தான் அவுகளோட பழக்கமேயில்லை. அண்ணாச்சியைப் பத்தி எல்லாரும் ரொம்ப பெருமயாதான் சொல்றாங்க. நமக்குப் பாத்துப் பழக கொடுப் பினையில்லை" என்று சொன்னார். அப்படிச் சொல்வது மிக உண்மையாக இருந்தது.

அண்ணாச்சியின் மனதுதான் இப்படி ஓர் ஆளை அந்த சாரங்காவிற்குத் துணையாகத் தந்திருக்கிறதா? அவர்கள் இறங்க வேண்டிய இடம் வந்துகொண்டிருந்தது. அந்த மனிதர் என்னிடம் "நீங்க ஒரு தடவை வீட்டுக்கு வாங்க. அண்ணாச்சி புத்தகம், ரிக்கார்டு எல்லாம் மாடில அப்படியே இருக்கு. அதுல உங்களுக்கு வேண்டியதை எடுத்துட்டுப் போங்க. தூசி யடைஞ்சி போய்க் கிடக்கு" என்றார். நான் தலையாட்டிக் கொண்டேன். பேருந்து நின்றது. சாரங்கா விருட்டென இறங்கி வேகமாக முன்னால் நடந்துபோய்க் கொண்டிருந்தாள்.

கண்மணியின் கையைப் பிடித்துக்கொண்டு அந்த மனிதர் சுமக்க முடியாத பைகளோடு வெயிலில் நடந்துபோய்க்கொண் டிருந்தார். அது வைத்தி அண்ணாச்சி போவது போலவே இருந்தது. என்னால் அந்தக் காட்சியைத் தாங்க முடியவில்லை. பேருந்தை விட்டு அவசரமாக இறங்கினேன். சாலையோர வேம்பு ஒன்றின் நிழலில் போய் நின்றுகொண்டு மனத்துயரினை அடக்கமுடியாமல் கைக்குட்டையை வாயில்பொத்திக் கொண்டு விம்மத் துவங்கினேன். ஒரு காகம் மட்டுமே தலையைத் திருப்பி என்னைப் பார்த்துக்கொண்டிருந்தது.

# நடுவில் உள்ளவள்

வெயிலேறிக்கொண்டிருந்தது. இறந்துபோன அம்மாவின் உடலை மயானத்திற்குக் கொண்டுபோவதற்காகக் காலையில் இருந்தே காத்துக்கொண்டிருந்தோம். இன்னும் சியாமளா வந்து சேரவில்லை. அவள் சூரத்தில் இருந்து கிளம்பிவிட்டாள் என்று தகவல் வந்திருந்தது. விமானத்தில் வந்து மதுரையில் இறங்கி கார் பிடித்திருந்தால்கூட இந்நேரம் வந்திருக்கக்கூடும்.

துஷ்டி கேட்க வந்தவர்கள் ஆங்காங்கே மரநிழலில் தளர்ந்து போய் உட்கார்ந்திருந்தார்கள். தெருநாய்கூட குலைப்பதை மறந்து கிறங்கிப்போய் செம்மண்ணில் குழி பறித்துப் படுத்துக் கிடந்தது. வெயில்பட நின்றபடியே நீண்ட நேரமாகக் கொட்டுக் காரர்கள் வியர்த்துவழிந்து சட்டை உடம்பில் ஒட்டிக்கொள்ள, யாரும் கேட்காதபோதும் சாவு மேளத்தை உரத்து அடித்துக் கொண்டிருந்தார்கள். கொட்டுக்காரனின் அவிழ்ந்த வேஷ்டியில் இருந்து ஒரு காய்ந்த வெற்றிலை நழுவிக் கீழே விழுந்தது. அதைக் குனிந்து எடுத்தபோதுகூட அவன் மேளம் அடிப்பதை நிறுத்தவேயில்லை.

“கணவதி, இன்னும் எம்புட்டுநேரம் பாக்குறது, வெயில் இறங்கினதும் எடுத்திரலாம்லே” என்று அப்பாவு மாமா கேட்டார். அவரது முகத்தில் வியர்வை வடிந்து போயிருந்தது.

“நடுவுள்ளவ வந்திரட்டும். அம்மை முகம் பாக்காம கொண்டு போயிட்டா ஏங்கிப்போயிருவா. பிறகு தப்பா போயிரும்” என்றேன்.

“அப்படியில்லை கணவதி. ராத்திரி செத்துப்போன உடம்பு. நேரமாச்சின்னா தாங்காது. எல்லாரும் வேலைவெட்டியைப் போட்டுட்டு வந்திருக்காங்க. ஜோலியைப் பாத்துப் போகணும்ல” என்றார் மாமா.

"போன் பண்ணி பாக்கேன்" என்றபடியே நடந்து ஓரமாக வந்து நின்றேன்.

எத்தனை முறை போன் பண்ணுவது. ஒவ்வொரு முறையும் பாஸ்கர் அழுகையோடு "மச்சான் வந்துர்றோம். மயானத்துக்குக் கொண்டு போயிராதீக" என்று கரைந்து அழுத குரலில் சொல்வதைக் கேட்கும்போது கலக்கமாகவே இருக்கிறது. ஆனாலும் இறந்த உடலை வைத்துக்கொண்டு எவ்வளவு நேரம் காத்துக்கொண்டிருக்க முடியும். சாவை விடவும் சடங்கு சம்பிரதாயங்கள் அதிக மனநெருக்கடியைத் தருவதாகவே இருந்தன.

தெருவின் முனை வரை போய் ஒரு சிகரெட் பிடித்துவரலாம் போலிருந்தது. இறங்கி நடக்க ஆரம்பித்தேன்.

"மாமா, உங்களை அம்மா கூப்பிடுறா" என்று ஓடிவந்து சொன்னான் கலைவாணியின் மகன் செந்தில்.

பாதி பிடித்துக்கொண்டிருந்த சிகரெட்டை அணைத்தபடியே "நீ போடே, நான் வர்றேன்" என்று சொல்லிவிட்டு வேலிப் புதரோரம் ஒதுங்கி மூத்திரம் பெய்தேன். கடுகடுப்பாக இருந்தது. காலையில் இருந்தே தண்ணீர் குடிக்கவேயில்லை. அம்மா இறந்து போனது எனக்குள் எந்த அதிர்ச்சியும் உருவாக்கவில்லை. வெடித்து அழுகைகூட வரவில்லை. ஒருவேளை பிரிவு பழகிப்போயிருக்கிறதா என்று மனதிற்குள் தோன்றியது. செந்தில் நான் வரும்வரை நின்று கொண்டேயிருந்தான். சாலையில் கூடவே நடந்து வந்தபடியே கேட்டான், "மாமா, ஆச்சியை எப்போ எடுப்பாக?"

"எதுக்குடே" என்றேன்.

"ராத்திரி டுவெண்டி டுவெண்டி மேட்ச் இருக்கு. அத பாக்கணும். சூப்பர் மேட்ச்."

"அதுக்குள்ளே எடுத்திருவாங்க" என்றேன்.

வீட்டின் வாசலில் சிப்பிப்பாறையில் இருந்து வந்திருந்த பிரம்மநாயகம் மாமா நின்று கொண்டிருந்தார். ஆளைப் பார்த்தவுடன் அவரது முகம் துக்கமானது போல உருமாறியது. ஆதங்கத்துடன் கையைப் பிடித்துக்கொண்டு கலக்கமான குரலில் சொன்னார்,

"சீரும் சிறப்புமாக உங்கம்மா வாழ்ந்துதான் செத்துருக்கா. கலக்கப்படாதே, மனுசன் எம்புட்டு நாள் வாழ்ந்திர முடியும். பூமிக்கு பாரமில்லாம போய் சேந்தா சரிதான்"

அவரது உள்ளங்கையின் வியர்வை என் கையை நனைத்தது. துக்கவிசாரிப்பை விடவும் இதுபோன்ற நெருக்கம் வேறு நாட்களில் ஏற்படுவதேயில்லையே என்று ஆதங்கமாகத் தோன்றியது.

அவரோடு என்ன பேசுவது என்று தெரியாமல் கையைப் பிடித்தபடியே நின்றுகொண்டேயிருந்தேன். மொட்டை அடிப்ப தற்காக வந்து காத்திருந்த நாவிதர் கும்பிடு போட்டுவிட்டு வேலியோரமாகப் போய் உட்கார்ந்துகொண்டார்.

பிரம்மநாயகம் கையால் முகத்துக்கு நேராக விசிறியபடியே "எல்லாரும் வந்தாச்சா?" என்று கேட்டார்.

நான் தயக்கத்துடன் "நடுவுல உள்ளவ இன்னும் வரலை மாமா" என்றேன்

"அவ எங்கேயோ வடக்கிலேல்ல இருக்கா, சேதி சொல்லி யாச்சில்லே" என்று கேட்டபடியே வேஷ்டியால் முகத்தை துடைத்துக்கொண்டார்.

"கலர் குடிக்கிறீங்களா மாமா" என்று கேட்டேன்.

"அதைக் குடிச்சா ஏப்ப ஏப்பமா வரும். ஊர்ல இருந்து பஸ் கிடைக்கலை. இல்லேன்னா காலையில வந்திருப்பேன்" என்றபடியே வெயிலைப் பார்த்துக்கொண்டிருந்தார். அது தகதகவென ஒளிர்ந்துகொண்டிருந்தது.

டவுன் பஸ் வந்து நிற்கும் ஓசை கேட்டது. யாரோ ஒரு பெண் பேருந்தில் இறங்கி ரோட்டிலே மாரில் அடித்துக் கொண்டு "என்ன பெத்த மகராசி, என் சிவக்குளத்து பொறப்பே" என்று சப்தமாக அழுது புலம்பியபடியே வேகவேகமாக வந்துகொண்டிருப்பது தெரிந்தது. அம்மாவின் ஊரில் இருந்து வந்திருக்கிறாள் என்பது மாத்திரம் தெரிந்தது. ஆள் விபரம் தெரியவில்லை.

கலைவாணியின் மாப்பிள்ளை அருகில் வந்து நின்றபடியே சொன்னார்,

"வெயில் உரத்து அடிச்சா மழை வந்துரும்னு சொல்றாங்க. இப்போ என்ன செய்றது. சியாமளா இப்போதான் அவனியா புரம் தாண்டி இருக்கா. வர்றதுக்கு ஒரு மணிநேரமாகிரும்."

"ஒரு மணி நேரம்தானே மாப்பிள்ளை. பாக்கலாம்" என்றேன்.

பிரம்மநாயகம் துக்கம் விசாரிக்க வந்த வேறு ஒருவரோடு பந்தலுக்குள் போய் சேர்ந்து உட்கார்ந்துகொண்டு அன்றைய பேப்பர் செய்தியைப் பற்றி உரத்துப் பேச ஆரம்பித்திருந்தார்.

“மாமா, உன்னைய அம்மா கூப்பிட்டா. உள்ளே வருவியாம்.” என்று செந்தில் மறுபடியும் வந்து கூப்பிட்டான்.

ஹாலின் உள்ளே போனபோது கால்வைக்க இடமில்லாமல் ஆட்கள் உட்கார்ந்திருந்தார்கள். மூச்சு முட்டும் இறுக்கம். ஒரு பாதம் வைத்துக் கடந்து போகுமளவு இடைவெளி விட்டார்கள். கடந்து உள்ளே போனேன்.

அம்மாவைக் கூடத்தில் கிடத்தியிருந்தார்கள். இப்படி வீட்டில் அம்மா ஒரு நாளும் படுத்துக் கிடந்தவளில்லை. அதுவே என்னவோ போலிருந்தது. உடல் விரைப்பேறிப் போய்விட்டிருந்தது. அம்மாவிற்குப் பிடித்த மாம்பழக்கலர் சேலையைக் கட்டியிருந்தார்கள். தலைமாட்டில் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

சுற்றிலும் சரிந்த மாராப்பு சேலையோடு உட்கார்ந்து பெண்கள் பிலாக்கணம் வைத்துக்கொண்டிருந்தார்கள். ஹாலின் ஓரமாக ஞானம் பெரியப்பா ஓர் இரும்பு நாற்காலியில் சோர்வாக உட்கார்ந்திருந்தார். அவருக்கும் எழுபதைக் கடந்திருக்கிறது. சாவு அவரைப் பயமுறுத்தியிருக்கக்கூடும். தலைகவிழ்ந்தபடியே உட்கார்ந்திருந்தார். பின்வாசல் படிக்கட்டில் இரண்டு பெண்கள் உட்கார்ந்து கருப்பெட்டியைத் தட்டிக்கொண்டிருந்தது தெரிந்தது.

வேம்படியில் சமையல் நடந்துகொண்டிருந்தது. சப்பரம் கட்டுவதற்காக வாங்கி வந்திருந்த சாமந்திப்பூக்களை அள்ளி கறுத்த ஒடிசலான ஒரு பெண் கட்டிக்கொண்டிருந்தாள். ஹாலின் ஏதோவொரு மூலையில் கொளுத்தி வைக்கப்பட்டிருந்த சந்தனப்பத்தி சாவின் மணத்தை அதிகமாக்கிக் கொண்டிருந்தது.

வீட்டின் உள் அறைகளை விளக்குமாறால் கூட்டிவிட்டுப் பாயை போட்டிருந்தார்கள். சுவர் காரை உதிர்ந்துகொண்டே தானிருந்தது. ஓர் அறைக்குள் கலைவாணியின் மகள் விநோதினி மஞ்சள் சுடிதாரில் படுத்துக் கிடந்தாள். அருகில் அவளது இரண்டு வயது மகன் பிரபு உட்கார்ந்து பொம்மையை வைத்து விளையாடிக்கொண்டிருந்தான். அவளருகே வத்தலகுண்டில் இருந்து வந்திருந்த ஜெயா படுத்துக்கிடந்தாள்.

அவளை நீண்டநாளைக்குப் பிறகு இன்றைக்குத் தான் பார்க்கிறேன். தலை நரைத்துப்போனதும் பெண்களின் முகம் மாறிப்போய்விடுகிறது. ஜெயா எனக்கு இளையவள்தான். எனக்கு இந்த ஆகஸ்ட் வந்தால்தான் ஐம்பத்திரெண்டு முடிகிறது, அவளுக்கு நாற்பத்தியெட்டோ அல்லது ஐந்தோ

யிருக்கக்கூடும். ஆனால் தலை பஞ்சாக நரைத்துப் போயிருக்கிறது.

அவளும் வெக்கை தாளாமலிருக்க கையில் விசிறியை ஆட்டிய படியே சாய்ந்து கிடந்தாள். இந்த வீட்டிற்குப் பல வருடமாக வந்து போகாத அத்தனை பேரையும் அம்மா செத்து ஊருக்கு வரவழைத்திருக்கிறாள்.

கலைவாணி அம்மாவின் உடலின் அருகில் இருந்து எழுந்து சேலையால் முகத்தை துடைத்தபடியே உள்அறைக்குள் நடந்து வந்தாள்.

அவள்தான் எனக்கு நேராக இளையவள். அவளுக்கு அடுத்த வள் சியாமளா. கடைசி தங்கச்சி மேகலா. தம்பி ஸ்ரீதர். எல்லோரும் திருமணமாகி ஆளுக்கு ஒரு ஊரில் வசிக்கிறார்கள். ஒரு காலத்தில் இதே அறைக்குள் ஒரே போர்வையை நீளமாக விரித்து அத்தனை பேரும் படுத்துக் கிடந்திருக்கிறோம். இரண்டு தட்டில் ஐந்து பேரும் மாறிமாறி சாப்பிட்டிருக்கிறோம்.

கலைவாணி ரகசியம்பேசுவது போல சொன்னாள்

"யண்ணே, சியாமா வரலையாம்லே."

"ஆரு சொன்னது உனக்கு?"

"நானே அவ வீட்டுக்காரர்கிட்டே பேசினேன். அவரு மட்டும் தான் வர்றாராம்."

"எதுக்கு வரலயாம்."

"அவளுக்கு அம்மா மேல் கோவம்."

"அதுக்கு செத்ததுக்குக் கூடவா வராம போயிருவா."

"அவ புத்தி அப்படி.

"அவளுக்கு அம்மா மாதிரியே பிடிவாதம் ஜாஸ்தி."

"செத்துப்போன ஆளோட எதுக்குடி பிடிவாதம். அவ என்ன இன்னும் சின்னப்பிள்ளையா? அவளுக்கும் ரெண்டு பொம் பளை பிள்ளை இருக்கு. நாலு பேரு வந்து போயி இருக்க ணும்லே. ஏன் பைத்தியக்காரியா இருக்கா."

"அவ மாப்ளே, காலையில மதுரைக்கு வந்து தினகரன் வீட்டுல இருக்காராம். லேட்டா போயி பிரச்சினையைப் பண்ணனும்னு திட்டமாம்."

"என்ன பிரச்சினை பண்ணப் போறாங்களாம்."

"அவளை நாம யாருமே மதிக்கலையாம், நடுவில பிறந்தவனு

ஒதுக்கியே வச்சிருக்கமாம்."

"அப்படி யாரு சொன்னது?"

"அவளா நினைச்சிக்கிடுறா. நல்ல இடத்துல அவளுக்குக் கல்யாணம் பண்ணலையாம். சொத்து சுகம் எதுவும் இல்லாம ஆண்டியா பாத்துக் கட்டிக் குடுத்துட்டமாம்."

"அதுக்கு அம்மா என்னடி செய்வா?"

"பாஸ்கரு, அவ சொந்தம்லே. அப்பாவுக்குக்கூட பாஸ்கருக்குக் குடுக்கிறதுல இஷ்டம் இல்லே. அம்மாதானே பேசி முடிச்சி வச்சா."

"நீயும் ஏன்டி புரியாமப் பேசுறே. பாஸ்கர் மில்லுல வேலை செய்றான். ஏதோ வருமானம் கைக்குப் பத்தாம இருக்கு. ஆனா பொண்டாட்டி பிள்ளையை ஒழுங்காத்தானே வச்சி காப்பாத்துறான்."

"அதெல்லாமில்லை. அவளைப் போட்டு ரொம்ப அடிப்பாராம். ஒருக்கா கையை உடைச்சிருக்காரு. அவ சூரத்தில இருக்கா. அங்கே என்ன நடக்குதுன்னு நமக்கு யாருக்குத் தெரியும், பாவம்."

"உனக்கு மட்டும் எப்படித் தெரிந்தது."

"அது சுசி கல்யாணத்துக்கு வந்தப்போ அவளே சொன்னா. நடுவுல உள்ளவளா பிறந்துட்டா எல்லா கஷ்டத்தையும் அனுபவிச்சே தீரணும்னு எழுதியிருக்குனு வாய்விட்டு அழுதா. எனக்கே கஷ்டமா இருந்துச்சி."

"ஏன், நீயும் நானும் படாத கஷ்டமா. அது என்ன நடுவுல உள்ளவளை மட்டும் ஒதுக்கி வச்சிட்டாங்க."

"அப்படி சொல்லாதண்ணே. அவ சொல்றது நிஜம்தான். சியாமா எனக்கு ஒன்றரை வயசு கம்மி. அவளைச் சின்னதில இருந்தே யாரும் சரியா கவனிக்கலே. ஸ்கூல்ல படிக்கிறப்போ நான் படிச்ச புத்தகத்தைத்தான் படிச்சா. என் யூனிபார்மைத் தான் போட்டுக்கிடுவா. இவ்வளவு ஏன், அவ கொண்டுபோன டிபன் பாக்ஸ்கூட நான் கொண்டுபோனதுதான். அப்பா என்னை இன்ஜினீயருக்குக் கட்டிக் கொடுத்தாருல்லே. அப்படி அவளைக் கட்டிக் குடுக்கலையே."

"ஏன் மேகலாவைக்கூடத் தான் துரைக்கண்ணுவுக்குக் கட்டிக் கொடுத்தோம்."

"ஆனா அவரு கோளாறா பிழைச்சி மலேசியாவுக்குப்

போயிட்டாருல்லே. மாட்டுனது சியாமாதானே."

"அதுக்கு அம்மா மேல என்னடி கோவம்?"

"யாருக்குத் தெரியும். ஆனா ரெண்டு பேரும் பேசிக்கிடுறதே கிடையாது. ஐந்து வருசமாச்சி. ரெண்டு ரெண்டு கடுவா பூனைக."

"நிஜமாவா சொல்றே."

"ஆமாண்ணே. உனக்குத் தெரியாது. அண்ணிக்குத் தெரியும். ஒருநாள் அண்ணிகூட சியாமாவைக் கூப்பிட்டு சமாதானம் சொல்லிச்சி. அவ, உங்க ஜோலியைப் பாத்துட்டு போங்கன்னு திட்டிப் போட்டா. அவமானமா போச்சு."

"கலை, பாஸ்கர் நிஜமாவே மதுரைக்கு வந்து இருந்துக்கிட்டு நாடகம் ஆடுறானா."

"எனக்கு அப்படித்தான் தோணுது. தினகரன் வீட்டுக்கு நீயே போன் போட்டுக் கேளு. அம்மா செத்துப்போயிட்டா, இந்த வீட்டை வித்துப் பணத்தை எடுத்துக்கிடணும். அம்மா போட்டு இருக்க ஒத்தவடம் செயின், கம்மலு எல்லாம் அவளுக்கு மொத்தமா வேணுமாம்."

"அதுக்குப் போயி யாராவது பெத்த தாய் முகத்தைப் பாக்க வராம இருப்பாங்களாடி."

"அதான் நம்மவீட்லயே ஒருத்தி இருக்கால்லே. பொணத்தை வச்சிருந்தா பிரச்சினை ஆகிறப் போகுது."

"சரி நான் பாத்துக்கிடுறேன். நீ யார்கிட்டேயும் வாயைத் திறக்காம இரு." என்று வெளியே வந்தேன். அம்மாவின் உடலை இன்னமும் எடுக்கவேயில்லை. அதற்குள் வீட்டை விற்பதையும் அம்மாவின் நகையைப் பங்குபோடுவதையும் பற்றிய பிரச்சினை உருவாகிவிட்டது. சியாமா அப்படி நடந்து கொள்வாளா, இல்லை கலைதான் இப்படி இட்டுக்கட்டி சொல்கிறாளா? குழப்பமாக இருந்தது. உறவு கசக்கத் துவங்கி விட்டால் அதைப்போல மனவேதனை தருவது வேறு ஒன்றுமே யில்லை. கசகசப்பும் எரிச்சலும் வெயிலால் உண்டான கிறுகிறுப்பும் தலைவலியை உருவாக்கிக்கொண்டிருந்தது.

அம்மா நேற்றிரவு ஏழு இருபதிற்கு இறந்துபோய்விட்டாள் என்ற தகவலை அம்பலவாணன் போன் பண்ணி சொல்லிய போது அம்மாவோடு ஊரோடு உள்ள பந்தம் முடிந்து போனது என்ற எண்ணமே ஏற்பட்டது.

எந்தப் பிள்ளையின் வீட்டிலும் போயிருக்காமல் அம்மா

தனியாகவே வாழ்ந்தாள். அதுவும் அப்பா இறந்துபோன பிறகு வெள்ளை அடிக்காமல் விட்டுப்போய் காரை உதிர்ந்து சிதலமாகிப் போயிருந்த அந்தப் பழைய வீட்டின் ஓர் அறைக் குள்ளாகவே கெரசின் அடுப்பில் சமைத்துக்கொண்டு கிழிந்துபோன பாய் ஒன்றில் படுத்தபடியே பாதி திறந்து கிடந்த ஜன்னலுக்கு வெளியே தெரியும் மரக்கிளைகளைப் பார்த்த படியே வருடக்கணக்கில் படுத்துக்கிடந்திருக்கிறாள்.

பிடிவாதம்தான் முதுமையின் ஒரே பற்றுக்கோல் போலும். வயது அதிகமாக அதிகமாக அவளது பிடிவாதமும் ஏறிக் கொண்டே போனது.

"உனக்கு யார் மேலம்மா கோபம்?" என்று நானே கேட்டிருக் கிறேன். அதற்கு எரிந்து விழுவது போல சொல்வாள்,

"என்மேலதான் கோபம். வாழ்ந்து ஒரு சுகத்தையும் காணாம செத்துப் போகப்போறமேன்னு என் மேலதான்டா கோபம். அதுவும் கூடாது. இப்பவே சவம் மாதிரி வாயை மூடிக்கிட்டு கிடனு சொல்றா உன் பொண்டாட்டி. எனக்கு யாருமே வேணாம்பா. மண்ணுக்குள்ளே புதைச்ச பிறகுகூட யார் வரப்போறா. கோட்டிக்காரியா வாழ்ந்துட்டேன்னுதான்டா வயிற்று எரிச்சலா இருக்கு."

"ஏம்மா இப்படி பேசுறா உனக்கு என்ன குறைச்சல். வீடு இருக்கு. பிள்ளைக எல்லாம் படிச்சி வேலைக்குப் போயி வசதியா தானே இருக்கோம். பேரன் பேத்திகள் உன் மேல அன்பாத்தானே இருக்காங்க."

"தனக்கு வலிச்சாதான் தலைவலி நோவு புரியும். எனக்கு யாருமே வேணாம்பா. நாய்பிழைப்பு பிழைச்சிருக்கேன் பாரு. அதுக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும்" என்று தலையில் அடித்துக்கொள்வாள்.

அம்மா எதை நினைத்துப் புலம்புகிறாள் என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் பதினாறு வயதில் திருமணமாகி வந்து ஏழு பிள்ளைகளைப் பெற்று, இரண்டை சாகக் கொடுத்து, உருப்படியில்லாத அப்பாவை சமாளித்து சொந்தபந்தங்களின் பொறாமையை, பிரச்சினைகளை சமா ளித்து, பிள்ளைகளைப் படிக்கவைத்து நோய்நொடி பார்த்து, திருமணம் செய்து கொடுத்து, தன்னைக் கரைத்துக்கொண்டே வந்தவளுக்குத் திடீரென ஒரு நாள் உலகம் கசப்பேறிப் போய்விட்டது.

அப்பா இருந்தவரை அவரைப் பேசாத பேச்சேயில்லை. திட்டாத வசையேயில்லை. அவரை மட்டுமில்லை. வீட்டிற்கு

வரும் உறவினர்கள், பிள்ளைகளைக்கூட அவள் சுடுபேச்சால் விரட்டியிருக்கிறாள்.

முதிய வயதில் இதை நினைத்து அப்பா அழுவதைக் கண்டிருக் கிறேன். முதுமை எல்லோரது இயல்பையும் அழித்துவிடுகிறது. காய்ச்சல் கண்ட நாளில் நாக்கில் படும் அத்தனை உணவும் குமட்டுவது போல முதுமையின் ஏதோவொரு தருணத்தில் உலகம், நம்மைச் சுற்றிய மனிதர்கள், அவர்களின் சிரிப்பு, பேச்சு சப்தம். சாப்பாடு எல்லாமும் கசப்பேறிக் குமட்டத் துவங்கிவிடுகிறது போலும். அப்பா யாருக்கும் கேட்காதபடியே துண்டை வாயில் கொடுத்துக்கொண்டு அழுவார். அப்படி முப்பது வயதில் அப்பா அழுது ஒருபோதும் நான் பார்த்ததே யில்லை.

அன்று அவரது குரலில் இருந்த அதிகாரமும் வன்மமும் மெல்ல வடிந்து ஒடுங்கிப்போய் விட்டது. ஆனால் அது அம்மாவிடம் மாறிவிட்டிருந்தது. அம்மாவின் குரலில் அடிபட்ட பூனையிடம் காணப்படுவது போன்ற வெறி இருந்தது.

முதுமையில் அப்பாவும் அம்மாவும் பரமவிரோதிகளைப் போல சண்டையிட்டார்கள். எத்தனையோ ஆண்டுகளாகச் சேர்த்துவைத்த கோபத்தை அம்மா கொப்பளிக்கவிடுகிறாள் என்று அப்பாவிற்குத் தெரிந்தேயிருந்தது.

ஆனாலும் அவரால் சினத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அப்பாவின் சகல பலவீனங்களையும் அம்மா பரிகாசத்துடன் சுட்டிக்காட்டவும் ஆத்திரமாக விமர்சிக்கவும் துவங்கினாள். அப்பாவோ சாப்பாடு கிடைக்காமல் போய்விடக்கூடாதே என்ற நினைப்பில் அவமானத்தைத் தாங்கிக்கொள்ள ஆரம் பித்தார்.

இந்த துவேசத்தின் உச்சம்போல அப்பா ஒரு நாள் பொது மருத்துமனையில் போய் படுத்துக்கொண்டார். அம்மா அவரைப்போய் பார்க்கவேயில்லை. அவராக வீடு திரும்பி வந்தபோதும் அதைப்பற்றிக் கேட்டுக்கொள்ளவேயில்லை. வெறுப்பை விட மோசமான வியாதி என்ன இருக்கிறது.

பிள்ளைகள் தன்னைப் புரிந்துகொள்ளவேயில்லை என்ற ஏக்கம் அவருக்கு ஆழமாக இருந்தது. அதே ஏக்கம் பிள்ளை களுக்கும் அவர் மீதிருந்தது. ஆனால் அந்த ஏக்கம் ஆழமான வெறுப்பாக மாறியபோது சண்டைகளும் சச்சரவுகளுமே மீதமிருந்தன அதை சியாமா சரியாகவே அடையாளம் கண்டுகொண்டிருக்கிறாள்.

அவள்தான் அப்பாவின் சினத்தை தூபம் போட்டு வளர்த்தாள். அவரைத் தன்னோடு அழைத்து நாலு மாதம் உபசரித்து அனுப்பிய பிறகு அப்பாவின் தோற்றமே உருமாறிப்போயிருந்தது. அவர் பிள்ளைகள் அத்தனை பேர் மீதும் வெறுப்பைக் கக்கினார். தெரிந்தவர்கள், உறவினர்களிடம் சொந்த பிள்ளைகளைப் பற்றி ஆவலாதி சொல்லி சந்தோஷப்பட ஆரம்பித்தார். எந்தப் பிள்ளைகளுக்காகத் தான் வாழ்க்கையைச் செலவிட்டோமோ அவர்களைத் தன்னால் முழுமையாக நேசிக்க முடியவேயில்லை என்ற குற்றவுணர்ச்சி அவருக்கு ஏற்படவேயில்லை.

அவரது மரணம்தான் சியாமாவின் முதல்வெற்றி என்று தோன்றுகிறது. அன்றைக்கே வீட்டை விற்றுவிட வேண்டும் என்ற பேச்சை சியாமா துவங்கினாள்.

"நான் ரெண்டு பொம்பளைப் பிள்ளைய வச்சிக்கிட்டு நிக்குறேன். இந்த வீட்டை விற்று பாதி எனக்கு வந்து சேரணும்" என்றாள்.

அதைக் கேட்ட கலைவாணியின் கணவன் கோபப்பட்டு "ஏன் முழுசும் எடுத்துக்கோயேன்" என்று சொன்னார்.

அந்தப் பதிலைக் கேட்ட சியாமா உடனே அங்கிருந்த தனது தண்ணீர்குடத்தைத் தள்ளிவிட்டு ஓங்காரமா கதறி அழுது கூப்பாடு போட்டாள். பிரம்மநாயகம் மாமாதான் அவளைச் சமாதானம் செய்து வைத்துப் போனார். ஆனால் அந்த வெடி பலநாட்களாகப் புகைந்துகொண்டே இருந்து இன்றுதான் வெடிக்கப் போகிறது என்று தாதமாகவே புரிந்தது.

சியாமாவின் மீது ஆத்திரமாக வந்தது. நடுவில் உள்ளவளாகப் பிறந்தது யாருடைய தவறு. குடும்பத்தில் யாரும் வேண்டும் என்று அவளை நடத்தவேயில்லை. சூழல் அப்படி அமைந்துவிட்டதற்கு யாரைக் காரணம் சொல்வது. எதற்காக இவ்வளவு வெறுப்பை வளர்த்துக்கொண்டிருப்பது.

நினைக்க நினைக்க ஆத்திரமாக வந்தது. சியாமாவின் கணவன் வருவதற்குள் அம்மாவின் உடலை எடுத்துவிட வேண்டியதுதான் என்று ஏனோ தோன்றியது. வேகவேகமாக ஆட்களைத் துரிதப்படுத்தி சப்பரம் தயார் செய்யச் சொல்லிவிட்டு அடுத்த காரியங்களைச் செய்ய முயன்றேன்.

அழுதுகொண்டிருந்த பெண்களின் கூக்குரல் அதிகமானது. வெயில் மெல்ல அடங்கிக்கொண்டுவருவது போலிருந்தது. கொட்டுக்காரர்கள் உன்மத்தநிலையை அடைந்திருந்தார்கள். அந்த சப்தம் என்னை வெறியேற்றுவதாக இருந்தது.

பாஸ்கர் வந்துவிடக்கூடாது என்று ஆவேசமானவனைப் போல உள்ளும்புறமும் ஓடிக்கொண்டேயிருந்தேன்.

அம்மாவின் சவ ஊர்வலம் புறப்பட்டபோது சாலையில் ஏதோ டாக்சி வருவதுபோல தெரிந்தது. ஊர்வலத்தை நிறுத்த வேண்டாம் என்று சொல்லியபடியே நடக்க ஆரம்பித்தேன். வீட்டின் வாசலில் நின்று பெண்கள் அழுதுகொண்டே யிருந்தார்கள்.

ஊரின் வடக்கேயிருந்தது மயானம். பனைமரங்களும் ஒற்றை வேம்பும் இருந்த மயானப் பகுதியை நோக்கி செம்மண் சாலையில் சப்பரம் போகத் துவங்கியது. பூக்களை வாரி வாரி இறைத்தார்கள். மயானத்தில் அம்மாவை எரிப்பது என்று முடிவு செய்து வெட்டியான் தயாராக இருந்தான். உடலைக் கிடத்தி விறகுகள் சுற்றிவைத்து எருவட்டிகளை அடுக்கி வைத்துவிட்டு ஒற்றை எருவட்டியைக் கையில் வைத்தபடியே "கடைசியா முகம் பாத்துக்கோங்க" என்ற அவனது குரல் கேட்டபோது தூரத்துச் சாலையில் பாஸ்கர் வந்த டாக்சி தெரிந்தது. நான் கொள்ளிவைக்க ஆரம்பித்தேன்.

வேஷ்டி காற்றில் படபடக்க பாஸ்கர் அழுகையை அடக்க முடியாதவனாக ஓடிவந்து எரிந்துகொண்டிருந்த சிதையைக் கண்டபடியே "அவ்வளவு சொன்னனே, மச்சான், பத்து நிமிசம் பாடியை வச்சிருந்தா, முகம் பாத்து இருப்பனே. பிரயாசைப்பட்டு வந்தது வீணாப் போச்சே" என்று கதறினான்.

எதுவுமே தெரியாதவனைப் போல கேட்டேன்.

"சியாமா வரலையா?"

"அவ மூதி வரமாட்டேங்குதா. நானும் எவ்வளவோ சொல்லிப் பாத்துட்டேன். பிடிவாதமா ரூமுக்குள்ளே போயி கதவை மூடிக்கிட்டா. உங்க தங்கச்சியைப் பற்றித்தான் தெரியும்லே. எதுலயும் உடும்புப் பிடி."

"அப்போ மசிரு நீ மட்டும் எதுக்கு வந்தே?" என்று ஆத்திரமான குரலில் கேட்டேன்.

"என்ன மச்சான், பேச்சு ஒரு தினுசா போகுது" என்றான் பாஸ்கர்

"புருஷனும் பொண்டாட்டியும் சேந்துக்கிட்டு நாடகம் ஆடுறது தெரியாதுன்னு நினைக்கிறயா. செருப்பாலே அடிச்சிடுவேன். செத்தவீடுன்னு பாக்கேன். பேசாம போயிரு."

"மச்சான், பேசுறது எனக்கு ஒண்ணும் புரியலை."

“நடிக்காதடே. மரியாதையா போயிரு. இல்லே இங்கயே அடிச்சிச் கொன்னு போட்ருவேன்.”

“நான் கிளம்பறச்சே உங்க தங்கச்சி படிச்சி படிச்சி சொன்னா. நான்தான் கேட்கலை. நீங்க எல்லாரும் கூட்டுசேந்து அவ நடுவுல உள்ளவன்னு ஓரவஞ்சகம் பண்ணி, இருக்கிற சொத்து சொகத்தை எல்லாம் முழுங்கிட்டீக. மச்சான், அவ உடம்பில ஓடுறதும் உங்க ரத்தம்தான். ஆனா அவளை நீங்க கூடப்பிறந்த ஒரு பொறப்பா நினைக்கவே இல்லை. ஒரு மாசம் நிமோனியா வந்து படுத்துக்கிடந்தா. நீங்க ஒரு ஆளு அவளைப் பாக்க வந்தீகளா. கூட பிறந்து என்ன பிரயோசனம். உங்களை எல்லாம் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி வச்சது உங்க அப்பன். அவரு புத்திதான் உங்க எல்லாருக்கும் வரும். சியாமா உங்க அம்மா புத்தி. உங்க வீட்ல வந்து தப்பிப் பிறந்துருக்கு. மச்சான், நீங்களே எல்லா சொத்து சொகத்தையும் ஆண்டு அனுபவிச்சிக்கோங்க. ஆனா உங்க அம்மாவை நானும் பெத்த தாயாதான் இத்தனை வருசம் நினைச்சிக்கிட்டு இருந்தேன். அந்த முகத்தைப் பாக்கவிடாம பண்ணிட்டீங்களே, நீங்க உருப்படவே மாட்டீங்க. பொண்டாட்டி பிள்ளை எல்லாம் விளங்காமப் போயிரும். உங்களைக் கோர்ட்டுக்கு இழுக்காம விடமாட்டேன்” என்று கத்தினான்.

கோபத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் பாஸ்கரை மயானம் என்றும் பார்க்காமல் ஓங்கி முகத்தில் அறைந்தேன். அவன் கதறியபடியே மண்ணில் விழுந்தான். யாரோ ஓடிப்போய் அவனைத் தூக்கினார்கள்.

சியாமா இதற்குத்தான் ஆசைப்பட்டாள். உறவுகள் துண்டாடப் பட வேண்டும் என்றுதான் உள்ளூர விரும்பினாள். அப்படியே நடக்கத் துவங்கியிருக்கிறது.

எல்லோரும் என்னையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந் தார்கள். மச்சானை அடித்த குற்றத்தில் இருந்து எப்படி தப்பிப்பது என்று திகைப்பாக இருந்தது. சட்டென தலை கவிழ்ந்து வெடித்து அழ ஆரம்பித்தேன். அழுகையின் ஊடா கவே சியாமா வசதியில்லாதவள் என்பதற்காகப் பலநேரம் நாங்கள் அறிந்தே அவளை ஒதுக்கினோம் என்ற உண்மை மனதை அரித்துக்கொண்டேதானிருந்தது. அதை எப்படி மறைப்பது என்று தெரியாத குற்றவுணர்ச்சியோடு பெருங் குரலெடுத்து அழுதுகொண்டிருந்தேன்.

# ஜெயந்திக்கு ஞாயிற்றுக்கிழமை பிடிப்பதில்லை

மின்சார ரயில் வருவதற்கு இன்னும் நேரமிருந்தது. ஜெயந்தி வெங்காயம் வாங்கிய பிளாஸ்டிக் பையுடன் நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்தாள். சனிக்கிழமை மாலை என்பதால் அளவிற்கு அதிகமான கூட்டம். காதல் ஜோடிகள் சுற்றுப்புறம் மறந்து விரல்பிடித்துக்கொண்டு கொஞ்சிக்கொண்டிருந்தார்கள். ஜெயந்திக்கு ஞாயிற்றுக்கிழமைகள் பிடிப்பதேயில்லை. அந்த ஒருநாள் வராமல் அப்படியே தாவி திங்கள்கிழமை வந்துவிடாதா என்றுகூட நினைத்திருக்கிறாள். ஏனோ ஞாயிற்றுக்கிழமை அவளுக்குத் தண்டனை தினமாகவே இருக்கின்றது.

திருமணத்திற்கு முன்பு வரை அவள் ஞாயிற்றுக்கிழமைக்காக ஏங்கியிருக்கிறாள். அலுவலகம் போக வேண்டிய அவசரமில்லை என்பதால் காலை பத்துமணிவரை இழுத்து போர்த்திக்கொண்டு உறங்கியிருக்கிறாள். யாரும் அவளை எழுப்பியதேயில்லை. காலை சாப்பாட்டை விலக்கி நேரடியாக மதியச் சாப்பாடுதான். அதன்பிறகு அவளும் தங்கை மாலினியும் சீட்டாடுவார்கள். மாலினி தோற்கத் துவங்கினால் ஆட்டத்தைக் கலைத்துவிடுவாள். நாலு மணியளவில் ஜெயந்தி மீண்டும் உறங்கத் துவங்குவாள். ஐந்தரை மணிக்கு எழுந்து குளித்து அலங்காரம் செய்துகொண்டு அவளும் மாலினியும் சினிமாவிற்கோ அல்லது கோவிலுக்கோ செல்வார்கள்.

இரவு வீடு திரும்பும்போது மணி ஒன்பதரையாகியிருக்கும். மாலினி சாலையில் கதை பேசியபடியே நடந்து வருவாள். அவளுக்குப் பயமேயிருப்பதில்லை. அம்மா ஞாயிற்றுக்கிழமை இரவுக்கு என்றே விசேஷமான உணவைத் தயாரித்து

வைத்திருப்பாள். சாப்பிட்டுவிட்டு அருகருகே படுக்கையைப் போட்டுக்கொண்டு ரேடியோவில் பாட்டு கேட்டுக்கொண்டே அவளும் மாலினியும் கண் அயரும் வரை பேசிக்கொண்டிருப்பார்கள்.

அந்த ஞாயிற்றுக்கிழமைகள் யாவும் அவளது திருமணத்திற்குப் பிறகு மாயமாய் மறைந்துபோய்விட்டன. அருண் ஞாயிற்றுக் கிழமைகளில் வெளியே போக விரும்புவதேயில்லை. அது ஓய்வு நாள். ஆகவே முழுவதும் வீட்டிலே இருக்க வேண்டும் என்பான். அவளுக்கும் இப்போதெல்லாம் வெளியே போய்வர இஷ்டமில்லை. ஆனால் இவை எல்லாவற்றையும் விட ஞாயிற்றுக்கிழமையை அவள் வெறுப்பதற்கு முக்கியமான காரணம் ஒன்றிருந்தது. அது சாப்பாடு.

அருண் வீட்டில் ஞாயிற்றுக்கிழமை காலை எட்டுமணிக்கே அவனது அம்மா ஆட்டுக்கறி வாங்கி வந்துவிடுவாள். தலைக்கறி, ரத்தம், ஆட்டுஈரல், கொத்துக்கறி, ஆட்டுக்கால் சூப் என்று காலை டிபனுக்கே அசைவம் தயாராகிவிடும். மதிய உணவிற்கு நண்டு அல்லது மீன், அத்துடன் கோழிக்கறி. இரவில் கடையில் பரோட்டா வாங்கி வந்து மீதமிருக்கும் கோழிக்குழம்பு, வெங் காயமிட்ட கறிவறுவல்களுடன் அவர்கள் சாப்பிடுவார்கள்.

ஜெயந்தி பிறந்ததில் இருந்து அசைவம் சாப்பிட்டதேயில்லை. அவள் சுத்த சைவம். காய்கறிகளில்கூட கத்திரிக்காய் முட்டை யைப் போல இருக்கிறது என்று வீட்டில் வாங்க மாட்டார்கள். பட்டை, லவங்கம், கசகசா போன்ற மசாலா சாமான்களை அவள் முகர்ந்து பார்த்ததுகூட கிடையாது. ஒரேயொரு முறை அம்மாவிற்கு உடல்நலமில்லாமல் போனபோது நாட்டுக்கோழி முட்டையை பாலில் அடித்துக் கொடுக்கச் சொன்னார்கள். அதைச் சாப்பிடுவதற்கு அம்மா ஒத்துக்கொள்ளவேயில்லை. இன்றைக்கும் அதைச் சொல்லிக் காட்டுவாள்.

அம்மாவிற்காக வாங்கிய முட்டைகளை வீட்டுவேலைக்காரப் பெண்ணிற்குத் தூக்கிக் கொடுத்தார் அப்பா. பள்ளியில் அவளோடு படித்த வேலம்மாள் என்ற பெண் சாதத்திற்கு தொட்டுக்கொள்ள பொரித்த நெத்திலி கருவாடைக் கொண்டு வருவாள். அதனால் அவள் அருகில் யாரும் உட்கார்ந்து சாப்பிடவே மாட்டார்கள். ஆனால் அவள்தான் ஜெயந்தியின் தோழி. அதனால் இருவரும் ஒன்றாகத்தான் சாப்பிடுவார்கள். எப்படி வேலம்மாள் கருவாட்டை மென்று தின்கிறாள் என்று கூச்சத்துடன் பார்த்துக்கொண்டிருப்பாள் ஜெயந்தி.

சில வேளைகளில் வேண்டுமென்றே வேலம்மாள் தன் கையை முகர்ந்து பார்க்கும்படி செய்து ஜெயந்தியைப் பரிகாசம்

செய்வாள். கருவாடு சாப்பிட்ட கையில் அந்த நாற்றம் போகவே செய்யாது. அருணைக் காதலிக்கத் துவங்கியபோது அருண் என்ன சாப்பிடுவான் என்று ஜெயந்தி கேட்டுக் கொள்ளவேயில்லை. அவர்கள் காதலிக்கும் நாட்களில் பல முறை ஐஸ்கிரீம் சாப்பிட்டிருக்கிறார்கள். சில வேளைகளில் காபி டிபன் சாப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அருண் தினமும் அசைவம் சாப்பிடக்கூடியவன் என்பது அவளுக்குத் தெரியவே யில்லை.

ஒரேயொரு முறை பேக்கரியில் அருண் சிக்கன் ரோல் வாங்கி வந்தபோது ஜெயந்தி தயக்கத்துடன் “நான் அதை எல்லாம் சாப்பிட மாட்டேன், சைவம்” என்று சொன்னாள். அருண் இரண்டு சிக்கன்ரோலையும் தானே சாப்பிட்டபடியே “நீங்க ஐயரா?” என்று கேட்டான். “இல்லை. ஆனால் எங்கள் வீட்டில் யாரும் அசைவம் சாப்பிடுவதில்லை” என்று சொன்னாள் ஜெயந்தி. “அதனால் என்ன, உனக்குப் பிடிக்காட்டி நீ சாப்பிட வேண்டாம்” என்றான் அருண். சாப்பாடு அவரவர் பழக்கம். அதில் என்ன பேதமிருக்கிறது என்றுதான் ஜெயந்தியும் அன்று யோசித்தாள். ஆனால் இந்த இரண்டு வருடங்களில் ஏன் அன்று சாப்பாட்டை சிறிய விசயமாக நினைத்தோம் என்று தன்மீதே கோபப்பட்டுக்கொண்டிருக்கிறாள்.

அருணுக்காக அவள் எவ்வளவோ விட்டுக் கொடுத்திருக்கிறாள். அருண் வீட்டில் காலையில் யாரும் காபி குடிப்பதில்லை. டீதான். கல்யாணமான சில நாட்களில் அவள் பில்டர் காபி குடித்தே ஆக வேண்டும் என்று பிடிவாதமாக இருந்தாள். அருண் இதற்காக ஒரு காபி பில்டரை வாங்கித் தந்தான். ஆனால் அந்த காபி அம்மா தரும் காபி போலவே இல்லை என்று அவளுக்கு எரிச்சலாக இருந்தது. அத்தோடு அவள் காபி குடிப்பதை ஒரு குற்றமாகவே சொல்லிக்காட்ட ஆரம்பித் தார்கள். இரண்டு வாரத்தில் ஜெயந்தி தானும் டீக்குடிக்கப் பழகிவிட்டாள்.

ஜெயந்தி வீட்டில் இட்லிக்குத் தொட்டுக்கொள்ள மிளகாய்ப் பொடி கட்டாயமிருக்கும். அது அருண் வீட்டில் கிடையாது. கேட்டால் கேலி செய்வார்கள். அருண் வீட்டில் சாதம் வேகும் போது உப்பு போட்டுவிடுகிறார்கள். ஜெயந்தி வீட்டிலோ ஒரு போதும் உப்பிட்டு சாதம் சமைப்பதில்லை. ஜெயந்தி அம்மா தக்காளியை மிக அழகான வட்டமாக வெட்டிதான் சமைக்கப் பயன்படுத்துவாள். ஆனால் அருண் வீட்டில் அதைக் கையால் நசுக்கிப் பிழிந்துவிடுகிறார்கள். அருண் வீட்டில் ஒரே டம்ளரில் நாலு பேரும் தண்ணி குடிக்கிறார்கள். ஜெயந்தி வீட்டில்

அப்படி யாரும் செய்வதேயில்லை.

ஜெயந்தி வீட்டில் சாப்பிடும்போது பேசிக்கொண்டோ புத்தகம் படித்துக்கொண்டோதான் சாப்பிடுவார்கள். ஆனால் அருண் வீட்டில் சாப்பிடும்போது பேசினால் பிடிக்காது. ஜெயந்தி இப்படிக் கொஞ்சம் கொஞ்சமாக எவ்வளவோ விட்டுக் கொடுத்து தன்னை மாற்றிக்கொண்டுதானிருக்கிறாள். ஆனால் ஞாயிற்றுக்கிழமைகளில் அசைவத்திற்குப் பயந்து தான் மட்டும் பட்டினி கிடக்க அவளால் முடியவேயில்லை.

அருண் குடும்பத்தில் யாவரும் விரும்பி அசைவம் சாப்பிடு வார்கள். மீதமான மீன் துண்டுகளையும் சப்பிப்போட்ட மீன் முள்ளையும் தின்பதற்காகவே வீட்டில் மூன்று பூனை வளர்க்கிறார்கள் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். ஆனால் ஜெயந்தி மட்டுமே சைவம் என்பதால் அவளுக்காகத் தனியாக சமையல் செய்வது அவர்களுக்குப் பிடிப்பதேயில்லை.

அவள் வேண்டுமானால் தனக்காக எதையாவது செய்து சாப்பிட்டுக்கொள்ளலாம் என்று அருண் சொன்னான். ஆரம்ப நாட்களில் அதற்காக அவள் தனியாக சமையல் சாமான்கள், உணவுத்தட்டு, டம்ளர், கரண்டி யாவும் வாங்கி வைத்திருந்தாள். கீரை, காய்கறிகளை வேகவைத்து சாப்பிடுவாள். ஆனால் அது அசூயையாக இருந்தது. தான் ஏதோ முகமறியாத ஒருவர் வீட்டில் தங்கியிருப்பதைப் போன்ற உணர்வை ஏற்படுத்தியது.

அத்துடன் ஒரு ஆளுக்காக சமைத்துச் சாப்பிடுவது அவளுக்கே பிடிக்கவில்லை. பெரும்பான்மை ஞாயிற்றுக்கிழமைகளில் இரண்டு வேளையும் ரொட்டித்துண்டையும் ஊறுகாயும் வைத்து ஓட்டிவிடுவாள். இரவுக் கடையில் பரோட்டா வாங்கிவரும்போது அவளுக்காக மூன்று இட்லி வாங்கிவருவான் அருண். அதை சீனி வைத்து சாப்பிட்டு நாளைக் கடத்தி விடுவாள். அதனால்தானோ என்னவோ அவளுக்கு ஞாயிற்றுக் கிழமை என்றாலே ஆத்திரமாக வருகிறது.

அருண் வீட்டில் அவளை யாரும் அசைவம் சமைக்கச் சொல் வதோ, சாப்பிடச் சொல்லிக் கட்டாயப்படுத்துவதோயில்லை. ஆனால் அருண் மசாலாவை அம்மியில் அரைத்துதான் குழம்பு வைக்க வேண்டும் என்பதில் கறாராக இருப்பவன். ஆகவே காலையில் எழுந்து அம்மியில் மல்லி, கசகசா, பட்டை, சோம்பு, தேங்காய் என்று பெரிய கவளம் அளவிற்கு மசாலா அரைக்க வேண்டும். அந்த வாசனை அவள் குடலைப் புரட்டும். ஆனால் அவள் அதைச் செய்யாமல் மறுக்கவே முடியாது. அது முடிந்தவுடன் அரைக்கிலோ வெங்காயம்

உரிக்க வேண்டும். கால்கிலோ வெள்ளைப்பூண்டு உரிக்க வேண்டும். இதன் ஊடாகப் பெரிய அலுமினியக் கிண்ணத்தில் நீண்ட ஆட்டுக்குடலை அருண் அம்மா கழுவுவதைப் பார்ப் பதே அவளுக்குத் தலைசுற்றலை உண்டாக்கிவிடும். மதியம் வரை சமையல் அறையில் மூன்று பெண்கள் பரபரப்பாக வேலை செய்துகொண்டிருப்பார்கள்.

அருண் டி.வி. பார்த்தபடியே ஆட்டுக்கால் சூப் குடித்துக் கொண்டிருப்பான். அவனது அப்பா சமையல் அறைக்குள்ளாக ஸ்டூலைப் போட்டு உட்கார்ந்துகொண்டு கறி வேகும்போதே கொஞ்சம் கொஞ்சமாகக் கரண்டியில் எடுத்து தின்று பார்த்தபடியே இருப்பார். தங்கை சாதத்தில் கறியைப் போட்டு புரட்டி சாப்பிடுவாள். ஜெயந்தியால் அந்தக் காட்சிகளைத் தாங்கிக்கொள்ள முடியவேயில்லை.

அவள் நிறைய நேரம் கழிப்பறைக்குள் போய் கதவை மூடிக்கொண்டு நின்றபடியே இருப்பாள். தாங்கமுடியாத சில வேளைகளில் அருணிடம் தன் அம்மா வீட்டிற்குப் போய்வரட்டுமா என்று கேட்டிருக்கிறாள். ஆரம்ப நாட்களில் அதை அனுமதித்த அருண், பிறகு அப்படிப் போய்வருவது தனக்குப் பிடிக்கவில்லை என்று நிறுத்திக் கொள்ளச் சொல்லி விட்டான்.

திருமணமான மூன்றாம் நாள் அவர்கள் இருவரையும் அருணின் சித்தப்பா வீட்டிற்கு மதிய விருந்திற்கு அழைத்திருந் தார். அதுவும் ஒரு ஞாயிற்றுகிழமையே. அருணும் அவளும் பைக்கில் மேடவாக்கத்திற்கு மதியம் பனிரெண்டு மணியளவில் போய்ச் சேர்ந்தார்கள். புதிதாகக் கட்டிய வீடு என்பதால் அதைப் பற்றிப் பெருமையாகச் சொல்லிக்கொண்டிருந்தார் அருணின் சித்தப்பா. அவளுக்கு யாரோடு என்ன பேசுவது என்று தெரியவில்லை. அவர்களில் எவர் பெயரும்கூட அவளுக்குத் தெரியவில்லை. வீட்டில் இருந்த பெண்கள் சமையல் அறையில் ஏதோ வேலையாக இருந்தார்கள்.

ஜெயந்தி டி.வி. ஸ்டேண்டில் கிடந்த பெண்கள் பத்திரிகை ஒன்றைக் கையில் எடுத்து வைத்தபடியே படம் பார்த்துக் கொண்டிருந்தாள். இரண்டு மணிக்குச் சாப்பிட உட்கார்ந்தார் கள். இலை நிறைய சாதம் போட்டுக் குழம்பும் கறியுமாக அள்ளிப் போட்டாள் ஒரு பெண். ஜெயந்தி தான் சைவம் என்று சொல்வதற்கு முன்பாக இலையில் நிறைய மீனும் கறியும் நிரம்பிவிட்டது. வழிந்தோடும் குழம்பும் எண்ணெய் மினுங்கும் கறித்துண்டுகளும் அவளுக்குக் குமட்டலை உருவாக்கின.

அவள் இலையை வெறித்துப் பார்த்தபடியே இருந்தாள். அருண் தயக்கத்துடன் அவள் கறிசாப்பிட மாட்டாள் என்று சொன்னான். சித்தி பொய்யான வருத்தத்துடன், "அய்யய்யோ, நான் வேற ஒண்ணும் செய்யலையே. ரசம், மோரு மட்டும் தானே இருக்கு. அப்பளம் வேணும்னா பொரிக்கட்டுமா?" என்று அருணிடம் கேட்டாள். "பரவாயில்லை" என்று சொல்லிய அருண், "சும்மா சாப்பிட்டுப் பாரு. பிடிக்காட்டி வச்சிரு" என்று கடுகடுத்த குரலில் ஜெயந்தியிடம் சொன்னான்.

என்ன செய்வது என்று தெரியாமல் இலையைப் பார்த்தபடியே இருந்தாள். "சாப்பிடாம எழுந்திரிச்சா அவங்களை அவமானப் படுத்தின மாதிரி ஆகிரும். வெறும்சோற்றை மட்டுமாவது நாலு வாய் சாப்பிடு" என்றான் அருண். வேறுவழியில்லாமல் வெறும்சோறாக உருட்டி அவள் இரண்டு வாய் சாப்பிட்டாள். அவளையும் மீறி குமட்டில் பொங்கிக்கொண்டுவந்தது. எழுந்து ஓடி வாஷ்பேசினில் வாந்தி எடுத்தாள். ஒரு பெண் எலுமிச்சைப் பழம் கொண்டுவந்து தந்து முகர்ந்துகொள்ளத் தந்தாள். அதுவும்கூட பொரித்த மீனுக்குச் சுவையூட்ட வாங்கியது என்பதால் முகர்ந்து பார்க்கவே தயக்கமாக இருந்தது. ஜெயந்தி தலையைப் பிடித்தபடியே பின்வாசலில் உட்கார்ந்துகொண் டாள். அருண் நிதானமாகச் சாப்பிட்டு முடித்து வெற்றிலை போட்டுக்கொண்டிருந்தான்.

"நாளைக்கு நீ தனியா வீடு பார்த்துப் போனா கறிக்கு ஏங்கிப்போயிருவே அருண். உன் பொண்டாட்டிதான் கவிச்சி சாப்பிட மாட்டேங்கிறாளே" என்று கேலி செய்து கொண்டிருந் தார்கள். "அதுக்கு என்ன சித்தி, நான்தான் சமைப்பனே" என்று அருண் சொன்னான். அது உண்மைதான். அருண் மட்டுமில்லை, அவனது அப்பாவும்கூட நன்றாக அசைவம் சமைக்கக்கூடியவர்கள்தான். ஆனால் மற்ற நாட்களில் அவர்கள் சமையல் அறைப்பக்கம் எட்டிக்கூட பார்ப்பதேயில்லை. மேடவாக்கத்தில் இருந்து வீடு வந்து சேரும்வரை ஜெயந்தியைத் திட்டிக்கொண்டே வந்தான் அருண்.

அவள் மௌனமாகக் கேட்டுக்கொண்டு வந்தாள். "இனிமே நீ எங்கே வந்தாலும் கூடவே சாப்பாட்டை ஒரு டிபன்பாக்ஸில் போட்டுக் கொண்டுகிட்டு வந்துரு. உன்னாலே நான் அவ மானப்பட முடியாது" என்று கத்தினான். அன்றிரவு நெடுநேரம் ஜெயந்தி அழுதுகொண்டிருந்தாள். அன்போடும் அக்கறையோ டும் நடந்துகொள்ளும் அருண் இந்த ஒரு விஷயத்தில் மட்டும் அவளிடம் இவ்வளவு கோபமாக நடந்துகொள்வதை அவளால் தாங்கிக்கொள்ள முடியவேயில்லை.

ஒருவேளை அசைவத்தை வெறுப்பது தனது குறையோ என்றுகூட நினைத்திருக்கிறாள். இதற்காகவே ஒரு நாள் யாரும் அறியாமல் அலுவலகத்தின் எதிரில் உள்ள தேநீர் கடைக்குப் போய் முட்டை பப்ஸ் வாங்கி வந்து கொஞ்சம் கடித்துப் பார்த்தாள். ருசியை விடவும் மனசாட்சி உறுத்தத் துவங்கியது. அப்படியே தூக்கி எறிந்துவிட்டாள். அவளோடு வேலை செய்யும் கிருத்திகா தான்கூட திருமணத்திற்கு முன்பு வரை அசைவம் சாப்பிட்டதில்லை. இப்போது வாரம் தவறாமல் சிக்கன் பிரியாணி சாப்பிடுகிறேன் என்று சொல்லி, அதெல்லாம் பெரிய விசயமில்லை என்றாள். மற்றவர்களால் எளிதாக மாறிவிட முடிகிறது. தன்னால் ஏன் அப்படி முடிய வில்லை என்று தன்மீதே அவளுக்கு ஆத்திரமாக வந்தது.

ஒரு முறை அருணிடம் அவள் அசைவம் சாப்பிடாமல் இருப்பது அவனுக்குக் கோபமா என்று கேட்டாள். "அதெல்லா மில்லை. ஆனால் நீ அதை வெறுப்பதுதான் பிடிக்கவில்லை. உனக்கு வெண்டைக்காய், கொத்தவரங்காய் எப்படியோ அப்படித்தான் எனக்கு மீனும் கோழியும். அதில் என்ன தப்பிருக்கிறது?" என்றான் அருண். அன்று முழுவதும் அருண் சொல்வதுதான் சரி என்று தனக்குத்தானே சொல்லிக்கொண் டாள். ஆனாலும் அவளால் அந்த வாசனையைத் தாங்கிக் கொள்ள முடியவேயில்லை.

அருண் அதன் காரணமாகவே என்னவோ மற்ற நாட்களைப் போலின்றி ஞாயிற்றுக்கிழமைகளில் சுபாவம் மாறிவிடுகிறான். அருணைக் காதலித்தபோது இதைப் பற்றி எதுவும் அவள் நினைத்துப் பார்க்கவேயில்லை. சில வேளைகளில் ஏன் அவனைக் காதலித்தோம் என்றுகூட யோசித்திருக்கிறாள். அப்பா பார்த்துத் திருமணம் செய்து கொடுத்திருந்தால் நிச்சயம் அசைவம் சாப்பிடும் ஆளைக் கட்டியிருக்க மாட் டோம். ஆனால் சைவம் மட்டும் சாப்பிடும் ஒரு ஆள் முரடனாக, அயோக்கியனாக, ஏமாற்றுக்காரனாக இருந்து விட்டால்? அவளுக்குத் தான் காதல் திருமணம் செய்துகொண் டது குறித்த ஒரு தடுமாற்றம் எப்போதும் இருந்துகொண்டே யிருந்தது.

ஒருநாள் அம்மாவிடம் இதைப்பற்றிச் சொல்லி அழுதாள். அம்மா தீர்க்கமான மனதுடன் "ஆம்பளைங்க அப்படித்தான் இருப்பாங்க. ஆம்பளை ருசியைத்தாண்டி நாம ஏத்துகிடணும். நம்ம நாக்குக்குன்னு தனியா எந்த ருசியும் இருக்கக்கூடாது. ஊர்ல எங்க பாட்டி ஒருத்தி இருந்தா. அவளுக்குப் பத்துவயசில கல்யாணம் நடந்திருச்சி. அவ வாழப்போன வீட்டில பொம்

பளைப் பிள்ளைங்க சாப்பிடும்போது வாய் மெல்லுற சத்தம் கேட்கக் கூடாதுன்னு சொல்வாங்களாம். அதனாலே பாட்டி எல்லாத்தையும் கோழி போல முழுங்கப் பழகிட்டா. அவ புருஷன் பதிமூணு வயசில செத்துட்டான். பாட்டி எண்பது வயசு வரைக்கும் இருந்தா. ஆனா ஒரு நாள் கூட சாப்பாட்டை மென்று ருசித்து சாப்பிட்டதில்லை.

செத்துப்போன புருஷன் ஆவியாக வந்து பக்கத்தில் உட்காந்து பாத்துக்கிட்டு இருக்கிறமாதிரியே பயந்துக்கிட்டு சாப்பிடுவா. நல்லவேளை, நாம எல்லாம் மென்று சாப்பிடுறோம். எல்லாத் தையும் சகிச்சிக்கிட்டுதான் போகணும். நான் வேற என்ன சொல்றது" என்றாள். அதைச் சொல்லும்போது அம்மாவும் அழுதாள். அதன்பிறகு தான் ஜெயந்தி ஞாயிற்றுக்கிழமைகளில் தனிச்சமையல் செய்து சாப்பிடுவதைக் கைவிடத் துவங்கினாள்.

அருணைக் காதலித்த நாட்களில் அவள் நிறைய கனவு கண்டிருந்தாள். அவர்கள் காதலித்ததுகூட மிக இயல்பாகவே நடந்தது. ஜெயந்தி வீட்டின் மாடியில் உள்ள தாமோதரன் சாரைப் பார்க்க அருண் வந்த நாட்களில் அவர்களது காதல் துவங்கியது. முதன்முதலில் அருண்தான் அவளைக் காதலிப்பதாகச் சொன்னான். ஜெயந்திக்கு அதை ஏற்றுக் கொள்வதா வேண்டாமா என்று குழப்பமாக இருந்தது. அவள் இரண்டு நாட்கள் வரை பதில் சொல்லவேயில்லை.

மூன்றாம் நாளில் அருண் வேலை செய்யும் வங்கிக்கே சென்றாள். அருண் அதை எதிர்பார்க்கவேயில்லை. அவன் கம்பி வலையிடப்பட்ட கூண்டிற்குப் பின்னிருந்து அவளைப் பார்த்து சிரித்தான். பிறகு அவன் வெளியேறி வரும்வரை அவள் வங்கியில் ஒட்டப்பட்டிருந்த விளம்பர வாசகங்களையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

அருண் உள்ளேயே தலை சீவி பவுடர் அடித்துக்கொண்டு வந்திருப்பது பார்த்தவுடனே தெரிந்தது. அவள் சிரித்துக்கொண் டாள். அருண் மெல்லிய குரலில் "இன்னைக்குக் காலைல உன்னை ரயில்ல பார்க்கவேயில்லை. நீ வரலையோனு நினைச் சேன்" என்றான் அவள் பதில் சொல்லாமல் "நாம எங்க போகலாம்" என்று கேட்டாள். அருண் ஒரு நிமிடம் யோசித்து விட்டு "பக்கத்தில் ஒரு ஜூஸ் கடை இருக்கு" என்று சொன் னான். ஜெயந்தி தலையாட்டிக்கொண்டாள். இருவரும் நடந்து சாலையோரம் உள்ள ஒரு ஜூஸ் கடையின் முன்னால் போய் நின்றுகொண்டார்கள். அருண் உரிமையோடு அவள் கையைப் பிடித்துக்கொண்டு "தேங்க்ஸ்" என்று சொன்னான்.

அவள் தன் மனதில் இருப்பதை இன்னமும் சொல்லவே யில்லை. ஆனால் எதற்காக தேங்க்ஸ் சொல்கிறான் என்பது போல பார்த்தாள். அருண் அவளுக்கும் ஒரு சப்போட்டா ஜூஸ் வாங்கினான். அவளுக்கு சப்போட்டா பழங்களைப் பிடிக்காது. வீட்டில் அப்பா வாங்கி வந்தால் தொட்டுக்கூட பார்க்க மாட்டாள். ஆனால் அருண் வாங்கித் தந்தான் என்பதற்காக அதை உதட்டில் வைத்துக் கொஞ்சமாக உறிஞ்சி விட்டு "ரொம்ப சில்லுனு இருக்கு" என்று நடிக்கத் துவங்கினாள்.

அருண் தன்னுடைய வேலை, பதவி உயர்வு மற்றும் அவன் சேமிப்பு பற்றிப் பேச ஆரம்பித்தான். சாலையில் போகின்ற வருகின்றவர்கள் தங்களைக் கவனிக்கிறார்களோ என்று ஜெயந்திக்குக் குழப்பமாக இருந்தது. அடிக்கடி சாலையை வெறித்துப் பார்த்துக்கொண்டாள். அருண் மட்டுமே பேசிக் கொண்டிருந்தான். இடையிடையே ஜெயந்தி சிரித்துக்கொண் டாள். உள்ளூர அவளுக்கு நடுக்கமாக இருந்தது. பிறகு தனக்கு வங்கியில் வேலையிருக்கிறது என்று சொல்லி அவளைப் பேருந்தில் ஏற்றி அனுப்பிவிட்டு அருண் புறப்பட்டுப் போனான்.

தனியே பேருந்தில் வரும்போது தான் காதலிக்கத் துவங்கியிருக் கிறோம் என்பது ஜெயந்திக்குப் பெருமிதமாக இருந்தது. வீடு வந்து சேரும்வரை கனவில் பீடிக்கப்பட்டவளைப் போலவே இருந்தாள். வீட்டில் அன்று அவளாகப் பழைய பாடல்களைப் பாடியபடியே அம்மாவிற்குக் காய்கறி நறுக்க ஒத்தாசை செய்தாள். உறக்கம் வரும்வரை அருண் பெயரை ஒரு நோட்டில் எழுதிக்கொண்டிருந்தாள். இதுபோன்ற சந்திப்பு அதன் பிறகு வாரம் மூன்று நாட்கள் நடந்தது. அப்போதுதான் முதன்முறையாக அருண் ஸ்வாகத் உணவகத்தை அவளுக்கு அறிமுகம் செய்து வைத்தான். மரங்கள் அடர்ந்த உணவகமது. மைசூரில் இருந்து வந்த அப்பாராவ் அதை எண்பது வருடங் களுக்கு முன்பு துவக்கியிருக்கிறார்.

ஒரு காலத்தில் அங்கே சினிமா நடிகர்கள்கூட சாப்பிட வருவார்கள் என்று அருண் சொன்னான். ஆனால் அவள் வரத்துவங்கிய பிறகு ஒரு நாள்கூட நாலைந்து பேருக்கு மேல் அங்கே பார்த்ததேயில்லை. ஸ்வாகத் உணவகத்தில்தான் அருண் முதன்முறையாக அவளை முத்தமிட்டான். அவளால் அந்த முத்தத்தை முழுமையாக உள்வாங்கிக்கொள்ள முடிய வில்லை. சுற்றிலும் தன்னைப் பல நூறு கண்கள் வேடிக்கை பார்க்கிறதோ என்றுதான் தோன்றியது. ஒரு வருடம் அருணும் அவளும் காதலித்தார்கள்.

அந்த நாட்களில் அவள் வீட்டில் சமைத்த உணவை அருண் ருசித்துப் பாராட்டியிருக்கிறான். அவளது பிறந்த நாளுக்காக பத்தாயிரம் ரூபாய்க்குக் கடிகாரம் வாங்கித் தந்திருக்கிறான். அருண் மீது அப்போது இருந்த வசீகரம் திருமணமான ஆறே மாதங்களில் முற்றாக வடிந்துபோனது. இப்போது அவள் என்ன நிறத்தில் புடவை கட்டிக்கொள்கிறாள், என்ன சாப்பிடுகிறாள், என்ன மாத்திரைகள் சாப்பிடுகிறாள் என்று எதையும் அருண் கண்டுகொள்ளவேயில்லை.

அவனைப் பொறுத்தவரை காலை ரயில் நிலையத்தில் அவளைக் கொண்டுபோய் விடுவதோடு வேலை முடிந்து விட்டது. இரவு வீடு திரும்பத் தாமதமானால் சில வேளைகளில் ரயில் நிலையத்திற்கு வந்து நிற்பான். மற்றபடி அவனுக்கு ஒரு பெண்ணின் தேவை உடல் சார்ந்தே அதிகம் இருந்தது. அந்த முத்தங்கள், தழுவல்கள்கூட அவளுக்கு அலுத்துப் போயிருந்தது. அலுவலகத்தில் வேலை செய்துகொண்டிருக்கும் போது திடீரென இந்த யோசனை பீறிடத் துவங்கியதும் அவள் அதைப்பற்றியே நினைத்துக்கொண்டிருப்பாள். தன்னை மீறிக்கொண்டு அழுகை முட்டிக்கொண்டுவரும்.

நல்ல வேலை, சொந்த வீடு, வங்கிசேமிப்பு, அன்பான கணவன், அக்கறையான மாமியார்–மாமனார், காதல் திருமணம் என்று எல்லாமும் நன்றாகத்தானே இருக்கிறது. பின் ஏன் அழுகிறோம் என்று அவளாகத் தன்னைத் திட்டிக்கொள்வதும் உண்டு. ஆனாலும் சொல்லில் வெளிப்படுத்த முடியாத வருத்தம், வலி அவளை விட்டுப் போகவேயில்லை.

நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் அறிவிப்பு ஒலித்தது. ஜெயந்தி தன்னைச் சுற்றிலும் நின்றபடியே காதலித்துக்கொண்டிருந்த இளம்பெண்களை ஒரு முறை திரும்பிப் பார்த்துக் கொண்டாள். இவர்களில் எவள் தன்னைப் போல அவதிப்படப் போகிறாள் என்று தெரியவில்லை. சாலையோரம் உள்ள டீக்கடைகள், தள்ளுவண்டி உணவகங்கள், பேக்கரிகள், பேல்பூரி விற்பவன் என்று எல்லா இடங்களிலும் ஆண்களாக நின்றபடியே கையில் சிற்றுண்டியை வாங்கிச் சாப்பிட்டபடியிருக் கிறார்கள். பொது இடத்தில் அப்படி சாப்பிடும் பெண்கள் எவரையும் ஜெயந்தி பார்க்கவேயில்லை. ஏன் ஆண்களுக்கு மட்டும்தான் வயிறு இருக்கிறதா இல்லை, அவர்களுக்கு மட்டும்தான் பசித்தபோது தெருவில் நின்று சாப்பிடத் தெரியுமா. ஜெயந்தி இதைப்பற்றியும் நிறைய ஆதங்கப்பட்டிருக் கிறாள்.

ரயில் வந்து நின்றது. கூட்டத்தை தள்ளிக்கொண்டு ஜெயந்தி ஏறிக்கொண்டாள். ரயிலின் உள்ளேயும் காதலர்கள். ஒரு பெண் மடியில் காதலன் சாய்ந்துகிடந்தான். ஒரு பெண்ணை மற்றொரு ஆண் முகத்தை தடவியபடியே இருந்தான். நிறைய ஆண்–பெண்கள், நிறைய காதல்கள். அந்தப் பெண்கள் யாவர் மீதும் அவளுக்கு வருத்தமாக இருந்தது.

ரயிலை விட்டு இறங்கி சுரங்கப்பாதையின் வெளியே வந்தபோது அவல் விற்றுக்கொண்டிருப்பவன் கண்ணில் பட்டான். நாளைக் காலை உணவிற்கு ஊறவைத்த அவல் சாப்பிட்டு ஒப்பேற்றி விடலாமே என்று தோன்றியது. பிறகு அப்படி ருசியாக சாப்பிட்டு என்ன ஆகப் போகிறது. எப்போதும்போல ரொட்டியும் ஊறுகாயும் போதும் என்றபடியே வீட்டைநோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

தெருமுனையில் பூ விற்கும் பெண் அவளைக் கண்டதும் முல்லைப்பூவை நீட்டினாள். அது அருணிற்குப் பிடிக்கும். அதற்காகவே வாங்கித் தலையில் சூடிக்கொண்டு வீட்டை நோக்கி நடந்து போகத் துவங்கினாள். இப்போதுதான் அவளுக்கு வயது இருபத்தியாறு ஆகிறது. இன்னும் எவ்வளவோ வருடங்கள் மீதமிருக்கிறது. எப்படி வாழப்போகிறோம் என்ற நினைப்பு ஏனோ வீடு வரை கூடவே வந்துகொண்டிருந்தது.

# யட்சன் தனித்திருக்கிறான்

வீட்டில் தனித்திருக்கும் பகலைக் கடந்து செல்ல ஒவ்வொரு பெண்ணும் ஒரு உபாயத்தைக் கண்டுபிடித்திருக்கிறாள் போலும்.

அமெரிக்காவிற்குப் புதிதாகத் திருமணமாகிச் சென்றிருந்த ஊர்மிளாவிற்குப் பகல்பொழுதுகள் அலுப்பூட்டுவதாகயிருந் தது. முகுந்த் வேலை முடிந்து வருவதற்கு ஏழு மணியாகிவிடும். இப்போது மணி காலை பத்தரை ஆகிறது. மணல்கடிகாரத்தில் ஒவ்வொரு மணலாக விழுந்து காலம் கரைந்துபோவது போல நீண்ட பகல் முழுவதும் காத்திருக்க வேண்டும். அம்மா எப்படி இத்தனை வருடங்களாகப் பகலைக் கழித்திருப் பாள் என்று யோசனையாக வந்தது.

ஊர்மிளா கல்லூரியில் இளங்கலை படித்து முடித்தவுடன் அப்பா வாஷிங்டனில் வேலை செய்யும் முகுந்திற்கு திருமணம் செய்து கொடுத்துவிட்டார். அவளது வீடு ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பு. பூமியின் மிக உயரத்தில் வசிக்கிறோம் என்ற ஆர்வம் சில நாட்களில் வடிந்து போனது. நூற்றுப் பனிரெண் டாவது மாடியிலிருந்து உலகைக் காண்பது முதலில் வியப்பாக இருந்தது. இப்போது அது சலித்துப் போய்விட்டது. அந்தரத்தில் தொங்கிக்கொண்டிருப்பதுபோலவே இருக்கிறது. எங்கோ மிதந்தபடியே உறங்குவதாகவே தோன்றியது. நிறைய நிறைய வாகனங்கள். குமட்டும் மாமிச உணவுகள். செயற்கை வண்ண மூட்டம் கொண்ட கண்ணாடி அறைகள். பகட்டான நீரூற்று கள். நிரம்பிவழியும் வணிக மையங்கள். ஓய்வில்லாத தொலைக் காட்சி நிகழ்ச்சிகள். பந்தயங்கள். பரபரப்புச் செய்திகள். அமெரிக்காவின் அன்றாட வாழ்வு பணத்தைத் துரத்தியோடிக் கொண்டிருக்கும் அவசரத்தால் நிரம்பியதாகத் தோன்றியது.

அம்மாவிற்காவது உதவிக்கு அருகாமை வீடுகளில் பேசுவதற்கும் பழகுவதற்கும் ஆட்கள் இருந்தார்கள். ஆனால் ஊர்மிளாவிற்கு

அருகாமை வீடுகள் அடைத்தே கிடந்தன. அவர்கள் பேசும் அதிவேக ஆங்கிலம் அவளுக்கு வரவேயில்லை. அதனால் அவள் பகல் முழுவதும் வீட்டிற்குள்ளாகவே அடைந்து கிடக்க ஆரம்பித்தாள். அம்மா சொன்னதைப் போல தனித் திருக்கும் பகல் குழப்பங்களால் ஆனதுதான்.

சில வேளைகளில் பள்ளியில் இருந்து சீக்கிரமே ஊர்மிளா வீடு திரும்பும்போது அம்மா தாயக்கட்டைகளை உருட்டிக் கொண்டு இரண்டு பேராக விளையாடிக்கொண்டிருப்பதைக் கண்டிருக்கிறாள். யாரோ இன்னொரு ஆள்கூட இருப்பதுபோல கற்பனை செய்து கொள்வது எவ்வளவோ ஆறுதல் தருவதாகத் தானேயிருக்கிறது.

“ஏன் இப்படி வாய் ஓயாமல் எதையாவது பேசிக்கொண்டே யிருக்கிறாய்?” என்று கேட்டபோது அம்மா சொன்னாள்

“பகலில் தனியாக இருக்கும் பெண்களைத் தேடி ஒரு யட்சன் வந்துவிடுவான். அவன் பேச்சரவம் கேட்டால் வீட்டிற்குள் வர மாட்டான். இல்லாவிட்டால் நம்மை நெருங்கி வந்து வசியம் செய்து மயக்கிவிடுவான்.”

“யட்சனைப் பற்றி உனக்கு எப்படித் தெரியும்?” என ஊர்மிளா கேட்டாள்.

“கூடங்குளத்து அத்தை ஒருத்தியை அப்படி யட்சன் பிடித்துக் கொண்டுவிட்டான். அவள் நிறைய கதை படிக்கின்றவள். அவள் படித்த கதையில் இருந்தே யட்சன் வந்திருக்கிறான். அதன் பிறகு அவள் ஆளே மாறிவிட்டாள். எப்போதும் சீவி முடித்து சிங்காரம் பண்ணிக்கொண்டேயிருந்தாள். இன்னொரு ஆள் அந்த வீட்டில் இருப்பதாகவே சொல்லிக் கொள்வாள். அதனால் வீட்டில் ஏகப்பட்ட குழப்பம். சண்டை கள்” என்றாள் அம்மா.

அந்த யட்சன் எப்படியிருப்பான் என்று ஊர்மிளா கேட்ட போது அவனைப் பற்றிப் பேசவோ நினைக்கவோ கூடாது. நினைத்தால் உடனே வந்துவிடுவான் என்று அம்மா பயமுறுத்தி னாள் அதனாலே ஊர்மிளாவிற்கு அந்த யட்சனைப் பிடித்துப்போகத் துவங்கியது.

ருது எய்திய நாட்களில் தனித்திருக்கும்போது அந்த யட்சன் வருவானா என்று மனதிற்குள்ளாகவே அழைத்துப் பார்த்திருக் கிறாள். எந்த யட்சனும் அவளைத் தேடி வரவேயில்லை. ஒருவேளை திருமணமான பெண்கள் அழைத்தால் மட்டுமே வருவான் போலும் என்றபடியே அவள் அப்பெயரை மனதிற் குள் ஒளித்து வைத்துக்கொண்டாள்.

ஆனால் அன்றிலிருந்து பகலைக் காணும்போதெல்லாம் அதற்குள் ஒரு யட்சன் ஒளிந்து இருக்கிறான் என்பது அவளுக் குக் கிளர்ச்சியூட்டுவதாக இருந்தது. யட்சனை எப்படி வர வழைப்பது. எதற்குள் ஒளிந்திருப்பான் அவன். வெயிலின் ரேகைகளாக ஊர்ந்துகொண்டிருப்பது அவன்தானா. இல்லை, ஜன்னல் கதவுகள் தானே மூடித் திறக்கிறதே அது அவனது வேலைதானா. கொடியில் உலர்ந்த புடவைகளை யாரோ இழுத்துச் சுருட்டுவது போலிருக்கிறதே அதுவும் யட்ச வேலை தானா? அருகாமை வீட்டு மரத்தில் அமர்ந்துள்ள பறவை. தெருவில் கடந்து செல்லும் நடைசப்தம். திரைச்சீலைகளின் ஊசலாட்டம் எல்லாமும் யட்சனின் வெளிப்பாடுகள்தானா? யட்சன் பற்றி யோசிக்கத் துவங்கிய பிறகு பகல் அவளுக்கு அலுக்கவேயில்லை.

வாஷிங்டனுக்கு வந்த புதிதில் ஒரு நாள் மதியம் ஊர்மிளா எங்கிருந்தோ ஒரு பறவையின் குரலைக் கேட்டாள். மயக்கமூட் டும் வசீகரமது. அதன் குரல் மதியநேரத்தினைத் துளையிடு வதைப் போலிருந்தது. அது தன்னைப் போலவே தெருவில் தனித்திருக்கும் எல்லாப் பெண்களின் துயரத்தையும் ஒன்றாக்கி அழைப்பது போலிருந்தது. அது பறவையின் குரலில்லை. யட்சன் குருவியாகியிருக்கிறான். யட்சன் அழைக்கிறான். யட்ச சங்கீதமது. அது காமத்தின் அழைப்பு இல்லை. வீடு, குடும்பம் என்று ஒடுங்கியிருப்பதில்லை உன் இயல்பு. நீ ஒரு விகாசம், நீ ஒரு பெருமழை, நீ ஒரு வான்கோள், நீ ஒரு வல்லூறு என்று அந்த சப்தம் எதை எதையோ அவளுக்குள் நினைவுபடுத்துகிறது.

ஒரு நாள் பகல்வேளையில் அவள் அந்த யட்சன் எங்கேயிருக் கிறான் என்பதைக் கண்டுபிடித்துவிட்டாள்.

தண்ணீர்தான் யட்சனின் வீடு. எங்கெல்லாம் தண்ணீர் இருக் கிறதோ அங்கெல்லாம் யட்சன் இருக்கிறான். அதனால்தானோ என்னவோ பெண்கள் தண்ணீரோடு பேசுகிறார்கள். தண்ணீ ரைத் தனது உறவாகக் கொள்கிறார்கள். ஆண்கள் தண்ணீ ரோடு பேசுவதில்லை. அதைப் பயன்படுத்துவதிலே முக்கியத்து வம் கொண்டிருக்கிறார்கள் தண்ணீரை அலட்சியம் செய்கிறார்கள்.

தண்ணீருக்குள் இருந்தபடியே யட்சன் தான் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறான் என்பதை ஊர்மிளாவால் நன்றா கவே உணர்ந்துகொள்ள முடிந்தது. அவனைக் கண்ணால் காண முடியவில்லை. அதனால் என்ன. அவன்தான் நாம் பேசுவதைக் கேட்டுக்கொண்டிருக்கிறானே என்றபடியே அவள்

யட்சனிடம் தனது சமையலைப்பற்றி, தனது கற்பனைகளைப் பற்றிப் பேசிக்கொள்ளத் துவங்கினாள்.

யட்சன் கேட்டுக்கொண்டுதானிருக்கிறானா என்று சந்தேகமாக வரும். அந்த நேரங்களில் ம், ம் என்று ஒரு விநோதமான ஓசையொன்று கேட்கும். அந்த அரவம் விசித்திரமானதாக யிருக்கும். அதன் கூடவே எங்கிருந்தோ மயக்கமூட்டும் வாசனையொன்றும் கசிந்து வருவதுபோலிருக்கும். அதுவும் யட்சனின் மணம்தான். அவன் கேட்டுக்கொண்டிருக்கிறான் என்று அவளுக்கு ஆறுதலாக இருக்கும்.

ஒருவேளை அம்மாவும் தன்னைப் போல யட்சனிடம்தான் பேசிக்கொண்டிருந்திருக்கிறாளா? யட்சன் பெண்களோடு மட்டும்தான் பேசுவானா?

அதைப்பற்றி யோசித்தபடியே பகலெல்லாம் இருப்பாள். ஒரு நாள் தோன்றியது. தன்னைப் போலவேதானே மகாபாரதத் தில் வரும் மச்சகந்தியும் தனியே ஆற்றில் துடுப்பு போட்ட படியே, தன் படகில் இருந்தபடியே தண்ணீரினுள் உள்ள யட்சனிடம் பேசியிருப்பாள். என்ன பேசியிருப்பான். அவன் மச்சகந்தியின் பரிமளத்தைப் பற்றிப் புகழ்ந்து பேசியிருப்பானோ அல்லது அவன் மச்சகந்தியை உலகைப் பற்றி கவலைப்படாதே, உன் விருப்பத்தின் திசையில் படகைச் செலுத்தி விரும்பியதை நிறைவேற்றிக்கொள் என்று தூண்டியிருப்பானோ. மச்சகந்தியும் தன்னைப் போலவே குழப்பம் கொண்டிருப்பாள்.

இன்னொரு நாள் தோன்றியது. அசோகவனத்தில் சீதையின் பகல்பொழுதுகள் எப்படிப் போயிருக்கும். அவளை விடவும் லட்சுமணனின் மனைவி ஊர்மிளை தனிமையை அதிகம் உணர்ந்தவள் இல்லையா. அதற்காகத்தான் தனக்கு அந்தப் பெயர் வைத்தாளா அம்மா. ஊர்மிளா பற்றி ஏன் யாருமே பேசுவதேயில்லை. அவள் ஏன் ஒரு நிழலைப் போலவே இருக்கிறாள்.

ஊர்மிளா தனது ஏழுவயதில் ஒருமுறை அம்மாவோடு சினிமாவிற்குப் போயிருந்தாள். அது ஒரு புராணப்படம். அம்மா எல்லாப் புராணப்படங்களையும் தவறாமல் பார்த்து விடுவாள். மனிதர்களைப் போலத்தான் கடவுளும் வானவர் களும் பிரம்மாக்களும் கஷ்டப்படுகிறார்கள். குடும்பப் பிரச்சினையில் சிக்கிக்கொள்கிறார்கள் என்பது அம்மாவிற்கு ஆசுவாசம் தந்திருக்கக்கூடும்.

கடவுளுக்கு எதற்காகப் பசிக்கிறது. கடவுள் ஏன் தன் மனைவி யிடம் இவ்வளவு கோபப்படுகிறார். கடவுளுக்கு ஏன்

இன்னொரு கடவுளைப் பிடிப்பதில்லை. ஏன் யுத்தத்தில் ஒரு பெண்கூட சண்டைக்குச் செல்வதேயில்லை. இப்படி நிறைய கேள்விகளை சினிமா விட்டு வரும்போது அம்மாவிடம் கேட்டிருக்கிறாள். அம்மாவின் ஒரே பதில் அது அப்படித்தான். நம்ம கடவுள் நம்மை மாதிரிதானே இருப்பார் என்பார். அந்தப் பதில் ஊர்மிளாவுக்குப் பிடித்திருந்தது.

அன்று அவர்கள் பார்த்த படத்தில் ஒரு யாகம் நடைபெற்றது. நெருப்பின் முன்னே முனிவர்கள் உட்கார்ந்து நெருப்போடு பேசிக்கொண்டிருந்தார்கள். நெருப்பு ஆள் உயரம் எரிந்தது. உச்சாடனம் மேலோங்கியபடியே இருந்தது. சினிமா பார்த்து விட்டு வரும்போது அம்மா சொன்னாள்,

“ஆண்களுக்கு நெருப்பைக் கண்டால் பயம். பெண்களுக்கோ நெருப்பு ஒரு செல்லப்பிராணி. அதை விளையாட்டாகக் கையாளத் தெரியும்.” நெருப்பை பெண்கள் எப்படி பல ஆயிரம் வருடங்களாகப் பாதுகாத்தார்கள் என்று கதை கதையாகச் சொல்லிக்கொண்டே வந்தாள்.

குகையில் வாழ்ந்த ஒரு பெண் ஒரு துளி நெருப்பைப் பாது காப்பதற்காகத் தன் நாக்கின் அடியில் ஒளித்துக்கொண்டு விட்ட கதை ஊர்மிளாவுக்குப் பிடித்திருந்தது. அம்மா அதைச் சொல்லிமுடித்துவிட்டு “நாம் பேச மறுத்தாலும் நெருப்பு நம்மோடு பேசிக்கொண்டேதானிருக்கும். அது நிறைய ரகசியங் களைச் சொல்லிவிடுகிறது என்று ஆண்களுக்குப் பயம்” என்றாள்.

நெருப்பின் முன்னே அமர்ந்து அதைக் கண்டு மிரட்சியுற்ற ரிஷிகளின் முகங்கள் ஊர்மிளாவின் நினைவில் வந்துபோனது. அம்மா சொல்வது நிஜம். அப்பா சிகரெட் பற்ற வைக்க நெருப்பை உரசும்போது ஒரு அலட்சியமே தென்படுகிறது. அவர் நெருப்பை அவமதிக்கிறார். ஆண்களுக்கு நெருப்பைக் கையாளத் தெரியாது.

நெருப்பு ஒரு மாயாவிநோதனி. அது முடிவில்லாத நடனத்தை ஆடிக்கொண்டேயிருக்கிறது. நெருப்பின் சுடர் ஒரு மீன். அது ஒளியுடல் கொண்டது. அது காற்றின் படபடப்புக்குள் நீந்திக்கொண்டிருக்கிறது. நெருப்பு ஓர் உருவமில்லாத பறவை. அதன் சிறகுகள் அடித்துக்கொள்வதைப் போலத்தான் சுடர் அசைகிறது. நெருப்பு தின்னமுடியாத கனி. குடிக்க முடியாத பானகம். அவள் அன்றிரவு முழுவதும் நெருப்பை பற்றியே நினைத்துக்கொண்டிருந்தாள்.

தான் குகைக்காலத்தில் நெருப்பு தேடி பனியில் அலைவது

போல அவளுக்குக் கனவு வந்தது. ஒரு துளி நெருப்பு போதும் வாழ்வதற்கு. அவள் அதன் சில நாட்களுக்கு நெருப்பை விநோத மான பொருளைக் காண்பது போல பார்த்தபடியே இருந்தாள்.

பின்பொரு நாள் இதைப்பற்றிப் பேராசிரியர் லீலாவதியிடம் பேசியபோது டீச்சர் அதெல்லாம் பொய். நெருப்பை பூமிக்குத் திருடிவந்தவன் பெயர் பிராமிதியஸ். கிரேக்கப் புராணம் அப்படித்தான் சொல்கிறது. அவன் மனிதர்களை மேம்படுத்து வதற்காக கடவுளின் வீட்டிலிருந்து நெருப்பைத் திருடி வந்து விட்டான். கடவுள்கள் நெருப்பைப் பறிப்பதற்காகத் துரத்தி வந்தபோது எங்கே ஒளித்து வைப்பது என்று தெரியாமல் பெண்களின் அடிவயிற்றில் ஒளித்து வைத்துவிட்டான். அன்று முதல் பெண்களுக்குள்தான் உலகின் முதல் நெருப்பு எரிந்து கொண்டேயிருக்கிறது என்று சொன்னாள்.

ஊர்மிளாவுக்கு அந்தக் கதையை அறிந்த நாளில் இருந்து நெருப்பைப் பிடிக்காமல் போய்விட்டது. நெருப்பு ஒரு திருட்டுப் பொருள். எதற்காக ஒரு திருட்டுப் பொருளைப் பூமியில் வைத்துக்கொண்டிருக்க வேண்டும். அதைத் திருப்பிக் கொடுத்து விடலாமே. யாரிடம் கொடுப்பது. எப்படித் திருப்பிக் கொடுப்பது.

நெருப்பை ஏன் மனிதர்கள் கொண்டுவந்தார்கள். நெருப்பில்லா மல் இருந்தால் சமையல் இருக்காது. நெருப்பில்லாமல் இருந்தால் உலகின் இயக்கத்தில் இவ்வளவு பரபரப்பு, அழிவு இருக்காது. பெண்களைப் பலவிதங்களில் நெருப்பு கட்டிப் போட்டிருக்கிறது. பூமிக்கு நெருப்பு தேவையற்றது. அதைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும்.

அதன் பிந்தைய நாட்களில் அடுப்பின் முன்னால் போய் நிற்கும்போதெல்லாம் தான் ஒரு திருட்டுப் பொருளை அரு கிலே வைத்துக்கொண்டிருக்கிறோமோ என்ற குற்றவுணர்ச்சி உருவாகும். அந்த பிராமிதியஸ் அதை ஏன் பெண்களிடம் ஒளித்து வைத்தான் என்று அவன் மீது கோபமாகவும் வரும். அவள் பிராமிதியஸை வெறுத்தாள். அவன் திருடி வந்த நெருப்பை அவள் ஒரு திருடனைப் போலவே பாவித்தாள்.

அம்மாவிடம் அதைப்பற்றிச் சொன்னபோது "அதெல்லாம் சுத்தப் பொய். கண்டவங்க சொல்றதையும் நிஜம்னு நம்பாதே. நெருப்பை எதுக்கு மனுசன் திருடிட்டு வரணும். அக்னிங்கிறது அடுப்புல எரியுறது மட்டுமில்லை. நாம எல்லாமே அக்னிதான். கடைக்கோல்ல கடைஞ்சா நெருப்பு வருது இல்லையா. ஆணும் பெண்ணும்தான் அந்தக் கடைக்கோல். அதுல

கடைஞ்சி உருவானவங்கதானே நாம எல்லாம். காமம்தான்டி நெருப்பு. அதுதான் உற்பத்தி ஸ்தானம். இந்த உலகத்தில மூணு விதமான நெருப்பு இருக்கு. ஒண்ணு நாம பயன்படுத்து றது. இன்னொரு நெருப்பு இருக்கு. அது மனசில எரிஞ்சிகிட்டு இருக்கு. மூணாவது நெருப்பு இந்தப் பகல். இதை எல்லாம் தெரிஞ்சி வச்சிக்கிட்டுதான் இருக்கேன்" என்றாள்.

அம்மா யாரிடம் இதை எல்லாம் அறிந்திருப்பாள். எப்படி இவ்வளவு மேதைமையுடன் பேசுகிறாள் என்று வியப்போடு பார்த்தபடியே இருந்தாள்.

பின்பு ஒரு முறை ஆற்றில் குளிக்கச் சென்றபோது கேட்டதற்கு,

"ஒத்தை ஆளாக பகல்ல வீட்ல என்ன பண்றது சொல்லு. மண்டைக்குள்ள இப்படி நூறு கேள்வி பாம்பு கணக்கா சீறிக்கிட்டு இருக்கும். நானா அதைப் பத்தி நினைச்சி பாப்பேன். நானா ஒரு பதிலை உருவாக்கிவிடுவேன். பகல் நிறைய கத்துக் கொடுத்து இருக்குடி. அதை யார்கிட்டேயும் நான் சொல்றது இல்லை" என்றாள்.

அம்மா சொன்னது நிஜம்.

பகல் நிறையக் கற்றுத் தருகிறது. பகலின் தனிமை என்பது வெறும்பொழுதில்லை. அது தன்னை உணரும் தருணம். அம்மா உணர்ந்திருக்கிறாள். நானும் உணரத் துவங்கியிருக் கிறேன். தன்னை உணரத் துவங்கி அடையாளம் கண்டு கொண்டுவிட்டால் வாழ்க்கையின் மீது புகார் சொல்லத் தோன்றாது. இதை ஆண்கள் உணரவேயில்லை. இப்போதுதான் எனக்குப் பகலின் சூட்சுமம் புரிகிறது. பகல் பெண்களுக்காக உருவாக்கப்பட்டது. அது ஓர் அலை போல அவர்களை உள் இழுத்துக்கொள்கிறது.

முடிவில்லாத ஆற்றில் ஒற்றைப் படகில் செல்வதைப் போன்றதே பகலைக் கடப்பது. யட்சன் வெறும் தோற்றமயக்கம். பகலில் நமக்குள்ளிருந்தே யட்சன் பிறக்கிறான். அவன் புகை போல அலைகிறான். தனித்திருக்கும் பெண்கள் உள்ள எல்லா வீடுகளிலும் யட்சநடமாட்டம் இருக்கிறது.

பகல் பெரியது. பகல் மயக்கமூட்டுவது. பகலை வெல்வது கடினம்.

ஊர்மிளா தனியே பேசிக்கொண்டிருக்கிறாள்.

யட்சன் உம் கொட்டுகிறான்

ம், ம்.

# சொர்ணத்து ஆச்சிக்கு மன்மோகன்சிங்கைப் பிடிக்காது

சொர்ணத்து ஆச்சிக்கு மன்மோகன் சிங் மீது கோபமான கோபம் வந்தது. இனி அந்த மனுசனுக்காக ஒரு வார்த்தைகூட நாம் பரிந்து பேசக்கூடாது என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். வீட்டில் உள்ளவர்கள் எல்லாம் கேலி செய்தும் அவளது கோபம் அடங்கவேயில்லை. 'ஆச்சி, உனக்கு எதற்கு அரசியல்' என்று பேரன்கூட கோபித்துக்கொண்டான். அது ஏன் பெண்கள் அரசியல் பேசினால் யாருக்கும் பிடிப்பதில்லை என்று ஆச்சிக்கு ஆதங்கமாக இருந்தது.

ஆச்சி சில வாரங்களுக்கு முன்பு வரை மன்மோகன்சிங்கைத் தனது சொந்தப் பிள்ளையைப் போல நினைத்துக்கொண்டிருந் தாள். அவரைப்பற்றிப் பேசுவது அவளுக்கு பிடித்தமானதாக யிருந்தது. ஆச்சிக்கு மன்மோகன்சிங்கைப் பிடித்து இருந்ததற்கு அவர் பிரதமர் என்பதை விடவும் ரூபாய் நோட்டில் கையெழுத் துப் போட்டிருக்கிறார் என்பதே முக்கிய காரணம்.

ஒருநாள் இந்தத் தகவலை அவளது பேரன் குருநாதன்தான் ஆச்சியிடம் சொன்னான்.

"ஆச்சி, இந்தியாவில இருக்கிற எல்லா ரூபாய்லயும் அவர்தான் கையெழுத்துப் போட்டு இருக்காரு. அது இல்லைன்னா ரூபா நோட்டு செல்லாது."

"அப்பேர்ப்பட்ட ஆளுக்கு எதுக்கு சம்பளத்துக்கு உழைக்கிற இந்தப் பிரதமர் உத்யோகம்? சனியன், விட்டுத் தொலைய வேண்டியதுதானே" என்று கேட்டாள் ஆச்சி.

பரிகாசத்துடன் குருநாதன் சொன்னான்: "ஆச்சி, அதெல்லாம் அரசியல். உனக்கு சம்பந்தம் இல்லாதது. நீ போய்ச் சேருகிற

காலத்துக்குப் புண்ணியம் சேக்குறதுக்கு தேவாரம் திருவாசகம் பாடிக்கிட்டு இரு. இல்லேன்னா கண்ணை மூடிக்கிட்டுத் தியானம் பண்ணு. அதான் உனக்கும் நல்லது, உலகத்துக்கும் நல்லது."

சொர்ணத்து ஆச்சிக்கு கார்த்திகை வந்தால் வயது எழுபத்தி ரெண்டு ஆகிறது. முதுமை அவள் முகத்தில் தன்னுடைய ரேகை களைப் பதித்திருந்தது. கொக்கின் இறகுகள் போன்ற வெண்மை நிறமான கேசம். குள்ளமான உருவம். பாரியான உடல். கையில் ஒரேயொரு தங்க வளையல். நெற்றியில் பட்டையான திருநீறு. அடர்பச்சை அல்லது காவி நிற சேலையைத்தான் விரும்பிக் கட்டுகிறாள். கால்வலிதான் அவளது ஒரே பிரச்சினை. அதனால் வீட்டிற்குள்ளே அடைந்து கிடந்து பழகிவிட்டிருக்கிறாள்.

ஆச்சியின் கணவர் ஈஸ்வரமூர்த்தி இருந்தவரை அவர்கள் சாவடித்தெருவில் இருந்த சொந்த வீட்டில் குடியிருந்தார்கள், கணவரின் இறப்பிற்குப் பிறகு வீட்டை விற்று விட்டார்கள். ஆச்சி தனது ஐந்து பிள்ளைகளின் வீடுகளுக்கும் மாறிமாறி அலைந்து சுற்றி முடிவில் இளையமகள் வீட்டிற்கு வந்து சேர்ந்து விட்டாள்.

நாலு வருடமாக இந்த வீட்டை விட்டு வெளியே போனதே யில்லை. எப்போதாவது மருத்துவப் பரிசோதனை செய்ய கைலாசம் டாக்டரிடம் அழைத்துப் போய்வருவார்கள். மற்ற நேரங்களில் ஆச்சி வாசல்படியைத் தாண்டியதேயில்லை.

அதிலும் முழங்கால் வலி வந்து இருபது ஆண்டுகளாகிவிட்டது அதனால் நடை தளர்ந்து போய்விட்டது. கூடவே நிம்மதியான தூக்கம் போய்விட்டது. இப்போது இருப்பது கோழித்தூக்கம் தான். அதிலும் பின்னிரவில் விழிப்பு வந்துவிடுகிறது. பொழுது எப்போது விடியும் என்று காத்திருக்க வேண்டியிருக்கிறது.

நல்லவேளை, ஆச்சி ஹாலில் படுத்துக்கொள்வதால் அங்கே டி.வியிருக்கிறது. ஆச்சிக்குக் காலை எழுந்தது முதல் உறக்கம் வரை டி.வி.தான் உலகம். நாள்முழுவதும் அதன் முன்னாடி உட்கார்ந்தேயிருக்கிறாள். தொட்டிலில் உறங்கும் குழந்தையைக் கூட இவ்வளவு அருகில் இருந்து உற்றுப் பார்த்திருக்கமாட்டாள். டி.வியின் மீது அப்படியொரு ஈடுபாடு. நெருக்கம். அதைத் தூக்கி மடியில் வைத்துக் கொஞ்சாதது மட்டும்தான் பாக்கி.

அரிசியில் கல்பொறுக்குவதில் இருந்து கீரை ஆய்வது, வெண் டைக்காய் நறுக்குவது, வெங்காயம் உரிப்பது, எல்லாமும் டி.வி. முன்னால் உட்கார்ந்தபடியேதான் செய்கிறாள். அவ்வளவு ஏன் சாப்பிடுவது, உறங்குவதுகூட அதே இடத்தில்தான்.

“ஆச்சி, நீ செத்துப் போனா கூடவே ஒரு டி.வி.யும் வாங்கி ஒண்ணா புதைச்சிருவோம். மேலோகத்திலும் டி.வி. பார்த்துக் கிட்டே இருக்கலாம்” என்று ஒரு நாள் பேரன் கேலி செய்தான்.

“பேச்சுத் துணைக்கு மனுசங்களை விட இது தேவலை. டி.வி. நம்மளைப் பத்தி வெளியே போயி புரளி பேசாது. இல்லாது பொல்லாததை இட்டுக் கட்டிச் சொல்லாது. அவ்வளவு ஏன்டா, நான் பேசுறதுக்கு எதிர்வார்த்தை பேசாது. என் புருஷன்கூட எனக்கு இத்தனை ஊரைக் காட்டுனதில்லை. இப்பதானே உலகம் தெரியுது. இந்த அறிவு இருபது வயசில இருந்திருந்தா எவ்வளவோ கோளாறா பிழைச்சிருப்பேன்” என்பாள் ஆச்சி.

ஆச்சியின் உடல் உறுப்புகளில் ஒன்றைப் போலாகிவிட்டிருந்தது அந்த வீட்டிலிருந்த டிவி. சில வேளைகளில் பகல் நேரத்தில் அண்டை வீட்டில் உள்ள விசாலமோ அல்லது அவளது மகள் சுசிலாவோ ஆச்சியோடு பேசிக்கொண்டிருக்க வருவதுண்டு. ஆச்சிக்கு சில பக்குவங்கள் மருந்துகள் தெரியும். யாராவது கேட்டால் போதும், உடனே விளக்கமாகச் சொல்ல ஆரம்பித்து விடுவாள். அதற்காக வருவது போல வந்து ஆச்சியோடு பேச ஆரம்பிப்பார்கள்.

மதியச் சாப்பாடு வரை அந்தப் பேச்சு நீண்டு போய்விடும். யாரோடு பேசிக்கொண்டிருந்தாலும் ஆச்சி டி.வியை அணைப் பதேயில்லை. அவளது ஒரு கண் டி.வி.யின் மீதுதானிருக்கும்.

பேச்சு மட்டும்தான் நம்மோட. ஆச்சிக்கு கண்ணு எல்லாம் அங்கிட்டுதான் என்று கேலி செய்வாள் விசாலம்,

டி.வி. பார்க்கத் துவங்கிய பிறகு ஆச்சி நிறைய யோசிக்க ஆரம்பித்திருந்தாள். வாழ்க்கையில் எவ்வளவு வசதிகளை இன்பத்தை இழந்து போயிருக்கிறோம், எவ்வளவு பெரியதாக இருக்கிறது உலகம், அதை அறிந்துகொள்ளாமல் வீட்டுக்குள் ளேயே அடைந்து கிடந்திருக்கிறோமே என்று ஆதங்கப்பட்டி ருக்கிறாள்.

ஒருநாள் விளையாட்டுப் போட்டியில் பதினாலு வயதுப் பெண் ஒருத்தி பார்மீது ஏறி சுற்றி உடம்பை வில்லாக வளைத்ததோடு பத்தடி உயரத்தை அநாயாசமாகத் தாண்டினாள். அந்த வயதில் நாம் வீட்டுவாசல்படியைக்கூட தாண்டியதில்லையே என்று ஆச்சிக்கு ஏக்கமாக இருந்தது. ஆச்சிக்குப் பதினாலு வயதில் கல்யாணமே நடந்து முடிந்துவிட்டிருந்தது. இரண்டு வருடங் களில் தாயாகவே ஆகிவிட்டாள்.

கைக்குழந்தையை வைத்துக்கொண்டு இருந்த நாட்களில் வீட்டில் ஒரு ரேடியோகூட கிடையாது. வீட்டில் பெண்கள்

ரேடியோ கேட்பது தப்பு என்று சொல்வார் அவளது மாமனார் மந்திரமூர்த்தி. அவர் பெரிய வக்கீல். ஆனாலும் ரேடியோ வாங்கி வைத்துக்கொள்ளவில்லை.

சில வேளைகளில் திருஞானம் வீட்டில் கேட்கின்ற ரேடியோ ஒலி அவளுக்கும் கேட்பதுண்டு. அதற்காகக் கொல்லைப்புறச் சுவர் பக்கம் போய் நின்று கொள்வாள். பாட்டுக் கேட்பதை யாராவது பார்த்துவிடுவார்களோ என்று உள்ளூர பயமாக இருக்கும்.

வீட்டில் இருந்த பெண்கள் அவளோடு இணக்கமாகப் பேசுவதே யில்லை.

அதனால்தானோ என்னவோ தனிமையைப் போக்கிக்கொள்ள கொடியில் காய்ந்துகொண்டிருந்த துணிகள், சமையல் அறை யில் உள்ள டம்ளர், சொம்பு, கரண்டிகள், காய்கறிகள் என எல்லாவற்றோடும் பேசிக்கொண்டிருக்கப் பழகியிருந்தாள். அது ஒன்றுதான் பகலிடமிருந்து தப்பிக்கும் ஒரே வழி. அதைவிடவும் பேசுவதன் வழியாகப் பொருட்கள் நெருக்கமாகிவிடுகின்றன என்று உணர்ந்தாள்.

பகலில் தனியே இருப்பது மனக்குழப்பத்தை உருவாக்கக்கூடியது. அதிலும் முதிய வயதில் தனியாக இருப்பது அதிகமான மன சஞ்சலங்களை உருவாக்கிவிடுகிறது. நல்லவேளை, டி.வி. இருக் கிறது அதனால் தப்பித்தோம் என்று ஆச்சி நினைத்துக் கொள்வாள்.

வேடசந்தூரில் உள்ள மகன் வீட்டில் இப்படி சுதந்திரமாக டி.வி. பார்க்க முடிந்ததில்லை. மருமகள் கோபித்துக்கொள்வாள். பிள்ளைகள் கிரிக்கெட் பார்க்கிறேன் என்று சண்டையிடுவார் கள். அத்தோடு வீட்டு வேலைகளை மருமகள் ஆச்சி தலையில் கட்டிவிடுவாள்.

அதனால் ஆச்சி சண்டை போட்டுக்கொண்டு அவளது மூத்த மகள் கல்யாணி வீட்டிற்கு வந்துவிட்டாள். ஆச்சி டி.வி. பார்க்க ஆசைப்பட்டுதான் இங்கே வந்து சேர்ந்துவிட்டாள் என்று பிள்ளைகள் கேலி செய்வார்கள். “ஆமாம், அப்படியே வச்சிக் கோங்க” என்று ஒத்துக் கொள்வாள் ஆச்சி.

கல்யாணி டீச்சராக இருப்பதால் காலை எட்டுமணிக்குப் பள்ளிக்கூடம் போய்விடுவாள். அதன்பிறகு ஆச்சி மட்டும்தான் வீட்டில் இருப்பாள். பேரன் பேத்திகளும் படிக்கப் போய்விடு வார்கள். மருமகன் வங்கியில் வேலை. அவர் கல்யாணி கிளம்பிப் போவதற்கு முன்பாகப் போய்விடுவார். வீடு திரும்பி

வருவதற்கும் ஒன்பது மணியாகிவிடுகிறது.

சொந்த மருமகன் என்பதால் அவரும் ஆச்சியைப் பாசமாகத் தான் பார்த்துக்கொள்கிறார். இருக்கிற காலத்தை இங்கேயே கழித்து நல்லபடியாகச் செத்து பரலோகம் போய் சேர்ந்துவிட வேண்டும் என்று அடிக்கடி ஆச்சி சொல்லிக் கொள்வாள்.

பகல் நேரத்தில் ஆச்சி டி.வி.யில் வரும் அறிவிப்பாளர்களுடன் இயல்பாகப் பேசுவாள். எல்லோர் பெயர்களும் அவளுக்கும் மனப்பாடம். அவர்கள் சோர்வாக இருப்பதாக உணர்ந்தால் அதற்காக ஆச்சி கவலைப்படுவாள். அழகான உடை அணிந்து வந்தால் அதை மனம்விட்டுப் பாராட்டுவாள். டி.வி. ஆச்சியின் நிரந்தரப் பேச்சுத்துணை.

ஆச்சிக்கு நெடுந்தொடர்கள் பார்க்கப் பிடிப்பதேயில்லை. "நம்ப குடும்பத்து துயரத்தையே நம்மாலே தீர்க்கமுடியலை. இதுல அடுத்தவங்க கதை நமக்கு எதுக்கு?" என்பாள்.

சினிமா பாட்டுகள் என்றால் ஆச்சிக்குப் பிடிக்கும். எப்போதாவது பழைய பாடல்கள் போட்டால் கூடவே பாடுவாள். பாடும்போது அவளை அறியாமல் அழுதுவிடுவாள். யாராவது "ஏன் ஆச்சி அழுகுறே?" என்று கேட்டால் பதில் பேச மாட்டாள். சில நிமிடங்கள் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு சேலையால் முகத்தைத் துடைத்துக்கொண்டு 'ஏதோவொரு நினைப்பு' என்று சொல்லிக்கொள்வாள்.

ஆச்சி, அப்படித்தான் மன்மோகன் சிங்கைப் பற்றி அறிந்து கொள்ளத் துவங்கினாள்.

தினமும் டி.வி.யில் அவர் ஏதாவது ஒரு செய்தியில் அடிபடுவார் அல்லது ஏதாவது ஒரு பிரச்சினை தொடர்பாக அவரைக் காட்டிக் கடுமையாகப் பேசுவார்கள். அவர் காரை விட்டு இறங்கி வேகவேகமாக புல்வெளியில் நடந்து செல்லும் ஒரு காட்சியோ அல்லது இறுக்கமான முகத்துடன் அளந்து அளந்து பேசுவது போன்ற காட்சியோ காட்டப்படும். ஒரு மனுசனை ஏன் இப்படிப் பாடாய்ப் படுத்துகிறார்கள். எதற்காக இப்படி இவ்வளவு பிரச்சினைகளைச் சுமந்துகொண்டு அலைகிறார் என்று ஆச்சிக்குத் தோன்றும். சில வேளைகளில் மன்மோகன்சிங்கின் முகத்தை அண்மையில் காட்டும்போது அதில் தெரியும் விவரிக்க முடியாத கலக்கத்தைக் காண்பது ஆச்சிக்குக் கஷ்டமாக இருக்கும். எப்போதாவது இந்த மனுசன் சிரிப்பாரா என்று யோசித்திருக்கிறாள்.

இதைப்பற்றி குருநாதனிடம் கேட்டபோது அவன் சொன்னான்,

“ஆச்சி, இந்தியாவில யாருக்கு என்ன பிரச்சினைன்னாலும் அது இவர் தலையிலதான் விடியும். எல்லார் பிரச்சினையும் இவருதான் தீர்த்து வைக்கணும். விடிஞ்சா அடைஞ்சா இவருக்குப் பிரச்சினைதான். நல்லநாள், கெட்டநாளுனு இருக்க முடியாது. நொம்பளம் பிடிச்ச வேலை” என்றான்.

அதை கேட்ட மாத்திரம் ஆச்சிக்கு மன்மோகன்சிங்கைப் பிடித்துப் போய்விட்டது,

“அடுத்தவர் பிரச்சினைக்கா இப்படி ஓடியோடி அலைகிறார்?” என்று குருநாதனிடம் ஆதங்கத்துடன் கேட்டாள்.

“ஆச்சி, நமக்கு இருக்கிற நாலு பிரச்சினையை நம்மாளே தீர்க்க முடியலை. இவருக்கு ஒரு நாளைக்கு நாலாயிரம் பிரச்சினை. மனுசன் கிடந்து லோல்படுறார்” என்றான். அதைச் சொல்லும் போது அவன் குரலில் கேலியிருந்தது.

அந்த மனுசன் கஷ்டப்படுவது இவனுக்கு ஏன் கேலியாக இருக்கிறது. அவருக்குக் குடும்பம் இருக்காதா, எப்போது வீட்டிற்குப் போவார், எவ்வளவு நேரம் தூங்குவார், தலையில் எப்போதும் ஒரு தலைப்பாகை கட்டியிருக்கிறாரே, அது சூட்டை உண்டு பண்ணிவிடாதா, ஒழுங்காகத் தலைக்கு எண்ணெய் வைத்துக் கொள்வாரா இப்படி அவரைப்பற்றி நிறைய யோசித்துக் கொண்டேயிருப்பாள்.

ஆச்சிக்கு மன்மோகன் சிங்கைப் பிடித்திருப்பதற்கு உள்ளூர இன்னொரு காரணம் இருந்தது. அது அவளது அய்யா குற்றாலிங்கம் செய்தது போலவே நடந்துகொண்டது. குற்றாலிங்கம் ஊர் கணக்குப்பிள்ளையாக இருந்தார். எந்தநேரமும் யாராவது ஏதாவது ஒரு பிரச்சினையோடு வீட்டுவாசலில் வந்து நிற்பார்கள். அவரும் சாப்பாடு தண்ணியை மறந்து கிளம்பிப் போய்விடுவார்.

ஒரு நாளிரவு மழையோடு அவரை உடன்குடி வரை கூட்டிக் கொண்டு போனார்கள், திரும்பி வரும்போது நனைந்து நடுங்கிப் போய் வந்திருந்தார். அப்படியே சுருண்டு படுத்தவர் மீண்டு எழுந்துகொள்ளவேயில்லை. ஒரு மாசம் படுக்கையில் கிடந்திருப்பார். ஒருநாள் உறக்கத்திலே உயிர் பிரிந்து போயிருந்தது. அப்படி மெய்வருத்தம் பாராமல் அலைந்து திரிந்தும், இன்று அவரை யாரும் நினைவுகொள்ளவோ பாராட்டவோயில்லை என்ற வருத்தம் ஆச்சிக்கு நிறையவே இருந்தது. அதனால் அவரைப் போலவே மன்மோகன் சிங்கும் இப்படி ஊர்காரியமாகவே அலைகிறாரே என்று தனியான பிரியம் கூடியிருந்தது.

ஆச்சி அவரை மோகன் என்று உரிமையோடு சொல்கிறாள். நள்ளிரவில் அவள் விழித்து டி.வி. பார்க்கும்போதுகூட அவர்

ஏதாவது ஒரு டி.வி.யில் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டிருக் கிறாள். உறங்காமல் இந்நேரம் எதுக்காக இப்படி உசிரைக் கொடுத்துப் பேசிக்கொண்டிருக்கிறார் என்று அவரையே பார்த்துக்கொண்டிருப்பாள்.

என்ன பேசுகிறார் என்று புரியாது. ஆனால் அவர் தன்னைப் போலவே மனக்கஷ்டத்தால் அவதிப்படுகிறார் என்று நன்றாகப் புரிந்தது. இப்படி வேலையே கதி என்றிருந்தால் அவர் மனைவி, பிள்ளைகள் கோபித்துக்கொள்ள மாட்டார்களா என்று நினைத் துக்கொள்வாள்.

சில இரவுகளில் டி.வி.யில் தோன்றும் மன்மோகன்சிங்கிற்கு உடற்சூட்டைத் தணிக்க கைப்பக்குவம் சொல்லியிருக்கிறாள்.

ஆச்சிக்கு மன்மோகன்சிங்கைப் பிடிக்கிறது என்று தெரியவந்த பிறகு எல்லோரும் அதைக் கேலி செய்ய ஆரம்பித்தார்கள். யாராவது மன்மோகன்சிங்கைப் பற்றிக் குறை சொன்னால் கோபப்படுவாள். அதற்காகவே அவளைச் சீண்டுவார்கள்.

இப்படியாக ஆச்சிக்கு செய்தி சேனல்களைப் பார்ப்பதில் விருப் பம் அதிகமாகிக்கொண்டே வந்தது. அவள் மத்திய அமைச்சர் களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் பார்க்கும்போது எதற்காக இப்படித் தொந்தியும் தொப்பையுமாக இருக்கிறார் கள். ஒரு ஆள்கூட உடம்பைக் கட்டாக வைத்திருப்பதில்லையே. தன் உடம்பையே கவனித்துக்கொள்ள முடியாத ஆள் எப்படி நாட்டைக் கவனித்துக்கொள்ள முடியும் என்று பகடி பேசுவாள்.

ஒருநாள் ஆச்சியின் கனவில் மன்மோகன்சிங் தோன்றி ஹிந்தி யில் ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார். என்ன பேசுகிறார் என்று புரியவில்லை. ஆனால் தன்னிடம் ஏதோ ஆலோசனை கேட்கிறார் என்பது நன்றாகப் புரிந்தது. ஆச்சி ஆறுதல் சொல் வது போல "உனக்கு எதுக்கு இந்த உத்யோகம்? இதை விட் டுட்டு, உன் குடும்பத்தைப் பாரு. உடம்பை பாத்துக்கோ" என்று சொல்லிக்கொண்டிருந்தாள். ஆனால் மன்மோகன்சிங் தொடர்ந்து பேசிக்கொண்டேயிருந்தார். ஆச்சிக்கு சட்டென விழிப்பு வந்துவிட்டது. உடனடியாக டி.வி.யின் சேனலை மாற் றிப் பார்க்க ஆரம்பித்தாள். அவள் கனவில் வந்த அதே உடை யில் மன்மோகன்சிங் நேர்காணல் நிகழ்ச்சியில் பேசிக்கொண்டி ருந்தார். மாறி மாறி அவரிடம் கேள்வி கேட்டுக்கொண்டிருந் தார்கள்.

அது பற்றி தன்னிடம் கலந்து ஆலோசனை செய்யதான் கனவில் வந்திருக்கிறார் என்பதுபோல நினைத்துக்கொண்டு கனவுல

வந்த ஆளுக்கு ஒரு வாய் பச்சதண்ணிகூட குடுக்காம அனுப்பி வச்சிட்டேனே என்றுகூட நினைத்துக்கொண்டிருந்தாள். பிரதமரின் கார் வெளியேறிப் போவதைக் கேமிரா காட்டிக்கொண்டிருந்தது. ஆச்சி கடிகாரத்தைப் பார்த்தாள். மணி இரவு மூன்றரை மணி. 'இந்நேரத்துக்கு வீட்டுக்குப் போயி எப்படி நிம்மதியா தூங்கமுடியும்' என்ற கவலை உருவானது.

மறுநாள் காலை ஆச்சி தன் கனவில் மன்மோகன்சிங் வந்ததைப் பற்றி மகளிடம் சொல்லிக்கொண்டிருந்தாள். அதை கேட்ட மருமகன், "உங்களுக்கு எதுக்கு அரசியல்? இந்த டிவி பார்த்து ரொம்ப கெட்டுப் போயிட்டீங்க. அதான் கெட்ட கெட்ட கனவு எல்லாம் வருது. நாலு நாளைக்கு டி.வி. பார்க்காம இருங்க" என்றார்.

ஆச்சி மருமகன் பேசுவதை ஒருபோதும் மீறுவதேயில்லை. டி.வி. பார்க்காமலே இருக்கலாமே என்று தோன்றியது. ஆனால் பகலில் வீடு வெறிச்சோடிய பிறகு அவளால் டி.வி. பார்க்காமல் உட்கார்ந்திருக்க முடியவில்லை. கை நடுக்கமாகியது. தன்னை அறியாமல் கை ரிமோட்டைத் தேடியது. ஆச்சி உடனே நியூஸ் சேனலைப் பார்க்க ஆரம்பித்தாள்.

விபத்து, பிரச்சினைகள், போட்டி, கைது, வன்முறை, பணமோசடி என்று செய்திகள் மாறிக்கொண்டேயிருந்தது. உலகம் எவ்வளவு மோசமாகப் போய்க்கொண்டேயிருக்கிறது என்று பார்த்துக் கொண்டேயிருந்தாள். திடீரெனத் தோன்றியது.

நமக்குத்தான் அரசியல் பிடிக்கிறதே. அதை ஏன் ஒருவரும் அனுமதிக்க மறுக்கிறார்கள். எப்போதும் ஆண்கள் மட்டுமே ஏன் அரசியல் பேசுகிறார்கள்.

அவளது அய்யாகூட பெண்கள் அரசியல் பேசக்கூடாது என்று தான் சொல்வார். இவ்வளவிற்கும் அவர் காங்கிரஸ் கட்சியின் விசுவாசி. ஒருமுறை காந்தியைப் பார்க்க குடும்பத்தையே அழைத்துப் போனவர். காந்திஜி நிதி கேட்டபோது ஆச்சி தன் கையில் போட்டிருந்த வளையலைக் கழட்டித் தானமாகத் தந்துவிட்டாள். வீட்டிற்கு வந்த பிறகு அய்யா 'வளையலைக் கழட்டிப் போட்டது சரி. ஆனா, பொம்பளைப்பிள்ளைக அரசியல் பேசக்கூடாது. அது குடும்பத்துக்கு ஆகாது. அதனாலே யார்கிட்டேயும் அதைப்பத்தி சொல்லவேண்டாம்' என்றார்.

அந்த நாட்களில் தேர்தல் வந்தது. அய்யா யாவரும் காங்கிரஸிற்கு ஓட்டுப்போட வேண்டும் என்று கிளிப்பிள்ளைக்குச் சொல்வதுபோல சொல்லி அனுப்பினார். ஆச்சி மட்டும் காங்கிரஸிற்கு ஓட்டுப்போடவில்லை. அதுபோலவே அவள் கணவர்

திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாடு காட்டியபோது ஆச்சி அதற்குத்தான் ஓட்டுப்போட வேண்டும் என்று கணவரும் கட்டாயமாகச் சொன்னார். ஆச்சி அந்த முறை காங்கிரஸிற்கு ஓட்டுப் போட்டாள். அதன்பிறகு ஆச்சியின் மகன் எம்.ஜி.ஆர். கட்சியில் இருந்தபோது ஆச்சி தி.மு.க.விற்கு ஓட்டுப் போட்டாள். இப்போது ஆச்சியின் பேரன் ஓட்டுப் போட அழைத்துப் போனபோது யாரோ ஒரு சுயேச்சைக்கு ஓட்டுப் போட்டுவிட்டாள். இப்படி அவர்கள் சொன்ன கட்சிக்கு ஓட்டுப் போடாமல் ஆச்சி தனக்கு விருப்பமானவருக்கு ஓட்டுப் போட்டதை யாரும் கண்டுபிடிக்கவில்லை.

தனக்கும் ஓர் அரசியல் இருக்கிறது. அதைத் தான் முழுமையாக நம்பிச் செயல்படுத்தி வருகிறோம் என்பதில் ஆச்சி தெளிவாக உணர்ந்திருந்தாள். ஆனால் அதைப்பற்றி பேசிக்கொள்ள அவள் அனுமதிக்கப்படவேயில்லை.

சில வேளைகளில் தாயும் மகளும் அரசியல் பேசிக்கொள்வார்கள். அப்போது ஆச்சி சுதந்திரா கட்சியில் இருந்து ஒபாமா வரை எல்லாவற்றையும் காரசாரமாகப் பேசுவாள். மகளுக்கு ஆச்சரியமாக இருக்கும். "யம்மா... உன்னையே தேர்தல்ல நிக்க வச்சா நீயே ஜெயிச்சி டவுன் சேர்மனாகிடுவே போலிருக்கே" என்று கேலி செய்வாள். ஆனால் மருமகன் வீட்டில் இருந்தால் ஆச்சி அரசியல் பேசுவது கிடையாது. அவர் கோபித்துக்கொள்வதுடன் வீட்டில் பெண்கள் அரசியல் பேசினால் வீடு உருப்படாது என்று உறுதியாக நம்புபவராகயிருந்தார்.

ஆச்சி நிறைய பொதுக்கூட்டங்கள் கேட்டிருக்கிறாள். அதில் சில தலைவர்களுடைய பேச்சு அவளுக்குப் பிடிக்கும். சிலரது பேச்சிற்கு எதிர்க் கருத்துகளும் அவளிடமிருந்தது. ஆனால் ஒருநாள்கூட அதை வெளிக்காட்டிக்கொண்டதில்லை. தனக்குப் பிடித்த அரசியல் தலைவர் இருக்கிறார். அரசியல் நடவடிக்கைகள் இருக்கின்றன. பிடித்த ஆளுக்கு ஓட்டு கூட போட்டிருக்கிறாள். ஆனால் அவளுக்கு அரசியல் தெரியாது என்பதும் அரசியல் பேசக்கூடாது என்பதும் ஏன் என்று புரிந்துகொள்ள முடியவேயில்லை.

ஒருநாளிரவு ஆச்சி டி.வி.யில் செய்தி பார்த்துக்கொண்டிருந்தாள். இலங்கை யுத்தம்பற்றிய செய்தியது. ராணுவ வண்டிகளையும் போர் விமானங்களையும் காட்டிக் கொண்டிருந்தார்கள். விமானங்கள் குண்டு மழையைப் பொழிந்தன. நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் கொடூரமாகக் கொல்லப்பட்டார்கள். நாலு வயதுச் சிறுமி வயிறு பிளந்து அலறிக்கொண்டிருந்தாள். இறந்த உடல்கள் குவிந்து கிடந்தன. ராணுவ டாங்குகள் மனித உடல்

களின் மீது ஏறி சென்று கொண்டிருந்தன. எங்கும் பேரவலம். அலறல் ஓசை. எண்ணிக்கையற்ற மனிதர்கள் வேட்டையாடப் பட்டுக்கொண்டிருப்பதை சேனல் காட்டிக்கொண்டிருந்தது. அதில் ஒரு பள்ளி மாணவியின் அந்தரங்க உறுப்பில் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள் என்று ரத்தம் உறைந்த உள்ளாடையோடு கிடக்கும் மாணவியின் சடலம் காட்டப்பட்டது. ஆச்சிக்குக் கண் கலங்கி நெஞ்சை அடைத்தது. வாய்விட்டு அழுதாள்.

ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் ஈழத்தின் கடைசி யுத்தத்தில் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தியும் அது தொடர்பான காட்சிகளும் திரையில் மாறிமாறி வந்துகொண்டே யிருந்தது. வீட்டில் அனைவரும் மனக்கலக்கத்துடன் அதைப் பற்றியே பேசிக்கொண்டிருந்தார்கள்.

குருநாதன் கவலையோடு சொன்னான்,

“ஆச்சி, இவ்வளவுக்கும் யாரு காரணம் தெரியுமா? நீ கொண் டாடுகின்ற பிரதமர்தான். அவரு நினைச்சி இருந்தா இந்த உயிர்களை எல்லாம் காப்பாற்றியிருக்க முடியும்” என்றான்.

“நிஜமாவா,” என்று கேட்டாள்.

“நிஜமா ஆச்சி, அவர் மனசு வச்சிருந்தா ஒரு உசிரு போயிருக் காது” என்றான்.

ஆச்சிக்கு அந்த நிமிடத்தில் இருந்து மன்மோகன்சிங்கைப் பிடிக் காமல் போய்விட்டது. ஏன் இந்த மனுசன் இப்படி நடந்து கொண்டார். இத்தனை உசிர்களைச் சாகவிட எப்படி மனசு வந்தது. அமைதியாக இருந்தால் மட்டும் நல்லபிள்ளையா ஆகிற முடியுமா. இத்தனை நாள் அவருக்காக எவ்வளவு பரிந்து பேசினோம் என்று ஆத்திரமாக வந்தது.

அன்றிலிருந்து அவர் உருவம் டி.வி.யில் வரும் நிமிடத்தில் சட் டெனத் தலையைத் திருப்பிக் கொண்டுவிடுவாள். சிலநேரம் ஆத்திரமாகி டி.வி.யை அணைத்துவிடுவதும் உண்டு. வீட்டிற்கு வருகின்றவர்களிடம் எல்லாம் மன்மோகன்சிங்கைப் பற்றி ஆத்திரமாகப் பேசவும் துவங்கினாள்.

அப்போது ஒருநாள் ஆச்சியின் கனவில் மன்மோகன்சிங் தோன்றித் தமிழில் பேசினார்.

“என்ன ஆச்சி, என்னைய இப்படி தப்பா நினைச்சிட்டே. நான் ஒண்ணும் செய்யமுடியாம கையைக் கட்டிப்போட்டு இருக் காங்க. அரசியலுக்கு ஏன்டா வந்தேன்னு இருக்கு” என்று ஏதேதோ சமாதானம் சொன்னார்.

ஆச்சி ஏற்றுக்கொள்ளவில்லை.

"நீ ஆயிரம் சொன்னாலும் என் மனசு கேட்கலை. உன்கூட பேசப் பிடிக்கலை. போயிடு" என்று விரட்டினாள். கனவு கலைந்தபோது டி.வி.யில் ஹிந்தியில் பேசிக்கொண்டிருந்தார் மன்மோகன்சிங். அந்த உருவத்தைக் கண்டு ஆற்றாமை தாளமுடியாமல் வாய்க்கு வந்தபடி திட்டினாள் ஆச்சி.

ஆச்சி தனியா கிடந்து உளறுகிறாள் என்று கோபித்துக்கொண்ட மருமகன் சற்று கடுமையான வார்த்தைகளால் ஆச்சியைத் திட்டியதோடு "உங்களுக்கு எதுக்கு அரசியல்? தேவையில்லாத வீண் வேலை" என்றார்.

ஆச்சி அவர் சொல்லி முடிப்பதற்குள் ஆவேசமானவள் போல சொன்னாள்,

"என்ன பெரிய அரசியல். புடலங்காய் அரசியல். அது எல்லாம் எங்களுக்கும் தெரியும், ஐம்பது வருசமாக எல்லாத்தையும் நானும்தான் பாத்துக்கிட்டே இருக்கேன். எனக்கு அரசியல் பிடிக்கும். அதைப் பேசத்தான் செய்வேன். அது உங்களுக்குப் பிடிக்கலைன்னா, இன்னைக்கே கிளம்பி என் புள்ளை வீட்டுக் குப் போயி இருந்துக்கிடுறேன். அதுக்காக வாயை மூடிக்கிட்டு ஊமைக்கோட்டானா என்னாலே இருக்கமுடியாது" என்ற படியே ஆச்சி செய்தி சேனலைப் பார்க்க ஆரம்பித்தாள்.

நீண்டகாலமாக மனதில் பாரமாக இருந்த ஒன்றைக் கீழே இறக்கி வைத்துவிட்டதைப் போல ஆசுவாசம் தோன்றியது. மருமகன் கோபத்துடன் "விடிஞ்சதும் பையை எடுத்துக்கிட்டு உங்களுக்கு எங்கே சௌகரியப்படுதோ அங்கே போய் இருந்துக் கோங்க" என்று உறுதியாகச் சொல்லிவிட்டார்.

அன்றிரவு ஆச்சி சாப்பிடவேயில்லை. பொழுது விடிந்தவுடன் இரண்டு புடவைகள், தேவையான சாமான்களைப் பையில் திணித்துக்கொண்டு அதிகாலையில் கிளம்பிப் பேருந்து நிலை யத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தாள்.

நடக்க நடக்க அவளுக்கு மன்மோகன்சிங் மேல்தான் கோபம் வந்தது. அதை நினைத்தபடியே அவள் பேருந்து நிலையத்திற்கு வந்து நின்றாள்.

"ஆம்பளைக வெட்டியா பகல் பூரா உட்கார்ந்து அரசியல் பேசலாம். நான் பேசுனா தப்பா, அது எந்த ஊர் நியாயம்" என்றபடியே ஆச்சி திருச்சி பேருந்து வருவதற்காகக் காத்திருந் தாள்.

திடீரென நாம் ஊருக்குப் போய்விட்டால் வீட்டில் உள்ள தொட்டிமீன்களுக்கு யார் கவனித்து சாப்பாடு போடுவார்கள், யார் காகங்களுக்குப் பிடிசாதம் வைப்பார்கள். ஒரு பூனை அடிக்கடி வந்து அலைந்துகொண்டிருக்குமே அதற்குத் தட்டில் யார் பால் ஊற்றி வைப்பார்கள் என்ற யோசனை வந்தது. அதுதான் பெரிய கவலையாக இருந்தது. நம்மை நம்பி வாழ்ப வற்றைக் கைவிட்டுப் போவதைப் போல பெரிய துயரம் வேறு என்ன இருக்கப் போகிறது என்பது ஆச்சிக்கு வேதனையாக இருந்தது. இது ஏன் அந்த மனிதனுக்குத் தெரியவேயில்லை என்று மன்மோகன்சிங் மீதுதான் மறுபடியும் ஆச்சிக்குக் கோபம் பொங்கிக்கொண்டிருந்தது.

# பேசும் கற்கள்

விந்திய மலையின் அடர்ந்த பசுமைக்குள் அதிசயமான பேசும் கற்கள் இருந்தன என்றார்கள். காட்டில் உள்ள தாவரங்கள், விலங்குகளுடன் சரளமாகப் பேசிக்கொள்ளும் இந்தக் கற்கள் மனிதர்களைக் கண்டவுடன் வாய் மூடிவிடு கின்றன என அறிந்த அபய குலசேகர மன்னன் அதைத் தேடிக்கொண்டு வரும்படியாகத் தனது படைவீரர்களை அனுப்பி வைத்தான்.

காட்டிற்குள் நூறு குதிரை வீரர்கள் சுற்றியலைந்து பேசும் கற்களைத் தேடினார்கள். எங்கேயும் கிடைக்கவில்லை. காட்டில் வாழும் ஆதிவாசிகளைப் பிடித்து அடித்து, பேசும் கற்கள் எங்கேயிருக்கின்றன என்று கேட்டார்கள்.

எவ்வளவு அடிவாங்கினாலும் ஆதிவாசிகள் பேசும்கற்களைக் காட்டிக் கொடுக்கவேயில்லை. உண்மையை மறைக்கிறார்கள் என்று படைவீரர்கள் காட்டிற்கே தீ வைத்தார்கள். மிருகங்களும் பறவைகளும் அலறி ஓடின. மரவீடுகள் பற்றி எரிந்தன. பெண் களும் குழந்தைகளும் வதைபட்டார்கள். ஆனாலும் அந்த மலைவாசிகள் பேசும்கற்களைக் காட்டிக் கொடுக்கவேயில்லை.

காட்டுத் தீ நாலு நாட்கள் எரிந்து அடங்கியது. ஆதிவாசிகள் கூடி மறுபடி தங்கள் வீடுகளை உருவாக்க முனைந்தார்கள். படைவீரர்களுக்கு இவர்களை என்ன செய்வது என்றே தெரியவில்லை. இனிமேலும் அவர்கள் பேசும் கற்களைக் காட்டிக் கொடுக்காவிட்டால் குழந்தைகளைப் பிடித்துக் கொல்லப்போவதாக அறிவித்தார்கள்.

அப்படியும் யாரும் காட்டிக் கொடுக்கவில்லை. ஆதிவாசிக் கிராமத்தின் நடுவில் உள்ள மரத்தடியில் குழந்தைகளை வாளால் வெட்டிக் கொல்ல முயன்றார்கள்.

அப்போது "நிறுத்து" என்று ஒரு குரல் கேட்டது. யார் இவ்வளவு பலமாகக் கத்தியது என்று படைவீரர்கள் பார்த்த போது ஆள் யாரையும் காணவில்லை.

பயத்துடன் கத்தியை உருவியபடியே "யார் குரல் கொடுத்தது!" என்று கேட்டான்.

"நான்தான்" என்று பதில் வந்தது. அப்போதும் யார் என ஆள் அடையாளம் தெரியவில்லை.

அவர்கள் வாளோடு சுற்றி வந்தபோது ஒரு பெரிய பாறை பேசுவதைக் கேட்டார்கள்.

அது "நான்தான் பேசும் கல். உனக்கு என்ன வேணும்?" என்று கேட்டது.

"உன்னைக் கொண்டுவரும்படியாக மன்னர் கட்டளை" என்றார்கள் சிப்பாய்கள்.

"நான் எதற்காக இந்த மலையை விட்டு வர வேண்டும். உங்கள் மன்னர் கட்டளைக்கு அடிபணிய முடியாது என்று சொல்" என்றது பாறை.

படை வீரர்கள் ஆத்திரத்துடன் "உன்னைத் தூக்கிக்கொண்டு போக எங்களுக்குத் தெரியும்" என்றார்கள்.

பாறை பலத்த சிரிப்போடு "முடிந்தால் என்னை நகட்டிப் பார்" என்றது.

படைவீரர்கள் ஒன்று சேர்ந்து நகட்டியபோதும் பாறையை அசைக்கவே முடியவில்லை.

பாறை சிரித்தது.

"இதே இடத்தில் ஆயிரம் வருடங்கள் உறைந்து கிடக்கிறேன். என் மீது புயல்மழை அடித்திருக்கிறது. கொதிக்கிற வெயில் பட்டிருக்கிறது. பறவைகள் அமர்ந்து இளைப்பாறிப் போயிருக் கின்றன. வண்ணத்துப்பூச்சி கிறங்கி அமர்ந்து போயிருக்கிறது. ஆகவே எனக்கும் வேர் இருக்கிறது. அது பூமியின் அடியாழம் வரை போயிருக்கிறது" என்றது பாறை.

உடனே போர்வீரர்கள் காட்டுயானையை வைத்து பாறையை இழுப்பது என்று முடிவு செய்து பாறையோடு சங்கிலி போட்டு யானையை வைத்து இழுத்தனர். அப்படியும் பாறை அசையவேயில்லை.

பாறை ஏளனமாகச் சொன்னது:

"காட்டில் மனிதர்களால் வெல்லமுடியாதவை நிறைய இருக்கின்றன. அது உன்னைப் போன்ற நகரவாசிகளுக்குப் புரியாது. காடு என்பது ஒரு விந்தை. அதற்குள் ரகசியங்கள் ஊறிக்கொண்டேயிருக்கின்றன. காடு அனுமதிக்காமல் உன்னால் வெளியேறிப் போகவே முடியாது."

படைத்தலைவன் கோபத்துடன் "வெடிமருந்தை வைத்துப் பாறையை உடைத்துக்கொண்டு போய்விடலாம்" என்றான்.

பாறை சொன்னது,

"பார்த்தாயா, தோற்றுப் போவதாக இருந்தால் உடனே அழிக்க நினைக்கிறாய். உன்னால் முடிந்தால் அதையும் செய்து பார்" என்றது.

படைத்தலைவன் வெடிமருந்தைப் பாறையினுள் செலுத்தி அதை உடைக்க முயற்சித்தான். பெரும் சப்தத்தோடு பாறையின் ஒரு பகுதி உடைந்து போனது.

பாறை வலியோடு சொன்னது,

"உன்னால் என்னுடைய ஒரு பகுதியைத்தான் உடைக்க முடிந்திருக்கிறது. மற்றபடி பூமியை விட்டு என்னை ஓர் அங்குலம்கூட அசைக்க முடியவில்லை" என்றது.

அவன் ஆத்திரத்துடன் பாறையைக் காலால் மிதித்தான்.

சிதறிக்கிடந்த கல், "உங்கள் மன்னருக்கு எதற்காகப் பேசும் கல் தேவைப்படுகிறது?" என்று கேட்டது.

அதற்குப் படைத்தலைவன் "எல்லா அதிசயமும் மன்னருக்கு மட்டுமே சொந்தமானது. அவர் உன்னோடு பேச விரும்புகிறார்" என்றான்.

அதற்குப் பேசும் கல், "நான் ஒரு உண்மையைச் சொல்கிறேன். அவரை நான் சந்திக்கும் நாளில் அவர் உயிரோடு இருக்க மாட்டார்" என்றது.

அதைக் கேட்ட படைத்தலைவன் "அதையும் பார்த்துவிடலாம்" என்று சொல்லியபடியே உடைந்த கல்லைத் தூக்கிக்கொண்டு காட்டினை விட்டு வெளியேற ஆரம்பித்தான்.

அந்தக் கல் அதன்பிறகு பேசவேயில்லை. அவர்கள் காட்டினைக் கடந்து போகையில் ஓர் ஆறு குறுக்கேயிருந்தது. அது பேசும் கல்லைக் கண்டவுடன்,

"பேசும் கல்லே, பேசும்கல்லே... ஏன் மௌனமாக இருக்கிறாய்?"

என்று கேட்டது.

அதற்குப் பதில் சொல்லாமல் கல் அழுதது.

ஆறு வருத்தத்துடன் சொன்னது,

"தன் சொந்த இடத்தை விட்டுக் கட்டாயமாக வெளியேற்றப் படும்போது யாராக இருந்தாலும் அழத்தான் செய்வார்கள். இந்த வீரர்கள் ஆற்றைக் கடக்க முடியாமல் நான் பார்த்துக் கொள்கிறேன்."

படைவீரர்கள் ஆற்றின் குறுக்கே இறங்கினர்.

திடீரென ஆறு வெள்ளப்பெருக்கு எடுக்கத் துவங்கியது.

படைத்தலைவன் போராடிப் பேசும்கல்லை ஒரு குதிரையின் முதுகோடு சேர்த்துக் கட்டி மறுபக்கம் கடந்து போகும்படியாகச் செய்தான். ஆனால் ஆற்று வெள்ளத்தால் அவனோடு வந்த பாதி வீரர்கள் அடித்து இழுத்துப் போகப்பட்டு செத்துப் போனார்கள்.

படைத்தலைவன் ஆற்றைக் கடந்து மன்னரின் மாளிகையை நோக்கிப் புறப்பட்டபோது மழை பெய்யத் துவங்கியது.

மழையும் பேசும்கல்லிடம் கேட்டது.

"கல்லே கல்லே, உன்னை எங்கே கொண்டு போகிறார்கள். ஏன் அழுகிறாய்?"

அதற்குக் கல் "விருப்பம் இல்லாமல் கட்டாயமாகத் திருமணம் செய்து தரப்படும் மணப்பெண்ணைப் போல நான் இழுத்துக் கொண்டு போகப்படுகிறேன். எனக்கு வேறுவழியே இல்லை" என்றது.

உடனே மழை, "நான் பார்த்துக்கொள்கிறேன்" என்று ஓங்கார மாகப் பெய்யத் துவங்கியது.

கொட்டும் மழையோடு காற்றும் சேர்ந்து கொண்டது. மிச்ச மிருந்த படைவீரர்களுடன் பேசும் கல்லைக் காப்பாற்றியபடியே படைத்தலைவன் மழைக்குள்ளாகவே போய்க்கொண்டிருந் தான்.

கடும் மழையில் மற்றவர்கள் மாட்டிக்கொண்டார்கள். படைத் தலைவன் மட்டும் பேசும்கல்லோடு காட்டைத் தாண்டி வந்தான்.

அரண்மனையை நோக்கி அவன் குதிரை வேகமாகச் செல்லத் துவங்கியது.

அவன் வெற்றிப்புன்னகையோடு அரண்மனையை நெருங்கும் போது அரண்மனையே அமைதியாக இருந்தது.

அவன் "என்ன நடந்தது?" என்று கேட்டான்.

"மன்னர் சொந்த சகோதரனால் விஷமிடப்பட்டுக் கொல்லப் பட்டார். சதிவேலை என்று விசாரணை நடக்கிறது" என்றார்கள்.

மன்னரின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன.

இறந்து கிடந்த மன்னரின் சவத்தின் முன்னால் பேசும்கல்லை வைத்தான் படைத்தலைவன்.

அந்தக் கல் பரிகாசத்துடன் சொன்னது,

"என்ன அரசே, என்னோடு பேச மறுக்கிறாய். நூறு வருடங்கள் வாழ்வதற்குக்கூட முடியாத உனக்கே இவ்வளவு ஆணவம் இருக்கும்போது இந்த பூமியில் ஆயிரமாயிரம் வருடங்கள் வாழ்ந்த எங்களுக்கு எவ்வளவு திமிரும் தைரியமும் இருக்கும்.

மன்னா, உலகில் உள்ள எல்லாக் கற்களும் பேசக்கூடியதுதான். அது மௌனமாக இருப்பதற்குக் காரணம், அதன் இருப்பிடம் விட்டு உடைத்துக்கொண்டு வரப்பட்டதுதான். அந்தத் துயரம்தான் கற்களைப் பேசவிடாமல் செய்திருக்கிறது.

இனி நானும் அந்தக் கற்களைப் போல என் பேச்சை இழந்து விடுவேன். என் நினைவில் மட்டுமே இனி காடும் அதன் இனிமையான வாழ்க்கையும் இருக்கும்" என்றபடியே அந்தப் பேசும்கல் அமைதியானது.

அதன்பிறகு அந்தக் கல் பேசவும் இல்லை. அதை யாரும் கண்டுகொள்ளவும் இல்லை.

அடுத்துப் பதவிக்கு வந்த மன்னன் அந்த வெறும்கல்லைத் தனது தோட்டத்தில் வீசி எறியச் சொன்னான். காய்ந்த புல்லினுள் கிடந்தபடியே அது பரிகாசத்துடன் அரண்மனை யைப் பார்த்துக்கொண்டிருந்தது.

# சிறுமீன்

அந்த ஊரில் ஒரு குளமிருந்தது. அதில் சிறியதும் பெரியது மாக நூற்றுக்கணக்கான மீன்கள் வசித்தன. எங்கிருந்தோ தினமும் ஒரு கொக்கு அங்கே பறந்து வந்து மீன்களைப் பிடித்துத் தின்னத் துவங்கியது. அந்தக் கொக்கு அலகில் மீனைப் பிடித்து வைத்துக்கொண்டு கொல்வதற்கு முன்பு கடுமையாகப் பரிகாசம் செய்வதுண்டு.

"உங்களை ஏன் கொல்கிறேன் தெரியுமா? உங்களால் ஒரு நாளும் வானத்தில் பறக்க முடியாது. இந்தக் குளத்தைத் தாண்டி வெளிஉலகம் தெரியாது. காடுகள், மலைகள், நகரங்கள் என எதையும் கண்டதேயில்லை. எல்லாவற்றையும் விட அழுக்கைச் சாப்பிட்டு வளரும் அற்ப உயிர்கள் நீங்கள். உங்களை நான் கொன்றால் கேட்பதற்கு யார் இருக்கிறார்கள்? என்னை எதிர்க்க உங்களால் இயலுமா? உங்கள் வாழ்க்கைக்கு ஒரு அர்த்தமும் இல்லை. அதனால் தான் உங்களை நான் கொல்கிறேன்" என்று கேலி செய்தது.

இப்படி தினம் கேலியும் அவமானமும் பட்டுச் சாவதை நினைத்து மீன்கள் மிகவும் வருத்தம் கொண்டன.

ஒருநாள் அந்தக் கொக்கு பார்த்துக்கொண்டிருக்கும்போது ஒரு சின்னஞ்சிறு மீன்குஞ்சு ஒன்று குளத்தில் இருந்து தாவி மண்ணில் விழுந்து துடித்துச் சாக முயன்றது.

அதைக்கண்ட கொக்கு "சிறுமீனே. உனக்குச் சாவதற்கு அவ்வளவு விருப்பமா அல்லது என்னைக் கண்டு பயமா? நீ நன்றாக வளரும் வரை பிழைத்து இருக்கட்டும் என்றுதானே விட்டுவைத்திருக்கிறேன். அதற்குள் என்ன அவசரம்?" என்று கேட்டது.

அதற்கு மீன்குஞ்சு சொன்னது.

“கொக்கே. வானத்தில் பறக்கின்ற பறவைகள் என்றாலே உன்னதமானவை என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் எளிய உயிர்களைக் கொன்று தின்னும் அற்பங்கள்கூட வானில் பறக்கின்றன என்று உன்னைப் பார்த்த பிறகுதான் அறிந்து கொண்டேன்.

ஒற்றைக்காலில் நிற்பதால் நீ துறவியுமில்லை. வெண்ணிறமாக இருப்பதால் நீ தூய்மையானவனுமில்லை. தோற்றத்தைப் பார்த்து உன்னை அமைதியின் உருவம் என நம்புபவர்கள் முட்டாள்கள். உன்னிடம் சிக்கி உயிரை இழப்பதை விட நானாகச் செத்துமடிவது மேல். ஒன்றை நினைவில் வைத்துக் கொள். எந்தக் கொக்கும் வயதாகி தானாகச் செத்துப் போவதில்லை. எவராலோ கொல்லப்படத்தான் போகின்றன” என்றபடி வீழ்ந்து இறந்தது சிறுமீன்.

# சொந்தக்குரல்

அம்மா தனியே பேசிக்கொண்டிருப்பது கேட்டது.

என்னுடன் பேசுவதாக நினைத்துக்கொண்டு தனக்குத்தானே பேசிக்கொண்டிருக்கிறாள்.

இல்லாத எதைஎதையோ பற்றிக்கொண்டுதான் முதுமையில் வாழவேண்டியிருக்கும் போலிருக்கிறது. இருட்டில் தடுமாறி விழுந்து அடிபட்டுவிட்ட அம்மாவை மூன்று நாட்களாக மருத்துவமனையில் அனுமதித்திருந்தோம். இரவில் அம்மாவோடு நான் துணைக்கு இருந்தேன். அம்மாவிற்கு வயது எழுபத்திமூன்றைக் கடந்துவிட்டிருக்கிறது.

சமீபமாக அம்மா மின்சார விளக்குகளைப் போட்டுக்கொள்ளாமல் இருட்டிலே நடக்கப் பழகியிருந்தாள். எவ்வளவோ முறை அப்படிச் செய்யாதே என்று நான் திட்டியபோதும், "இருட்டு பழகிப்போச்சுடா சோமா. இருட்டை என்ன இன்னைக்கு நேத்தா பாக்குறேன். இருட்டு பழக ஆரம்பிச்சி எழுபது வருசம் போயிருச்சி. இன்னும் என்ன பயம்!" என்பாள்

"இல்லைம்மா பயத்திற்காகச் சொல்லவில்லை. நீ கீழே விழுந்து வைத்துவிட்டால் என்ன செய்வது?" என்று கேட்பேன்.

"விழுந்தா போய்ச் சேர வேண்டியதுதான். என் மனசில இருக்கிற ப்ரகாசம் எல்லாம் அணைஞ்சி போய் பல வருசமாகிருச்சிடா. இப்போ நான் வெறும் உடம்புதான்" என்றபடியே இருட்டிற்குள் நடந்து போய்க்கொண்டிருப்பாள்.

அப்படிதான் விழுந்து அடிபட்டுக்கொண்டாள்

அம்மா கடந்த சில வருடங்களாகவே இப்படித்தானிருக்கிறாள். சில நேரங்களில் வீட்டில் உள்ளவர்கள் பெயர்களே கூட மறந்து போய்விடுகிறது. "டேய் இவனே" அல்லது "இங்கே

வாயேன்” என்றுதான் கூப்பிடுகிறாள். முதுமை அடையும்போது உடலின் எடை குறைந்து மெலிந்து போய்விட வேண்டும். இல்லாவிட்டால் யாரால் தூக்கிக்கொண்டுபோய் டாய்லெட்டில் உட்கார வைக்க முடியும் என்று அவளாகவே சொல்லிக் கொள்கிறாள். அதற்காக சாப்பாட்டைத் தானே குறைத்துக் கொள்வதுடன் தன்னை வருத்திக்கொள்ளவும் ஆரம்பித்திருந் தாள்.

இளவயதில் அம்மா நல்ல பருமனாக இருந்தாள். அதற்கு அவள் சொல்லும் காரணம் அப்பா.

அவர் எப்படிக் காரணம் என்று கேட்டால் நினைவுகளைக் கொட்டத் துவங்கிவிடுவாள்.

“அவருக்கு வீட்ல சமைச்ச எதுவும் மிச்சம் ஆகிறக்கூடாது. வேற என்ன செய்றதுனு சமைச்ச மிச்சத்தை எல்லாம் நானே கொட்டிக்கிட்டேன். அப்போ உடம்பு பெருத்துப் போகாமல் என்ன செய்யும். அத்தோட மாசத்துக்கு ஒருநாள் கோவிலுக்கும் தெரிஞ்சவங்க வீட்டு விசேஷத்துக்குப் போறதைத் தவிர வீட்டை விட்டு வெளியே போனதே கிடையாது. ஒரு தேங்காய்ச்சில்லு வாங்கிட்டு வர்றேன்னு சொன்னாகூட உங்கப்பாதான் போயிட்டு வருவார். கல்யாணமாகி எனக்கும் ஏழு பிள்ளைகள் பிறந்து அதுல ரெண்டு செத்தும் போச்சி. அத்தனை வருசத்துக்குப் பிறகும் உங்கப்பாவுக்கு என்னைத் தனியா அனுப்புறதுன்னா பயம்.

கோடையில சிவசு மாமா வீட்டுக்குப் போயிட்டு வர்றதுக்கு ரயில் ஏத்திவிட வரும் போது ஸ்டேஷன்ல வச்சி ஒண்ணுக்கு பத்து தரம் அட்வைஸ் பண்ணுவார்

அது பத்தாதுன்னு ரயிலுக்குள்ளேயே ஏறி இவளைப் பத்திர மாக கொண்டுபோய் விட்ருங்கன்னு பக்கத்து மனுசங்க கிட்டே வேற சொல்லிவிடுவார்.

ரொம்ப அவமானமா இருக்கும்.

அதே நேரம் நம்ம மேல இருக்கிற அக்கறையில்தான் இப்படி எல்லாம் செய்றாருனு சமாதானம் பண்ணிக்கிடுவேன். அப்போ உனக்கு வயது நாலோ அஞ்சோ இருக்கும். ஞாபகமிருக்குமோ என்னமோ.

அக்கறை காட்டுறதுக்காக நாம செய்ற காரியங்கள் அடுத்தவரை எவ்வளவு இம்சை பண்றதுன்னு நாம புரிஞ்சிக்கிடுறதேயில்லை. அதுக்கு உங்க அப்பா ஒரு ஆள் போதும்.

செத்துப்போன மனிதரைப் பற்றி இப்போ பேசி என்ன ஆகப்போறது.

ஆனாலும் மனுசன் செத்துப் போயிட்டாலும் அவன் படுத்தின பாடு, பண்ணின அக்ரமம் எல்லாம் கூடவே செத்துப் போயிடுறதில்ல. அது யார் மனசிலயாவது அழியாம இருந்து கிட்டேதான் இருக்கு.

இப்போகூட கனவுல உங்கப்பா முகம் வந்துச்சின்னா திடுக் கிட்டு முழிச்சிக்கிடுறேன்.

உங்கப்பா வாழ்நாள் முழுவதும் யாரையாவது திட்டிக்கிட்டே இருந்தார்.

அவருக்குப் பிள்ளைகள் எல்லாமே ரெண்டாம் பட்சம்தான்.

அப்படியொரு மனசு.

ஒண்ணுக்குப் பத்து தடவை கேட்டாதான் எதுவும் கிடைக்கும்.

சோமா, உங்களை நினைச்சி நான் நிறைய நாட்கள் அழுதிருக் கேன்.

ஏன்டா சோமா நீ, உன் தம்பி எல்லாம் எங்களுக்குப் பிள்ளையா வந்து பிறக்கணும்.

எப்பவாது யோசிச்சி பாத்திருக்கியா?

என் பிள்ளைகளைப் பற்றி நான் நிறைய யோசிச்சி பாத்தி ருக்கேன்.

இதுகள் எல்லாம் ஏன் என் வயிற்றுல வந்து ஜனிச்சிருக்கு. நான் என்ன கொடுப்பினை பண்ணினேன் அதுக்கு. சில நேரம் பாத்தா நீங்க எல்லாம் யாரோ எவரோங்கிற மாதிரியும் இருக்கு. குறத்தி பின்னாடி பிள்ளைகள் வேடிக்கை பாக்க கூடவே வருங்களே அப்படித்தான் உங்களையும் தோணுது, நான்தான் அந்தக் குறத்தி.

சோமா, எனக்கு நீங்க எல்லாம் சின்ன வயசா இருந்தபோது ஒரு பயம் இருந்துக்கிட்டே இருந்துச்சி. அது என்னன்னா, யாராவது தொலைஞ்சி போயிடுவீங்களோனு.

எதுக்கு அப்படி பயந்தேன்னு தெரியலை.

ஆனா உள்ளுக்குள்ளே அந்தப் பயம் உலை கொதிக்கிற மாதிரி கொதிச்சிக்கிட்டே இருந்துச்சி.

தெருவில் பிள்ளைகள் விளையாடிக்கிட்டு இருக்கிறப்போ கூட அடிக்கடி வந்து இருக்காங்களான்னு எட்டிப் பாத்துக்

கிடுவேன்.

ஸ்கூல் விட்டு லேட்டா வந்தா மனசு தாங்காது. திடீர்னு மதிய நேரம் யாராவது வந்து கதவைத் தட்டினா அய்ய்ய்யோ, பிள்ளை காணாமப் போயிருச்சினுதான் பயப்படுவேன். பதறி எழுந்து வந்து கதவைத் திறந்து பார்ப்பேன்.

உங்கப்பாவுக்கு அந்தப் பயமே கிடையாது.

அது எப்படிறா பொண்டாட்டிக்கு இருக்கிற பயத்தில ஒண்ணு கூட புருஷனுக்கு இருக்கிறதில்லை.

உன் தங்கச்சி லட்சுமி இருக்காளே, அவ என்னைக் கிறுக்கா ஆக்கி வச்சா. ஒரு நாள் ஒரு பொழுது வீட்ல அடங்கிக் கிடக்க மாட்டா. இத்தனை ஆம்பளைப் பசங்க வீட்ல ஒடுங்கி இருந்தப்போ அவளுக்குக் கால் ஒரு இடத்தில நிக்காது.

ஓட்டம். ஓட்டம். அடுத்த வீடு. அடுத்த வீதி. சத்திரம் சாவடி லைப்ரரினு ஓடிக்கிட்டே இருப்பா. எங்கேயோ தொலைஞ்சி போகப்போறாளோன்னு பயமா இருக்கும். ஆனா அப்படி எதுவும் நடக்கலை.

ஒழுங்கா படிச்சி கல்யாணம் ஆகி புருஷனோட ஜாம்ஷெட் பூருக்குப் போயி வாழ்ந்து நாற்பத்தியெட்டு வயசில எனக்கு முன்னாடியே செத்தும் போயிட்டா.

அவசரம். எதுல பாரு அவசரம். ஆனா அவளும் ரொம்ப கஷ்டப்பட்டிருப்பா. அம்மாகிட்டே அதை எல்லாம் சொன்ன தில்லை.

பிள்ளைகள் நிறைய விசயத்தைப் பெத்தவங்ககிட்டே சொல்றதே யில்லை. பாவம், அம்மா இதை நினைச்சி வருத்தப்படுவான்னு நினைச்சிருப்பா.

ஆனா சொல்லாம இருக்கிறதுதான்டா ரொம்ப வலிக்குது. ஒரு நாள் அவள் என் கனவுல வந்து எதுவும் சொல்லாம அழுதா. அழுகைன்னா அவ்வளவு அழுகை. எனக்கு ஆறுதல் சொல்லக்கூட தோணலை. அழுதுமுடிச்சி கையைத் துடைச்சிக் கிட்டு அம்மா, உனக்கு புரிஞ்சிருச்சான்னு கேட்குறா.

உடம்பு சிலிர்த்துப் போச்சி. கை கால் நடுக்கம் வந்து தூக்கத்தில இருந்து எழுந்து உட்கார்ந்துக்கிட்டேன். மனது துவண்டு போச்சுடா. அவளைக் கனவுல ஏன் பார்த்தேன்.

என்னாலே ரெண்டு நாளுக்கு ஒரு வாய் சோறு சாப்பிட முடியலை. செத்துப் போயிட்டாளே இனிமே அவளுக்கு நான் என்ன உதவி பண்ணமுடியும். ஆனாலும் செத்துப்

போன பின்னாடியும் நினைப்போட வலி ஆறாததுதானா. அதை நினைச்சி தூக்கம் வராம பலநாள் அழுதிருக்கேன்.

சோமா, உனக்கும் அழுகணும்னு ஆசையா இருந்தா இப்பவே அழுதுரு.

என்னாலே உன்னைத் தேற்ற முடியாது. ஆனா உன் கஷ்டத்தை என்னால புரிஞ்சிக்கிட முடியும். ஏன்னா, நீ என் பிள்ளை. பெத்தவங்களுக்கு பிள்ளைங்க கஷ்டம் அவங்க சொல்லித்தான் தெரியுறதுன்னா அதை விட கேவலம், அவமானம் வேற எதுவுமில்லை.

நீ, உன் தங்கச்சி, உன் தம்பி எல்லாம் என் உடம்புல கொஞ்சம் பிஞ்சி எடுத்துட்டுப் பிறந்தவங்கதானே. எனக்குக் கை கால் வலிக்குதுன்னு யாராவது வந்தா சொல்றாங்க. நானா தெரிஞ்சிக்கிடுறது இல்லை. அப்படித்தான் உங்க கஷ்டமும் வலியும். நானாத் தெரிஞ்சிக்கிடுறேன். எனக்கு உங்க யாரு மேலயும் கோபம் இல்லைடா. ஆனா நிறைய வருத்தம் இருக்கு. ஆதங்கம் இருக்கு. அது என் சுபாவம். எனக்கு நடந்ததை நான் யார்கிட்டேயும் சொல்லாம புத்து மாதிரி எனக்குள்ளேயே வளர்த்துக்கிட்டேன். புத்து வளர்ந்து என்னைய மூடிக்கிடுச்சி. அதுக்கு வேற யாரும் பொறுப்பில்லை.

சோமா. எனக்கு ஒரேயொரு ஆசைடா நான் ஒரு கதை எழுதணும். சொன்னா உனக்கு ஆச்சரியமா இருக்கும். நான் ஒரு கதை எழுதி அது *கலைமகள்ல* 1952வது வருசம் வெளியாகி இருக்குடா. கதைக்கு தலைப்பு ‘பிராப்தம்’ அதுக்குப் படம் போட்டது யார் தெரியுமா? ஓவியர் சங்கர். என்ன அருமையா வரைஞ்சிருப்பார் தெரியுமா? எதுக்கு அந்தக் கதையை எழுதுனேன்னு தெரியலை. ஆனா அப்போதான் கல்யாணம் ஆகி உங்க அண்ணன் பிறந்து இருந்தான். உங்க அப்பா வத்தலக்குண்டில தாசில்தார் ஆபீஸ்ல வேலையா இருந்தார்.

நாங்க குடியிருந்த வீட்டுக்குப் பக்கத்தில் ஒரு லைப்ரரி. பகல்ல உங்க அப்பாவுக்குத் தெரியாம அங்கே போயி காண்டேகர் எழுதுன புத்தகங்களை எடுத்துட்டு வந்து படிக்க ஆரம்பிச்சேன். என்னைப் பத்தியே எழுதியிருக்கிற மாதிரி இருந்துச்சி. அப்போ தான் மனசில ஒரு கதை தோணுச்சி. அதை காண்டேகர் கதை மாதிரியே பார்த்துப் பார்த்து எழுதினேன். கதையை எழுதி முடிச்சதுக்கு அப்புறம் என்ன பண்றதுன்னு தெரியலை.

அந்த லைப்ரரியன்கிட்டே கேட்டேன். அவர்தான் கலை மகளுக்கு அனுப்பி வைக்கச் சொல்லி முகவரி கொடுத்தார்.

அனுப்பி வச்சிட்டு மறந்துட்டேன். நாலு மாதம் கழிச்சி அது வெளியாகி இருந்துச்சி. அச்சில என் கதையைப் பார்த்த சந்தோஷம் தாங்க முடியலை. உங்க அப்பா மதியச் சாப்பாட்டுக்கு வந்தப்போ அவர்கிட்டே பத்திரிகையை நீட்டினேன். 'நீ எழுதுனதான்?'னு கேட்டார். தலையாட்டினேன். சாப்பிட்டு முடிச்சிட்டு ஊஞ்சல்ல உட்கார்ந்து படிச்சார். பரீட்சை பேப்பர் திருத்துற வாத்தியார் முன்னாடி நிக்கிற பொண்ணு மாதிரி கையைக் கட்டிக்கிட்டு நின்னுக்கிட்டு இருந்தேன்.

உங்க அப்பா படிச்சி முடிச்சிட்டு ஒரு பெருமூச்சு விட்டார். பிறகு எழுந்து சமையற்கட்டுக்குள்ளே போனார். ஒரு தீக்குச்சியை எடுத்து அந்தக் கதையைக் கிழிச்சி அதுக்குத் தீ வச்சார். வேற ஒண்ணுமே பேசலை. அப்படியே போய் மாடில அவர் ரூம்ல போய் தூங்கப் போயிட்டார். எரிந்து கிடந்த காகிதத்தைப் பாத்துக்கிட்டே இருந்தேன். அழுகை முட்டிக்கிட்டு வருது. அவமானமா இருந்துச்சி. சாயங்காலம் அவர் வெளியே கிளம்பும்போது காபி கொண்டுவந்து வச்சிட்டு 'கதை பிடிக்கலையா'ன்னு கேட்டேன்.

அவர் 'யாரைக் கேட்டுடி நீ கதை எழுதுனே'ன்னு கேட்டார்.

'மனசுல தோணுச்சி, எழுதுனேன்'னு சொன்னேன்.

'உனக்கு ஏதுடி பேனா, காகிதம். யாரு கொடுத்தா?'ன்னு கத்தினார்

'வீட்ல இருக்கிறதே உங்க பழைய பேனா. வெள்ளைக் காகிதம் நயினார் கடைல போயி வாங்கினேன்னு சொன்னேன்.

'பகல்ல தனியா கடைக்கு வேற போயிட்டு வர ஆரம்பிச்சிருக்கியா? வேற என்ன திருட்டுத்தனம் பண்ணினே சொல்லு?' என்றபடியே 'உனக்கு இந்த கலைமகளுக்கு அனுப்பணும்னு ஐடியா யார் சொன்னது?' என்று கேட்டார். நான் ஒளிக்காமல் எல்லாவற்றையும் அவரிடம் சொல்லிவிட்டேன்.

உங்கப்பா பல்லைக் கடித்துக்கொண்டு 'இப்பவே உங்க அப்பாவை வரச்சொல்லித் தந்தி குடுக்குறேன்'னு சொல்லி வெளியே கிளம்பிப் போயிட்டார். சொன்னது போலவே எங்க அப்பாவைத் தந்தி குடுத்து வரச் சொன்னார். எங்க அப்பா கோவில் கணக்குப்பிள்ளை. இயலாத மனுசன். அவரு மாப்பிள்ளை கோபமா இருக்காருன்னு தெரிஞ்சதும் என்ன செஞ்சார் தெரியுமா?

சாஷ்டாங்கமா உங்க அப்பா கால்ல விழுந்து கெட்டியாப் பிடிச்சிக்கிட்டு 'என் பொண்ணு செஞ்ச தப்பை மன்னிச்சி

ஏத்துக்கோங்க'ன்னு அழுதார்.

உங்க அப்பாவுக்கு அது போதலை. 'என்னாலே உங்க மக செஞ்ச தப்பை மன்னிக்க முடியாது. அவளை உங்க வீட்டுக்குக் கூட்டுட்டுப் போயிருங்க'ன்னு சொல்லி என் புடவை பெட்டி எல்லாம் தூக்கி வெளியே வீசி எறிஞ்சார்.

'அய்யோ, அப்படி சொல்லாதீங்க'ன்னு எங்க அப்பா கோபத்தில் என்னை நாலு அறை அறைஞ்சி 'மாப்ளேகிட்டே மன்னிப்பு கேளுடி. இனிமே கதை எழுதுனே உன் கையை ஒடிச்சி மொண்டி ஆக்கிடுவேன்'னு சொன்னாரு.

நானும் உங்க அப்பாகிட்டே மன்னிப்பு கேட்டு சத்தியம் பண்ணிக்குடுத்தேன். உங்க அப்பா என்னை ஏத்துக்கிட்டார். ஆனா எப்பவாவது கோபம் வந்தா 'நீ திமிர் பிடிச்சிப்போயி கதை எழுதுறவ ஆச்சே. இதையும் எழுதுடி' என்று சொல்லிக் காட்டுவார்.

அதுல இருந்து வாரப் பத்திரிகை படிக்கிறதை எல்லாம் விட்டுட்டேன்.

ஆனா உங்க அப்பாவுக்குத் தெரியாம மனசிலயே ஒரு கதையை எழுதுக்கிட்டு வர ஆரம்பிச்சேன். அந்தக் கதைக்கு தலைப்பு எல்லாம் கூட வச்சிருக்கேன். தலைப்பு என்ன தெரியுமா? பரமபதம். அதுல வர்ற பொண்ணு பேரு சரஸ்வதி. அது என்னோட கூட படிச்ச ஒரு பொண்ணோட பேரு. அவளை ஸ்கூல்ல படிச்சதுக்கு அப்புறம் திரும்பப் பார்க்கவே யில்லை. ஆனா அவ முகம் மறக்கவே முடியலை. அதனாலே அந்தப் பெயரை வச்சிக்கிட்டேன்.

சும்மா இருக்கிற நேரம் எல்லாம் அந்தக் கதையை மனசுக் குள்ளே கொஞ்சம் கொஞ்சமா எழுதிக்கிட்டே இருப்பேன். எங்கே மனசில இருக்கிற கதையை உங்கப்பா கண்டுபிடிச்சிரு வாரோன்னுகூட பயமா இருக்கும். ஆனா அவர் கடைசி வரைக்கும் கண்டுபிடிக்கவேயில்லை.

உங்க அப்பா எனக்கு நிறைய நகை வாங்கிக் குடுத்து இருக்கார். என் பேர்ல ஒரு வீடு வாங்கிக் குடுத்தார். வருசத்துக்கு ஒரு பட்டுப்புடவை. இஷ்டப்பட்ட கோவில்குளம் எல்லாம் கூட்டிட்டுப் போய் வந்திருக்கார். ஆனா அவருக்கு நான் ஒரு துணையாள். அவர் அதிகாரத்துக்கு கட்டுப்படுற நல்ல வேலையாள். அவ்வளவுதான்.

நீ சென்னைக்குப் போயிட்டே. உன் தம்பிகள் அவனவன் பாட்டைப் பாத்து ஆளுக்கு ஒரு திக்கு போயாச்சி. வீட்ல

நானும் உங்க அப்பாவும் ரெண்டே ஆளு. பிள்ளைகள் இல்லாம வீட்ல தனியா இருக்கிறது கொடுமைடா. கிறுக்கச்சி மாதிரி நீங்க விளையாண்ட சுவரைத் தொட்டுப் பாக்குறதும் படுத்த படுக்கையைத் தடவிப் பாக்குறதுமா இருப்பேன்.

'ஏன்டி வீட்லயே இருக்கே... வெளியே எங்காவது கோவில் குளம்னு போயிட்டு வர்றதுன்னா போயிட்டு வா'ன்னு உங்க அப்பா சொல்லிக்கிட்டே இருந்தார். வயசானதுக்கு அப்புறம் அவரு தப்பை உணர்ந்துக்கிட்டாருன்னு நினைக் கிறேன்.

எனக்குத்தான் வெளியே போகப் பிடிக்கலை.

செக்குமாட்டை அவுத்துவிட்டா அது எங்கே போகும். உங்க அப்பா இறந்துபோன பின்னாலும் அவர் என் கூடவே இருக்கிற மாதிரியேதான் இருக்கு. என் ரெண்டாவது கதையை எழுதி வெளியிடுறதுக்கு துணிச்சலே வரலை.

இனிமே நான் கதை எழுதி என்ன செய்யப்போறேன். ஆனாலும் மனசு கேட்க மாட்டேங்குது. உங்கப்பாவுக்கு நான் எழுத மாட்டேனு சத்தியம் பண்ணிக் குடுத்திருக்கேன். அதை அவர் இல்லேங்கிறதுக்காக என்னாலே மீற முடியாது. அதனாலே சோமா, உன்கிட்டே அந்தக் கதையைச் சொல்றேன்.

நீ எழுதி கலைமகளுக்கே அனுப்பி வச்சிரு. ஆனா உன் பேரு போட்டுக்கோ. ஏன்னா ஆம்பளை பசங்க கதை எழுதினா உங்கப்பா ஒண்ணும் சொல்ல மாட்டார். அந்தக் கதை என் மனசில இருந்து ரொம்ப ரணப்படுத்துதுடா. ஒருவேளை அதைச் சொல்லாமலே நான் செத்துப் போயிட்டா ஒரு கதை அநியாயமா என்னோடவே புதைஞ்சி செத்துப் போயி ரும்டா. அந்தப் பாவத்தை என்னாலே தாங்க முடியாது.

சோமா, அந்தக் கதையை உன்கிட்டே சொல்லட்டும்மா. கவனமா கேட்டுக்கிடுறா. நான் சொல்றதுல எதையும் மாத் திராதே.

பேருக்குத்தான் அது கதை. ஆனா நடந்தது எல்லாம் நிஜம்.

கதைன்னாலே அப்படித்தானே. கிட்டே வா. உங்கப்பா பக்கத்தில் இருந்து கேட்டுக்கிட்டு இருக்கப்போறார்" என்ற படியே அம்மா தனக்குத் தானே முணுமுணுத்துக்கொண்டிருந் தார். மருத்துவமனையில் ஓடும் மின்விசிறியின் சப்தம் மட்டும் சீராகக் கேட்டுக்கொண்டிருந்தது.

அம்மாவினை எழுப்பி "என்னம்மா கதை கிதைன்னு ஏதோ சொல்லிக்கிட்டு இருந்தியே... என்னது அது?" என்று கேட்டேன்.

கலக்கத்துடன் கண்விழித்தபடியே "தெரியலைடா, மறந்து போச்சி. ஞாபகம் வந்தா சொல்றேன்" என்றாள்.

பிறகு அந்தக் கதையை அம்மா நினைவு கொள்ளவேயில்லை தான் இறக்கும்வரை.

# சிற்றறிவு

தென்கடல் தீவில் இருநூறு வருடங்களின் முன்பாக இது நடந்தது என்கிறார்கள். அப்போது அதை ஒரு மகாராணி ஆட்சி செய்துகொண்டிருந்தாள். அவளது ஆளுமையின் கீழாக பல நூறு சிறுதீவுகள் இருந்தன. ராணி திருமணம் செய்துகொள்ளாதவள். மிகுந்த முன்கோபி என்று பெயர் எடுத்திருந்தாள். குறிப்பாக அவளுக்குக் கடல்வழியாக வந்திறங்கி வணிகம் செய்யும் விதேசிகளைப் பிடிக்கவேயில்லை.

அந்த நாட்களில் போர்த்துக்கீசிய அரசு புகழ்பெற்ற கடற் பயணியான ஆல்பர்ட்டோ ஒலிவாராவை அனுப்பி இழந்து போன தங்கள் கடல் வணிகத்தைப் புதுப்பித்துக்கொள்ள முயற்சித்துக்கொண்டிருந்தது. மூன்றரை மாதக் கடற்பயணத் தில் நிறைய அரசர்களைத் தன்வசமாக்கி வணிக அனுமதி பெற்ற ஒலிவாரா, நிக்கோபார் தீவிற்குக் காற்றடிகாலத்தில் வந்து சேர்ந்தான். தனது அலங்கார ஆடைகளை அணிந்து கொண்டு துணைக்கு இரண்டு கறுப்பு மூர்களையும் அழைத்த படி பரிசாகக் கொண்டுவந்த புதிய விஞ்ஞானக் கண்டுபிடிப்பு களைப் பல்லக்குகளில் ஏற்றிக்கொண்டு அரசியைக் காணச் சென்றான்.

அரண்மனை, மரத்தால் கட்டப்பட்டு இருந்தது. மூன்று நாட்கள் காத்திருந்த பிறகுதான் மகாராணியின் தரிசனம் கிடைத்தது. சபைக்குள் அவரை அழைத்துப்போன மந்திரி மகாராணி எதிரில் ஒலிவாரா உட்காரக்கூடாது என்றும், சபைக்குள் காலணிகள் தொப்பிகள் அணிந்துவர அனுமதி யில்லை என்றார். வேறுவழியில்லாமல் அத்தனையும் அகற்றி வைத்துவிட்டு மகாராணியைக் காண சபைக்குள் சென்றான்.

மகாராணி விலை உயர்ந்த சிவப்புநிற பட்டு உடுத்தியிருந்தாள். ஐம்பது வயதைத் தாண்டியிருக்கும் தோற்றம். கழுத்தில்

இரண்டு அடுக்கு வைர நகைகள் அணிந்திருந்தாள். துபாஷியிடம் அவன் யார், எதற்காக வந்திருக்கிறான் என்று அவள் விசாரித்தாள். மேன்மை தாங்கிய மகாராணியிடம் விஞ்ஞானத்தின் பெருமைகளை விளக்கி வரும்படியாக போர்த்துகீசிய அரசு தன்னை அனுப்பி உள்ளதாகச் சொல்லி, தனது விசித்திரமான பரிசுப் பொருட்களை அரசியின் முன்னால் சமர்பணம் செய்தான். அரசி ஒவ்வொன்றையும் வியப்போடு பார்த்தபடியே விசாரித்தாள்.

“மகாராணி, இதுதான் உலக உருண்டை. உங்களுக்காகவே தங்கத்தால் செய்யப்பட்டிருக்கிறது. மொத்த பூமியின் அளவும் இவ்வளவுதான். கையில் வாங்கிப் பாருங்கள் மகாராணி” என்றான். ராணி தன் வாழ்வில் முதல்முறையாக மொத்த உலகத்தையும் தன் கையால் தூக்கிப் பார்க்கிறோம் என்ற பெருமிதத்துடன் அதை வாங்கிப் பார்த்தாள். பிறகு இதில் வானம் எங்கேயிருக்கிறது என்று கேட்டாள். ஒலிவாரா புன்சிரிப்போடு “இது நிலவறைப்படம். இதில் ஆகாசமிருக்காது” என்றான். அதுவே அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது.

“இதை எப்படி உருவாக்கினீர்கள்?” என்று கேட்டாள். “அது வானவியல் அறிவால் உருவாக்கப்பட்டது. போர்த்துக்கீசியர்கள் விஞ்ஞானப் பேரறிவு பெற்றவர்கள்” என்றான். மகாராணியால் உலக உருண்டையை நம்ப முடியவில்லை. “இவ்வளவுதான் மொத்த உலகமுமா? இந்தக் கோடுகள்தான் நாடுகளா. இதுதான் கண்கொள்ளமுடியாத கடலா!” என்று மறுபடியும் கேட்டாள்.

“மகாராணி அவர்களே, பூமியின் மொத்தப் பரப்பையும் எங்கள் விஞ்ஞானிகள் கணித்து வரைபடமாக்கிவிட்டார்கள். அதன் மாதிரி வடிவம்தான் இந்த உருண்டை. இனி நாங்கள் அறியாத இடம் உலகில் எங்குமில்லை” என்றான்.

“இதில் தனது தீவு எங்கேயிருக்கிறது?” என்று கேட்டாள் ராணி. அதற்கு ஒலிவாரா “இந்தியா என்பது இந்தச் சிறிய கோடு. அதில் தங்கள் ராஜ்ஜியம் இதோ சிறிய புள்ளிதான்” என்றான். இவ்வளவு சிறிய பிரதேசம்தானா தனது ராஜ்ஜியம் என்று திகைத்தபடியே அதையே பார்த்துக்கொண்டிருந்தாள். ஒலிவாரா சொன்னான்:

“மகாராணி அவர்களே, விஞ்ஞானம் என்ற துறை இன்று வளர்ந்து வருகிறது. காற்றின் வேகத்தை அறிந்து சொல்லும் கருவி இது. இதை வைத்துக்கொண்டால் காற்று எந்தப்பக்கம் அடிக்கிறது என்று எளிதாகச் சொல்லிவிடலாம். இதுபோல இனி சுறா வேட்டையாட குத்தீட்டி தேவையில்லை. இதன்

பெயர் துப்பாக்கி. இதை வைத்துச் சுட்டால் சுறா செத்துப் போய்விடும். இதனால் ஒரே வேளையில் பல சுறாக்களைக் கொன்றுவிடலாம்" என்றபடியே ஒரு பன்றியைக் கொண்டுவரச் சொல்லி சுட்டுக்காட்டினான். அது குண்டடி பட்டு துள்ளித் துடித்து செத்தது.

"உங்கள் கண்டுபிடிப்புகளைக் கண்டு நான் சந்தோஷப்படு கிறேன். போர்த்துக்கீசியர்கள் மிகப் பெரிய அறிவாளிகள்" என்றாள் மகாராணி. இதனால் மகிழ்ந்துபோன ஒலிவாரா இத்தாலியில் இருந்து கொண்டுவந்திருந்த ஒரு தொலைநோக் கியை எடுத்து அவளிடம் தந்தான். "இது என்ன?"வென்று கேட்டாள். "இதில் ஒரு கண்ணை வைத்துப் பாருங்கள் மகாராணி. உங்களுக்கே தெரியும்" என்றான்.

அரசி அதை வாங்கிப் பயத்தோடு ஒரு கண்ணை வைத்துப் பார்த்தாள். தூரத்தில் உள்ள பொருட்கள் யாவும் மிக அருகில் கைதொடுவது போல தெரிந்தன. "என்ன விந்தை. ஒரு சிறிய கருவி. இதன்வழியே தொலைவில் உள்ள யாவும் அருகாமையில் தெரிகிறதே. இது என்ன கண்கட்டுவித்தையா?" என்று வியந்தாள்.

"உங்களைப் போன்ற உயர்ந்த மனிதர்கள் எதிர்காலத்தை முன்கூட்டியே தெரிந்துகொள்ள வேண்டியவர்கள். உங்களுக் காகவே இது உருவாக்கப்பட்டிருக்கிறது. எனது எளிய பரிசாக ஏற்றுக்கொள்ளுங்கள். இதை வைத்துக்கொண்டால் கடலில் இருந்தபடியே கரையைக் காணமுடியும். தொலைவில் துள்ளும் மீனைக்கூட படகில் இருந்தே பார்த்துவிடலாம். எதிரி வருவதை உடனே தடுக்க முடியும். இப்படி எதையும் வருவதற்கு முன்னால் அறிந்துகொள்ளும்படியாகச் செய்வதுதான் விஞ்ஞா னம்" என்றான். மகாராணி கைதட்டிப் பாராட்டினாள்.

அடுத்து ஓர் உருப்பெருக்கி ஆடி ஒன்றினைக் கையில் எடுத்து "இதில் இந்த எறும்பைப் பாருங்கள்" என்றான். மகாராணி ஒரு மாயவித்தைக்காரனின் நிகழ்ச்சியைக் காண்பது போல அவன் சொல்வதை எல்லாம் செய்துகொண்டிருந்தாள். எறும்பு மிகப் பெரியதாக யானை போல தெரிந்தது. "நிச்சயம் போர்த்துக்கீசியர்களின் விஞ்ஞானம் போற்றப்பட வேண்டியது" என்றாள்.

அவன் அதன்பிறகு தனது மரப்பெட்டி ஒன்றில் இருந்து சிறிய குச்சி ஒன்றினை எடுத்து அதை உரசிக் காட்டினான். நெருப்பு பற்றி எரிந்தது. அதன் பெயர் தீக்குச்சி என்றும், அதை வைத்து இங்குள்ள பெரிய காட்டினைக்கூட எளிதாக

எரித்துவிடலாம் என்றான்.

அதன்பிறகு பரிகாசமான குரலில் "இந்தத் தீவின் வாழ்க்கை மிகவும் பின்தங்கிப் போயிருக்கிறது. கடலை உங்களுக்குப் பயன்படுத்தத் தெரியவில்லை. இங்குள்ளவர்கள் இயற்கை வளத்தை அறியாத அப்பாவி மக்கள். எங்களை வணிகம் செய்ய அனுமதித்தால் போதும், தீவின் வாழ்க்கையைப் புதிதாக மாற்றிவிடுவோம்" என்று சொல்லி அதற்காகவும் தான் சில புதிய இயந்திரங்கள் கொண்டுவந்திருப்பதாகக் காட்டினான்.

ஒன்றைக் கையில் எடுத்துக்காட்டி "இந்தக் கருவியைப் பொருத்திவிட்டால் அது சரியான நேரம் காட்டும்" என்றான். வேறு ஒரு இயந்திரத்தை எடுத்துக்காட்டி "இதை வைத்து மழையை அளக்கலாம்" என மற்ற கண்டுபிடிப்புகளையும் அறிமுகம் செய்தான்.

மகாராணி அவற்றைக் கண்டு புருவத்தை உயர்த்தி வியப்பு தாங்க முடியாமல், "உலகம் மாறிக்கொண்டிருக்கிறது என்பதை உங்களின் வருகை உறுதி செய்துள்ளது" என்று மனம் திறந்து பாராட்டினாள். அதற்கு ஒலிவாரா "எங்கள் அறிவும் உங்கள் கருணையும் ஒன்று சேர்ந்தால் உங்கள் ராஜ்ஜியம் மிகப்பெரிய தாக விருத்தியடையும். மேன்மை தாங்கிய மகாராணி அவர்களே, இங்கே நாங்கள் வணிகம் செய்ய அனுமதி தாருங்கள்" என்று கேட்டான்.

மகாராணி மனம் மகிழ்ந்து "இனி இது உங்கள் தீவு. இங்கே உங்கள் வணிகத்திற்குத் தேவையான அத்தனை வசதிகளையும் நானே செய்து தருகிறேன். நீங்கள் விரும்பியபடி எதையும் வாங்கி விற்று வணிகம் செய்யலாம்" என்றாள். ஒலிவாரா மகிழ்ந்து போனான். மறுநாள் முறையான அனுமதி உத்தரவு கையெழுத்து இட்டுத் தரப்படும் என்ற ராணி அதுவரை தனது விருந்தாளியாகத் தங்கியிருக்கவும் என்று உத்தர விட்டாள்.

ஒலிவாரா இதுதான் அரசர்களின் பலவீனம் என்று உள்ளூர சந்தோஷம் கொண்டபடியே அரச விருந்தாளியாக அரண் மனையிலே தங்கி குடி, பெண்கள் என்று இரவெல்லாம் உல்லாசமாக இருந்தான். மறுநாள் விடிகாலை ஐந்து மணி அளவில் அவன் தங்கியிருந்த மாளிகைக்கு மகாராணியே வந்தாள். அவன் அதை எதிர்பார்க்கவேயில்லை.

"இரவெல்லாம் நீங்கள் கொண்டுவந்து தந்த பரிசுப் பொருட் களை ஆராய்ந்தபடியே இருந்தேன். உறக்கமே வரவில்லை.

இந்தக் கண்டுபிடிப்புகள் அற்புதமானவை. ஆனால் இவை எங்களின் இயல்பான அறிவை முடக்கிவிடக்கூடியவை. நாங்கள் சூரியனைப் பார்த்து நேரம் கணிப்பவர்கள். உங்கள் கால இயந்திரம் அந்த அறிவை மறைந்துபோக செய்துவிடும். நாங்கள் தேவையற்று ஒரு மரத்தைக்கூட வெட்டுவதில்லை. ஆனால் உங்கள் கண்டுபிடிப்பு காட்டுமரங்களை வெறும் வணிகப்பொருளாக்கிவிடும் அபாயமுள்ளது. உங்கள் மழை யறிவு கருவியும் தேவையற்றதே. அதை அறிமுகம் செய்துவிட்டால் இயற்கையாக மக்களுக்குள்ள மழை அறியும் எளிய முறைகள் மனதில் இருந்து மறைந்துபோய்விடும்.

உங்கள் விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் எனது தீவுமக்களின் பாரம்பரிய அறிவை மொத்தமாக அழித்துவிடக்கூடியது என்று அஞ்சுகிறேன். இவை எல்லாம் வேடிக்கைப் பொருட்களாகக் கையாளலாம். ஆனால் இயற்கையைப் புரிந்துகொண்ட எங்களது சிற்றறிவை முடக்கும் இந்த இயந்திரங்களைப் பயன்படுத்த எனக்கு விருப்பமில்லை. நீங்கள் அறிமுகப்படுத்திய விஞ்ஞானம் ஒரு எளிய மோடி வித்தை போலத்தானிருக்கிறது. இதைக் கண்டு நானே ஒரு நாள் முழுவதும் மதிமயங்கி விட்டிருக்கிறேன். ஒருவேளை இதனால் எதிர்காலமே சீரழிந்து போய்விடலாம்.

எனது தீவு மிகச்சிறியது. ஆனால் இயற்கையோடு இணைந்து நாங்கள் வாழ்கிறோம். தேவைக்கு மேலாக நாங்கள் மீன் பிடிப்பதுகூட இல்லை. கடலோடு நாங்கள் பகை கொண்டது கிடையாது. நாங்கள் இயற்கையை நம்புகிறோம். அதை அழிக்க ஒருபோதும் முயற்சிப்பதில்லை. எங்களது அறிவு பல நூறு வருடங்களாக மனிதர்கள் வாழ்ந்து அனுபவித்துப் பகிர்ந்துகொண்டது. தலைமுறையாகக் கைமாறி மேம்பட்டு வந்துகொண்டேயிருக்கிறது. உங்கள் வணிக விஞ்ஞானத்தால் அதைச் சீரழிக்க விருப்பமில்லை.

ஆகவே உன்னையும் உன்னோடு உடன்வந்தவர்களையும் சிரச்சேதம் செய்து கடலில் எறிய உத்தரவிடுகிறேன். அத்தோடு உன் கப்பலும் தீக்கிரையாக்கப்படும்" என்று கூறி அமைதியாக வெளியேறிச் சென்றாள்.

அன்றைய பகலில் ஆல்பர்டோ ஒலிவாராவின் உடல் தலை யில்லாமல் கடலில் மிதந்துகொண்டிருந்தது. பேராசைகளும், துர்க்குணமும் கொண்ட ஓர் உடல் என்று அறிந்துகொண்டு விட்டதுபோல கடல் மீன்கள்கூட அவனைத் தின்பதற்காக நெருங்கிப் போகவேயில்லை. சூரியன் மட்டுமே அதைப் பார்த்தபடியே கடந்து போய்க்கொண்டிருந்தது.

# கோகிலவாணியை யாருக்கும் நினைவிருக்காது

**தா**ன் ஒரு தலைப்புச் செய்தியாகப் போகிறோம் என்று கோகிலவாணி ஒருநாள்கூட நினைத்துக்கூட பார்த்திருக்க மாட்டாள். ஆனால் அது நடந்தேறியது. அந்தச் செய்தி வெளியான நாள் செப்டம்பர் 20, ஞாயிற்றுக்கிழமை, 1998. அப்போது அவளுக்கு வயது இருபத்திமூன்று.

கோகிலவாணியை இப்போது யாருக்கும் நினைவிருக்காது. ஒருவேளை நீங்கள் தினசரி பேப்பரைத் தவறாமல் படிக்கின்றவராகயிருந்தால் உங்கள் நினைவின் ஏதாவது ஒரு மூலையில் அவள் பெயர் ஒட்டிக்கொண்டிருக்கக்கூடும். ஆனால் தினசரி செய்திகளை யார் நினைவில் வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவை சாலைவிபத்துக்களைக்கூட சுவாரஸ்யமான நிகழ்வாக மாற்றிவிடுகின்றன. ரத்தக்கறை படியாத நாளிதழ்களேயில்லை.

விபத்தில் இறந்த உடல்களின் புகைப்படங்களை ஏன் நாளிதழ்கள் இவ்வளவு பெரியதாக வெளியிடுகின்றன. யார் அதைக் காண்பதற்கு ஆசைப்படுகின்றன. மனிதன், ஒருவேளை வன்முறையின் களியாட்டத்தை நாம் உள்ளூற விரும்புகிறோமோ, கோகிலவாணியைத் தலைப்புச் செய்தியாக்கியதற்கு நாம் காரணமில்லை என்று ஒதுங்கிக்கொள்ள முடியாது. அவள் நம்மைக் குற்றம் சொல்லவில்லை. ஆனால் அவள் நம்மைக் கண்டு பயப்படுகிறாள். நம் யாவரையும் விட்டு விலகிப் போயிருக்கிறாள்.

இன்றைக்கும் அவளது கால்கள் சாலையில் நடப்பதற்குப் பயப்படுகின்றன. கைகள் தன்னை அறியாமல் நடுங்கிக்கொண்டிருக்கின்றன. யாராவது அருகில் வருவதைக் கண்டால் கண்கள் காற்றிலாடும் அகல்விளக்கின் சுடரைப்போல தத்தளிக்கின்றன.

இவ்வளவு ஏன், அவளுக்கு உறக்கத்தில்கூட நிம்மதியில்லை. குரூரக்கனவுகளால் திடுக்கிட்டு அலறுகிறாள்.

அவள் சாவகாசமாகப் புழங்கித் திரிந்த உலகம் ஒருநாளில் அவளிடமிருந்து பிடுங்கி எறியப்பட்டது. தோழிகள், குடும்பம், படிப்பு, வேலை அத்தனையும் அவளிடமிருந்து உதிர்ந்துபோய் விட்டிருந்தது. களிம்பு மருந்துகளும் டஜன் கணக்கான மாத்திரைகளும் ரணசிகிச்சையும் அவளது அன்றாட உலகமாகி யிருக்கிறது. அழுதழுது ஓய்ந்து ஒடுங்கிப் போயிருக்கிறாள். பல நேரங்களில் தன்னைக் கழிப்பறை மூலையில் வீசி எறியப்பட்ட பாதி எரிந்துபோன தீக்குச்சி ஒன்றைப் போலவே உணர்ந்திருக்கிறாள்.

ஒரு சம்பவம் என்று எளிதாக நாளிதழ்களால் விவரிக்கப்பட்ட அந்தத் துயர நிகழ்வு இப்படியாகத்தான் செய்தித்தாளில் விவரிக்கப்பட்டிருந்தது.

சென்னையில் உள்ள தனியார் நிறுவனத்தில் வேலை செய்யும் கோகிலவாணி என்ற 23 வயதுப் பெண்மீது துரை என்ற வாலிபர் ஆசிட் வீசினார். இது குறித்து கிண்டி போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்.

விசாரணையில் துரை என்பவர் கோகிலவாணியை ஒருதலையாகக் காதலித்து வந்துள்ளார். ஆனால் கோகில வாணியோ, மகேஷ் என்ற கல்லூரி மாணவனைக் காதலித்து வந்திருக்கிறார்.

தனது காதலை ஏற்றுக்கொள்ளாவிட்டால் ஆசிட் ஊற்றி விடுவேன் என்று கோகிலவாணியை துரை பலமுறை எச்சரித்திருக்கிறான். ஆனால் துரையின் காதலை அவள் ஏற்றுக்கொள்ளவேயில்லை. இதனால் ஆத்திரமான துரை தனது நண்பர்களான ஹரிகிருஷ்ணா, சஞ்சய் ஆகியோரு டன் கூடிப் பேசி கோகிலவாணியின் முகத்தில் ஆசிட் வீச தம்புசெட்டித் தெருவில் உள்ள ஒரு கடையில் 'சல்பியூரிக்' ஆசிட்டை வாங்கியிருக்கிறான். மறுநாள் காலை கிண்டி ரயில்நிலையத்திற்குச் செல்லும் வழியில் கோகிலவாணியை வழிமறித்து ஆசிட்டை ஊற்றிவிட்டு துரை தப்பியோடினான்.

இதனால் கோகிலவாணியின் முகம் வெந்துபோனது. சம்பவ இடத்தில் அலறியபடியே மயங்கி விழுந்த அவ ளைப் பொதுமக்கள் மீட்டு தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். 60 சதவீத அளவுக்கு முகம் வெந்துபோய் கவலைக்கிடமான நிலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

துரை மீது காவல் துறை வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகிறார்கள்.

○

பதினைந்து வயதிலே காதலிப்பதைப் பற்றிய கற்பனைகள் கோகிலவாணிக்குள் புகுந்துவிட்டன. பள்ளி நேரத்தில் அதைப் பற்றியே அவளும் தோழிகளும் ரகசியமாகப் பேசிக்கொண்டிருப்பார்கள். காதலைப் பற்றி பேசும்போதெல்லாம் பனிக்கட்டியை உள்ளங்கையில் வைத்துக்கொண்டிருப்பதைப்போல அவள் உடலில் கிளர்ச்சி உருவாவதை உணர்ந்திருக்கிறாள்.

சாலையில், பயணத்தில், பொது இடங்களில் தென்படும் பதின்வயது இளைஞர்களைக் காணும்போதெல்லாம் இதில் யார் தன்னைக் காதலிக்கப்போகிறவன் என்று குறுகுறுப்பாக இருக்கும். அவள் காதலிப்பதற்காக ஏங்கினாள். யாராலோ காதலிக்கப்படுவதற்காகக் காத்துக்கொண்டேயிருந்தாள். அதைப் பற்றித் தனது நோட்டில் நிறைய கிறுக்கி வைத்திருக்கிறாள். கவிதைகள்கூட எழுதியிருக்கிறாள்.

அவளுக்கு திவாகர் என்ற பெயர் பிடித்துப் போயிருந்தது. இவ்வளவிற்கும் அந்தப் பெயரில் ஒருவரையும் தெரியாது. ஆனால் ஏனோ அந்த பெயர் பிடித்திருந்தது. அந்தப் பெயரிலே ஒருவனைக் காதலிக்க முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் என்றுகூட தோன்றியது. ஆனால் அது நடக்குமா என்ன.

அந்தப் பெயரைத் தன் பெயரோடு சேர்த்து திவாகர் கோகிலவாணி என்று ரகசியமாக எழுதிப் பார்த்துக்கொண்டேயிருப்பாள். ஒரு நாள் தோழி இந்திரா அவளிடம் “யாருடி அந்த திவாகர்” என்று கேட்டதற்கு “பக்கத்து வீட்டில் இருக்கின்ற பையன். அவனை நான் லவ் பண்ணுகிறேன்” என்று பொய் சொன்னாள்.

அந்தப் பொய்யை இந்திரா நம்பிவிட்டதோடு அந்தக் காதல் எப்படி ஆரம்பித்தது, எவ்வளவு நாளாக நடக்கிறது என்று கேட்கத் துவங்கிவிட்டாள். அவளுக்காகவே கோகிலவாணி நிறைய கற்பனை செய்து திவாகரைப் பற்றி கதைகதையாகச் சொல்லிக்கொண்டேயிருப்பாள்.

அதைக் கேட்டதில் இருந்து இந்திராவும் யாரையாவது காதலிக்க விரும்பினாள். ஆனால் எப்படிக் காதலிப்பது என்று பயமாக இருந்தது. அவர்கள் டியூசன் படிக்கப் போகின்ற

வீட்டில் இருந்த முரளியிடம் இந்திரா தயங்கித் தயங்கிதான் அவனைக் காதலிப்பதாகச் சொன்னாள். அவன் தானும் அவளைக் காதலிப்பதாகச் சொல்லி மாடி அறைக்கு வரச் சொல்லியிருந்தான்.

பயமும் ஆர்வமுமாக மாடிக்குப்போன இந்திரா கத்தி அலறிய படியே கீழே இறங்கி ஓடிவந்தாள். "என்னடி ஆச்சு?" என்று கோகிலா கேட்டபோது, இந்திரா பதில் சொல்லவேயில்லை. அழுதுகொண்டேயிருந்தாள். வீடு திரும்பும்போது பேருந்தில் வைத்து "லவ் பண்றேனு சொல்லிட்டு கிஸ் குடுத்து உதட்டைக் கடிச்சிட்டான்டி. அசிங்கமா இருக்கு" என்று சொல்லியபடியே கண்ணீர் விட்டாள்.

கோகிலவாணிக்கு நல்லவேளை, நாம் யாரையும் காதலிக்க வில்லை என்று தோன்றியது. மறுநாள் முழுவதும் இந்திரா லவ் பண்ணுவது தவறு என்று சொல்லிக்கொண்டேயிருந்தாள். உள்ளூற அதை ஒத்துக்கொள்ளாவிட்டாலும் இந்திராவிற்காகத் தானும் திவாகரை லவ் பண்ணுவதை விட்டுவிட்டதாகச் சொன்னாள் கோகிலவாணி. ஆனால் மனதிற்குள் பலவந்தமாக கிஸ் பண்ணாத நல்ல பையனாகப் பார்த்து லவ் பண்ண வேண்டும் என்ற ஆசை இருந்துகொண்டேயிருந்தது.

○

கோகிலவாணி எட்டாவது படிக்கும்போது ருதுவெய்தினாள். பத்தாம் வகுப்போடு படிப்பை முடித்துக்கொண்டு சில மாதங்கள் அருகாமையில் இருந்த எஸ்.டி.டி. பூத்தில் வேலை செய்தாள். அங்கே வரும் இளைஞர்களில் ஒருவன்கூட அவளைக் கண்டுகொள்ளவேயில்லை. கருத்துப்போய் மெலிந்த உடலோடு இருப்பதால்தான் தன்னை எவருக்கும் பிடிக்க வில்லையோ என்று நினைத்துக்கொள்வாள். அவளிடம் இரண்டே இரண்டு நல்ல சுடிதார்கள் இருந்தன. அதையே மாற்றி மாற்றிப் போட்டுக்கொண்டு வேலைக்குப் போவாள். சம்பளப் பணத்தில் மஞ்சளும் சந்தனமும் கலந்த டர்மெரிக் க்ரீம் வாங்கி உடல்முழுவதும் பூசிப் பார்த்தாள். ஃபேர் அண்ட் லவ்லியை வாங்கி ரகசியமாக உபயோகித்துப் பார்த்தி ருக்கிறாள். பாலில் குங்குமப்பூ போட்டு குடித்து அழகை மேம்படுத்த முயன்றிருக்கிறாள். அப்படியிருந்தும் அவள் மீது யாருக்கும் ஈர்ப்பு ஏற்படவேயில்லை.

எஸ்.டி.டி. பூத் நடத்தும் சொக்கநாதன் தினசரி அவளை

அனுப்பி சிகரெட் வாங்கி வரச்சொல்வான். அவள் ஒரு பெண் என்றுகூட கவனிக்காமல் பச்சை பச்சையாக போனில் பேசிக்கொண்டிருப்பான். தன்னை ஒரு பெண்ணாகக்கூட அவன் மதிப்பதில்லையே என்ற ஆதங்கம் கோகிலவாணிக்கு நிறைய இருந்தது.

தன்னைக் கண்ணாடியில் பார்த்துக்கொள்ளும்போது தனக்கு மட்டும் ஏன் கழுத்து எலும்புகள் இப்படித் தூக்கிக்கொண்டிருக் கின்றன. தாடை ஒடுங்கிப்போயிருக்கிறது என்று ஆத்திரமாக வரும். தன்னை எப்படியாவது அழகாக்கிக் கொண்டுவிட வேண்டும் என்று புதுசுபுதுசாக சோப்பு வாங்கிப் பார்த்தாள். தலைமயிரைச் சுருளவிட்டுப் பார்த்தாள். மூன்று மாதம் ஆங்கிலப் பேச்சுப் பயிற்சி வகுப்பிற்குக்கூடப் போய்வந்தாள். ஆனாலும் யாரும் அவளைக் காதலிக்கவேயில்லை.

ஒரு மாலைநேரம் போன் செய்யவந்த ஜீன்ஸ் மற்றும் வெள்ளைக்கோடு போட்ட சட்டை அணிந்த இளைஞன் அவளிடம் வேண்டும் என்றே சிரித்து சிரித்துப் பேசிக்கொண்டி ருந்துவிட்டு அவளது பெயரைக் கேட்டுத் தெரிந்துகொண்டு போனான். அந்த நிமிடமே அவன் மீது காதல் உருவாக ஆரம்பித்தது. அவன் மறுபடி எப்போது வருவான் என்று காத்துக்கொண்டேயிருந்தாள். பெயர்கூடத் தெரியாமல் அவனை மனதிற்குள் காதலித்துக்கொண்டிருந்தாள்.

ஆனால் ஒருநாள் அந்தப் பையன் பைக்கில் ஒரு இளம்பெண் ணைப் பின்னால் உட்கார வைத்துக்கொண்டு சினிமா தியேட் டர் பக்கமாகப் போகையில் அவளைக் கையைக் காட்டி ஏதோ சொல்லிவிட்டுப் போவதைக் கண்டதும் அவன் மீது ஆத்திரமாக வந்தது.

காதலிக்கத் துவங்கும் முன்பே காதல் தோல்வியடைந்துவிட்ட கோபத்தில் அவள் இரண்டு மூன்று நாட்கள் மதியச் சாப் பாடை சாப்பிடாமலே தூக்கி எறிந்தாள். ஆனால் பசியை அவள் காதலால் வெல்லமுடியவில்லை.

சிலவேளைகளில் கடற்கரைக்குப் போகையில் இவ்வளவு பேர் எப்படிக் காதலிக்கிறார்கள் என்று ஆச்சரியமாக இருக்கும். கடலை வேடிக்கை பார்ப்பதை விடவும் காதலர்களையே பார்த்துக்கொண்டிருப்பாள். அவளை விட சுமாராக உள்ள பெண்கள்கூட காதலிக்கிறார்கள். தன்னை ஏன் ஒருவரும் காதலிக்கவில்லை என்று ஆதங்கமாக இருக்கும். அதை நினைத்து நிறைய கவலைப்பட்டிருக்கிறாள். அதிகமாகச் சம்பளம் வாங்குகின்ற பெண்ணாக இருந்தால் காதலிப்பார்கள் என்று இந்திரா சொன்னதைக் கேட்டது தாங்கமுடியாத

வருத்தமாக இருந்தது. காதல் மட்டும்தான் அவள் வாழ்க்கையின் ஒரே பற்றுக்கோல் போல நினைத்துக்கொண்டிருந்தாள்.

மாம்பலத்தில் சொக்கநாதன் புதிதாகத் துவங்கியிருந்த ஜெராக்ஸ் கடைக்கு அவளை இடம் மாற்றியபோது தினசரி மின்சார ரயிலில் போய்வர வேண்டிய அவசியமானது, அப்படித்தான் மகேஷை சந்தித்தாள். இரண்டு நாட்களில் பேசிப்பழகிவிட்டான்.

மகேஷ் அவளை விட ஒல்லியாக இருந்தான். பெரும்பாலும் நீலநிற பேன்ட்தான் அணிந்துவருவான். ஒரு ஓரியன்ட் சலூனில் வேலை செய்துகொண்டிருப்பதாகச் சொன்னான். மகேஷை அவளுக்குப் பிடித்துப் போனது. தினமும் மகேஷ் அவளுக்காக டிபன் பாக்ஸில் ஏதாவது ஒரு உணவு கொண்டு வருவான். ரயிலில் பக்கத்தில் உட்கார்ந்துகொண்டால்கூட அவன் கை அவள் மீது படாமல் பார்த்துக்கொள்வான். அவளது தண்ணீர் பாட்டிலை வாங்கிக் குடிக்கும்போதுகூட அண்ணாந்துதான் குடிப்பான். அதை விடவும் அவள் புது உடையோ பாசியோ பொட்டோ ஹேர்கிளிப்போ எது அணிந்து வந்தாலும் இது உனக்கு ரொம்ப பொருத்தமாக இருக்கிறது என்று பாராட்டுவான். அதனாலே தான் ஒரு நல்லவனைக் காதலிப்பதாகப் பெருமை கொண்டாள் கோகில வாணி.

ஒருநாள் மாலை மகேஷ் வருவதற்காக மாம்பலம் ரயில் நிலையத்தின் அருகில் காத்திருந்தபோது கால் வலிக்கிறது என்று ஒரு பைக்கில் சாய்ந்து நின்றிருந்தாள். எதிர்க் கடையில் இருந்து ஒருவன் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். அவன் தன்னைப் பார்க்கிறான் என்று உணர்ந்த மறுநிமிடம் தனது துப்பட்டாவை சரிசெய்துவிட்டு தலையைக் குனிந்து கொண்டாள் கோகிலவாணி. அந்த இளைஞன் ஒரு சிகரெட்டைப் பற்றவைத்துவிட்டு அவளைப் பார்த்துக்கொண்டே புகையை ஊதிக்கொண்டிருந்தான். மகேஷ் வருவதற்கு தாமத மாவது ஆத்திரமாக வந்தது. அவன் சிகரெட்டை அணைத்து விட்டு அருகில் வந்து நின்று "இது என் பைக். வேணும்னா ஏறி உட்காந்துகிடலாம். இல்லை எங்கே போகணும்னு சொல்லுங்க, நானே கொண்டுபோய்விடுறேன்" என்று சொல்லிச் சிரித்தான்.

அதைப் பவ்யமாக அவன் சொன்னவிதம் அவளுக்குச் சிரிப்பாக வந்தது. அதைக் கேட்ட அந்த இளைஞன், பைக் சாவியை எடுத்து "நீங்களே வேணும்னாலும் ஓட்டிக்கிட்டுப் போகலாம்" என்றான். கோகிலவாணி "வேண்டாம்" என்று

மறுத்துவிட்டுச் சிரிப்போடு நகர்ந்து நின்றுகொண்டாள். அந்த இளைஞன் அவளிடம் "வீடு எங்க?" என்று கேட்டான். அவள் பதில்சொல்லாமல் ஸ்டேஷனையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவன் தன் பாக்கெட்டில் இருந்து சீப்பை எடுத்து தலையை வாரிவிட்டபடியே ஒரு பபிள்கம்மை எடுத்து அவளிடம் நீட்டினான்.

அவள் விடுவிடுவென ரயில்நிலையத்தின் உள்பகுதியை நோக்கி நடந்துபோகத் துவங்கினாள். அவன் சிரிப்பது கேட்டது. மகேஷ் வந்து சேரும்வரை அவள் திரும்பிப் பார்க்கவேயில்லை. மகேஷிடம் அந்த இளைஞனைப் பற்றி சொல்லவா வேண்டாமா என்று தயக்கமாக இருந்தது. ஆனால் சொல்லவேயில்லை.

இரண்டு நாட்களின் பின்பு அந்த பைக் இளைஞனை மறுபடியும் ரயிலில் பார்த்தாள். அவன் நெருங்கி அருகில் வந்து நின்று அவளையே பார்த்தபடியே வந்தான். கோகிலவாணி அவனை ஓரக்கண்ணால் பார்க்கும்போது அவன் உதட்டைக் கடிப்பதும் உள்ளங்கையில் ஐ லவ் யூ, யுவர்ஸ் துரை என்று தன் பேனாவில் எழுதிக்காட்டுவதும், கள்ளச்சிரிப்புடன் கையசைப்பதுமாக இருந்தான்.

ஒருவாரத்⁀ன் பிறகு ஒருநாள் காலையில் அவள் ரயிலை விட்டு இறங்கி நடக்கும்போது அருகில் வந்து "உனக்காகத்தான் தினம் தாம்பரத்துல இருந்து இதே ரயில்ல வர்றேன்" என்றான். கோகிலவாணி அவனிடம் பேசவேயில்லை

அவனோ நெடுநாள் பழகியவன் போல அருகில் வந்து "படத்துக்குப் போவமா?" என்று கேட்டான். அவளுக்கு அதைக் கேட்டபோது பயமாக வந்தது. அதைக் காட்டிக் கொள்ளாமல் "எனக்கு இதெல்லாம் பிடிக்காது" என்றாள்.

துரை சிரித்தபடியே "அப்போ நீ என்னை லவ் பண்ணலையா?" என்று கேட்டான். கோகிலவாணி கோபத்துடன், "நான் எதுக்கு உன்னை லவ் பண்ணனும்?" என்று கேட்டாள்.

"அப்போ அன்னைக்கு மட்டும் சிரிச்சே. தினம்தினம் லுக் விட்டயே, அது எதுக்கு?" என்றான் துரை.

"நான் ஒண்ணும் உன்னை லவ் பண்ணலே. நான் மகேஷை லவ் பண்றேன். பிரச்சினை பண்ணாம போயிடு" என்றாள்,

உடனே துரை பச்சை பச்சையாக அவளைத் திட்டியதோடு "நீ என்னை லவ் பண்ணிதான் ஆகணும். நான் டிசைட் பண்ணிட்டேன்" என்றான். அவனுக்குப் பயந்துகொண்டு

சில நாட்கள் பஸ்ஸில் வரத்துவங்கினாள்.

ஒருநாள் மகேஷிடம் ஒரு பையன் தன்னைப் பின்னாடியே துரத்துவதாகச் சொன்னாள். மகேஷ் சற்றே கலக்கத்துடன் "நான் பேசிப் பாக்குறேன்" என்று ஆறுதல் சொன்னான். அதன் இரண்டு நாட்களுக்குப் பிறகு மகேஷைப் பார்க்கவே முடியவேயில்லை, அவனைத் தேடி ஓரியண்ட் சலூனுக்குப் போனபோது மகேஷின் முகத்தில் அடிவாங்கிய வீக்கமிருந்தது,

மகேஷ் தலையைக் குனிந்தபடியே "அந்த ரெளடிப்பய துரை என்னை அடிச்சிட்டான் கோகிலா. நாம ரெண்டு பேரையும் ஒண்ணா பாத்தா கொன்னுருவேன்னு சொல்றான். என்ன செய்றதுனு தெரியலை. சலூன் ஓனர்கிட்டே யோசனை கேட்டேன். லவ் எல்லாம் எனக்குச் சரிப்படாதுனு சொல்றார். இப்போ என்ன செய்றதுனு தெரியலை. ஒரே குழப்பமா இருக்கு" என்றான். கோகிலவாணி அங்கேயே அழுதாள். மகேஷ் சலூன் ஓனரிடம் சொல்லிவிட்டு அவளை அழைத்துக் கொண்டுபோய் அருகாமை தேநீர்க்கடையில் ராகிமால்ட் வாங்கித் தந்து நிறைய அறிவுரைகள் சொல்லி அனுப்பி வைத்தான்.

அதன்பிறகு மகேஷ் அவளைப் பார்க்க வரவேயில்லை. ஆனால் கோகிலாவால் காதலைவிட முடியவில்லை. திரும்பவும் ஒருநாள் மகேஷைக் காண சலூனுக்குப் போனாள். அப்போது சலூனில் யாருமேயில்லை. மகேஷ் மட்டும் தனியே அமர்ந்து டி.வி. பார்த்துக்கொண்டிருந்தான். அவளைப் பார்த்தவுடன் சலூன் நாற்காலியில் உட்காரச் சொன்னான். எதிரில் உள்ள கண்ணாடியில் அவள் முகம் தெரிந்தது. மகேஷ் சிரிப்போடு உனக்கு முடியைக் கொஞ்சம் ட்ரிம் பண்ணிவிடவா என்று கேட்டான்.

கோகிலவாணி ஆத்திரத்துடன் அவனைத் திட்டினாள். பிறகு ஆவேசமானவள் போல அவனைக் கட்டியணைத்து இறுக்கமாக முத்தம் கொடுத்தாள். அதன்பிறகு இருவரும் நெடுநேரம் பேசிக்கொண்டேயிருந்தார்கள். ஒன்றாக அன்று வீடு திரும்பினார்கள். கோகிலவாணி மறுபடியும் காதலிக்கத் துவங்கினாள்.

ஆனால் அவர்களை ஒன்றாக உதயம் தியேட்டரில் பார்த்த துரை "நான் மட்டும்தான்டி உன்னை லவ் பண்ணுவேன். வேற யாரு உன்னை லவ் பண்ணினாலும் நீ செத்தே. உன் மேல ஆசிட் ஊத்திருவேன். பாத்துக்கோ" என்று கடுமையாகத் திட்டினான். கோகிலவாணிக்கு அது உண்மையாகப் போகிறது என்று அப்போது தெரியாது.

அதன் இரண்டு நாட்களுக்குப் பிறகு துரை நிறைய குடித்து விட்டு அவளது ஜெராக்ஸ் கடைக்கு வந்து "நீ என்னை லவ் பண்றயா இல்லையானு இப்பவே தெரியணும். சொல்லுடி" என்று மிரட்டினான். கோகிலவாணி அவனிடம் பேசவே யில்லை. அவன் அசிங்கமாகக் கத்தினான். அவனுக்குப் பயந்து சில நாட்கள் வேலைக்குப் போகாமலும் இருந்தாள். ஆனால் அவன் விடவேயில்லை. வீட்டின் முன்பு வந்து நின்றுகொண்டேயிருந்தான். குளியல் அறையை ஒட்டிய சந்தின் இடைவெளியில் வந்து நின்றுகொண்டு அவளையே பார்த்துக்கொண்டிருப்பான். அவளுக்குப் பயமாகவும் நடுக்க மாகவும் இருந்தது.

○

துரை அவள் மீது ஆசிட் ஊற்றுவதற்கு முந்திய நாள் காலையில் கோகிலவாணியின் அப்பாவிடம் யாரோ அவள் மகேஷைக் காதலிக்கிறாள் என்பதைப் பற்றிச் சொல்லியிருந் தார்கள். அதற்காக அப்பா தன் காலில் போட்டிருந்த செருப்பைக் கழட்டி அவள் முகத்தில் மாறிமாறி அறைந்ததோடு மகேஷின் ஜாதியைச் சொல்லிக் கேவலமாகத் திட்டியதோடு, அவள் தன்னுடைய மகள் என்பதையும் மறந்து ஆபாசமான வசைகளைப் பொழிந்தார்.

அவர் கூடவே செல்வம் அண்ணனும் சேர்ந்துகொண்டு "அவன் மட்டும் இல்லைப்பா, துரைனு இன்னொரு பையனும் இவ பின்னாடி சுத்துறான். ஒரே நேரத்தில ரெண்டு பையக கூட சுத்துறா" என்று ஏற்றிவிட்டான்.

அப்பா அவள் தலைமயிரைப் பிடித்து இழுத்து சுவரோடு முட்டவைத்து "ஓடுகாலி நாயி" என்று மறுபடியும் ஏச ஆரம்பித்தார், அம்மா அவரது பலமான பிடியில் இருந்து கோகிலாவை விடுவித்து சோற்றுக் கரண்டியால் காலிலும் புட்டத்திலும் அடித்தாள். கோகிலவாணி காதலுக்காகத் தான் அடிபடுகிறோம் என்பதால் அழுது கத்தவேயில்லை.

○

ஆசிட் ஊற்றப்படப் போகின்ற நாளின் காலையில் துரை அவள் முன்னால் வந்து நின்றபோது எப்படியாவது அவனிடம் கெஞ்சிப்பேசி தான் மகேஷைக் காதலிப்பதைப் புரிய வைத்து

விட வேண்டும் என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டாள் கோகிலா.

ஆனால் துரை ஒரு வார்த்தைகூட அவளிடம் பேசவும் இல்லை. பேசவிடவும் இல்லை. பேண்ட் பாக்கெட்டில் இருந்து சீப்பை எடுப்பதுபோல சிறிய பிளாஸ்டிக் பாட்டில் ஒன்றை வெளியே எடுத்தான். தொலைவில் மின்சார ரயில் வருவதற்கான ஓசை கேட்டது. அவள் ரயில் நிலையத்தின் படியை நோக்கி நடப்பதற்கு முன் அவள் முகத்தில் ஆசிட்டை ஊற்றினான்.

கொதிக்கும் நெருப்பினுள் முகத்தை நுழைத்துவிட்டது போல எரிய ஆரம்பித்தது. காது முகம் நாசி கன்னம் என்று அத்தனையும் உருகியோடுவது போல தாங்கமுடியாத வலி பீறிட்டது. கோகிலவாணி அலறினாள். கூட்டத்தை விலக்கிக்கொண்டு துரை ஓடுவது தெரிந்தது. அவள் முன்னிருந்த உலகம் மெல்ல புகைமூட்டம் கொண்டு மயங்கத் துவங்கியது.

O

**கோ**கிலவாணி ஆறு வாரங்கள் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றாள். வலதுபக்க முகம் முற்றிலும் எரிந்துபோயிருந்தது. காதின் நுனி சிதைந்து போனதால் பாதி காதே மிச்சமாக இருந்தது. ஆசிட் முகத்தில் பட்டதோடு பின்னந்தலை வரை பரவியிருந்த காரணத்தால் அவளது தலைமயிரையும் பாதி கத்தரித்து இருந்தார்கள். அவளது தோற்றத்தைக் காண அவளாலேயே சகிக்கமுடியவில்லை.

அவள் மருத்துவமனையில் இருந்த நாட்களில் அவளது அப்பாவும் அம்மாவும் உறவினர்களும் மாறிமாறி அவளை மோசமான வார்த்தைகளால் திட்டிக்கொண்டேயிருந்தார்கள்.

கோகிலவாணியின் எரிந்த முகத்தைக் க்ண்ட அப்பா "அப்படி என்னடி உனக்கு லவ்வு கேட்குது. செத்துப் போயிருந்தா சனியன் விட்டுச்சினு தலைமுழுகிட்டுக் போயிருப்பேன். இனிமே உன்னை எவன் கட்டிக்கிடுவான். உன்னை எங்கே கொண்டு போய் தள்ளுறது!" என்று தனது முகத்தில் மாறிமாறி அடித்துக்கொண்டு அழுதார்.

எதற்காகக் காதலிக்க ஆசைப்பட்டோம். காதல் என்பது இதுதானா ஏன் துரை இப்படித் தன்முகத்தில் ஆசிட் ஊற்றினான். அவளுக்கு நினைக்க நினைக்க அழுகையும்

ஆத்திரமும் பொங்கிக்கொண்டு வந்தது.

அவள் கூடப் படித்த மாணவிகள், தெரிந்தவர்கள், தோழிகள் எவரும் அவளைப் பார்க்க வரவேயில்லை. ஆசிட் அடிக்கப் பட்டவளின் தோழி என்று யார் சொல்லிக்கொள்ள ஆசைப்படு வார்கள். மகேஷ்கூட அவளைப் பார்க்க வரவேயில்லை.

பெண் மருத்துவர் அவள் முகத்தைத் துடைத்தபடியே "உனக்கு எத்தனை லவ்வர்டி" என்று நக்கலாகக் கேட்பார். கோகிலவாணி பதில் சொல்வதேயில்லை,

மருந்தாளுனரும் அவள் முகத்தில் உள்ள காயத்தைத் துடைத்த படியே "இனிமே உன்னை ஒரு பையனும் திரும்பிப் பார்க்க மாட்டான். நீ எங்கே வேணும்னாலும் போகலாம். எந்த நேரம் வேணும்னாலும் வீட்டுக்கு வரலாம். உன்னை யாரு பாலோ பண்ணப் போறாங்க" என்பார்.

கோகிலவாணிக்கு ஆத்திரமாக வரும். ஆனால் வாய் திறந்து பேசமாட்டாள். இப்படி அவமானப்பட்டு வாழ்வதற்குப் பதிலாகப் பேசாமல் அப்பா சொன்னது போல செத்துப் போயிருக்கலாம். எதற்காகப் பிழைத்துக்கொண்டோம். மிச்ச மிருக்கும் வாழ்க்கையை எப்படிக் கடத்தப்போகிறோம். அந்த வலி ஆசிட்டின் கொதிப்பை விட அதிகமாக இருந்தது.

○

கோகிலவாணி அந்த வழக்கிற்காக இருபத்தியாறு முறை கோர்ட்டிற்குச் சென்று வர நேர்ந்தது. ஒவ்வொரு முறையும் அவளது காதலை யாராவது பரிகாசம் செய்வார்கள். எரிந்த முகத்தைக் காட்டி அவளது கதையைச் சொல்லிச் சிரிப்பார்கள். விசாரணைக்கு மகேஷ் வர மறுத்துவிட்டதுடன் தான் அவளை ஒருபோதும் காதலிக்கவேயில்லை என்று காவல்துறை அதிகாரி களிடம் ஒப்புதல் வாக்குமூலம் தந்திருக்கிறான். துரையோ அவள் தன்னைப் பலமாதங்கள் காதலித்து ஏமாற்றிவிட்டதாக போலீஸில் வாக்குமூலம் தந்திருந்தான். கோகிலவாணி தான் யாரையும் காதலிக்கவில்லை. துரை தன்னைக் காதலிக்கும்படி யாக மிரட்டினான் என்றே சொன்னாள். வழக்கறிஞர் அவள் யாரோடாவது பாலுறவு கொண்டிருக்கிறாளா, ஆண் நண்பர் கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று துருவித்துருவிக் கேட்டார். கோகிலவாணி நீதிமன்றத்தில் நிறைய முறை அழுதிருக்கிறாள். ஆனால் யாரும் அவளைத் தேற்றவேயில்லை. முடிவில் துரை தண்டிக்கப்பட்டான்.

○

பாதி எரிந்த முகத்துடன் எலிவால்முடி போல கொஞ்சம் தலைமயிருடன் கோகிலவாணி வீட்டிற்குள்ளாகவே அடைந்து கிடந்தாள். டிவி பார்ப்பதுகூட கிடையாது. தலையில் பூ வைத்துக்கொள்வதோ, கண்ணாடி பார்த்து திருநீறு வைத்துக் கொள்வதோ கூட கிடையாது. இரண்டு முறை அவளுக்குக் கல்யாணப்பேச்சு துவங்கியது. ஆனால் எவரும் அவளைக் கட்டிக்கொள்ள முன்வரவேயில்லை. கோகிலவாணி தனிமை யைத் தாங்கிக்கொள்ள முடியாமல் வீட்டில் இருந்தபடியே காளான் வளர்த்து விற்பனை செய்யத் துவங்கினாள். தினமும் அம்மாவும் அப்பாவும் அவளை வாய்க்கு வாய் திட்டினார்கள். வீட்டின் எந்த விசேஷத்திலும் அவள் கலந்துகொள்ள அனு மதிக்கப்படவேயில்லை. சிரிப்பை மறந்தவளாக கோகிலவாணி ஒரு நடைப்பிணம் போலவே வாழ்ந்துகொண்டிருந்தாள்.

○

உபாசனா என்ற தன்னார்வ நிறுவனம் அவளைத் தங்கள் நிறுவனத்தில் வேலைக்குச் சேர்த்துக்கொண்டபோது அவளுக்கு வயது முப்பத்திரெண்டைக் கடந்திருந்தது. அது பார்வையற்ற வர்களுக்காக சேவை செய்யும் நிறுவனம். பார்வைக்குறைபாடு கொண்டவர்களே அங்கு பெரும்பாலும் பணியாற்றிக்கொண்டி ருந்தனர். அதனால் யாரும் அவளைக் கேலி செய்வார்கள் என்ற பயமின்றி அவள் வேலைக்குப் போய்வரத் துவங்கினாள். அங்குள்ள நூலகத்தில் இருந்து நிறைய புத்தகங்களை எடுத்து வந்து படித்துக்கொண்டேயிருப்பாள்.

சில சமயம் அவள் அறியாமல் உடலின்பம் பற்றி மனது நாட்டம் கொள்ளத் துவங்கும். அப்போது விரலால் முகத்தை தடவிக் கொள்வாள். மின்சாரத்தில் கை பட்டதுபோல மனது உடனே அந்த நினைவில் இருந்து தன்னைத் துண்டித்துக் கொள்ளும்.

○

சென்ற வருடத்தில் ஒரு நாள் கடற்கரையில் தற்செயலாக துரையைப் பார்த்தாள். அவனுக்குத் திருமணமாகி பெண் குழந்தையிருந்தது. இரண்டு வயதான அந்தக் குழந்தை ஒரு வண்ணப்பந்தை வைத்து விளையாடிக்கொண்டிருந்தது.

மணலில் உட்கார்ந்தபடியே துரையின் மனைவியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நல்லநிறம். ஆரஞ்சுநிறப் புடவை கட்டியிருந் தாள். கையில் ஒரு ஹேண்ட்பேக். கழுத்தில் நிறைய நகை போட்டிருந்தாள். துரையும் முழுக்கை சட்டை அணிந்து தலையைப் படிய வாரியிருந்தான்.

ஏனோ துரையின் மனைவியிடம் போய்ப் பேச வேண்டும் போலிருந்தது. அந்தக் குழந்தையை ஒருமுறை கொஞ்சலாமா என்றுகூடத் தோன்றியது. அவள் தங்களைப் பார்த்துக்கொண்டி ருப்பதை துரை கவனித்தவுடன் மனைவியிடம் ஏதோ சொன்னான். அவர்கள் எழுந்துகொண்டார்கள்.

நாம்தானே துரை மீது கோபமும் வெறுப்பும் கொள்ள வேண்டும். அவன் ஏன் தன்னைப் பார்த்தவுடனே எழுந்து ஓடுகிறான்? பயமா, கடந்தகாலத்தின் நினைவுகள் எதுவும் தன்முன்னால் வந்து நின்றுவிடக் கூடாது என்ற பதைபதைப்பா என்ற யோசனையுடன் அவர்கள் போவதையே கோகிலவாணி பார்த்துக்கொண்டேயிருந்தாள்.

ஒரு பெண் மீது ஆசிட் அடித்தவன் என்று அவனைப் பார்த்தால் யாராவது சொல்வார்களா என்ன? அவனுக்கு ஆசிட் வீசியது என்பது ஒரு சம்பவம். ஆனால் தனக்கு? கண்ணில் இருந்து துரை மறையும்வரை அவனையே பார்த்துக் கொண்டேயிருந்தாள்.

கடற்கரையெங்கும் காதலர்கள் நிரம்பியிருந்தார்கள். இவர்களில் ஏதோவொரு பெண் தன்னைப் போல முகம் எரிந்து போகக் கூடும் அல்லது வன்கொலை செய்யப்படவும் கூடலாம். வசை, அடி, உதை, எரிப்பு, கொலை இவைதான் காதலின் சின்னங்களா? வன்முறையில்தான் காதல் வேர் ஊன்றியிருக் கிறதா.

அவள் கடல் அலைகளைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். இருட்டும்வரை வீட்டிற்குக் கிளம்ப வேண்டும் என்று தோன்றவேயில்லை.

உலகம் தன்னைக் கைவிட்டு யாருமற்ற நிர்க்கதிக்கு உள்ளாக்கி வைத்திருப்பதை உணர்ந்துகொண்டவளைப்போல நீண்ட நேரத்தின் பிறகு ரயில் நிலையத்தை நோக்கித் தனியே நடக்க ஆரம்பித்தாள்


ரயிலுக்காக பிளாட்பாரத்தில் காத்திருந்தபோது ஏனோ தனக்கு முப்பத்தியாறு வயது முடிந்துவிட்டது என்பது நினைவிற்கு வந்தது.

ரயில் செல்லும்போது வீசிய கடற்காற்று தழும்புகள் நிறைந்த முகத்தில் பட்டதும் மனது தானே காதலைப்பற்றி நினைத்துக் கொள்ளத் துவங்கியது. உடனே மனதிற்குள்ளிருந்து இத்தனை வருடங்களாகியும் மறையாத திராவகத்தின் எரிமணமும் திகுதிகுப்பும் பீறிட்டுக் கிளம்பியது. தன்னை மீறிய உள்ளார்ந்த வலியை அவளால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

கோகிலவாணி திரும்பிப் பார்த்தாள், எதிர்சீட்டில் ஓர் இளம்பெண் ஓர் இளைஞன் மடியில் சாய்ந்துகொண்டு ரகசிய மான குரலில் பேசியபடியே காதலித்துக்கொண்டிருந்தாள்.

கோகிலவாணி அவர்களைப் பார்க்காமல் வெளியே இருந்த இருட்டையே பார்த்துக்கொண்டு வந்தாள். இருட்டில் பறந்த மின்மினிப்பூச்சி ஒன்று முகத்தை உரசிக்கொண்டு போனது.

காதல்ஜோடி பேசிச் சிரிப்பதைக் கேட்க, கேட்க கோகிலவாணி தன்னை அறியாமல் விசும்பத் துவங்கினாள். தன் காதலை உலகம் ஏன் ஏற்க மறுத்தது. எதற்காகத் தனக்கு இவ்வளவு குரூரமான தண்டனை வழங்கப்பட்டது என்பதை நினைத்து அவள் அழுதுகொண்டேயிருந்தாள். ரயிலின் கூடவே மின் மினிகள் பறந்து வந்துகொண்டேயிருந்தன. அது இருட்டிற்கு கண்கள் முளைத்து அவள் அழுவதைப் பார்த்துக்கொண்டிருப் பதைப் போலவே இருந்தது.



மனிதர்கள் கசப்பையும் ஏமாற்றத்தையுமே வாழ்நிலையாகக் கொண்டுவிட்ட ஒரு காலத்தின் சாட்சியங்கள் எஸ்.ராமகிருஷ்ணனின் இக்கதைகள். மனித மனதின் சொல்லித் தீராத விசித்திரங்களிலிருந்து பிறக்கும் அடத்த நிலைகளின் வழியே புறக்கணிப்பின், தனிமையின், அவமதிப்பின் எல்லையற்ற கனத்த இருளின் வழியே இக்கதைகளின் பாத்திரங்கள் நடந்து செல்கின்றன. அவை சிதறுண்ட குடும்பங்களின், உடைந்துபோன மனங்களின் வழியே தமது சொற்களை உருவாக்கிக் கொள்கின்றன.

புருனோ துவங்கி அஷ்ரப் வரை இந்தக் கதைகளில் வரும் மனிதர்களை தமிழ் சிறுகதையுலகம் முன் கண்டறிந்ததேயில்லை. தனித்துவமிக்க கதைமொழி, நுட்பமான கதையாடல், வாழ்வின் பேருண்மைகளைச் சுட்டிக்காட்டிச் செல்லும் உரையாடல்கள் என்று இக்கதைகள் சமகால தமிழ் சிறுகதை உலகிற்குப் புதிய திசையை அறிமுகம் செய்து வைக்கின்றன.

உயிர்மை பதிப்பகம்

₹ 150



ISBN - 978-93-81095-64-5

www.uyirmmai.com